இ-ள். முல்லையின் அரும்பு போதாய் அவிழ்ந்து, தேனைச்சொரியப் படுங்குவளையினெற்றியிலே மூல் பிரிந்த தேனினம் சேர்தலாலே அதிலிருந்த ஞிமிறுகள் முரிந்தார்ப்ப, அத்தேனினம் இவ்வழகிய உண்வை நமக்கு விருந்திடுகின்றோம், இதனை ஏற்றுக்கொண்மினென்று கூறிஞற்போல அவற்றைத்தைவர, அஞ்ஞிமிறுகள் தேனினத்தைத்தழுவி அதிலே வீழ்ந்தனவென்க.

தொண்டயின், விசாரம். இவற்றால் நிலமயக்கம் கூறினர். ௪௯.

தைவரதல், shampooing, stroking.

49. வளமுடிநடுபவர்வரம்பில்கம்பலை
இளமழைமுழக்கெனமஞ்ஞையேங்கலின்
அளமருகுயிலினமழுங்கிப்பூம்பொழில்
உளமெலிமகளிரினொடுங்குமென்பவே.

At the thundering noise of the ploughmen, the peafowls rejoice, and the cuckoos are sorrowful.

இ-ள். நடுபவர்கம்பலையைக் கார்செய்யத் தொடங்கின மழைமுழக்கென்றுட்கொண்டு மயில் ஆரவாரித்தலின், கம்பலையை மழை என்று அலமருகின்ற குயிலினம் உண்மையென்று வருந்திப்பிரிந்தமகளிரைப்போலே பொழிலிலே குவிந்திருக்குமென்க.

மீண்டு நடவுத்தொழின் முதலாகக் கூறுகின்றார். ௫௰.

அளமரு for அலமரு, ள and ல being interchangeable letters. The *Koil* (cuckoo) does not like rain and thunder; but the peafowls rejoice in them.

50. வினைக்கையாற்கடைசியர்மட்டுவார்க்கலில்
திளைத்தவர்பருகியதேறற்றெத்துழிக்
களிப்பவுண்டிளவனங்கன்னிநாரையைத்
திளைத்தலிற்பெடைமயிற்றெருட்டுஞ்செம்மற்றே.

The toddy that remains of what the work people drank, is drunk by the naughty swans; to the astonishment of the peafowls.

இ-ள். கடைசியர் கையாலே மதுவை வார்த்தலில் தொழிலிலே இடைவிடாது பயின்றவர் உண்ட தேறல்மிக்குச்செறிந்த இடத்தே காமஇன்பம் அறிந்த அன்னம் அதனையுண்டு, காமஇன்பம் நுகர்ந்தறியாத நாரையைப் புணர்தலின் அதனைக்கண்டு மயிற்பெடை தன்மயிலைத்தெருட்டும் தன்மைத்தென்க.

"இளையாவருமருவி" என்றார் பிறரும். பெடையென்னும் மயிலென்னும் பிரிக்க. நீர் கள்ளுண்டு இதுபோன் மயங்கன்மின் என்று தெருட்டிற்று. இனி மயிலைக்கண்டால் கள்ளின்களிப்புத் தீருமென்றலின் இது தெருட்டிற்றென்றுமாம். ௫௰.

திளைத்தவர், those who are accustomed. தேறற்றெத்துழி, i. e. தேறல் toddy, தெத்து, satiated. உழி, when. திளைத்தலின், when joined together. செம்மற்று, of such kind, குறிப்புவினைமுற்று

The men while weeding, think the Kuvalai flowers to be the eyes, and the lotus to be the faces of their women, and without weeding, are singing.

51. கண்ணெனக்குவளையுங்கட்டலோம்பினர்
வண்ணவாண்முகமெனமரையினுள்புகார்
பண்ணெழுத்தியல்படப்பரப்பியிட்டனர்
தண்வயலுழவர்தந்தன்மையின்னதே.

இ-ள். காதல்மகளிர் முகமென்றுட்கொண்டு தாமரையாகிய களையின் அருகு செல்லாதவர் அவர்கள் கண்ணென்றுட்கொண்டு சூடுதற்குப் பறிக்கும்குவளையையும் களைபறித்தலைப் பரிகரித்துப் பண்ணை எழுத்தின்வடிவு தோன்றப் பாடினாராதலின் உழவர் தன்மை இப்படி இருந்ததென்க.

தாமரையைக் "கடவுளொண் பூவடைதலோம்பி" எனக்கூறுதலானும் அவர் பறியாராயிற்று. மரையினுள்ளும் என்னும் உம்மையில் சொல்லெஞ்சுபொருட்கிளவியான் செஞ்சொலன்மை உணர்க. கண்ணுமுகமும் காதன்மையைத் தோற்றுவித்தலின் அதற்கேற்கப் பாடினரென்க. குவளையும், உம்மை சிறப்பும்மை. ஓம்பினர், வினையெச்சமுற்று. உள்புகார், தொழிற்பெயர். ௫௧.

The splashing of the water causes the water birds to fly about.

52. நித்திலப்பந்துடனீன்றுபாதிரி
ஒத்தபூவுடற்றியநாவினாகினால்
தத்துநீர்நாரைமேலெறியத்தண்கடற்
பைத்தெழுதிரையெனப்பறவையாலுமே.

இ-ள். தத்துநீர் முத்துப்பந்துபோலும் சினையைச் சேரவீன்று தனது நாவிற்கொத்த பாதிரியினது பூவைக்கெடுத்த நாவினையுடைய நத்தையாலே நாரைமேலே எறிய அப்பறவை திரையென மெல்ல எழுந்து ஆலுமென்க.

இது வேண்டினவளவிலே நீர் பாய்கின்றமை கூறினார். நித்திலப்பந்து, உவமைத்தொகையின்வந்த ஆகுபெயர்; சந்திரவழக்கமென்றாற்போல. ஈன்று, உடையவென்க. ௫௨.

The paddy stalks sprouting up, look like pregnant snakes, and stand upright as the mean when prosperous, and when ripe hang down their heads as the deeply learned.

53. சொல்லருஞ்சூற்பசும்பாம்பின்றோற்றம்போன்
மெல்லவேகருவிருந்தீன்றுமேலலார்
செல்வமேபோற்றலைநிறுவித்தேர்ந்தநூற்
கல்விசேர்மாந்தரினிறைஞ்சிக்காய்த்தவே.

இ-ள். நெல்லானவை கருத்தங்கியீன்று குடிப்பிறவாதார் செல்வமே போல் தலையை நேரேநிறுத்தி கல்விசேர் மாந்தரைப்போல் விளைந்து மிக விளைந்தனவென்க.

சூலுண்டென்று சொலற்கரிய. மெல்ல, ஒழுக. தேர்ந்த, மெய்ப்பொருளை ஆராய்ந்த. தாறுபடுநெல்லென்றாற்போலக் காய்த்தவென்றார். ௫௩.

நெல், paddy, rice, the subject; the predicate is காய்த்த. This construction is called ஆற்றொழுக்கு, because the subject and predicate are in natural order. The simily in the stanza is much admired. See Nannul Sutram 453.

The paddy when grown was luxuriant.

54. மீன்களினளவும்வேற்றிடங்களின்மையால்
தேன்கணக்கரும்பியல்காடுஞ்செந்நெலின்
வான்புகழ்களிறுமாய்கழனியாக்கமும்
மான்களுார்க்குரைப்பரிதொல்லென்கம்மைத்தே.

இ-ள். மீனின்று கண்ணளவும் பாழ்நிலம் இன்மையான் மக்கட்குப் புகழ்தலரிதாய் வானிலுள்ளார் புகழ்கின்ற கழனியில் தேனிருவினது திரட்சியை உடைய கரும்பு வளர்ந்த காடும், யானைநின்றால் மறையும் செந்நெல்லினது முதிர்ச்சியும் ஒல்லென்கிற ஓசை உடைத்தாயிற்றென்க.

முன் விளைவுகூறி இது முற்றினபடி கூறினார். மீன்கண் மிகவும் உருட்சியுடைமையின் இடங்குறித்தலரிது. ௫௪.

Take மக்கட்குரைப்பரிது before தேன்கண, வான்புகழ் before கழனி, and களிறுமாய் before செந்நெலின். The construction is complicated, and is called கொண்டுகூட்டுப்பொருள்கோள். கணை for கணம், multitude. கம்மைத்து, sounding.

The work people being well drunk with toddy go forth to reap.

55. ஆய்பிழிவிருத்துவண்டயிற்றியுண்டுதேன்
வாய்பிழிகுவளைகள்சூடிமள்ளர்கள்
தேய்பிறையிரும்புதம்வலக்கைசேர்த்தினர்
ஆய்செநெல்கன்றகாடரிகுற்றார்களே.

இ-ள். உழவர்கள் பிழியை வண்டையூட்டிப் பின்பு தாமும் உண்டு குவளையைச்சூடிப் பிறைபோலும் அரிவாளைத் தங்கையிலே எடுத்தார்; எடுத்துச் செந்நெற்காட்டை அரியலுற்றாரென்க.

குவளையை, ஈண்டுக்களிப்பால் பறித்துச்சூடினார். காடு, பெருமை கூறிற்று. எதிகுற்றாரும் பாடம். விருந்துவண்டு, வல்லெழுத்திடை மிகும் என்றுதொற்றென்ற மிகுதியால் இயல்புக்கணத்துக்கண்ணும்மெல் லொற்றுத்திரிந்தது. ௫௫.

விருத்து for விருந்து

They reap the paddy, and make stacks like mountains.

56. வலியுடைக்கைகளான்மலர்ந்ததாமரை
மெலிவெய்தக்குவளைகள்வாடக்கம்பலம்
பொலிவெய்தப்பூம்பொய்கைசிலம்பிப்பார்ப்பெழ
மலைபடவரிந்துகூன்குயங்கைமாற்றினார்.

இ-ள். அந்நெல்லை அரிதற்குத்தக்க வலியுடைக் கைகளாலே வருந்த வாடக் கம்பலம் பொலிவெய்துதலால் பார்ப்புமுட்பட ஆரவாரித்தெழ அரிந்திட்டு வளைந்த அரிவாளை மாற்றினாரென்க.

முன்கனைபறியாதவற்றை ஈண்டுக் களிப்பினால் அரிந்தார். கம்பலம், உரிச்சொற்றிரிவு. பொய்கை பார்ப்பெழவென இடத்து நிகழ்பொருளின்றொழில் இடத்தின்மேனின்றது. பட, உவமவுருபு. ௫௬.

மலைபட, like mountains. கைகளால் is to be taken with அரிந்து.

57. வாளையினினந்தலையிரியவண்டலர்
தாளுடைத்தாமரைகிழியவண்சுமை
கோளுடையிளையவர்குழாங்கொண்டேகலிற்
பாளைவாய்க்கமுகினம்பழங்கள்சிந்துமே.

While conveying the harvest in bundles the valai fish are frightened, and the areca fruit fall from the trees.

இ—ள். தொழிற்சேர்ப்பாட்டையுடைய இளையவர் குழாமிரியக் கிழியச் சூட்டைச்சுமந்து போதலின் அதுபட்டுக் கமுகினம்பழத்தைச் சிந்துமென்க.

தலை, இடம். வண்டலர், (துவைத்து) அலர்ந்த. பாளைவாய்க்கமுகு, மடற்கமுகு. ௫எ.

வாளையினினம், multitude of fish. சுமை, obj. case, to be taken with கொண்டேகலின்.

58. சோர்புயன்முகிறலைவிலங்கித்தூநில
மார்புகொண்டார்ந்துநாலவண்சூளை
ஆர்வுறுபலாப்பழமழிந்தநீள்களம்
போரினுன்மலிந்துடன்பொலிந்தநீரவே.

The ears of corn were put up as stacks, reaching to the clouds, and burdening the earth.

இ—ள். முகிலைத் தலைச்சென்று தடுக்கும்படி நிலத்தின் மார்பையெல்லாம் தனக்கிடமாகக்கொண்டுநிற்கையினாலே அந்நிலம்பொறுக்கமாட்டேனென்று வாய்விடும்படி களங்களெல்லாம் போரான்மிக்குப் பொலிந்த நீரவென்க.

இனி நிலத்திலே முகிலை விலக்கிப் பழையகூடுகள் நிறைதல் கொள்கையாலே அங்ஙனம் அவை நிறைந்தநிலம் இப்பொழுதிடுகின்ற போரைப் பொறேனென்று வாய்விடும்படி என்றுமாம். ஆர்வுகொண்டெனவே கூடுகள் பெற்றும். புயல், நீர். விலங்கி, விகாரம், விலங்சவென்க. பழம், களத்திற்கு அடை. நிலக்கிற்குக் களம் சினையாம். ௫அ.

நீர is குறிப்புவினைமுற்று.

59. ஈடுசால்போரழித்தெருமைப்போத்தினால்
மாடுறத்தெழித்துவைகளைந்துகாலுற்றிச்
சேடுறக்கூப்பியசெந்நெற்குப்பைகள்
கோடுயர்கொழும்பொனின்குன்றமொத்தவே.

They thresh the corn, separate the straw, and heap up the grain like a golden mountain.

இ—ள். பெருமைநிறைந்தபோரைத் தலையைத்தள்ளிப் போத்தினற் பக்கத்தே யுறவுரப்பி வைக்கோலைக்களைந்து தூற்றிக் குவித்தபொலிகள் குன்றமொத்தனவென்க.

ஈடு, இதுவுமாம். "பெற்றம் எருமை புலி மரை புல்வாய் மற்றவை யெல்லாம் போத்தெனப்படுமே" என்றாராகலின். இனிக் கரும்பின் செய்தி கூறுகின்றார். ௫௯.

மாடு, on the side.

*They press the sugar cane, drink a part of the juice, and boil the rest into sugar, the smoke of which reddened the sun (sky).*

60. கரும்புகொன்னுடைப்பவாலைதோறெல்லாம்
விரும்பிவந்தடைந்தவர்பருகிமிஞ்சிய
திருந்துசாறடுவுழிப்பிறந்ததீம்புகை
பரந்துவிண்புகுதலிற்பருதிசேந்ததே.

இ-ள். கரும்பைச் சாறுகொள்வாருடைய ஆலைதோறும் அடைந்து வந்தவரெல்லாரும் பருகி மிக்கசாற்றைப் பாகுசெய்தடுமிடத்துப் பிறந்த புகை விண்ணிலே பரந்துசேறலிற் பருதி சிவந்ததென்க.

எல்லாம் என்பது இருதிணைக்கும் பொது. பருகுதலிற்றிருந்திற்று. இனி இங்ஙனம் ஒத்தத்தின்பண்டங்களைக் கொண்டுபோகின்றமை மேற்கூறுகின்றார். ௬௰.

பருதி சேந்தது, the sun reddened; அதிசய அலங்காரம், hyperbole

*Carts conveying grain, sugarcane, and flowers.*

61. திணைநிலைப்பொருநர்தஞ்செல்லல்தீர்ப்படப்
பணைநிலையாய்செந்நெற்பகரும்பண்டியுங்
கணைநிலைக்கரும்பினிற்கவரும்பண்டியும்
மணநிலைமலர்பெய்துமறுகும்பண்டியும்.

இ-ள். இதுமுதல் மூன்றுபாட்டும் ஒருதொடர். உழவர் திணைப்பொருநருமிடி தீரக்கொடுத்து மிக்கநெல்லை விற்றற்குக் காரணமான பண்டியும், கரும்பினின்றும் பாகுமுதலியன கொண்டுபோம் பண்டியும், மலர் பெய்துபோம் பண்டியுமென்க.

பண்ணை, விகாரம். நிலை, நிலைபெறுதல். ௬௧.

This and the two following stanzas are on one subject.

*Cocoanuts, betel leaves, areca nuts, and other eatables.*

62. மல்லலந்தெங்கிளநீர்பெய்பண்டியும்
மெல்லிலைப்பண்டியுங்கமுகின்மேதகு
பல்பழுக்காய்க்குலைபெய்தபண்டியும்
ஒல்குதீம்பண்டம்பெய்தொழுகுபண்டியும்.

இ-ள். இளநீர் பெய்தபண்டியும், வெற்றிலை பெய்தபண்டியும், பழுக்காய் பெய்தபண்டியும், குழையும் இனிய பழம் பெய்து இடைவிடாது போம்பண்டியுமென்க.

மெல்லிலை, வினைத்தொகை, chewing-leaf. ௬௨.

*Together with the productions of the sea; vegetables and other carts laden with things, were moving in all directions.*

63. கருங்கடல்வளந்தரக்கரையும்பண்டியும்
நெருங்குபுமுதிரையினிறைந்தபண்டியும்
பெருங்கலிப்பண்டிகள்பிறவுஞ்செற்றுபு
திருந்தியெத்திசைகளுந்தெத்தவென்பவே.

இ-ள். முற்கூறியபண்டிகளும், வளத்தை நகர்க்குத்தருதற்கு முழங்கும்பண்டியும், நெருங்கி முதிரையானிறைந்தபண்டியும், ஒழிந்தபண்டங்

கள் செற்றிறவிலையுடைய பண்டிகளும் திருந்தி எத்திசைகளுஞ் செறிந் தனவென்க.

நகர்க்களையும் பாடமாயிற் களைதல் திசைச்சொல்லாய்க் கொண்டு போமென்னும்பொருள் பயக்கும். கடல்வளமாவன: "ஓர்க்கொலை சங்க மொளிர்பவளம் வெண்முத்த நீர்ப்படும் உப்பினேடைந்து." செற்றுப வென்னும் எச்சம் ஒலியையுடையவென்னும் விளியொடுகூடும். நெருங்குபு, நிகழ்காலம் உணர்த்தும். உம்மை மாறுக. சுங.

உலகம், obj. case, governed by தருதற்கு, ககர்க்கு, understood.

64\. கிளிவளர்பூமருதணிந்துகேடிலா
வளவயல்வைகலுமின்னதென்பதேன்
துளியொடுமதுத்துளியறுதசோலைசூழ்
ஒளியமைமிருக்கையூருரைக்கநின்றதே.

Description of the country.

இ—ள். மருதணியப்பட்டுக் கேடில்லாதவயல் நாடோறும் இத்தன்மைத்து: இனியான் கூறுதற்கு நின்றது குடியிருப்பையுடைய நாட்டிலூர்க வென்க.

என்ப, அசை. கேடு, "விட்டில், கிளி, நால்வாய், வேற்றரசு, தன்னரசு, நட்டம், பெரும்பெயல், காலெட்டு." தேன், வைத்ததேன். மது, பூவின்மது. சுச.

வயல், நின்றது, subjects. இன்னது, ஊர், predicates.

## வேறு.

65\. சேவலன்னந்தாமரையின்தோடவிழ்ந்தசெவ்விப்பூங்
காவிற்பூவெடுக்கியகவ்விக்கொண்டிருந்தன
தாவில்பொன்விளக்கமாத்தண்குயின்முழவமாத்
தூவிமஞ்ஞைநன்மணம்புகுத்துந்தும்பிக்கொம்பரோ.

The swans on the lotus are like lamps, and the voice of the Koil is like music, which rejoiced the pea-fowls.

இ—ள். சேவலாகிய அன்னம் பூவைக்கவ்வியிருந்தன அன்னம் விளக்காக, குயின் முழவாக, மயிலை மணத்தே புகுத்திவிடுமென்க.

தாமரையானுங் குயிலோசையானும் இளவேனிலென்று கருதி, மயில் பூம்பொதும்பரின் மறைதலிற் கொம்பு புகுத்துமென்றார். பெடைத் தொகை மயிலுஞ் சேரவிருந்தனவென்றுணர்க. இனி மயில் அன்னம் விளக்காக, குயின்முழவாகத் தும்பியைக் கொம்பிடத்தே மணம்புகுத்துமென்றுமாம். கொம்பிலுலாவும் மயில் விளக்காலும் முழவாலும் அக்கொம்பினின்றும் போந்து ஆடுதலின் கொம்பிற் பூவின்மணத்தே தும்பியைப் புகுதவிட்ட தாயிற்று. மெல்லியவோசை அன்மையிற் குயிலோசையென்றறியாது முழவாகக் கருதிற்று. இதற்கு இக்கருத்து நிகழ்தல் "ஆடமை குயின்ற" என்னும் அகப்பாட்டிற்காண்க. எடுக்கிய, எடுத்தற்கு. தா, வலி.

துவி, குட்டு. மணம், பூவின்மணமும் கல்யாணமும். தும்பியை யுடைய கொம்பு. ௬௫.

There is a play on the word மணம், which means marriage and scent; சிலேடை, paranomasia.

66\. கூடினார்கணம்மலர்க்குவளையங்குழியிடை
வாடுவள்ளைமேலெலாம்வாளையேறிப்பாய்வன [(து)
பாடுசால்கயிற்றிற்பாய்ந்துபல்கலனொலிப்பப்போந்
தாடுகூத்தியாடல்போன்றநாரைகாண்பவொத்தவே.

The Kuvalai flowers stand erect, and fishes play upon the creepers.

இ—ள். கண்போலும் செவ்விமலரையுடைய குவளை ஓடையின் நீர் தாழ்தலிற் சிதறி வாடினவள்ளைமேலே செல்ல வாளைமீன்களெல்லாம் பாய்கின்றவை கழாயினின்றும் இழிந்து பக்கத்தின் அமைந்த கயிற்றிலே குதித்துக் கலனொலிப்ப ஆடுங்கூத்தியது கூத்தையொத்தன; கரையிலிருந்த நாரைகள் காண்பன போன்றனவென்க.

குவளைகுழியில் நாட்டினகழையும், அதிற்படர்ந்தகொடியும், அதிற் பாய்கின்ற மீனும்; கழாயும், அதன்கீழிழிந்தாடுங் கயிறும், அக்கூத்தியும் போன்றன. வடிவுந் தொழிலும் உவமம். காண்ப, அசர்வீற்றுப்பல வறி சொற்றொழிற்பெயராய் நின்றது. ௬௬.

கண்ம்மலர் is கண் + அம் + மலர், a flower beautiful as the eye. பாய்வன is subject, போன்ற, ஒத்த, are predicates. See தண்டியலங்காரம், பொருளணியியல், 30. Sutram.

67\. காவியன்னகண்ணினார்கயந்தலைக்குடைதலின்
ஆவியன்னபூந்துகிலணிந்தவல்குற்பல்கலை
கோவையற்றுதிர்ந்தனகொள்ளுநரின்மையின்
வாவியாவும்பொன்னணிந்துவானம்பூத்தவொத்தவே.

The gems in the jewels of the women who were bathing lie scattered, shining like the stars of heaven.

இ—ள். மகளிர் கயத்திடத்தே விளையாடுதலிற் பலகலைகள் வடமற்று உதிர்ந்தன, அவற்றை எடுப்பாரின்மையின் வாவிகளெல்லா மேகலையை அணிந்து வானம் மீனைப்பூத்ததன்மையை ஒத்தனவென்க.

பொன், ஆகுபெயர். மேகலைக்கு உழப்பானவை அற்று வீழ்ந்தன. கயந்தலை, விகாரம். ௬௭.

ஆவியன்னபூந்துகில் is garment precious as life, i.e. female virtue.

68\. பாசவளிடிப்பவருலக்கைவாழைப்பல்பழம்
ஆசினிவருக்கைமாதடிந்துதேங்கனியுதிர்த்(து)
ஊசலாடுபைங்கமுகுதெங்கினொண்பழம்பரீஇ
வாசத்தாழைசண்பகத்தின்வான்மலர்கணக்குமே.

While the women are beating paddy, the rice pounders touch the trees, and the fruits drop.

இ—ள். உலக்கை வாழைப்பழத்தையுதிர்த்து ஆசினிமுதலியவற்றை முறித்து அவற்றின் பழங்களையும் உதிர்த்துப் பின்னும் அசைகின்ற கமு

றின் பழத்தையுந் தெங்கின்பழத்தையும் பறிந்து தாழைமலரையுஞ் சண்பகத்தின் மலரையும் நக்குமென்க.

எனவே ஏனையவும் பயன்தருமென நிலநன்மை கூறினர். இத்துணையுஞ் சோலைகளும் அதற்கு அங்கமான வாவிகளுங் கூறினர். ௬௮.

மலர்கணக்குமே i. e., மலர்களைக்கும், touches, i. e. destroys the flowers by the உலக்கை. ஆசினி, பலா, jack-fruit.

69. மன்றனுறிலஞ்சிமேய்ந்துமாமுலைசுரந்தபால்
நின்றதாரையானிலநனைப்பவேகிநீண்மனைக்
கன்றருத்திமங்கையர்கலநிறைபொழிதர
நின்றமேதியாற்பொலிந்தநீரமாடமாலையே.

The buffaloes milked to such an extent that the calves drank, and the vessels were filled to overflowing.

இ-ள். மடுவை மேய்தலாற் சுரந்த பால் நிலத்தை நனைக்கும்படி மாறாது நின்றதாரையாலே கன்றைநினைத்துப்போய் அதனை அருத்தி மங்கையர் எடுத்த கறவைக்கலமும் அதனினின்றும் பால்சொரியுஞ் சாலும் வழியும்படி நின்றமேதியாலே பொலிந்த தன்மையவென்க.

இலஞ்சி, மடு, ஆகுபெயர். நிறை, சால். "பிரவாய் பறந்தநீர் அறுநிரநிறை முதல்" என்றார் பிறரும். மாலை, மாடவொழுங்கு. மன்றல், வாசனை. ௬௯.

70. வெள்ளிப்போழ்விலங்கவைத்தனையவாய்மணித்தலை
கொள்பவளங்கோத்தனையகாலகுன்றிச்செங்கண
ஒள்ளகிற்புகைதிரண்டதொக்குமாமணிப்புறாக்
கிள்ளையொடுபாலுணுங்கேடில்பூவைபாடவே.

The turtle doves and parrots drink milk together, while the Mainas sing.

இ-ள். அம்மாடத்திலே வெள்ளித்தகட்டை விலங்குதலாக வைத்தன்னவாயினையும், தலையினையும், அகிற்புகை திரண்டதனையொக்கும் நிறத்தினையும் உடைய புறாக் காலவாய்க் கண்ணவாய்ப் பூவைப் பாடாநிற்கக் கிள்ளையோடே பாலுண்ணுமென்க.

மா, பெருமை. மணி, அழகு. கொள்ளுதல், அறுத்துக்கொள்ளுதல். நடுவு பலவனையுண்மையிற் கோத்தவென்றார். ஒள்ளகில், அதற்கொளி. சிலர்பாடப் பிள்ளைகள் பாலுண்டாரென்பதுந் தோன்றிற்று. ௭௰.

கால், கண், for காலையுடையனவாய், கண்ணையுடையனவாய், குறிப்புவினை. நிறம், understood after ஒக்கும். The construction is மணித்தலை...மாமணிப்புறு...கால...செங்கண...பாலுணும்.

71. காடியுண்டபூந்துகில்கழுமவூட்டும்பூம்புகை
மாடமாலைமேனல்லார்மணிக்குழலின்மூழ்கலிற்
கோடுயர்ந்தகுன்றின்மேற்குழீஇயமஞ்ஞைதஞ்சிற
ஆடுமஞ்சினுள்விரித்திருந்தவண்ணமன்னரோ. [(கு)

The drying of the hair of the women who had bathed, is like the spreading of the wings of the peacock.

இ-ள். காடியுண்ட துகில் புகையிலே மயங்குதலாலே மாடவொழுங்

கின்மேலிருக்கின்ற நல்லாருடைய குழலினூட்டும் புகையிலே அக்குழன் மறைதலின் அவர்கள் மலைமேற்றிரண்ட மயில்கள் தஞ்சிறகை அவ்விடத்துலாவும் மஞ்சினுள்ளே விரித்திருந்த தன்மையை யொப்பாரென்க.

காடி, காஞ்சி. சுட்டுவெருவிக்க. அன்னதென்ற பாடத்திற்கு மூழ்குதல் வண்ணமென்ன தன்னதென்க. ௭௧.

72. கண்ணுளார்நுங்காதலரொழிககாமமீங்கென
உண்ணிலாயவேட்கையாலூடிஞாயாடவர்
வண்ணமேகலைகளைப்பற்றவற்றுதிர்ந்தன
எண்ணில்பொன்சுடுநெருப்புக்கமுற்றமொத்தவே.

By the sulks and quarrels of lovers, the gems which fall from the dresses of the women appear like sparks of golden fire.

இ—ள். நம்மாற்காதலிக்கப்பட்ட மகளிர் நுங்கண்ணுள்ளார் ஈங்குக் காமத்தை யொழிகவென்றுகூறி உள்ளே நிலைபெற்ற விருப்பத்தாலே ஊடிப்போகின்றவரைக் கணவர்மேகலைகளைப் பிடிக்க அவையற்றுச் சிந்தினவை கிடந்த இடம் மாற்றற்ற பொன்னைச் சுடுநெருப்புச் சிந்தின முற்றங்களை யொத்தனவென்க.

இமையாது நோக்கலின் இங்ஙனம் ஊடினாள். ஈங்கு, தன்மையையுணர்த்துதல். "செலவினும் வரவினும்" என்னுஞ் சூத்திரத்திற்கூறினும். பொன்னுக்கும் மணிக்கும் தழலுங் கரியும் உவமை. ௭௨.

உண்ணிலாய, உள் + நிலாய, abiding within.

73. கோட்டிளந்தகர்களுங்கொய்மலர்தோன்றிபோற்
சூட்டுடையசேவலுந்தோணிக்கோழியாதியா
வேட்டவற்றநூறுள்ளார்வெருளிமாந்தர்போர்க்கொளீஇக்
காட்டியார்க்குங்கௌவையுங்கடியுங்கௌவைகௌவையே.

The butting of rams and the fighting of cocks give pleasure to the wealthy.

இ—ள். செல்வச்செருக்கினையுடைய மாந்தர் அவற்றினது புன்மைக் கருதாராய்ப் பின்னும் போரைவிரும்பித் தகர்களையும், சூட்டுடைய தோணியில்வந்த கோழிமுதலாயுள்ள கோழிகளையும், பூழ்முதலிய சேவல்களையுங் காட்டிக் கொளுத்தி ஆர்க்குங்கௌவையும், விலகுங்கௌவையுமே அவ்விடத்திற்கு ஆரவாரமென்க. ௭௩.

"வேட்டவற்றநூறுள்ளார்," வேட்டு, desiring. அவற்றது, their. நூறு, pain. உள்ளார், not thinking; they, the rich, act without thinking.

74. இறநுசுப்பினர்நலாரேந்துவள்ளத்தேந்திய
நறவங்கொப்புளித்தலினறுபுன்னைபூத்தன
சிறகர்வண்டுசெவ்வழிபாடமாடத்தூடெலாம் [வே.
இறைகொள்வானின்மீனெனவரம்பைமுலையினிருந்த

The laurel blossoms were like the shining stars, inviting the humming bees.

இ—ள். நல்லார் மணிவட்டிலிலே எடுத்த நறவத்தைக்கொப்புளித்தலிற் புன்னைகள்மாடத்தூடெலாம் வண்டுபோகும்படி மீனெனப்பூத்தன, அவர் கொப்புளித்தலின் வாழைமுகை முலைபோலே இருந்தனவென்க.

நாகு, புன்னை, "வேற்றுமைத்தொகையாய் ஒற்றிடைமிகாமொழியும்" என்னும் சூத்திரத்தான் ஒற்றடாது நின்றது. "சொல்லியமரபின" என்னுஞ் சூத்திரத்திற் "சொல்லுங்காலை" என்றதனுன் நாகு பெண்மையே அன்றி இளமையுமுணர்த்திற்று. நாகு மூதாதுணவமென்றூர் பிறரும். இறை, தங்குதல். அரம்பை, ஆகுபெயர். எச.

75\. விலக்கில்சாலையாவர்க்கும்வெப்பின்மூப்பழச்சுனைத்
தலைத்தணீர்மலரணிந்துசந்தனஞ்செய்பந்தருங்
கொலைத்தலையவேற்கணூர்கூத்துமன்றியைம்பொறி
நிலைத்தலையதுப்பெலாநிறைதலும்புமூர்களே.

The country abounded with water-sheds and eating houses, available to all.

இ—ள். நாட்டிலூர்கள் யாவர்க்கும் விலக்குதலில்லாத அடிசிற்சாலை முதலியனவும், வெம்மையில்லாத சுனையில் காலையில் எடுத்த தண்ணீரிலே பூவுமிட்டுச் சந்தனமுமிட்ட தண்ணீர்ப்பந்தரும், கூத்தாடும் இடமும் மொழிய ஐம்பொறி நிலத்திடத்தனவாகிய நுகரும் பொருள்கள் எல்லாம் ததும்புமென்க.

இவை அரசன் அறம். நோயறுத்தற்குக் கடுநெல்விதான்றி சூழவளர்ப்பார்கள். தலைய, இரண்டிடத்தும் வினைக்குறிப்பு. எரு.

வெப்பில், not hot. தணீர் for தண்ணீர் is qualified by சுனைத்தலை, from the spring. துப்பு, what we enjoy.

76\. அடிசில்வைகலாயிரமறப்புறமுமாயிரங்
கொடியஞர்செய்கோலமும்வைகரூறுமாயிரம்
மடிவில்கம்மியர்களோடுமங்கலமுமாயிரம்
ஒடிவிலைவெருயிரமோம்புவாரிஞேம்பவே.

There were thousands of charitable inns, and lands devoted thereto; and thousands of decorations, and rejoicings.

இ—ள். அவ்வூர்களில் நாடோறும் காணப்பட்ட வைகுதலுடைய அடிசிற்சாலையும் ஆயிரம், அறத்திற்கு விட்ட இறையிலி நிலங்களும் ஆயிரம், மகளிர் கோலம் செய்யுமிடமும் ஆயிரம், தொழிலின் மடியாத கம்மியரும் ஆயிரம், கல்லியாணமும் ஆயிரம், வெவ்வேறாகிய ஆயிரம் பாதுகாப்பாரால் காத்தவில், தவிர்தலில்லையென்க.

வேருயிரமும் இலையும் விகாரம். அறப்புறம் என்பதற்கு ஓதுவிக்கும் சாலையும் என்பதும் ஒன்று. "ஒடியாவிழா" என்றூர் பிறரும். எசு.

77\. நற்றவஞ்செய்வார்க்கிடந்தவஞ்செய்வார்க்குமஃதிடம்
நற்பொருள்செய்வார்க்கிடம்பொருள்செய்வார்க்குமஃதிடம்
வெற்றவின்பம்விளைவிப்பான்விண்ணுவந்துவீழ்ந்தென
மற்றைநாடுவட்டமாகவைகுமற்றநாடரோ.

The country was as if the heavenly world had descended to benefit the domestic and ascetic state.

இ—ள். அவ்வேமாங்கதமென்னும் நாடு வெற்றியையுடைய தனதின்பத்தை உலகை விரும்பப்பண்ணுதற்கு விண்மகிழ்ந்து வீழ்ந்ததென்னும்படி

தன்னை ஒழிந்தநாடு தனக்கு எல்லையாகவைகும், அது வீடுபெறத் தவஞ் செய்வார்க்கு இடம், இம்மை மறுமை கருதி இல்லறம் நடத்துவார்க்கும் இடம், அது நற்பொருளைப்பயக்கும் கல்வியைக் கற்பார்க்கிடம், நிலையாதபொருளைத்தேடுவார்க்கும் இடமென்க.

உம்மை இரண்டும் இழிவுசிறப்பு. வெற்றம், வெற்றி. ஊருணாக்க நின்றதென்ற கவிமுதலாக முடித்த வினைகளைச் சேர்த்து அவற்றை யுடைய நாடு விண்வீழ்ந்தென வைகும், அது இவை செய்வார்க்கிடம் எனக. ௭௭.

பொருள், wealth. நற்பொருள் is education.

நாட்டுவளம் முற்றிற்று.

---

*A description of the city.*

## நகர்வளம்.

### வேறு.

*Rajahmapuram was prosperous, as the merits of the virtuous.*

78. கண்வலைக்காமுகரென்னுமாபடுத்(து)
ஒண்ணிதித்தசைதழீஇயுடலம்விட்டிடும்
பெண்வலைப்படாதவர்பீடிதோங்கிய
அண்ணலங்கடிநகரமைதிசெப்புவாம்.

இ-ள். கண்ணாகிய வலையாலே காமுகரென்னும் விலங்கை அகப்படுத்து, நிதியாகிய தசையைக் கைக்கொண்டு, உடலைக் கைவிடும் பெண்ணினுடைய சூழ்ச்சியில் அகப்படாத முனிவருடைய தவப்பயன்போலே செல்வமோங்கிய இராசமாபுரத்தினிறைவு கூறுவாமென்க.

அம், சாரியை. ௭௮.

☞ அகப்படுத்து, in the comment, for அகப்படுத்தி, now obsolete.

*The gardens around were full of trees, abounding with scented flowers and singing birds.*

79. விண்புகுவியன்சினைமெலியப்பூத்தன
சண்பகத்தணிமலர்குடைந்துதாதுக
வண்சிறைக்குயிலொடுமயில்கண்மாறுகூய்க்
கண்சிறைப்படுநிழற்காவுசூழ்ந்தவே.

இ-ள். குயில்கள் பூத்தனவாகிய சண்பகத்தின் மலரைத் தாதுகக் குடைந்து மயிலோடே மாறுகக் கூவி நோக்கினோர் கண்கள் மீளாத நிழலை யுடைய கா அந்நகரைச் சூழ்ந்தனவென்க.

மெலிய, வளைய. கார்காலத்து மயிலின் களிப்பைத் தானுட்கோடலின் மாறு என்றார், மயிலோடு என மாறுக. செய்தெனெச்சஅடுக்கு. அம் மூக்கினவியென்னும் சூத்திரத்தில் பிறவினை கொள்ளுமென்றதனால் பிறவி

னையாகியஉடைமையென்னும் குறிப்பினைக்கொண்டது, இகரவீறுதிரிந்தது. இனிமேலிற் கவிக்கும் பொருந்த மயிலை உவமைத்தொகைக் கண்வந்த ஆகுபெயரென்று மகளிராக்கி மகளிர் குயிலொடு மாறு கூவினரென்று உரைப்பதே பொருள். இனிச்சண்பகத்தின் தேன் துளித்தலில் காரென்னும் மயிலொடுமயிலும் வேனிலாதலில் குயிலொடுகுயிலும் கூவிற்றென்னுமாம். சிறுபான்மை மயிலே கூவிற்றென்றலுமாம். ௭௯.

துளித்தல், verbal noun (தொழிற்பெயர்) in apposition with சண்பகம், தேன், to be taken before குயிலொடு. குடைந்து and கூய், past verbal part. have உடைய, understood after மிழலை. This is an exception, for we cannot say சாவ வந்த அவன் போனான், but சாவ வா அவன் போனான்.

80. கைபுனைசாந்தமுங்கவின்செய்மாலையும்
The tanks were scented with the perfumes of the bathers.
மெய்புனைசுண்ணமும்புகையுமேவிய
நெய்யொடுகுங்குமநிறைந்தநாணினாற்
பொய்கைகளபூம்படாம்போர்த்தபோன்றவே.

இ-ள். சாந்தமுதலியன நிறைந்த பொய்கைகள் நாணத்தாலே பொலிவினையுடைய படாம்போர்த்த தன்மையை ஒத்தனவென்க.

இனிப் பிறர் மாசுபட்டதென்னும் நாணாலே பூவாகிய படாம் போர்த்ததுவுமாம். மேவியநெய், பூசின புழுகு. குங்குமம், இவை குளிப்பார் அணிந்தன. ௮௰.

நிறைந்த, the rel. part. agreeing with the six things specified.

81. கடிநலக்கரும்பொடுகாய்நெற்கற்றையின்
The description of the place where elephants were tied in abundance.
பிடிநலந்தழீஇவரும்பெருங்கைக்குஞ்சரம்
அடிநிலையிருப்பெழுவமைந்தகன்மதிற்
புடைநிலைவாரிகள்பொலிந்தசூழ்ந்தவே. ௮௧.

82. சலசலமும்மதஞ்சொரியத்தத்தமுள்
”
கொலைமருப்பிரட்டைகள்குளிப்பப்பாய்ந்திரு
மலைதிளைப்பனவெனநாகமான்றபோர்க்
குலவியநிலக்களங்கோலமார்ந்தவே.

இ-ள். மும்மதஞ்சொரிதலாலே இரண்டுகொம்பும் தைத்து மறையப் போர்செய்தற்கு வளைந்த நிலைபெற்ற களம் சூழ்ந்த கன்மதிலினுட் புடைநிலையிலே கரும்புமுதலியவற்றின் நலத்தை விரும்பிவருங் குஞ்சரநிற்றலை உடைய கூடங்களும்பொலிந்த, அக்குஞ்சரம்போர்செய்தற்குச் சமைந்த களங்களும் கோலமார்ந்தனவென்க.

இவையிரண்டும் ஒருதொடர். இன்பிடி, கவளம். அடியினகாது நிற்றலையுடைய சனையமைந்தவாரி. சலசல, தம்மிற் போர்செய்வன இரண்டுமேலே என்னும்படி யானைகள் நுசையட. ௮௨.

*The tusks of the elephants had pearls in them.*

௮௩. முத்துடைவெண்மருப்பீர்ந்துமொய்கொளப்
பத்தியிற்குயிற்றியமருங்கிற்பல்வினைச்
சித்திரக்கிம்புரிவயிரஞ்சேர்த்துநர்
ஒத்தியவிடங்களுமொழுங்குநீண்டவே.

இ–ள். மருப்பையறுத்துக் கூர்மையிட்டு அது வலிகொள்ளும்படியிடுங் கிம்புரியிலே வயிரமிடுவோர் தம்மிற் பொருந்தி நடக்குந் தெருவுகளுமொழுகு நீண்டனவென்க.

இனிக்கிம்புரி வயிரங்கொள்கையுமாம், ஆகுபெயர். பத்தி, மருங்கிலே பலவினைகளைக் குயிற்றிய நல்லகிம்புரி. இன், அசை. ௮௩.

The Hindus suppose pearls to be formed in the elephant's tusk, bamboo, sugarcane, &c. மொய்கொள, to become strong. கிம்புரி, a knob, or ring, on the tusk.

*Description of places for chariots, horses, and parading grounds.*

௮௪. ஓடுதேர்ச்சாரிகையுகுபொற்பூழியும்
ஆடகமாற்றுந்தார்ப்புரவிவட்டமும்
கேடகவாட்டொழிலிடமுங்கேடிலாக்
கோடுவெஞ்சிலைத்தொழிலிடமுங்கூடின்றே.

இ–ள். தேரினது கதிவிசேடத்தாலே சிந்தும் பொன்னையுடைய தேரேறுமிடமும், குதிரையேறுமிடமும், கேடகத்தோடு வாட்டொழில் செய்யுமிடமும், பயிற்றுதலிற் கெடுதலில்லாத விற்றொழில் செய்யுமிடமுங் கூடிற்றென்க.

ஆடகத்தார், வேற்றுமைத்தொகை. கோடுசிலை, வினைத்தொகை. ௮௪.

கூடின்று for கூடிற்று, singular for plural.

*The noise of the inhabitants within the city was as the noise of the ocean.*

௮௫. புடைநகர்த்தொழிலிடங்கடந்துபுக்கபின்
இடைநகர்ப்புறம்பணையியம்புமோசையோர்
கடலுடைந்ததுவெனக்கலந்ததக்கடல்
மடையடைத்தனையதம்மாக்களீட்டமே.

இ–ள். புறப்படை வீட்டிற்றொழில் செய்வாரிடத்தை யான் ஒருவாற்றாற்கூறி, இடைநகரினது தன்மை கூறத்தொடங்கினபின்பு முற்கூறிய புடைநகர்ப்புறமாகிய மருதநிலத்தே சென்றொலிக்கும் இடைநகரின் ஓசை கடலுடைந்த ஓசையென்னும்படி அவ்விடத்தே பொருந்திற்று, அவ்வோசை பிறத்தற்குக் காரணமாகிய மாக்களீட்டம் அதனுடைப்பை உலகு குவிந்தடைக்குந்தன்மையை ஒத்ததாதலால் என்றாற் கூறலரிதென்றாரென்க.

கடந்தென்றார் கூறுதலருமைபற்றி. புகுதல், சொல்லப்புகுதல். அடைத்தனையது (for அடைப்பதுபோல) காலமயக்கம். ௮௫.

86\. சிந்துரப்பொடிகளுஞ்செம்பொற்சுண்ணமுஞ்
சந்தனநீரொடுகலந்துதையலார்
பந்தொடுசிவிறியிற்சிதறப்பார்மிசை
இந்திரவில்லெனக்கிடந்தவீதியே.

The streets sprinkled with water by women, appeared like the colours of the rain-bow.

இ-ள். தையலார் சிந்துரப்பொடிகளையும் சுண்ணத்தையும் சந்தனத்தையும் பனிநீரோடே கலந்து மட்டத்துருத்தியாலும் நெடுந்துருத்தியாலும் சிதற அவை பாரிலே கிடந்த இந்திரவில்லென வீதியிலே கிடந்தனவென்க. ௮௬.

87\. பாத்தரும்பசும்பொனின்மாடத்துச்சிமேற்
றூத்திரண்மணிக்குடநிரைத்துத்தோன்றுவ
பூத்தனவேங்கைமேற்பொலிந்துகார்நினை(ந்து)
ஏத்தருமயிற்குழாமிருந்தபோன்றவே.

The blue water pots on the terraces appeared like peacocks on the golden flowers of the Vengai tree.

இ-ள். மாற்றற்ற பொன்மாடங்களின் உச்சியிலே நீலமணிக்குடங்கள் நிரைத்துத் தோன்றுவன பூத்தனவாகிய வேங்கையின்மேலே மேகத்தை நினைத்தலான் மேனோக்குதலைத் தருகின்ற மயிற்றிரள் பொலிந்திருந்தனவற்றை ஒத்தனவென்க.

எக்கழுத்தமென்றூர் பிறரும். ௮௭.

தோன்றுவ, pl. verb-noun, subject to the verb போன்ற. பூத்தன, verb-noun in apposition with வேங்கை.

88\. நெடுங்கொடிநிழன்மதிநெற்றிதைவர
உடம்புவேர்த்தினமழையுரறிநோக்கலின்
நடுங்குபுநல்வரைமாடத்துச்சிமேல்
அடங்கிவீழ்ந்தருவியினழுவபோன்றவே.

The banners were so lofty as to touch the moon, and to oppose the clouds, so that they shed tears, i. e. rain.

இ-ள். கொடியிக்குச்சென்று மதியின் தலையைத் தடவுதலின் நடுவதிரியுமேகம் உடம்பு புழுங்கி வேர்த்து இடித்து நோக்கிப்பெய்தலினுளதாய அருவியின் கணத்தால் நடுங்காநின்று மாடத்துச்சியிலே குவிந்து வீழ்ந்தழுவனபோலே இருந்தனவென்க.

சிலர் கோபத்திற்கு அஞ்சிச் செருக்கடங்கி அழுததென்பதுபோதரும். ௮௮.

வரைமாடம், a mountain-like house.

89\. பொற்சிறுதேர்மிசைப்பைம்பொற்போதகம்
நற்சிறாஅர்தவினங்கைமார்விரீஇ
உற்றவர்கோழிமேலெறிந்தவொண்குழை
மற்றத்தேருருள்கொடாவளமைசான்றவே.

The jewels thrown on fowls by children watching the drying paddy, lie scattered all around.

இ-ள். கோழிமேலெறிந்த குழை சிறார் தேர்மிசைப் போதகத்தை யூர்தலின் அத்தேரைப்போதல் கொடாத செல்வம் நிறைந்தனவென்க.

நங்கைமார், செல்லுபார்த்திருக்கின்றவர்கள். ஒலி, வீரீஇயாயிற்று. மற்று, அசை. ௮௯.

போதகம், a young elephant. கடிது, to drive away birds. இளமை, youth.

90\. மாலையும்பசும்பொனுமயங்கிவார்கழைக்
கோலையுங்குனிசிலைநுதலினுரொடு
வேலியவாடவர்விரவிவின்னவர
ஆலயமிதுவெனவையஞ்செய்யுமே.

The sight of the men and women appeared as if the place was the city of the gods.

இ-ள். அவ்விடம் மாலையும் பூணும் மயக்கப்பட்டுச் சிலைபோலும் நுதலினாரோடே ஆடவரும் கலக்கப்பட்டுத் தேவரிருப்பிடம் இது வென்று ஐயந்தருமென்க.

கழை, அலகு. ௯௰.

91\. கற்சுண்ணஞ்செய்ததோண்மைந்தர்காதலால்
நற்சுண்ணப்பட்டுடைபற்றநாணினுற்
பொற்சுண்ணத்தால்விளக்கவிப்பப்பொங்கிய
நற்சுண்ணம்புறம்பணைதவழும்பொற்பிற்றே.

By the defiance of the sexes, the women, whose garments are loosed, throw the perfumed powder which is in their hands upon the lights and put them out.

இ-ள். மைந்தர் மகளிர் புலந்துபோவுழி, தங்காதலால் அவருடையைப் பிடிக்க அது நெகிழ்ந்தநாணாலே அவர் சுண்ணத்தைக்கொண்டு விளக்கை அவிப்ப மிக்கெழுந்த சுண்ணம் புறம்பின் மருதநிலத்தே பரக்கும் பொற்பிற்று அவ்விடமென்க.

காதலாரும் பாடம். கல், உலம். சுண்ணப்பட்டு, சுண்ணம் விளைந்தவையப்பட்டு. சுண்ணத்தால், உருபினும் பொருளினும் மெய்தமொழி ஒன்றனிலைக் களத்தோன்று சென்றது. மகளிர், தோன்றா எழுவாய். ௯௧.

பொற்பிற்று, அழகினையுடைத்து, most beautiful.

92\. கலத்தகுநானநின்றிடிக்குமல்லவர்
உலக்கையாலுதிர்ந்தனதெங்கினொண்பழம்
நிலத்தவைசொரிதலின்வெரீஇயமஞ்ஞைபோய்க்
கலத்துயர்கூம்பின்மேலாடுகவ்வைத்தே.

The pestles of the women pounding perfumery touch the tops of trees, by which fruits drop, and the peacocks fly up on lofty masts.

இ-ள். விரும்பத்தகுகின்ற சுண்ணத்தை நின்றிடிக்குமகளிர் உலக்கையால் கழன்றனவாகிய பழத்தைத் தெங்குமடலிலே தாங்கி நிலத்தே சொரிதலின் வெரீஇயமயில்போய் அச்சம்நீங்கிக் கூம்பின்மேலாடுங் கௌவைத்து அவ்விடமென்க.

கலத்தகு, வியத்தகுவென்றாற்போல நின்றது. நானம், ஆகுபெயர், அதிலே ஈனேந்நிடித்தலின். புகாரினது ஆழத்தால் கலமாவும் கலம்வந்தது. அரசன் விளையாடுதற்குச் சமைத்தனவுமாம். ௯௨.

93. இட்டவெண்ணிலைப்படாவகையினீண்டிய
முட்டிலாமூவாறுபாடைமாக்களாற்
புட்பயில்பழுமரப்பொலிவிற்றாகிய
மட்டுடைவளநகர்வண்மையின்னதே.

The people of eighteen languages are congregated here as thick as birds upon a tree ripe with fruit.

இ-ள். போட்டவெள்ளு நிலத்தில் வீழாததொரு கூற்றாலே திரண்ட குறைவற்ற பதினெட்டுப்பாடைமாக்களாலே பழுமரப்பொலிவிற்றாகிய நகரின்செய்தி எக்காலமும் யான் முற்கூறிய தன்மைத்தென்க.

இதனுனே நெருக்கமும் ஓசை வேறுபாடும் பயன்கோடலுங் கூறிற்றும். மிலேச்சசாதிவின் வயிறுவிற்குரிய மாக்களென்னும் பெயரால் கூறினர். கடிநகரமைதிசெப்புவாம் என்றது முதலாக நடுவுகூறிய வினைகளைப் புடைநகர்த் தொழிலிடங்கூடந்தது என்பதனுடு முடிந்து, அது முதல் இடைநகரிற் கூறிய வினைகளை இன்னது என்பதனுடு முடிக்க. ௯௩.

The people were so numerous that there was no room on the ground for even a grain of sesamum to fall.

94. தங்கொளிநித்திலத்தாமஞ்சூடிய
வெங்கனியிளமுலைவேற்கண்மாதரார்
பைங்கிளிமுன்கைமேற்கொண்டுபார்ப்பெனுங்
கொங்கொளிர்தாமரைக்கிடங்குகூறுவாம்.

The women with parrots in their hands look at the lotus tanks filled with young swans.

இ-ள். மாதரார் கிளியை முன்கையிலேகொண்டு மாடங்களிலே நின்று பார்ப்பை அக்கிளிக்கு எண்ணிக்காட்டுதற்குக் காரணமாகிய கிடங்கினைக் கூறுவாமென்றார் என்க.

சூடியவென்றார், "முலைமுடி சூடிற்று" என்றாற்போல. வெம்மை, விருப்பம். மேற்றுமணா கூறுதலிற் பார்ப்பு, அன்னப்பார்ப்பு. ௯௪.

பார்ப்பு, குஞ்சு, young ones, second case understood, எனும் for என்னும். நித்திலத் தாமம், முத்துமாலை, a row of pearls.

95. கோட்சுறவினத்தொடுமுதலைக்குப்பைமேல்
ஆட்பெருத்திரிதரவஞ்சிப்பாய்வன
மோட்டிருப்பனிக்கிடங்குழக்கப்பாய்ந்தெழுந்(து)
ஈட்டறுப்புள்ளினமிரற்றுமென்பவே.

The trenches were filled with sharks and alligators, at which the little fish leap with fright, and the birds fly about in confusion.

இ-ள். சுறவினத்தோடே முதலைத்திரள் கரையிலேவந்தவனை எதிர்ப்படப் பெறுவாய் உள்ளேறிதருதலால் அதற்கு அஞ்சி விசைத்துப்பாய்வனவாகிய இறாவுழக்குதலின் ஈட்டமறுத புள்ளினம் எழுந்தரற்றுமென்க.

முன்னே கூறியனைத்தமைபெறுதலிற் சுறவு கூறினார். கரையில் அஞ்சி ஆழத்திற் சென்றால் ஆளைக்கொல்லுதல் அவற்றிற்குத்தொழில். ௯௫.

96. சிறையனப்பெடையினொடூடிச்சேவல்போய்
அறுபதவண்டினமார்ப்பத்தாமரை
உறைவதுகுழுவினினீங்கியோகொடு
கறையறமுயல்வதோர்கடவுளொத்ததே.

The gliding of swan on the lotus leaves causes the beetle to fly up, which like black clouds on the red lotus, appeared like sacrifical fire kindled by a devotee.

இ—ள். அன்னப்பெடையினோடே சேவலூடிப்போய் வண்டினம் எழுந்தார்ப்பத் தாமரைப்பூவிலே குவிந்திருக்கின்றது சுற்றத்தினின்று நீங்கிக் கறையறத் தீயிடைநின்று யோகத்தொடு தவஞ்செய்வதோர் கடவுளை யொத்ததென்க.

கறை, மும்மலமும். யோகத்திருந்தது. எழுந்தவண்டு புகைக்கும், பூ நெருப்பிற்கும் உவமம். ௯௬.

யோகொடு, for யோகு for யோகம், contemplation. மும்மலம், three kinds of evil passions. உறைவது, subject. ஒத்தது, predicate. கடவுள், a devotee, a saint.

97. அரும்பொனும்வெள்ளியுமணியுமல்லது
கருங்கலந்தோய்விலக்காமர்பூந்துறை
குரும்பைமென்முலையின்மேற்குலாயகுங்குமம்
விருந்துசெய்திடவெறிமேனிசேந்ததே.

By the perfumery of the women, the borders of the tanks were reddened.

இ—ள். குளிப்பார்முலையிற் குங்குமந்தன்னைப் புதுமைசெய்தலாலே பொற்குடம் முதலியன முகத்தலல்லது மட்குடம் முகவாத துறைமேனி சிவந்ததென்க.

பொன் முதலிய, காரணப்பெயர் அதனால் இயன்ற காரியத்தின்மேல் நின்ற ஆகுபெயர். வெறி, மணம். ௯௭.

கருங்கலம், an earthen pot. காமர், beautiful. மேனி, subject to be taken with பூந்துறை.

98. பட்டவர்தப்பவிற்பரவையோந்தல்குல்
அட்டொளியாரத்தவாய்க்கணிகையல்லது
மட்டுடைமணமகண்மலர்ந்தபோதினால்
கட்டுடைக்காவலிற்காமர்கன்னியே.

The tanks were as deep as the hearts of courtesans, and they were watched as virgins are watched.

இ—ள். அகப்பட்டவரைக் கரையேறாமற் கோறலிற் பரத்தையை ஒக்கும், அது ஒழிய மலர்ந்தபூவினான் மணஞ்செய்த குலமகளை ஒக்கும், காவலாற் கன்னியை ஒக்குமென்க.

உருக்கிய ஒளியையுடைய ஆரத்தம், மட்டுடைமலரென்க. கட்டு, கற்பித்தல். ௯௮.

தப்பவில், not to escape.

99. திரைகதிர்நித்திலங்கோத்துவைத்தபோல்
விரைகமழ்கமுகின்மேல்விரிந்தபாளையுங்
குரைமதுக்குவளைகள்கிடங்கிற்பூத்தவும்
உரையினோரோசனையுலவிநாறுமே.

The blossoms of the arecanut look like rows of pearls, and the scent of the Kuvali flowers is discerned far and wide.

இ—ள். நித்திலத்தைக் கோத்துவைத்தபோற் கரையிற் கமுகின்மேல்

விரிந்த வினா சமழ்பாளையுங் கழியிற் பூத்த குவளையுமுலாவி ஒரோசகனை நாறுமென்க.

குளாமது, வினைத்தொகை. உலா, புகழ்; புகழாலெங்கும் உலாவி. ௯௯.

100\. தாய்முலைதழுவியகுழவிபோலவும்
மாமலைதழுவியமஞ்சுபோலவும்
ஆய்முகிறழீஇயசும்பருதலைநெற்றிய
செயுயர்மதில்வகைசெப்புகின்றதே.

The ramparts were so high as to reach the sky, embracing each other as a child does its mother's breasts.

இ—ள். நீர்சுமைந்திளைத்த மேகத்தைத் தன்னிடத்தே அணைத்தலாலே குழவியை அணைத்ததாயுடைய முலைபோலவும், மஞ்சைத் தன்னிடத்தே அணைத்த பெரியமலைபோலவும், அசும்பருதலையையுடைய மதிலின்கூறுபாடு இனிக்கூறுகின்றதென்றறிக. ௱.

முகிறழீஇ, முகில் தழுவி, embracing the clouds.

## வேறு.

101\. மாற்றவர்மறப்படைமலைந்துமதில்பற்றின்
நூற்றுவரைக்கொல்லியொடு தூக்கியெறிபொறியுந்
தோற்றமுறுபேய்களிறுதுற்றுபெரும்பாம்புங்
கூற்றமனகழுகுதொடர்குந்தமொடுகொண்மா.

Description of the fortress: various war engines and instruments were set up and ready.

இ—ள். இதுமுதலாகக் கரும்பொனளவும் ஒருதொடர். நூற்றுவரைக்கொல்லி, சதக்கினி, நூறுபேரை ஒருக்காற் கொல்வதொருபொறி. தூக்கி, தள்ளி. எறிதல், அடித்தல். "சேரியம்பெண்டிர் நெஞ்சத்தெறிய" என்றாற்போல. தோற்றமுறுபேய், கட்புலனாகிய பேய். துற்றுதல், விழுங்குதல். தொடர், இருப்புச்சங்கிலி. குந்தம், விட்டேறு. கொண்மா, புலிமுதலியன. இவற்றிற்கெல்லாம் விரிக்க. ௱௧.

102\. விற்பொறிகள்வெய்யவிடுகுதிரைதொடரயில்வாள்
கற்பொறிகள்பாணவயனமாடமடுசெந்தீக்
கொற்புனைசெய்கொள்ளிபெருங்கொக்கெழில்செய்கூகை
கற்றலைகடிருக்கும்வலிகெருக்குமாதிலையே.

Various frightful and deadly weapons were displayed.

இ—ள். விடுகுதிரை, பகைவர்மேலே விடுங்குதிரைப்பொறி. தொடர்வாள், தானேதொடர்ந்து கொல்லும்வாள். கற்பொறி, இடங்கணி முதலியன. பாணவையும், அன்னமும், மாடங்களும், அடைப்படுந்தியும். மாடம், காடகசாலை. கொல், கொற்சாலை, (black-smiths). காய்ந்தஇரும்புடன் கொளுத்தவிற் கொள்ளி என்றார். எழில், இகழ்ச்சிக்குறிப்பு. தலைகளைத் திருகிக்கொள்ளும் வலியுடனே செருக்குமாமாவன, ஐகவித்தலாம். இவற்றிற்கும்மை விரிக்க. ௱௨.

வெய்ய, furiously. அணம், for அன்னம். கொக்கெழில், for கொக்கு எழில், beautiful, gratifying. கூகை, ironically. தலைகடிருக்கும் for தலைகள் திருக்கும், twisting the head.

103. செம்புருகுவெங்களிகளுமிழ்வதிரிந்தெங்கும்
வெம்புருகுவெட்டெயிழ்வவெங்நெய்முகந்துமிழ்வ
அம்புமிழ்வவேறுமிழ்வகல்லுமிழ்வவாகித்
தம்புலங்களால்யவனர்தாழ்ப்படுத்தபொறியே.

Burning metals are ready to be thrown in the fire.

இ-ள். எவ்விடத்துந்திரிந்து செம்புருகின களியுமிழ்வனவும், பகைவர் வேதற்குக் காரணமான உருகுவெட்டையுமிழ்வனவும், நெய்யையுமிழ்வனவுமாக யவனர் இயந்திரித்த பொறியும்.

உம்மைவிரிக்க. ஆமி, ஆக. புலம், அறிவு. ௱௩.

களி, thick fluid. வெய்யநெய், boiled or heated ghee. யவனர், architects or artisans.

104. கரும்பொனியல்பன்றிகருநாகம்விடுசகடங்
குரங்குபொருதகரிவெருவுகூர்ந்தநிலைநூன்னூல்
பரந்தபகும்பொற்கொடிகள்பதாகையொடுகொழிக்.
திருந்துமதிற்றெவ்வர்தலைபனிப்பத்திருந்தின்றே. [குர்

Various weapons, like animals made of metals, were set in array.

இ-ள். பதாகையொடு கொழிக்குந் திருந்துமதில், மாற்றவர் மற்றப்படை அகழைக் கடந்து தன்னைப்பற்றின் அச்செல்வர் தலைப்பனிக்கும்படி நாற்றுவலைக்கொல்லி முதல் பரநிலை மிருக உள்ளனவும், செம்புருகுகளிமுதலியவற்றை யுமிழ்வனவாக யவனர்தாழ்ப்படுத்தபொறிகளும், பன்றிமுதல் நூன்னூலீறுயுள்ளவையுந் திருந்திற்றென்க.

. இரும்பால் இயன்றபன்றி. நாகம், விடவரவு. நூல், திரிகயிறு. பதாகை, பெருங்கொடி பொற்கொடிகள், மதில் இன்னதும் இன்னதும் திருந்திற்றெனச் சினைவினைமுதலொடு முடிந்தது. பற்றிப்பனிப்ப வென்க. இத்தொடர்நிலையிற் சொற்களைத் துணித்துப் பலவிடத்தினும் எடுத்துக்கூட்டியது செய்யுளுறுப்பு இருபத்தாறினுள் மாட்டென்னும் உறுப்பாதலின்: "அகன்றுபொருள் கிடப்பினு மணுகிய நிலையினு மியன்றுபொருண்முடியத் தந்தனருணர்த்தன் மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்" என்றும்; "மாட்டுமெச்சமு நாட்டலின்றி யுடனிலைமொழியினுந் தொடர்நிலை பெறுமே" என்றுந் தொல்காப்பியனார் கூறினார். இதனால் நாடுமுதலிய கவிகளின் மாட்டின்றி வந்தனவுங்கொள்க. இவ்விதிகண்மேல் வருவனவற்றிற்குங் கொள்க. ௱௪.

105. வயிரவரைகண்விழிப்பதுபோன்றுமறையுகளும்
வயிரமணித்தாழ்கதவுவாயின்முகமாக
வயிரமணிஞாயின்முலைவான்பொற்கொடிகூந்தல்
வயிரக்கிடங்காடைமதிற்கன்னியதுகவினே.

The fortress was like a virgin, the gate of which was the face, the tower the breast, the banners the hair, the surrounding trench the vesture.

இ-ள். முலையினையுங் கூந்தலினையும் ஆடையினையுமுடைய மதிற்கன்னி கதவினையுடைய நாலுவாயிலும் நாலுமுகமாகக் கவினிடத்ததாயிற்றென்க.

வளைகள் கண்விழிப்பபோன்று கதவுடையவென விளக்குறிப்பொடு முடிந்தது. மழையுகளும் வாயிலெனவே கோபுரமாம். ஞாயில், எப்புழைக்கும் நடுவாயெய்துமறையுஞ்சூட்டு. கவினது, முன் மாறுக. இது இடப்பொருள் உணர்த்திற்று. இனி ஆகவென்பதை எங்குங்கூட்டி மதிலின்னதின்னதாகக் கவினிடத்ததென்றுமாம். மதிலின்னதின்னது ஆலகையினுலே அம்மதில் கன்னியதாயிருக்கும் அழகென்றுமாம். ௱௫.

"கன்னியழகவினே" is for கன்னிகவினது, the virgin is of such beauty.

106. செம்பொன்மழைபோன்றடிதோறுயிரங்கள்சிந்திப்
The city was filled with all the merchandise of the isles, and was like the city of the gods.
பைம்பொன்விளைதீவினிதிதடிந்துபலர்க்கார்த்தி
அம்பொனிலத்தேகுருகுடியகநகரமதுதான்
உம்பருலகொப்பததன்றன்மைசிறிதுரைப்பாம்.

இ–ள். இனிக் கூறுதுநின்றது பொன் விளைகின்ற தீவின்நிதியை வெட்டிப் பொன்மழைபோன்று அடிக்கடி சிந்திப் பலர்க்கும் பலவாயிரங்களைக்கொடுத்து நிறைவித்ததினுலே மறுமையில் தேவருலகத்திலே செல்லுங் குடியையுடைய உள்நகரமதுதான் உயர்ச்சியான் உம்பருலகொப்பதொன்றாயினும் அதன்தன்மை சிறிது கூறுவாமென்க. ௱௬.

## வேறு.

107. துப்புறழ்தொண்டைச்செவ்வாய்த்தோழியர்காமத்தூதின்
The courtesans, who sell themselves for money, send abroad their emissaries to invite admirers.
ஒப்பவொன்றுதியாகவாயிரத்தோரெட்டமறுச்
செப்பித்தஞ்செம்பொனல்குனலம்வரைவின்றிவிற்கும்
உப்பமைகாமத்துப்பினவரிடமுரைத்துமன்றே.

இ–ள். வேட்கையினைவிளைக்குந் தோழியராகிய தூதாலே செம்பொன் ஒன்றுதியாக ஆயிரத்தெண்கழுஞ்சிறுக, வந்தவனுக்கொப்ப விலைசொல்லித் தம்மல்குலை விற்கும் உவர்ப்பிலாத காமநுகர்ச்சியையுடைய பரத்தையரிடத்தைக் கூறுவாமென்க.

தொண்டை, வாய்க்கு அடை. நலம்வரைவின்றி, ஒருவரிடத்தும் அன்பு நிலைபேறின்றி. உப்புடை முந்நீரென்றார் உவர்ப்பிற்கு. உப்பு, இனிமையுமாம். இனி உவமைத்தொகையாக்கி இதற்கிது அசவென்று உப்பிடுமாறுபோலக் கொடுக்கும் பொருளளவான அன்பென்று முரைப்ப. துப்பையொக்குந் தொண்டைபோலுஞ் செவ்வாயென இரண்டுவமையுஞ் செவ்வாயை நோக்குதலின அடுத்துவரலுவமையன்று. ௱௭.

The first துப்பு is coral, the second துப்பு is love, pleasure. உறழ், like. போலும் understood after தொண்டை, a plant. வரைவின்றி, without respect of persons.

108\. குங்குமமெழுகிச்சார்வுந்திண்ணையுங்குயிற்றியுள்ளால்
தங்குமென்சாந்தத்தோடுதாமமுந்தாழநாற்றி
எங்குநற்சுவர்கடோறுநாடகமெழுதியெப்பப்
பொங்குமென்மலர்பெய்சேக்கைபொலிந்துவிண்புகற்சி
யுண்டே.

There houses were sprinkled with perfumes, beautified with garlands and pictures, and their beds strewed with flowers.

இ-ள். அச்சேரிப்புறமெங்குஞ் சார்ந்திருக்கும் இடத்தையுந் திண்ணையையும் பண்ணிக் குங்குமத்தாலே மெழுகி உள்ளெலா மெழுகின சந்தனத்திலே மாலையையுந் தாழநாற்றிச் சுவர்கடோறுங் காமக்குறிப்புப் பட நாடகமெழுதிச் சேக்கைபொலிந்து விண்ணை விரும்பப்பண்ணுத லுடைத்தென்க. ௱௮.

சார்வு, by metonymy for places around. நாற்றி, causal from நான்றது, hanging.

109\. தூசுசூழ்பாவையல்குல்சுமக்கலாதென்னவீழ்த்த
காசுசூழ்கோவைமுத்தங்கதிர்முலைகிடந்தசாந்தம்
வாசநற்பொடிகண்மாலைவண்டுணவீழ்ந்தமுற்றம்
ஆசைப்பட்டரசவைகவருங்கடிகமழுமன்றே.

Even kings desired their houses, so brilliant with ornaments, so scented with perfume.

இ-ள். தூசுசூழ் அல்குலைச்சூழ்ந்தகோவை இவ்வல்குல் நம்மைச்சுமக்கமாட்டாதென்று கருதினாற்போல வீழ்த்தகாசு முத்தம் சாந்தம் சுண்ணம் மாலையென்கின்றவை வீழ்ந்தமுற்றம் அரசுவிரும்பித் தங்கும்படி கமழுமென்க. ௱௯.

110\. அஞ்சிலம்பொலியோடல்குற்கலையொலியணிந்தமுன்கைப்
பஞ்சிமெல்விரலிற்பாணிபண்ணொலிபவளச்செவ்வாய்
அஞ்சொலார்த்துயிர்க்குந்தேன்சொற்குழலொலிமுழவினோசை
துஞ்சலிலோசைதம்மாற்றுறக்கமுநிகர்க்கலாதே.

Their houses were filled with enchanting music.

இ-ள். சிலம்பொலியோடே கலையொலி யாழொலி யாட்டொலி குழலொலி முழவினொலியாகிய ஒழியாவொலிகளாலே இச்சேரிக்குத் துறக்கமும் ஒவ்வாதென்க.

முன்பு சேடியர்கையாற் செம்பஞ்சணிந்தவிரல், செவ்வாயை முன்னும் பின்னுங் கூட்டுகெ. வாயுறுத்தற்கஞ்சியுற்றபின் தன்றொழின்முடிதற்கு நேர்ந்ததுங்குழல். ௱௰.

விரலிற்பாணி, sound made on a musical instrument with the finger.

111\. தேனுலாமதுச்செய்கோதைதேம்புகைகமழவூட்டி
வானுலாச்சுடர்கண்மூடமாநகரிரவுச்செய்யப்
பானிலாச்சொரிந்துநல்லாரணிகலம்பகலைச்செய்ய
வேனிலான்விழைந்தசேரிமேலுலகணையதொன்றே.

Their houses were changed from day to night by precious gems, and from night to day by clouds of dark perfume.

இ-ள். கோதையைப் புகைத்தலால் புகை வானுலாச்சுடர்களை மறைத்து நகரைப் பகலே இரவை உண்டாக்க, அவ்விரவை நல்லார் அணிகலத்

தின் மாணிக்கங்கெடுத்துப் பகற்பொழுதைச்செய்ய, இயல்பான இரவி லும்பானிலாச் சொரிந்து வானுலாவுந் திங்களின் சுடர்களை அம்மணிகள் மறைத்துப் பகற்பொழுதைச்செய்ய அச்சேரி மேலுலகை ஒப்பதொன்றே ஆயிற்றென்க.

சுடரென்றது, ஞாயிற்றினது சுடராயும் திங்களினது சுடராயுமாக் கிப் பானிலாவைத் திங்களின் சுடரிற்கேற்றுக. ஏகாரந்தேற்றம். இரவும் பகலுமின்மையிற் றுறக்கம் ஒத்தது. இனிப்பால் பகுதி, நிலாஒளி என் றும் உரைப்ப. நிலாத்திகழும் பைம்பூண், பனிநிலாவீசும் பைம்பொற் கொடியென்றாற்போல. ௱௰௧.

கோதை, hair. வேனிலான், the god of summer, or the god of love, மன்மதன். விழைந்த, loved, from விழை, to desire.

112. இட்டநூல்வழாமையோடியோசனையெல்லைநீண்டு
மட்டுவார்மாலைவேய்ந்துசதுக்கங்கண்மலிந்தசும்மைப்
பட்டமும்பசும்பொற்பூணும்பரந்தொளிநிழற்றுந்தீந்தேன்
அட்டுதாரலங்கன்மார்பராவணங்கிளக்கலுற்றேன்.

*The shops (bazars) were long and wide, beautifully arranged, and shining with gems.*

இ-ள். வலித்தநூல் செவ்வைதப்பாமற் கிடந்து நீண்டு வேயப்பட்டு நாற்சந்திகளிலே மிக்கவொலியினையுடைய அங்காடித் தெருக்கூறுதலுற் றேனென்க.

தந்திரத்திற்கேற்பப் பெற்றப்பட்டமும் பூணுமெங்கும் விளங்குதற்குக் காரணமான வணிகர் முதலாயினார். ௱௰௨.

நீடி, நீண்டு, வேய்ந்து, மலிந்த சும்மை, qualify ஆவணம், the bazars; the rest refer to மார்பர், persons, merchants.

113. மணிபுனைசெம்பொற்கோட்டைவம்பணிமுத்தமாலை
கணிபுனைபவளத்திண்காழ்கம்பலக்கிடுகினூன்றி
அணிநிலமெழுகிச்சாந்தினகிற்புகைத்தம்பொற்போதிற்
திணிநிலமணிந்துதேக்கொளையவிசிதறினாரே.

*The bazars had stalls embellished with precious ornaments, &c.*

இ-ள். மணியழுத்தின பொன்னாற்செய்த கடைமணியையுடைய கச் சுத் தூக்கின பவளக்காம்பைக் கம்பலம் வேய்ந்தசட்டத்திலே கொளுத்தி யூன்றி மெழுகிப் புகைத்து அணிந்து சிதறினாரென்க.

கணி, நூல்பொலிவானவன். புனைந்தகாழ், திணிநிலம், படுத்த நிலம். தெய்வங்களினிதாகக்கொண்ட ஐயவி. முத்துமாலை புனைந்த கிடுகு. ௱௰௩.

கோட்டை for கடை.

114. பொன்சொரிகதவதாழிற்றிறந்துபொன்யவனபபேழை
மின்சொரிமணியுமுத்தும்வயிரமுங்குவித்துப்பின்னும்
மன்பெரும்பவளக்குப்பைவாலணிகலஞ்செய்குப்பை
நன்பகலிரவுசெய்யுநன்கலங்கூப்பினாரே.

*The merchandise were all displayed so abundantly, that they shed a lustre upon the brightness of the day.*

இ-ள். பொன்றானே சொரிதற்குக் காரணமான கதவைத்திறந்து பே

ழையிலிருந்த மணிமுதலியவற்றைக் குவித்துப் பின்னரும் பவளத்திரள்களையுங் குறைப்பணிகளையும் நீலப்பூண்களையுங் குவித்தாரென்க.

நன்பகல், நடும்பகல். ௱௰௪.

115\. விழுக்கலஞ்சொரியச்சிந்திவீழ்ந்தவையெடுத்துக்கொள்ளா
ஒழுக்கினரவர்கள்செல்வமுரைப்பரிதொழிகவேண்டா
பழக்குலைக்கமுகுந்தெங்கும்வாழையும்பசும்பொனாலும்
எழிற்பொலிமணியினாலுங்கடைதொறுமியற்றினாரே.

The very posts were of gold, and valuable substances thrown away were not picked up by the by-standers.

இ-ள். கலத்தைச்சொரிதலாற் சிதறிவீழ்ந்தவற்றைக்கொள்ளா ஒழுக்கினரதுவேயன்றி அவர்க்கு நாடோறு நடுதற்குக் கமுகுமுதலியன தேட வேண்டா; அது என்னையெனின் அவற்றைப் பொன்னாலுமணியாலும் இயற்றினாராதலான் அவர்கள் செல்வமென்னால் உரைத்தல் அரிது, இனி நீருங்கேட்கவேணுமென்னும் விருப்பத்தை ஒழிவீராகவென்க.

இனி உரைப்பரிது கேட்க விரும்பவேண்டா ஒழிகவென்றுமாம். ௱௰௫.

116\. மூசுதேனிருவின்மூசிமொய்திரையியம்பியாங்கும்
ஓசையென்றுணரினல்லாலெழுத்துமெய்யுணர்தலாகாப்
பூசுசாந்தொருவர்பூசிற்றெழுவர்தம்மகலம்பூசி
மாசனமிடம்பெறாதுவண்கடைமலிந்ததன்றே.

The people of seven different castes were so numerous and close together that the sandal wood powder rubbed on one adhered to the other, and their voice was heard, but their language was not distinguished.

இ-ள். மாசனம் போக்கிடம் பெறாமல் ஒருவர் பூசிற்றெழுவர் தம்மகலம் பூசும்படி மூச ஆங்குப்பிறந்த ஓசையுமொழிய திரைபோல் இயம்பி ஓசையென்றுணர்தலன்றி எழுத்தின் வடிவுணர்தலாகாதாய்க் கடையிலே மலிந்ததென்க.

நான்குசாதியும் அனுலோமப் பிறிதிலோமருஞ் சங்கரசாதியும்பற்றி எழுவரென்றார். இருவின் மூசுதேன்போலமூச, உம்மை சிறப்பு. ஓரோசையும் பாடம். நன்கு மதித்தசாந்து, பூசி, பூசு. ௱௰௬.

மூச, to be crowded. The seven castes or tribes are, Brahman, Kshetriya, Vaisya, Sudra, Anulomar (the offspring of a Brahman father and Kshetriya mother), Pridilomar (of a Kshetriya father and Brahman mother), and Sangara a mixed class of the first four tribes.

117\. மெய்யணிசெம்பொற்சுண்ணமேதகுநானநீரின்
ஐதுபட்டொழுகியானையழிமதங்கலந்துசேறாய்ச்
செய்யணிகலன்கள்சிந்திமாலையுமதுவுமல்கி
வெய்தடியிடுதற்காகாவீதிகள்விளம்பலுற்றேன்.

The streets were so crowded, and filled with a variety of articles, that it was difficult to walk through them.

இ-ள். அணிந்துமிக்க சுண்ணம் நானத்தாலும் பனிநீராலும் இளகுதல் பட்டு வீதியிலொழுகலின் அதனொடு மதமுங்கலந்து மதுவுமல்கிச் சேறாய்ச்சிந்தி மல்கி விலாய அடியிடுதற்காகாவீதிகள் கூறலுற்றேனென்க.

இவை பீடிகைத் தெருவொழிந்தன. அணி சுண்ணம், உண்ட சோறுபோனின்றது. மிச்சில் கவிழத்தன்மரபு. செய்யணிகலம், அரிகித் செய்தகலம். மாலையினுங் கலத்தினுந் தீண்டுதற்கு அடிநாணிற்றுத் தமது நலத்தான். ௱௰௭.

fine, or beautiful dust, or mud.

## வேறு.

118. முழவணிமுதுநகர்முரசொடுவளைவிம்
விழவணிமகளிர்தம்விளாகமழிளமுலை
இழையணியொளியிளவெயில்செயவிடுபுகை
மழையெனமறையினபொலிவினதொருபால்.

The smoke was so great that it hid the sun and darkened all around.

இ—ள். ஒருபால் முழவுநிறைத்த கோயில்களிலே முரசும் வளையும் விம்முதலால் அவ்விழவிற்கொப்பித்த மகளிருடைய முலையின் அணிந்த இழையிலொளி இளவெயிலை உண்டாக்கும்படி இட்ட புகை மழையென ஞாயிற்றை மறைத்த பொலிவினை உடைத்தாயிற்றென்க. ௱௰௮.

conch. for the swelling of sound. for.

119. குடையொடுகுடைபலகளிறொடுநெரிதர
வுடைகடலொலியிஞேடுறுபவர்பலிசெல
முடியொடுமுடியுறமிடைதலின்விடுசுடர்
கொடியுடைமழையினிற்குலவியதொருபால்.

The ornaments of those who were going to visit the king, and offer sacrifices, shone like lightening in rain.

இ—ள். ஒருபால் அரசனைக் குடையுங் குடையுங் களிறுங் களிறும் பல நெருங்கிச்சேவித்தல் காரணமாகத் தேவருடைய பலி நடத்தலாலே அதனைச்சேவிக்கும் அரசர்முடியுமுடியு நெருங்குதலின் விடுசுடர் மழையின் மின்போற் குலவியதென்க.

இது செல்வமுண்டாதற்குப்பலி நடக்குமென்றார். இனி பலி நடத்தலிற் குடைமுதலியன நெரிதர முடி நெருங்கிற்றென்றுமாம். உடைகடலொலிபோலும் ஒலி. ௱௰௯.

sacrifice or offering of rice, &c,

120. பூத்தலைவாரணப்போர்த்தொழிலிளையவர்
நாத்தலைமடிவிளிகூத்தொடுகுயிலக்
காய்த்துறுதமனியத்துகளொடுகடிகமழ்
பூத்துகள்கழுமியபொலிவினதொருபால்.

The noise of the winners in cock-fights, and the dust raised by the crowd, caused a grand confusion.

இ—ள். ஒருபால் கோழிப்போரின் வெற்றியைத் தமதாகவுடைய இளையவர் சீழ்க்கைகூத்தொடு நெருங்குதலான் அப்பொழுது சிந்தும் பொற்றுகளும் பூத்துகளும் மயங்கின பொலிவினதென்க.

பூ, தோன்றிப் பூ. காய்த்துதலுற்ற. ௱௨௰.

gold dust.

The bright jewels of women which had fallen on the ground looked like the rainbow.

121\. மைந்தரோடூடியமகளிரையிளையவர்
அந்துகில்பற்றலிற்காழ்சரிந்தணிகிளர்
சுந்தரநிலமிசைசொரிதலின்மின்னணிந்(து)
இந்திரதிருவிலினெழிலினதொருபால்.

இ—ள். ஒருபால் கணவரோடூடிய மகளிரை அவர் துகில் பற்றலிற்காசுகோவையற்று நிலத்தே விசையோடே சிந்துதலின் ஒளியையணிந்து வானவில்லினெழிலினதென்க.

சுந்தரம், நன்மை. ௱௨௧.

காழ், a string of gems.

There were many ready to invite others to partake of food, as well as to receive ornaments.

122\. வளையுறுந்தணையனவாலரியமைபதம்
அளவறுநறுநெய்யோடடுகறியமைதுவை
விளைவமைதயிரொடுமிசைகுவிர்விரைமினின்
உளவணிகலமெனுமுரையினதொருபால்.

இ—ள். ஒருபால் வளையை நண்ணிதாக அறுத்தாற்போன்றனவாகிய வாலிய அரிசியையமைத்த சோற்றையும் நெய்யால் அட்டகறியையும் முற்றின தயிரால் அமைத்த துவையினையும் மிசைகுவீராக விரையுங்கோள் உண்டால் தருதற்கு அணிகலமுளவெனுமுரையினதென்க.

ஒடு, எண்ணொடுவுமாம். வால்விழும்பாடம். ௱௨௨.

வால், white. அரி, paddy. அமை, prepared. பதம், boiled rice. துவை, sauce.

The young were riding in chariots of swift horses, and mighty elephants.

123\. வரைநிரையருவியின்மதமிசைசொரிவன
புரைநிரைகளிறொடுபுணைமணியியதேர்
விரைநிரையிவுளியோடிளையவர்விரைவுபு
குரைநிரைகுளிர்புனல்யாற்றினதொருபால்.

இ—ள். ஒருபால் மலையொழுங்கின் அருவியைத் தன்மேலேசொரிந்துகொள்வனபோல் மதத்தை மேலேசொரிவனவாகிய உயர்ச்சியையுடைய களிற்றொடும் தேரிற்பூண்டாற் செலவு விரைந்த இவுளியொடும் இளையவர் விரவிவிரைத்தயாற்றினதென்க.

அருவிபோல் வீழ்கின்ற மதமென்பாருமுளர். மிசையும்பாடம். ௱௨௩.

புரை, high, mighty. இயதேர் for இயல்தேர், running chariots. விரை for விரைவு, swift விரைவுபு for விரவி, mingling.

The residence of the king's ladies resound with music.

124\. வரிவளையரவமுமணிமுழவரவமும்
அரிவளர்கண்ணியரணிகலவரவமும்
புரிவளர்குழலொடுபொலிமலிகவினைய
திருவிழைகடிமனைதிறவதின்மொழிவாம்.

இ—ள். குழலொடு வளையரவமும் முழவரவமுங் கலவரவமுங் கவினியமனைகளைச் செவ்விதாகக் கூறுவாமென்றுரெனக்.

புரிவளர்குழல், நரம்பிடத்து இசைவளர்தற்குக் காரணமாகிய குழல். குழல்வழியாழெழிஇத் தண்ணுமைப்பின்னர் முழவியம்பலாமந்திரிகை விருப்பமுமாம். இது அரசற்குரியவரிருப்பு. ௱௨௪.

## வேறு.

125. திருவந்நீணகர்ச்செம்பொனின்னீடிய
உருவவொண்கொடியூழினுடங்குவ
பரவைவெங்கதிர்ச்செல்வனபைம்மயிர்ப்
புரவிபொங்கழலாற்றுவபோன்றவே.

*The flags flying on the terraces flapped as if they were fanning the suns fiery steeds,*

இ—ள். அத்திருவையுடைய மனைகளின் நீடியகொடிமுறையால் அசைவன, செல்வன புரவியை அழலாற்றுவபோன்றனவென்க.

பரவை, பரத்தல். ௱௨௫.

நுடங்குவ, அசைவன, verbal noun, neut. pl. subject to the predicate, போன்றன, were like. உருவ for உருவம், beautiful. ஊழ், in order.

126. பாவையன்னவர்பந்துபுடைத்தலில்
தாவுவியன்னம்வெரீஇத்துணையென்றுபோய்க்
கோவைநித்திலமாடக்குழாமிசை
மேவிவெண்மதிதன்னொடிருக்குமே.

*The swans, frightened by the balls played by the ladies, fly up to the lofty terraces.*

இ—ள். மகளிர் பந்தடித்தலின் அன்னங்கள் அவ்வோசைக்கு வெருவி மதியையினமென்றுகருதிக் கூடப்போய் மாடங்களின்மேலே அம்மதியோடே மேவியிருக்குமென்க.

மதியியங்குந்தோறுந் தானுமியங்கிற்று. ௱௨௬.

127. இழைகொள்வெம்முலையீரமுலர்த்துவார்
விழையவூட்டியமேதகுதீம்புகை
குழைகொள்வாண்முகஞ்சூழ்குளிருங்கதிர்
மழையுண்மாமதிபோன்மெனத்தோன்றுமே.

*The faces of women drying their hair in perfumed smoke appeared like the moon hid by the clouds.*

இ—ள். கணவர்விழைய ஈரமுலர்த்துவர் ஊட்டிய புகைசூழ்முகம் அம்மழையுட் குளிருங் கதிர்மதிபோலுமெனத் தோன்றுமென்க.

இழை தான்விரும்பிக்கொண்ட வெவ்வியமுலையிலே கணவர் பூசிய சந்தனமுதலியவற்றின் ஈரத்தைப் புலர்த்துவார் தொழிற்பெயர். ௱௨௭.

போன்மென for போலுமென. மகரக்குறுக்கம். உலர்த்துவார் is now called வினையாலணையும்பெயர்.

128. செம்பொற்கண்ணிசிறூர்களுந்திட்டவும்
அம்பொன்மாலையவிழ்ந்துடன்வீழ்ந்தவும்
தம்பொன்மேனிதிமிர்ந்ததண்சாந்தமும்
விம்புண்கோதையர்மாற்றுமயலரோ.

*The sweepings of the city consisted of garlands and various kinds of perfumery.*

இ-ள். மகளிர் தம்மேனியிலிருந்த சாந்தமும் மயிர்குலைந்து சோரவீழ்ந் தமாலையும், சிறார்களைந்தகண்ணியும், சேடியர்மாற்றுந் தூராவென்க.

வண்டுகள் புதுமையையுண்ட பழமாலையைச் சூடுதலிற்சேடியராயிற்று. "கண்டு கைவிட்டமயலென்றார்" பிறரும். ௱௨௮.

மயல், confusion, here rubbish.

The entrance of the houses were smeared with sandal wash, and garnished with flowers, a proof of prosperity.

129. வேரியின்மெழுக்கார்ந்தமென்பூநிலத்(து)
ஆரியாகவஞ்சாந்தத்தளித்தபின்
வாரிநித்திலம்வைப்பபொற்பூவொடு
சேரிதோறிதுசெல்வத்தியற்கையே.

இ-ள். நாற்றமுந்தோற்றமும் இனியவற்றான் மெழுகிய மெழுக்கார்ந்தவெரியையுடைய பூநிலத்தே ஐதாகத் தொழில்படச் சாந்தைப் பூசின பின்பு பொற்பூவொடு நித்திலத்தையும் வைப்பார்களாதலிற் சேரிதோறுஞ் செல்வத்தியற்கை இத்தன்மைத்தென்க.

அரி, ஐம்மை, விகாரம். ஆரியாக, மேலாகவென்றுமாம். மேலுந் தளித்த சுண்ணமென்ப. வேரி, இருவேரியுமாம். ௱௨௯.

இயற்கை, subject. இது, predicate.

The pigeons fly away to the groves, on account of the smoke of the city.

130. கருனைவாசமுங்காரிருங்கூந்தலார்
அருமைசான்றவகிற்புகைவாசமுஞ்
செருமிச்சேர்ந்துகண்ணீர்வரத்தேம்பொழில்
உரிமைகொண்டனவொண்புறவென்பவே.

இ-ள். புறவுகள்பொரிக்கறியினது வாசப்புகையும் அகிலினது வாசப்புகையுஞ் செருமிக்கண்ணீர்வருதலாலே பொழிலைத் தாமிருத்தற்குரிய இடமாகக்கொண்டனவென்க.

கூந்தலிலார்த்த புகையென வினைத்தொகை, பெயருமாம். ௱௩௰.

கருனை, any thing fried.

The victuals rich with spices, were eaten with friends, on golden plates.

131. நறையுநானமுநாறுநறும்புகை
விறகின்வெள்ளியடுப்பினம்பொற்கலம்
நிறையவாக்கியநெய்பயிலின்னமிர்(து)
உறையுமாந்தர்விருந்தொடுமுண்பவே.

இ-ள். வெள்ளியடுப்பிலே நறையும் நானமும் நாறும் நறும்புகை விறகாலாக்கின அமுதை மாந்தர்பொற்கலத்தே விருந்தொடுமுண்பரென்க.

நறை, கொடி. நானம், தூவியெரிக்கும் புழுகு. நிறைய, மடைநூல் விதியிற் குறையாமல். விருந்துபெறற்கருமையின் உம்மை சிறப்பும்மை. விறகு, சந்தனமுதலியன. ௱௩௰௧.

132. பாளைமென்கமுகின்பழமெல்லிலை
நீள்வெண்மாடத்துநின்றுகொண்டநலார்
ஆளிமொய்ம்பர்க்கொடுத்தணிசண்பகம்
நாள்செய்மாலைநகைமுடிப்பெய்பவே.

*Men and women interchange garlands on the terraces.*

இ—ள். நல்லார் மாடத்தேநின்று பாக்கையும் வெற்றிலையையும் பறித்துக்கொண்டு மொய்ம்பர்க்குக்கொடுத்து அவர் அணிந்த சண்பகமாலையை வாங்கி நாட்காலமன்றாயினும் வேட்கை மிகுதியால் தமது முடியிலே பெய்வரென்க.

இனி நாட்காலத்தே செய்த சண்பகமாலையணிந்த முடியிலே அக்காலத்திற்குரிய பூக்களைப் பெய்வரென்றுமாம்.

மணமெல்லிய பாளை, வெள்ளிலைபாடமாயிற் கொம்பிலேவெளுத்ததாம். நகைமுடி, முத்தமாலையையுடைய முடி. ௱௩௨.

133. எழுதுவாணெடுங்கண்ணிளையநலார்
மெழுகுகுங்குமமார்பிடைவெம்முலை
உழுதுகோதையுஞ்சாந்துமுவந்தவை
முழுதும்வித்திவிளைப்பர்திளைப்பவே.

*The sexes embrace and enjoy each other.*

இ—ள். அம்மகளிர் கணவர் மார்பிலே முலையாலே உழுது கோதையையுஞ் சாந்தையும் வித்தித்திளைப்பனவற்றில் தாங்கள் உவந்தனவற்றை முழுதும் விளைப்பரென்க.

மையெழுதுங்கண். குங்குமமெழுகும். திளைப்ப, கரணங்கள். ௱௩௩.

வெம், desirable, lovely.

134. குஞ்சிமேலனிச்சம்மலர்கூட்டுணும்
அஞ்சிலோதியரம்மலர்ச்சீறடி
மஞ்சுதோய்மணிமாடத்துமல்குபூம்
பஞ்சிமேலும்பனிக்கும்பனிக்குமே.

*Lovers quarrel and are reconciled.*

இ—ள். ஓதியருடைய அனிச்சமலர் கூட்டுணுஞ் சீறடி ஆடவர்க்குஞ்சிமேலும் பனிக்கும் பஞ்சிமேலும் பனிக்குமென்க.

கூட்டுணும், கவரும். கோபத்தாலுங் கரணத்தாலும் நடுங்கிற்றென ஊடலுங் கூடலு முணர்த்திற்று. "கொல்புனற்றளிரினடுங்குவணின்று" என்றார் பிறரும். நகரத்தலின் ஊடற்குக்காரணங் கூறாராயினர். "எஞ்சுபொருட்கிளவி செஞ்சொலாயிற் பிற்படக்கிளவார் முற்படக்கிளத்தல்" என்பதனாற் குஞ்சிமேலுமென்று உம்மை கொடாராயினர். ௱௩௪.

குஞ்சி, here, hair of young husbands. சீறடி for சிறிய அடி, delicate feet. பனிக்கும், sensitively agitated.

135. தூமமேகமமழுந்துகிற்சேக்கைமேல்
காமமேநகர்வார்தமகாதலால்
யாமமும்பகலுமமறியாமையால்
பூமிமாநகர்பொன்னுலகொத்ததே.

Lovers are so happy that day is not distinguished from night, as in the world of the gods.

இ—ள். சேக்கைமேல் நுகர்வார் தம் காதலால் இரவும் பகலும் அறியாமையின் அந்நகர் பொன்னுலகத்தை ஒத்ததென்க.

ஏகாரம், தேற்றம். காமமே, ஏகாரம் பிரிநிலை. யாமத்தும் எல்லையுமென்றூர் பிறரும். பூமியின். பூமென்மாநகரும் பாடம். பூ, வடமொழி. ௱௩௫.

Cேக்கை, bed, dormitory.

136. அரவுகான்றிட்டவங்கதிர்மாமணி
உரவுநீர்முத்துமுள்ளுறுத்துள்ளன
இரவன்மார்தர்க்குமின்னவையீவதோர்
புரவுபூண்டனர்பொன்னகர்மாந்தரே.

There were no poor upon whom to bestow alms, excepting for merit's sake.

இ—ள். மணியுமுத்தும் உள்ளுறுத்தின அவை இரவன் மார்ந்தர்க்கும் உள்ளன ஆதலாற் பொன்னகர் மாந்தரே புரவுபூண்டனரென்க.

இது இகழ்ச்சி. உரவுநீர், உலாவுநீர். உம்மை, இழிவு சிறப்பு. ஏகாரம், எதிர்மறை. இனியின்னவை இரவன் மாந்தர்க்கு உள்ளனவாயிருத்தலில் பின்மாந்தரேபுரவு பூண்டாரென்றது உயிருறுப்புமுதலியன கொடுத்தற்குத் துணிந்தார் இவரே என்றுமாம். ஏகாரம், தேற்றம். ௱௩௬.

137. முல்லையங்குழலார்முலைச்செல்வமும்
மல்லன்மாநகர்ச்செல்வமும்வார்கழற்
செல்வர்செல்வமுங்காணியவென்பர்போல்
எல்லியுமிமையாரிமையாததே.

The wakeful celestials unceasingly look upon the prosperity of the city.

இ—ள். இமையார் இமையாதிருந்த இருப்பு நீவிர் இம்மூன்று செல்வத்தையும்விடாமற் காண்டற்கியாம் விழித்திருந்தேமென்று தங்கண்ணை நோக்கிக் கூறுவாரைப்போலே இருந்ததென்க.

ஏகாரம், ஈற்றசை. மூன்ருவன, போகமுஞ் செல்வமும் வீரமும். என்பவென்பது பாடமாயின் இமையார் இனி நீவிர் இவை காண்டற்கியாங்கள் இமையாதிருந்ததென்று கண்ணிற்குக் கூறுவரென்க. ௱௩௭.

காணிய, fut. verb. par. எல்லியும், even at night.

138. முழவுஞ்சங்கமுமுன்றின்முழங்குவ
விழவும்வேள்வும்விடுத்தலொன்றின்மையாற்
புகழலாம்படித்தன்றிதுபொன்னகர்
அகழ்தன்மாக்கடலன்னதோர்சும்மைத்தே.

The noise attending festivals vie with the noise of the ocean.

இ—ள். விழவினும் வேள்வியினும் ஒன்றைக் கைவிடுதலின்மையான் முழவுஞ் சங்கும் முழங்குவன கடலன்னதோர் சும்மைத்தாதலான் இப்பொன்னகர் புகழலாம் படித்தன்றென்க.

வேள்வி, விசேடவிதியான நாள்களினிகழ்வன, இது வேள்வென றுதிரிந்தது. ௱௩௮.

The temples were numerous, wealth superabundant.

139. திங்கண்முக்குடையான்றிருமாநகர்
எங்குமெங்குமிடந்தொறுமுண்மையால்
அங்கண்மாநகர்க்காக்கமறுநதோர்
சங்கநீணிதியாற்றழைக்கின்றதே.

இ—ள். சங்கமென்னும் பேரெண்ணையுடைய தொன்றுபட்ட நிதியோடே ஸ்ரீகோயில் தெருவுகளெங்கும் மனையிடமெங்குமுண்டாகையினாலே மாநகர்க்கு நிதியோடேயறுததொர் ஆக்கம் தழையாநின்றதென்க.

இனி மாநகருண்மையான் நகர்க்கு ஆக்கமறுது அவ்வாக்கமொரு சங்கநிதியாலே தளிர்க்கின்றதென்றுமாம். சங்கநிதி, அரசன். ௱௩௯.

திங்கண்முக்குடையான், he who has the triple moonlike-umbrella, i.e. Arugan.

## வேறு.

The city was like the celestial Kalpa tree, yielding whatever was desired.

140. தேன்றலைத்துவலைமாலைபைந்துகில்செம்பொன்பூத்து
நான்றனவயிரமாலைநகுகதிர்முத்தமாலை
கான்றமிர்தேந்திநின்றகற்பகச்சோலையார்க்கும்
ஈன்றருள்சுரந்தசெல்வத்திராசமாபுரமதாமே.

இ—ள். தேனைத் தலையிலே துவலையாகவுடைய மாலைமுதலியவற்றைப் பூத்து நான்றனவாகிய வயிரமாலை முதலியவற்றைத் தோற்றுவித்து அமிர்தை ஏந்திநின்ற கற்பகச்சோலையென்று ஊரிற்கோர்பெயர் கூறிற்று; இதற்கும் அவை யுண்மையின் அங்ஙனங்கூறிய ஊர் யார்க்கும் அருளையீன்று செல்வத்தைச் சுரந்ததோர் கற்பகச்சோலை, அஃது இராசமாபுரமென்னும் பெயரையுடைத்தாமென்க.

இனித்தான் சுரந்தஅருளாலே யார்க்கும் மறுமையிற் கற்பகச்சோலையையீன்று -அச்சோலையிற் செல்வத்தைத்தன்னிடத்தே உடையது இராசமாபுரமென்க என்றது. இதில் வாழ்வார் அருளைக்கண்டு பிறர்க்கும் அருள் பிறந்து சுவர்க்கமெய்துவரென்றவாறு. இத்துணையும் நகரின்சிறப்புக் கூறினார். ௱௪௰.

நகர்வருணனை முற்றும்.

Description of the Palace.

# கோயில்வருணனை.

## வேறு.

141. வேகயானைமீளிவேல்வெய்யதானையயகோன்
மாகநீண்மணிம்முடிமாரிவண்கையாசில்சீர்
ஏகவாணைவெண்குடைப்பிங்ககர்க்குமன்னவன்
நாகரோநன்னகர்நன்மைதன்மைசெப்புவாம்.

The Palace was worthy of the illustrious king.

இ—ள். யானை முதலியவற்றையுடைய மன்னனது கோயிலின் நன்மையைச்சிறிது கூறுவாமென்றாரென்க.

தானையென்றது ஒழிந்தமூன்றுபடையை. ஐய, வியக்கத்தக்க. தேவர் புகழுமுடியென்று குலநன்மைகூறினர். சீர், மிக்கபுகழ். ஏகவாணை, பொதுவற ஆளுதல். ௱௪௧.

Here *nat* in the first place means city, and the second palace; in v. 139 it means temple. *vanōr*, like the celestial.

142. நீணிலம்வகுத்துநீர்நிரந்துவந்திழிதரச்
சேணிலத்தியற்றியசித்திரச்சுருங்கைசேர்
கோணிலத்துவெய்யவாங்கொடுஞ்சுறத்தடங்கிடங்கு
பூணிலத்துவைத்ததோர்பொற்பிணிற்பொலிந்ததே.

The palace was surrounded by a trench, as if it were a garland placed round it.

இ—ள். நீர்நிரந்து வந்திழியும்படி நீணிலத்தைவெட்டிப் புறம்பில் அகழ்துடங்கிப் படுத்தவழி சேர்ந்தகிடங்கு நிலமகளுக்குப் பூணிட்டதோரழகுபோலப் பொலிந்ததென்க.

சுற, புறநடையாற் கொள்க. சுருங்கை, கரந்துப்படை. ௱௪௨.

143. இஞ்சிமாகநெஞ்சுபோழ்ந்தெல்லைகாணவேகலின்
மஞ்சுசூழ்ந்துகொண்டணிந்துமாகநீண்டநாகமும்
அஞ்சுநின்னையென்றவிஞ்ஞண்டுநின்றுநீண்டதன்
குஞ்சிமாண்கொடிக்கையாற்கூவிவிட்டதொத்ததே.

The palace wall rose to the skies, as if it were inviting the upper world.

இ—ள். மதிலானது மாகத்தின் நடுவைப்பிளந்து நாகத்தின் எல்லையைக் காண ஏகுதலின் அதனை மஞ்சுமுற்படப்போகாமல் தடுத்துப் பின்பு காலைக்கட்டிக்கொண்டு ஆகாயத்தே உயர்ந்தநாகமு நின்னையஞ்சுமென்று அவற்றான் மேசபதத்தளவிலேநின்று தன் தலையினீண்டகொடிக்கையாலே நம்மைவந்துகாண்கவென்று கூவிவிட்டதன்மையையொத்தது அவையசைந்ததன்மையென்க.

குஞ்சி, கொடிநாட்டுங்குழி, கழையுமாம். ௱௪௩.

144\. முத்தமாலைமுப்புரிமூரிமாமணிக்கத(வு)
ஒத்தநான்குகோபுரமோங்கிநின்றொளிர்வன
சுத்திநெற்றிசூட்டியதாமநீண்மணிவணன்
தத்தொளிர்மணிமுடித்தாமநால்வபோலுமே.

The gates of the towers embellished with garlands, appeared like Vishnu wearing his long garland.

இ-ள். மாமணிக்கதவையுடைய தன்னிலொத்த நீலமணிக்கோபுரம் நான்கிலு நின்றொளிர்வனவாகிய சூலத்தினெற்றியிற் சூட்டிய முப்புரியாகிய மூத்தமாலை தாமத்தையுடைய உலகளந்தமாயோன்முடியில் தாமநால்வன போலுமென்க.

போன்றவும் பாடம். முப்புரியாகிய முத்தமாலையையுடைய கதவுமாம். தத்துதல், வீசுதல். ௱௪௪.

145\. சங்குவிம்முநித்திலஞ்சாந்தொடேந்துபூண்முலைக்
கொங்குவிம்முகோதைதாழ்கூந்தலேந்துசாயலார்
இங்கிதக்களிப்பினுலெய்தியாடும்பூம்பொழில்
செங்கணிந்திரன்னகர்ச்செல்வமென்னதன்னதே.

The palace garden where the ladies were enjoying themselves, was like Indra's garden.

இ-ள். நித்திலத்தைச் சாந்துடனேந்திய முலையினையுங் கூந்தலினையுமுடைய சாயலார் காமக்குறிப்போடுகூடிய களிப்பால் சென்றாடும்பொழில் இந்திரன் நகரிற் கற்பகச்சோலை என்னதன்மைத்து அன்னதன்மைத்தென்க.

விம்முநித்திலம், சூன்முற்றியீன்றமுத்து. செல்வம், ஆகுபெயர். ௱௪௫.

146\. வெள்ளியானைமின்பிடிமின்னிலங்குபைம்பொனால்
துள்ளுமானொருத்தலுஞ்செம்பொனம்பொன்மான்பி
உள்ளுகாமமுள்சுடவேந்தனுங்குறைவதோர் [ணை
பள்ளிமாடமண்டபம்பசுங்கதிர்ப்பவண்ணமே.

The summer house was beautified with costly artificial ornaments.

இ-ள். வெள்ளியாற்செய்த களிறும் பைம்பொனாற்செய்த பிடியுஞ் செம்பொனாற்செய்த ஒருத்தலும் அம்பொனாற்செய்த பிணையும் ஒன்றையொன்றுள்ளுங்காமம் வேந்தனுள்ளத்தை வேட்கைமிகுப்ப அச்சோலையில் அவனுறைவதோர் மண்டபத்திற் பள்ளிமாடம் நாகருலகையொக்குமென்க.

இனி வெள்ளியாலே யானையும் பிடியுஞ் செய்ததென்றுமாம். ௱௪௬.

147\. கோழரைமணிமடற்கூந்தனெற்றியேந்திய
மாழையந்திரள்கனிமாமணிமாகதஞ்
சூழ்குலைப்பசுங்கமுகூறுபாளைவெண்பொனால்
ஊழ்திரண்மணிக்கயிற்றூசலாடவிட்டதே.

The seat or cradle was suspended on strings of pearls, between two artificial areca nut trees, made of gold, and studded with gems.

இ-ள். பொன்னாற்செய்த பழத்தினையும் மரகதமணியாற்செய்த குலையினையும் வெள்ளியாற்செய்த பாளையினையுமேந்திய கொழுவிய அரையி

ளையும் நீலமணியாற்செய்த மடலினையுமுடைய கூந்தற்கமுகினெற்றியி னூசலாடவிட்ட கயிறு முத்துவடமென்க. ௱௪௭.

Artificial hills, springs, and rivers, embellished the garden.

148. மென்றினைப்பிறங்கலுமிளிர்ந்துவீழருவியுங்
குன்றயன்மணிச்சுனைக்குவளைகண்விழிப்பவும்
நின்றுநோக்குமான்பிணைநீலயானைமன்னவன்
கன்றுகாமம்வெஃகியகாமர்காமபூமியே.

இ-ள். நீலயானைமன்னவன் தழும்பிய காமத்தாலே விரும்பிய பூமியிடத்துச் செய்குன்றில் தினையையும் அதினின்றுங் குதித்துவீழுகின்ற அருவியையும் மானும் பிணையும் அதனயலிற்சுனைக்குவளை காப்பார்கண்போல விழியாநிற்கவும் உண்பதாகநின்று நோக்குமென்க.

காமர்காமபூமி, காமனுக்குவிருப்பஞ் செய்கின்றபூமி. "காமனை வென்ற கண்ணோன்" போல. பிறங்கல், திரள். இவற்றைச் சித்திரமெனிற் கோயிற்கங்கமாகிய செய்குன்று கூறிற்றிலராவர். ௱௪௮.

பிறங்கல், hillock.

The bees buzz, and the *koils* sing, in the midst of sweet flowers and aromatic trees.

149. தீங்குயின்மணந்துதேன்றுஞ்சவண்டுபாண்செய
வேங்கைநின்றுபொன்னுகுக்கும்வெற்புடுத்தசந்தனம்
ஓங்குபிண்டிசண்பகமுழிநாறுநாகமும்
நீங்கநீங்குமின்னுயிர்நினைப்பினின்றிளகுமே.

இ-ள். குயிலாகிய கானங்கூடித் தேனாகிய யாழ்தங்க வண்டுபாட அவற்றிற்குப் பரிசிலாக வேங்கை பொன்னைச்சொரியு முற்கூறிய செய்குன்றைச் சந்தனமுதலியன சூழ்ந்தன; இக்குன்றையுங் காவையும் நீங்க உயிர் நீங்கும் நினைப்பின் உயிர் தளிர்க்குமென்க.

ஊழ், ஊழியெனத்திரிந்தது, முறைமைபட அலர்ந்துநாறும். ௱௪௯.

The play ground of the young was adorned with gems.

150. முத்தம்வாய்புரித்தனமொய்கதிர்ப்பசும்பொனாற்
சித்திரத்தியற்றியசெல்வமல்குபன்மணி
பத்தியிற்குயிற்றிவான்பதித்துவைத்தபோல்வன
இத்திறத்தபந்தெறிந்திளையராடுபூமியே.

இ-ள். இளையர் பந்தாடுபூமி முத்து விளிம்பிலே அழுத்தப்பட்டன, பொன்னாலே பண்ணப்பட்டன, மணிபத்தியிற் குயிற்றப்பட்டு வானை இவ்வுலகிலே இருத்தினாற்போல்வனவாகிய இத்திறத்தனவென்க. ௱௫௰.

A variety of games was played with balls.

151. வைத்தபந்தெடுத்தலுமாலையுட்காத்தலுங்
கைத்தலத்தினோட்டலுங்கண்ணிநெற்றிதீட்டலும்
பத்தியிற்புடைத்தலும்பையாவினாடலும்
இத்திறத்தபந்தினோடின்பமெல்லையில்லையே.

இ—ள். பந்தைக் கையாலெடாதே தட்டியெடுத்தலும், காத்தலும், கையிலே கொள்ளலும், செல்லவோட்டுதலும், கண்ணியையுடைய நெற்றியிலே நீட்டுதலும், ஒருகாலைக்கொருகால் உயரப் பத்தியாகப் புடைத்தலும், தான் நிலையிலேநின்று அரவுபோலப் பரந்தலாவுதலுண்டாம்படி புடைத்தலுமாகிய இக்கூற்றவாகிய அப்பந்திரேனுண்டான இன்பம் முடிவில்லையென்க. ௱௫௧.

152. கூற்றமன்னகூர்நுதிக்குருதிவாள்மருப்பிடைச்
சிற்றமுற்றமன்னர்தஞ்சென்னிபந்தடிப்பன
ஊற்றிருந்தமும்மதத்தோடையானைபீடுசால்
காற்றியற்புரவிதேர்கலந்துகெளவைமல்கின்றே.

On the play ground were seen chariots of swift horses and elephants.

இ—ள். மருப்பிடையே மன்னர் தலையைப் பந்தடிப்பனவாகிய யானை புரவி தேர் இவைகூடி ஒலிமிக்கது அவ்விடமென்க.

கூற்றம், யானைக்குவமை. சிற்றமுற்ற, அரசன் வெகுண்ட. இருந்த, இடைவிடாத. இவை அரசனேறுவனவாதலின் உள் நிற்றல் இயல்பு. ௱௫௨.

சிற்றமுற்ற மன்னர், kings enemies of Sachanthan.

153. கவ்வையங்கருவிசூழ்ந்துகண்படுக்குமாடமும்
தெவ்வர்தந்தநீணிதிசேர்ந்தசெம்பொன்மாடமும்
மெளவலங்குழலினார்மணிக்கலம்பெய்மாடமும்
இவ்வலந்தவல்லவுமிடங்களெல்லையில்லையே.

The armories, treasuries, jails, &c., abounded.

இ—ள். மனச்செருக்கால் ஆரவாரமுடைய வீரர்திரள் அரசனது பகையை மனத்தானேக்கி யாமந்தோறும் காத்துத் துயில்கொள்ளு மாடமும், திறைகிடக்குமாடமும், கலமிட்டுவைக்குமாடமுமாகிய இக்கூறப்பட்ட இடங்களும், கூறுதொழிந்த ஆயுதசாலை முதலிய இடங்களும் முடிவில்லையென்க.

கருவி தொகுதி, ஈண்டாகுபெயர். இனிப்பகைவர்க்குக் கவ்வையைச் செய்தலையுடைய ஆயுதங்கள்சூழ்ந்து நோக்கினோர் கண்ணேயகப்படுக்கும் ஆயுதசாலையுமென்ப. ௱௫௩.

154. பூத்தகோங்கும்வேங்கையும்பொன்னிணர்செய்கொன்றையுங்
காய்த்துநின்றுகாண்டொறூஉங்காமர்வல்லிமாதரார்
கூத்தருதபள்ளியுங்கொற்றமன்னமங்கையர்
ஏத்தல்சான்றகோயிலுமிடைப்படுத்தியன்றவே.

The theatres, and the houses of the actors and pangyrists, were built alternately.

இ—ள். மாதரார் நாடகசாலையும் காவன்மகளிர் அரசற்கு வெற்றிநிலை பெறும்படி ஏத்தும் ஸ்ரீகோயிலும் கோங்குமுதலியவற்றை நடுவேயாக் கிப்பண்ணினவென்க.

இதனால் இரண்டுந் தன்னில் இடைவிட்டிருக்குமென்றார். மேலே வண்புகழ் மாலடிவந்தனை செய்தானென்ப. தமது கண்ணனாது இளையோர் மெய்யைவேவிதாக்கி அவர் நெஞ்சிலேயின்று சுடுமாதாரெனச் சினைவினைமுதலொடு முடிந்தது. ௱௫௪.

155\. கந்துமாமணித்திரள்கடைந்தசெம்பொனின்சுவர்
சந்துபோழ்ந்தியற்றியதகடுவேய்ந்துவெண்பொனால்
இந்திரன்றிருநகருரிமையோடுமிவ்வழி
வந்திருந்தவண்ணமேஅண்ணல்கோயில்வண்ணமே.

The palace was so embellished, that Indra's world was supposed to be on earth.

இ-ள். மாமணித்திரளைத்தூணாகக் கடையப்படுதலானும், பொற்சுவரிலே சந்தனத்தை அறுத்துப்பண்ணிவைத்த கைச்செய்யை வெள்ளியாலே வேயப்படுதலானும், அண்ணல் கோயிலின் தன்மை இந்திரன் நகர் இவ்வழி வந்திருந்த தன்மையே ஆயிருந்ததென்க.

எகாரம் தேற்றம். ௱௫௫.

156\. ஆடலின்னரவமுமங்கைகொட்டிகெஞ்சுணைப்
பாடலின்னரவமும்பணைமுழவரவமுங்
கூடுகோலத்தின்சுவைக்கோலயாழரவமும்
வாடலில்லவோசையால்வைகனாளும்வைகின்றே.

The king passed every day, hearing the voice of song and the sound of music.

இ-ள். கூத்தின் அரவமும் பாட்டின் அரவமும் முழவின் அரவமும் யாழின் அரவமுமாகிய குறைதலில்லாத ஓசையாலே அண்ணலுக்கு நாள்கள் நாடோறும் கழியாநின்றதென்க.

கொட்டி, ஒக்கடித்து. ஒழிந்த கருவிகளொடுகூடும் அழகையுஞ் சுவையையுமுடைய நரம்பையுடையவாகிய யாழ். இனி வைக வாயினோசையோடு செல்ல நாளுங் கழியாநின்றதென்க. கோயிலின் சிறப்புக் கூறினார். ௱௫௬.

கோயில் வருணனை முற்றும்.

---

History of the king Sachanthan.

## சச்சந்தன் சரித்திரம்.

### வேறு.

157\. நச்சுநாகத்தினாழற்சீற்றத்தன்
அச்சமுற்றடைந்தார்க்கமிர்தன்னவன்
கச்சுலாமுலையார்க்கணங்காகிய
சச்சந்தனெனுந்தாமமார்செங்கணான்.

He was a terror to his enemies, ambrosia to his friends, and the desire of women.

இ-ள். இதுமுதல் மூன்றுமொருதொடர். சச்சந்தனென்னுஞ் செங்

கனன் அடைந்தார்க்கு அமிர்தன்னவன், அடையாதார்க்கு உயிர்போமள வுஞ் சென்று கோபமாறு நஞ்சுபோலுஞ் சீற்றத்தன் என்க.

நச்சு, நாகத்திற்கு அடை. அன்னவன், தொழிற்பெயர். ௱௫௭.

158. வண்கையாற்கலிமாற்றிவைவேலினால்
திண்டிறற்றெவ்வர்தேர்த்தொகைமாற்றினான்
உண்கலைக்கிடனாய்த்திருமாமகள்
கண்களுக்கிடனாங்கடிமார்பனே.

The banisher of want, the destroyer of his enemies, and the possessor of knowledge and wealth.

இ-ள். கடிமார்பன் கலைக்கிடனாகி, கையாலே கலியை மாற்றி, வேலாலே தேர்த்திரளை மாற்றினான் என்க.

நோக்கியகண்கள் வேறுசெல்லாத புதியமார்பன். ௱௫௮.

159. கோதைநித்திலஞ்சூழ்குளிர்வெண்குடை
ஓதநீருலகொப்பநிழற்றலால்
தாதையேயவன்றாணிழற்றங்கிய
காதலாற்களிக்கின்றதிவ்வையமே.

Dispensing impartial justice, so that his kingdom enjoyed peace and happiness.

இ-ள். குடையாலே ஒப்ப நிழற்றலால் உலகிற்குத் தாதையேயாத லின் அவன் தாள்நிழலிலே தங்கவேண்டி இவ்வுலகம் அவன்மேல் வைத்த காதலாலே களியாநின்றதென்க.

இனித் தாள்நிழற்றங்கிய வையம் அவன் உலகில் வைத்த காதலாலே களிக்கின்றதென்றுமாம். இவற்றால் தெறலும், அளியும், அழகும், கொ டையும், வீரமும், கல்வியும், முறைசெய்தலுங் கூறினார். கோதைநித் திலம், உம்மைத்தொகை. ஒப்ப, எல்லார்க்குமொப்ப. ௱௫௯.

160. தருமன்றண்ணளியாற்றனதீகையால்
வருணன்கூற்றுயிர்மாற்றலின்வாமனே
அருமையாலழகிற்கணையைந்துடைத்
திருமகன்றிருமாநிலமன்னனே.

In love he was *Dharman* [god of virtue], in gifts he was *Varunan* [rain], in valour he was *Yaman*, [death], incomparable as *Vaman* [Vishnu], and beautiful as *Manmadan* [Cupid].

இ-ள். அம்மன்னன் அமிர்தத்தையொத்தலும் உலகைநிழற்றலுமாகிய தண்ணளியால் தருமன், கலிமாற்றின ஈகையால் வருணன், தேர்த்தொகை மாற்றுமிடத்தால் அழற்சீற்றத்தனாய் உயிரைமாற்றுதலில் கூற்றம், கலைக்கி டனும் அருமையால் வாமன், மகளிர்க்கு அணங்காகிய அழகால் காம னென்று உவமை கூறுதற்குக் கொண்டுகூறினார். கூறியது கூறல் அன் றென்க.

அறக்கடவுள், இதற்கு உவமையும் உருபும் விரிக்க. ௱௬௰.

தருமன் perhaps the eldest of the Pandavas is intended by the Poet.

Of all his conquering race, he was chief, in speech he was like the dropping of honied rain, his praise extended to the celestial worlds.

161. ஏனைமன்னர்தமின்னுயிர்செற்றவேல்த்
தானைமன்னரிற்றனிமிலேறனான்
தேனைமாரியனான்றிசைக்காவலன்
வானந்தோய்புகழான்மலிவெய்தினான்.

இ-ள். ஒழிந்தபகைவருயிரைச் செற்றதம்மரபிலுள்ளாரில் தான் செருக்கினால் ஏறனையான், மொழியால் தேன்மாரியனையனாகிய காவலன் சுவர்க்கத்தே செறியும்புகழாலே மிகுதல்பெற்றானென்க.

ஐ, அசை. ௩௬௧.

சொல்லில் understood before தேன்மாரி.

His consort (the queen) was the daughter of the king of Vidaiya; her beauty vied with that of Latschmi.

162. செல்வற்கின்னணஞ்சேறலிற்றீம்புனல்
மல்லனீர்விதையத்தரசன்மகள்
அல்லிசேரணங்கிற்கணங்கன்னவள்
வில்லினீள்புருவந்தெறிவேற்கணாள்.

How shall I describe all her beauty; a little I shall attempt.

163. உருவுஞ்சாயலுமொப்பவுரைப்பதற்(கு)
அரியதாயினுமவ்வளைத்தோளிகட்
பெருகுகாரிகைபேசுவல்பெண்ணணங்(கு)
அரியதேவருமேத்தருநீர்மையாள்.

இ-ள். இவையிரண்டும் ஒருதொடர். செல்வற்கு இன்னணம் நல்வினை நடத்தலாலே இதற்கேற்ப விதையத்தரசன்மகள் இவ்வுலகிற் பெண்ணால் அணங்குதற்கரிய தேவருமேத்தருநீர்மையையுடையாளாயினாள், அவ்வேற்கண்ணாளாகிய அணங்கன்னவளுடைய வடிவும் மேன்மையும் இத்தன்மையவென்று உவமைகூறுவார்க்கு அரிதாயினும் அவளிடத்துக் காரிகையைச் சிறிது கூறுவேனென்றாரென்க.

அது மேற்கூறுகின்றார்: புனலினது வளப்பம்பொருந்திய நீர்மையையுடைய விதையம்; தண்ணீரும், விளைவிக்கும் நீருமாம். திருவிற்கோர் திருவன்னவள், இல்பொருள். ௩௬௩.

வேறு.

Her hair was as if darkness itself was caught, and tied and confined in a case, it darkened the eyes of beholders.

164. எண்ணெயுநானமுமிவைமூழ்கியிருடிருக்கிட்(டு)
ஒண்ணறுந்துகிற்கிழிபொதிந்துறைகழித்தனபோற்
கண்ணிருண்டுநெறிமல்கிக்கடைகுழன்றகருங்குழல்கள்
வண்ணப்போதருச்சித்துமகிழ்வானாத்தகையவே.

இ-ள். எண்ணெயும் நானமுமென்கின்ற இவையிற்றிலே மூழ்கிக்குழன்ற கரியகுழல்கள் இருளைப்பிடித்து நீளமுறுக்கி அறல்படப்பிடித்து உறையிலே பொதிந்து அதனை வாங்கப்பட்டவைபோல நோக்கினார் கண்ணிருளும்படி நெறிமல்கிச் சேடியர் போதைக்கொண்டு வழிபட்டாலும் வருத்துந் தன்மையவென்க.

இருண்டு, இருளவென்க. குழன், மாத்திரையாய் ஐவகையையும் உணர்த்தலிற் பன்மை கூறினர். கண், இடமாக்கிக் கொடிய குழலென்றுமாம். குழன்றும் பாடம். ௱௬௪.

இருடிருக்கிட்டு = இருளைத்திருக்கிட்டு, twisting the darkness as a rope.

165. குழவிக்கோட்டிளம்பிறையுங்குளிர்மதியுங்கூடினபோல்
அழகுகொள்சிறுநுதலுமணிவட்டமதிமுகமுந் [வல்
தொழுதாற்குவரங்கொடுக்குந்தொண்டைவாய்த்தாமுறு
ஒழுகுபொற்கொடிமூக்குமுருப்பசியையுருக்குமே.

Her face was like the full moon, and her forehead like the young moon, both conjoined; her nose and mouth were symmetrical; her smiles afforded pleasure.

இ—ள். பிறையுமதியுங் கூடினபோல் அழகுகொண்ட நுதலுமுகமும், வாயும், முறுவலும், மூக்கும், உருப்பசியை உருக்குமென்க.

உருக்குதல், நுகர்தற்கு அவளும் ஆண்பாலாக விரும்புதல். குழவிப் பருவத்தொருகலையையுடைத்தாய்ப் பின்பு இளமைப்பருவத்தே நின்ற பிறை. இளமை, ஈண்டுக் குழவிப்பருவம் ஒழிந்ததன்மேற்று. "இளமையுந்தருவதோ" என்றார் பிறரும். "மாக்கடனடுவணெண்ணாட்பக்கத்துப் பனிவெண்டிங்கடோன்றி யாங்குக் கதுப்பயில் விளங்குஞ் சிறுநுதல்" என்றார் பிறரும். வட்டமதிமுகம், வட்டத்தையுடைய மதித்தமுகம்; அடையுமாம். தான் தொழப்பட்ட கணவனுக்கு . வரங்கொடுக்கும். வளருகின்ற பொலிவினையுடைய நீண்டமூக்கு. ௱௬௫.

Even the beautiful *Urvasi*, one of the celestial courtesans, would be fascinated by *Vijaiya's* charms, and wish she [herself] was a man.

166. வண்சிலையைவனப்பழித்துவார்ந்தொழுகிநிலம்பெரு
நுண்கருமைகொண்டொசிந்துநுதலிவர்ந்துபோந்துலாய்க்
கண்கூடாக்கடைபுடைத்துக்கைவல்லானெழுதியபோல்
பண்பார்ந்தகொடும்புருவம்பழிச்சாணுப்படியவே.

Her eye-brows were like long and arched bows, of perfect beauty.

இ—ள். எழுத்து ஒருமைப்படுதற்குத் துகிலிகைக்கோலையுதறிக் கைவல்லானெழுதியவைபோல் தனக்குரிய குணநிறைந்த கொடியபுருவம் வனப்பழித்துத் தான் செல்லுமளவுஞ்சென்று மேற்செல்லாவாய்க் கூரிய கருமைகொண்டுவளைந்து நுதலில் தான் சேறற்குரிய அளவுஞ்சென்று போந்துபரந்து தன்னிற்கூடா ஆதலின் பழிச்சுதல் அமையாத தன்மையவென்க.

இகந்து ஒழுகவென்பதுவும் பாடம். ௱௬௬.

167. சேலனையசில்லரியகடைசிவந்துகருமணியும்
பாலகத்துப்பதித்தன்னபடியவாய்முனிவரையும்
மாலுறப்பமகிழ்செய்வமாண்பினஞ்சுமமிர்தமுமே
போல்குணத்தபொருகயற்கண்செவியுறப்போந்தகன்ற
னவே.

Her long eyes were like the cail fish, and like jets floating in milk, darting forth poison and ambrosia, by which even sages would be fascinated.

இ—ள். சில்லரியவாய்ச் சிவந்து, மாயோனையும் பாற்கடலையும் முகத் தேவைத்தாற்போன்ற தன்மையவாய், மாறுறுப்பனவாய், மகிழ்ச்சிசெய் வனவாய், துன்பத்தாலும் இன்பத்தாலும் நஞ்சும் அமுதம்போலுங் குண த்தவாகிய கண் செவியுற நீண்டு அதற்கேற்ப அகன்றனவென்க.

கன்னியாதலின் மாறுறுப்ப என்றார். கணவனுக்கு மகிழ்செய்வ. மாண்பிலா நஞ்சு. கயல்போற் பிறழுங்கண். கருமணியைப் பாலிற்பதித் தால் பால் நிறங்கெடுமென்றுணர்க. ௱௬௭.

மாண்பிலநஞ்சு=மாண்பு, இல், நஞ்சு. poison that has no good quality.

168. மயிரெறிகத்திரிகையனையவாய்வள்ளைவா(டு)
உயிர்செகுத்துமுன்னொன்றிப்பின்போராதுருவமைந்த
செயிர்மகரகுண்டலமுந்திளைப்பானவார்காதும்
வயிரவின்முகஞ்சூடிவண்ணம்வீற்றிருந்தனவே.

Her ears were flexible, and ornamented with jewels, which threw light upon her face.

இ—ள். கத்திரிகையனையவாய், வாடுவள்ளையின் அழகைக் கெடுத்து, பின்மறியாது முன்னே பொருந்தி, அழகமைந்த குண்டலமுந்தோடும் அசைதலமையாதகாதும் வயிரத்தின் ஒளியையிடத்தே சூடி வீற்றிருந்தன வென்க.

வாட்டாயின், வாட்டினவென்க. காதும், உம்மை இறந்தது தழீ இயிற்று. ௱௬௮.

வள்ளைவாடுயிர் = வாடு, வள்ளை, உயிர், vying with the fading *vallai* plant, destroying its life. வயிரவில், the light of diamond.

169. ஈனுதவிளங்கமுகின்மரகதமணிக்கண்ணும்
ஆனுகோயிருள்பருகுமருமணிகடைந்ததூஉந்
தானுகியிருளோடோர்தாமரைப்பூச்சுமந்தன்ன
கானூர்ந்ததிரள்கழுத்துக்கவின்சிறைகொண்டிருந்ததே.

Her neck was like the young areca stem and like the polished emerald, bearing the lotus face, and the thick black hair.

இ—ள். கமுகினது மரகதமணிபோலுங் கண்ணும், இருளைக்கெடுக்கு மாணிக்கங் கடைந்ததுவும் தானாய்ச் சுமந்தன்னகழுத்து அழகு குடிகொ ண்டிருந்ததென்க.

கோட்புகாத கன்னிக்கமுகு, வளைப்பிற்கு நெய்ப்பிற்கும்; மணி, திரட்சிக்கும் நிறத்திற்கும் உவமம். உதையகிரியிற் சிந்தூரவருவி வீழ்ந்த சிந்தூராகாத்திற் பிறந்து பதினாறு சதுரியுகஞ் சிவப்பேறின முழுமாணிக் கம் இருளைக்கெடுத்தலின் இருள்பருகுமருமணி என்றார். இருளுந் தாமரையும், மயிர்க்கும் முகத்திற்கும் உவமம். கான், மணம். ௱௬௯.

170. மணிமகரவாய்போழ்ந்துவாழ்முத்தவடஞ்சூழ்ந்தாங்(கு)
அணியரக்கார்செம்பஞ்சியனையனையவாடமைத்தோள்
துணிகதிர்வளைமுன்கைத்தொகுவிரல்செங்காந்தள்
மணியரும்புமலரங்கைகுலிகமார்வனப்பினவே.

Her arms were like the round bamboo, her fingers were soft like cotton, and like the Kandal flower, and her hands were like the red lotus.

இ-ள். அமைத்தோள் மகரம் வாய் அங்காத்தலாலே ஆங்குவாழும் முத்தஞ்சூழப்பட்டுச் செம்பஞ்சணையையனைய, குவிந்த விரல்கள் காந்தளின் அழகையுடைய அரும்பையனைய, அகங்கை தாமரை மலரையனைய, இக்கைகள் குவிதமார்ந்த வனப்பினவென்க.

போழ்ந்தவும், வான்முத்தமும் பாடம். துணிதல், தெளிதல். பஞ்சணை, நிறத்திற்கும் மென்மைக்கும் உவமை. அமை, திரட்சிக்கும் செய்ப்பிற்கும் உவமம். ௱௭௰.

171. தாமச்செப்பிணைமுகட்டுத்தண்கதிர்விடுநீலம்
மாமணிதாபித்தனபோன்மனம்பருகுகருங்கண்ண
ஏமுறவடிபரந்திளம்பிறைவடஞ்சூடி
ஆமணங்குகுடியிருந்தஞ்சுணங்குபரந்தனவே.

Her breasts were like carved caskets, ornamented with black diamonds, objects of desire.

இ-ள். தாமத்தையுடைய முலையிரண்டின் தந்தலையிலே நீலமணியை அழுத்தினாற்போல நோக்கினார் மனத்தையுள்ளடக்குங் கரியகண்ணவாய், கண்டார் மயக்கமுற அடிபரந்து சூடித் தம்மேனுறையும் வீற்றுத் தெய்வம் இருப்பிடமாக இருக்கப்பட்டுச் சுணங்கு பரந்தனவென்க.

தாமச்செப்பெனவே, முலையாம். இனிப் பூஞ்செப்பாக்கில் இக்கவி சினையிற் கூறுமுதலறிகிளவியாம். மேலாகக்கடவ அருத்தமுமாம். ௱௭௧.

ஆமணங்கு = ஆம் + அணங்கு. The goddes of the forests, who deludes men.

172. அங்கைபோல்வயிறணிந்தவலஞ்சுழியமைகொப்பூழ்
கங்கையின்சுழியலைக்குங்கண்கொளாநுடங்கிடையை
உண்டெனத்தமர்மதிப்பநோக்கினார்பிறரெல்லாம்
உண்டில்லையெனவையமல்லதொன்றுணர்வரிதே.

Her navel was like a little whirlpool, her stomach like the palms of the hand, and her waist imperceptibly slender.

இ-ள். அகங்கைபோலும் வயிற்றை அழகுபெறுத்தின கொப்பூழ் சுழியைவருத்தும், கட்புலனாகா இடையை தமர் பயிறலின் உண்டென்று கருதுவர், பிறர் அதனை நோக்கினாரெல்லாம் அல்குலுமுலையுமுண்மையின் உண்டென்றும் கட்புலனாகாமையின் இல்லையென்றும் ஐயுறுதலன்றி இரண்டிலொன்று துணிவார்க்கறிதலரிதென்க.

கங்கை, குலத்தூய்மைக்குக் கூறினார். ௱௭௨.

173. மன்னுகவினைப்படமுந்தேர்த்தட்டுமெதிமயக்கிப்
பொன்னுலவட்டம்போற்கலையிமைக்குமகலல்குல்
கொன்னிளம்பருதியுங்குறுமுயலின்குருதியும்போன்(று)
இன்னரத்தப்பட்டிசைந்திந்திரற்கும்புகழ்வரிதே.

Below the navel, it was like the hood of a snake, and the circular platform of a car.

இ-ள். படமும் தட்டும் ஆலவட்டமும்போலே வட்டம் அகன்ற அல்குல் பருதியுங் குருதியும்போலே கட்கினிய பட்டுடுக்கப்பட்டு எல்லாரையுமதிமயக்குதலின் இந்திரற்கும் புகழ்தல் அரிதென்க.

மன், பெருமை. இணைப்படம், இரண்டுபுறமும் ஒத்தபடம். கலை, அடை. கொன், விடியற்காலம். கொன்வால் வாடைபோல. உம்மை, சிறப்பு. ௱௭௩.

புகழ்வரிதே, for புகழ்தல் அரிது.

174. வேழவெண்டிரட்டக்கைவெருட்டிமற்றிளங்கன்னி
வாழைத்தண்டெனத்திரண்டுவாலரக்குண்செம்பஞ்சி
தோழமைக்கொண்டெனமென்மையுடையவாயொளிதிகழ்ந்
மாழையொண்மணிமகரங்கௌவிவீற்றிருந்தனவே. [து

Her thighs were like the proboscis of an elephant, and the spadix of the tender plantain, soft as cotton.

இ-ள். ஒழுகநோக்குதலான் அயிராபதத்தின் கையை வெருட்டப்பட்ட குறங்குகள் தண்டெனத்திரண்டு, பஞ்சி தன்னுடனே தோழமைக்கொண்டு மேன்மைபெற்றதெனத் தான் மென்மையுடையவாய்த் திகழ்ந்து, குறங்கு செறிந்து கவ்விமேலாயிருந்தனவென்க.

வெருட்டி, பெயர். மற்று, வினைமாற்று. செம்பஞ்சி, பஞ்சிமாத்திரை. பொன்றனனிடத்தே அட்டக்கின மணி, மகரம், ஆகுபெயர். திரண்ட பாடமாயிற் பெயராம். ௱௭௪.

திரட்டக்கை = திரள் + தட + கை. round long hand. மாழை, பொன், gold. வெருட்டி for தொடை, subject, வீற்றிருந்தனவே, predicate. See Nannul, Sutram. 281.

175. பக்கத்தாற்கவிழியவாய்மேல்பிறங்காப்பாண்டிலாய்
ஒக்கநன்குணராமைபொருந்தியசந்தினவாய்
நெக்குப்பின்கூடாதுநிகரமைந்தமுழந்தாளும்
மக்களுக்கில்லாதமாட்சியின்மலிந்தனவே.

Her knees were concave, circular, and perfect.

இ-ள். மேற்பக்கத்திலே கவிழ்ச்சியையுடையவாய், பேராதவட்டமாம்படி உள்ளேபொருந்திய சந்தினவாய், நெகிழ்ந்து பின்போகாமல் ஒப்பற்ற முழந்தாளும் மாட்சியினுன் மிக்கனவென்க.

நன்மை, இதற்கொப்ப வேறொன்றிலுணராதபடி பொருந்திய சந்து. ௱௭௫.

176. ஆடுநற்றசைபிறங்காவற்றுதுமயிரகன்று
நீடாதுகுறுகாதுநிகரமைந்தவளவினவாய்ச்
சேடவராழிகையிற்புடைதிரண்டுதேனெய்பெய்
வாடாதகாம்பேபோல்கணைக்காலின்வனப்பினவே.

Her ancles were proportionate, and, looked like quivers for arrows.

இ-ள். கணைக்கால் தசை பேராதுமாய், வற்றுதுமாய், மயிர்மிக்கு நீடாமல், குறுகாமல், ஒப்பிலாத அளவினவாய், அம்பறுத்தூணிபோலே திரண்டு, காம்புபோல் இனிய வனப்பினவென்க.

சேடு, பெருமை. தேன், நிறத்திற்குவமை. பத்மராகமாயினும் மயிர்கள் அகன்றதனுற் காம்பு உவமையாயிற்று. இனிக் கணைக்காலின் வனப்பு இன்ன என்றுமாம். ௱௭௬.

கணைக்காலின் வனப்பினவே, i, e., கணைக்கால் subject, இன், increment, expletive, வனப்பினவே, predicate, or கணைக்காலின் வனப்பு, (the beauty of the ancles) subject, இன for இன்ன (are such) predicate

Her feet were ornamented, the insteps were like tortoise shell, baffling all description.

177. பசும்பொன்செய்கிண்கிணியும்பாடகமும்பாடலைப்ப
நயந்தெரிபொற்சிலம்புமுத்தரிபெய்தகநக [ம்போல்
இமைந்தெழிலார்மணியாமையின்ம்பார்ப்பின்கூன்புற
அசைந்துணர்வுமடிந்தொழியுமடியிணைபுகழ்வார்க்கே.

இ-ள். அரிபெய்யப்பட்டு, கிண்கிணியும் பாடகமுந்தாங்கி, கிடக்கின்ற இடத்தை வருத்துதலாலே சிலம்பு சிறிதே சிரிப்ப அழகார்ந்த ஆமைப்பார்ப்பின் புறம்போலும் அடியிணையைப் புகழ இமைந்து புகழ்வார்க்கு உணர்வு துளங்கிக் கெட்டுப்போமென்க.

"பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்றிளமை, தவழ்பவை தாமுமவற்றோரன்ன" என்றார். நயந்து, விரும்பி. ௱எஎ.

புறம்போல் is புறம்போலும். இருக்கிற may be understood after போல்.

Her toes were like the petals of the red *Kuvalai* flowers, close, round, and long, attracting the attention of the bees.

178. அரக்கியல்செங்கழுநீரகவிதழ்போலுகிர்சூடிப்
பரப்பின்றிநுதியுயர்ந்துபழிப்பறத்திரண்டுநீண்(டு)
ஒருக்குறநெருங்கிப்பொன்னொளியாழியகங்கௌவித்
திருக்கவின்கொண்மெல்விரல்கடேனார்க்குந்தகையவே.

இ-ள். திருவினது விரலின் அழகைக்கொண்ட விரல்கள் நுதி பரப்பின்றித் தோன்றித் திரண்டு நீண்டு சேரநெருங்கி, மோதிரங்கௌவப்பட்டு, அகவிதழ்போலும் உகிர்சூடி, பூவென்று தேனார்க்குந் தகைமையவென்க.

குவிகம் ஊட்டின இதழ், செம்பஞ்சூட்டினதற்கு உவமம். ௱எஅ.

தேன் = வண்டு, bee. ஆர்க்கும், will buzz, sing.

The soles of her feet, touching the ground without, and raised above the ground within, were soft as cotton.

179. என்போடுநரம்பின்றியிலவம்பூவடானுக்கி
இன்புறவரம்புயர்ந்திருநிலமுறப்புல்லி
ஒன்பதின்சாணடப்பினுமொருகாதமென்றஞ்சும்
மென்பஞ்சிச்சீறடியுமேதக்கவிழைவினவே.

இ-ள். என்பும் நரம்பும் இன்றி, இலவிதழைக் கெடுத்து, கட்கினிய புறவெல்லையுயர்ந்து, நிலத்தையுறப்புல்லி நடப்பினும் அஞ்சும் அடியும் பெருமைதக்க விழைவினவென்க.

ஏழடியென்றன் மரபாயிருக்க ஒருகாதமென்னும் எழுத்து நோக்கி ஒன்பதின் சாணென்றாரேனும் அடியிடுமளவில் ஏழாம். ௱எகூ.

Her form was pictured on the mind of Sachandan by the pencil of thought, and seen by the eye of contemplation, on which he sprinkled the water of love, and strewed the flower of desire.

180. இவ்வுருவுநெஞ்சென்னுங்கிழியின்மேலிருந்திலக்கித்(து)
அவ்வுருவுநினைப்பென்னுந்துகிலிகையால்வருத்தித்துக்
கவ்வியதனைக்கிற்கண்விடுத்துக்காதனீர்
செவ்விதிற்றெளித்தானுக்காமப்பூச்சிதறினான்.

இ-ள். கூறிய இவ்வுருவை ஒருப்பட்டிருந்த நெஞ்சென்னும் படத்திலே குறித்து, அதனை நினைவென்னுங்கோலாலே உறுப்புவிளங்க எழு

தி, தான் கைக்கொண்ட தியானத்தாலே நயனமோக்ஷம்பண்ணி, மாமன் மகளாதலின் அன்பென்னும் நீரைச்சொரிந்து, புணர்ச்சிவேட்கையாகிய அமையாத பூவைச் சிதறினனென்க.

இவன் எழுதி பிரதிஷ்டித்தான். இருந்திலேகித்தென்பதும் பாடம். இலக்கு, குறித்துப்பார்த்தல். ௱அ௰.

The subject Sachandan understood. Her form was the idol of his mind, whence the sprinkling of water and strewing of flowers, as in the act of worship.

181. மெய்பெறுவெழுத்துயிர்க்குமழலைவாயிளமுறுவல்
தையலாணெடுங்கட்டங்கண்வலைப்பட்டுச்சச்சந்தன்
ஐயுறுனணங்கெனவேயகத்தடக்கிச்செல்கின்றான்
மொய்யறுக்களியானைமுழங்கித்தேனிமிர்தாரான்.

He was so enamoured of her, that though she was human, he esteemed her divine.

இ—ள். அங்ஙனங் குறித்ததாரானாகிய சச்சந்தன் விசேடித்துத் தையலாள் கண்வலையிலே அகப்பட்டு, கால் நிலந்தோய்தன்முதலியன கண்டு தெளிந்தும் அணங்கென்றே உட்கொண்டு செல்லாநின்றான் என்க.

எழுத்து வடிவுபெற்றுத்தோற்றும் இளையவார்த்தையையும் முறுவலையுமுடைய தையலாள். மழலை எக்காலத்திற்குங்கூறுப. மொய், போர். ௱அ௧.

வேறு.

182. வண்டினமுகபடாமணிந்துவார்மதம்
உண்டுகுத்திடுகளிற்றுழவன்றன்மகள்
பெண்டிர்தம்பெருநலங்கடந்துபெற்றபேர்
விண்டலர்கோதைக்குவிசையையென்பவே.

Her name was Vijaiya [Victoria] as she excelled all other women in beauty.

இ—ள். வண்டினமாகிய முகபடாத்தை அணிந்து மதத்தைத் தானுண்டு சிந்துங்களிற்றுழவன் தன்மகள்பெயர் விசையை என்பர், அக்கோதைக்கு அப்பெயர் பெண்டிர் நலங்கடந்து பெற்ற காரணப்பெயரென்க.

பெயர், பேரென மருவிற்று. ௱அ௨.

உழவன் here, means, warrior, heroe, not ploughman.

183. அருமணிமரகதத்தங்கணுறிய
எரிநிறப்பொன்னிதழேந்துதாமரைத்
திருமகளிவளெனத்திலதவெண்குடைப்
பெருமகன்கோயிலுட்பேதைவைகுமே.

Being of celestial discent, she brought Fortune with her, into the house of her father.

இ—ள். இமவானின் மரகதப்பாறையில் பிரமையென்னுங் கயத்தில் தோற்றிய பொற்றாமரையிற்றிருவென்ன விசையத்தரசன் கோயிலிலே பேதை வைகாநிற்குமென்க.

திலதம், மேலாதல். திருவுவமம், வடிவிற்கும், நல்வினையுடையோனிடத்தேகுந் தன்மையும் பொதுவாயிருத்தற்கும். ௱அ௩.

நாறிய = விளங்கிய. பேதை, a woman, name given to the fair sex, generally indicating ignorance, or rather innocence. "பேதைமையென்பது மாதர்க்கணிகலம்."

184. கலம்புரியகலல்குற்ருயர்தவ்வையர்
சிலம்புரிதிருந்தடிபரவச்செல்பவள்
வலம்புரிசலஞ்சலப்வளை இயதொத்தனள்
குலம்புரிந்தனையதோர்கொடியினீர்மையாள்.

She was a gem among precious women, as the Salanchala conch, amongst the Valambari conchs.

இ—ள். குலம் கொடியினீர்மை புரிந்தனையதோர் நீர்மையாள், மேகலை விரும்பின அல்குலையுடைய ஐவகைத்தாயரும், அவர் மக்களாய்த் தனக்கு மூத்தவர்களும் அடிபரவச் செல்பவள் வலம்புரி சலஞ்சலத்தை வளைத்த தன்மையை ஒத்தாளென்க.

சிலம்புபுரி, விகாரம். ௱௮௪.

185. இன்னகிற்கொழும்புகையுயிர்க்குமீர்ங்குழல்
மென்மலர்க்கோதைதன்முலைகள்வீங்கலின்
மின்னுருக்குறுமிடைமெலியமெல்லவே
கன்னிதன்றிருநலங்கனிந்ததென்பவே.

Vijaya comes of age.

இ—ள். குழலையுடைய கோதைதன் முலைகள் இடைமெலிய வீங்குத லாலே அவள் நலமுதிர்ந்ததென்க.

மின்னுருக்குறுமிடை, மின்வடிவு கெடுத்தற்குக் காரணமான இடை. நடுக்குறுமென்றும் பாடம். ௱௮௫.

186. முந்துநாங்கூறியமூரித்தானைய
குந்துகொல்கடாக்களியானைமன்னவன்
பைந்தொடிப்பாசிழைப்பாவையேந்தல்குல்
தந்தைமாட்டிசைத்தனன்றனதுமாற்றமே.

Sachanthan negotiates with the father of Vijaya, to marry her.

இ—ள். தானையையும், யானையையுமுடைய அச்சச்சந்தன் விசையை யுடைய முந்துகூறிய தந்தைமாட்டே தனது மாற்றத்தை இசைப்பித்தானென்க.

அவளைக் கொள்ளவேணுமென்னு மாற்றம். ௱௮௬.

மூரி, பலம், powerful. அல்குல், for Vijaya, ஆகுபெயர்; 6-case. இசைத்தனன், transitive for causal.

187. மருமகன்வலந்ததுமங்கையாக்கமும்
அருமதிச்சூழ்ச்சியினமைச்சரெண்ணிய
கருமமுங்கண்டவர்கலத்தற்பான்மையிற்
பெருமகற்சேர்த்தினர்பிணையனாளையே.

Her father and mother consent to the marriage, and it is auspiciously consummated.

இ—ள். தந்தையுந்தாயும் மருமகன் கூறியதனையும், மங்கை அவனிடத்து அன்பை அமைத்துக்கோடலையும், அமைச்சரெண்ணிய கருமத்தையும் பார்த்து, மைத்துனன் முறையானும் பிணையனாளைப் பெருமகற்குச் சேர்த்தினரென்க.

ஆக்கம், இளவியாக்கம்போனின்றது; அவள் முயற்சியுமாம். கருமம், கோவிந்தனுக்கு இவள் உதவியாதல். "பின்னர் நான்கும் பெருக்

திணைபெறும்" என்பதனுல் ஒப்பும், பெருந்திணைப்பாற்படுங் கந்திருவ மாமாறும் பெரும்பொருளானுணர்க. ௱௮௭.

## வேறு.

188. பொனங்கொடியமிர்தனளும்பொன்னெடுங்குன்றனும்
அனங்கனுக்கிலக்கமாகியம்புகொண்டமுத்தவிள்ளார்
இனந்தமக்கெங்குமில்லார்இயைந்தனரென்பமுக்கட்
சினக்கிகழ்விடையினனுஞ்செல்வியுஞ்சேர்ந்தொத்தே.

They lived together, and their union was as inseparable as that of Siva and Parvati.

இ—ள். அழுந்த இலக்கமாகிய குன்றனனும் கொடியாகிய அமிர் தனளும் முன்பு இலக்காய் நின்று, பின்பு அவர் விடையினனுஞ் செல் வியுஞ் சேர்ந்தொத்து விள்ளாராய் ஒருடம்பாயினரென்க.

கொடி என்ருர் குன்று மறையப்படர்ந்து கேடு பிறப்பித்தலின். காட்சியும் நிலையும் முயக்கமுங் கூறி அவற்றிற்கு உவமை மேற்கூறுகின் ருர். ௱௮௮.

பொன் + அம் + கொடி = beautiful golden creeper, i.e., Vijaya, who spread over the mountain, i. e., her husband.

189. காதலாற்காமபூமிக்கதிரொளியவருமொத்தார்
மாதருங்களிறனுமாசுணமகிழ்ச்சிமன்றல்
ஆதரம்பெருகுகின்றஅன்பினலன்னமொத்துந்
தீதிலார்திளைப்பினுமான்செல்வமேபெரிதுமொத்தார்.

Their sexual intercourse was like that of snakes, their love like that of swans, their enjoyment like that of the wild ox, and their happiness like that of the celestials.

இ—ள். மாதரும் களிறனும் மகிழ்ச்சியையுடைய முயக்கத்தால் மாசுணத்தை ஒத்தும், அன்பாலுளதாகிய மேன்மையால் அன்னத்தை ஒத் தும், கண்முதலிய அவையவ நுகர்ச்சியால் ஆமானை ஒத்தும், தீதிலாதவர் கள் இப்புணர்ச்சிக்குமுன்னர் போகபூமியிலுள்ளார் செல்வமே பெரிதும் ஒத்தார், இப்பொழுது காதலால் அவர்கள் தம்மையும் ஒத்தாரென்க.

காதல், எல்லாப்பொருளையும் நுகர்தற்குச்செல்லும் வேட்கை. காம பூமி, தானப்பயனுற் பெறும்போகபூமி. உம்மை, சிறப்பு. ஆதரம் பெருகுமன்பாவது, புணர்வதன் முன்னும் பின்னும் ஒரு தன்மைத் தாய் செயற்கையான்மிகும் அன்பு. அன்னம், புணர்ச்சியான் மெய்யுருகு மென்மைக்கு உவமம். பலரும் துணை புணரன்னத்தின்றூவியென்று புணா ச்சியாற் றூவிக்குமென்மை பிறக்குமென்ருர். ஒத்தும், என்பதனை முன் னும் பின்னுங் கூட்டுக. இவ்வெச்சத்தைத் தீதிலாரிற்றீதின்மையோடு முடிக்க. தீதிலாத்திளைப்பிற் பாடமாயின் ஆமானை ஒத்தும் தீதிலாமாதருங் களிறனுமென்க. ஆமான், நக்குங்காற் பிறக்கும் இனிமையே ஈண் டுவமம். ஏகாரம், தேற்றம். ௱௮௯.

ஆமான் or ஆமா, the wild ox or cow, whose lick though pleasant at first, afterwards causes death.

190. தன்னமர்காதலானுந்தையலுமணந்தபோழ்திற்
பொன்னனாளமிர்தமாகப்புகழ்வெய்யோன்பருகியிட்டான்
மின்னவிர்பூணினானைவேற்கணாக்கியற்றப்பட்ட
மன்னியமதுவின்வாங்கிமாதரும்பருகியிட்டாள்.

He enjoyed her as if she were ambrosia, and she enjoyed him as if he were wine.

இ-ள். காதலானும் தையலும் முற்கூறியாங்குப் புணர்ந்தபொழுதிலே அப்பொன்னனாளை அவன் அமிர்தமாகப் பருகினான், அவன் பருகின தன்மையைத்தானுங் கண்டு பூணினானை அவளும் மதுப்போலே பருகினாளென்க.

மகளிர்க்குச் சமைத்த மதுபானம் வாங்கி, அவன் காட்டக்கண்டு. இது அதரபானமும் அல்குற்பானமுங்கூறி மேல் இவற்றிற்கு உவமை கூறுகின்றார். பருகியிடுதல், ஒருசொல். ௱௯௰.

191. பவளவாய்ப்பரவையல்குலென்றிவைபருகும்வேலான்
கவளமார்களிறுபோன்றான்காதலிகரும்பையொத்தாள்
தவழ்மதுக்கோதைமாதர்தாமரைப்பூவதாக
உமிழ்நகைவேலினானுமொண்சிறைமணிவண்டொத்தான்.

He enjoyed her as the elephant does the sugar-cane, and like the bee does the honied lotus.

இ-ள். வாயும் அல்குலும் இவையென்றுட்கொண்டு வேலான் பவளவாயைப் பருகிக் களிற்றை ஒத்தான்; அப்பொழுது அவள் கரும்பை ஒத்தாள். அவ்வேலானும் அல்குலைப்பருகி மாதர் பூவாயிருக்க நுகர்வதோர் வண்டை ஒத்தானென்க.

இவை, என்றது கரும்பையும் தாமரைப்பூவையும். கரும்புவமை, நெருக்கி நீர் நுகர்தற்கு. பூவதாக, பூவினது தன்மை எக்காலமுமுண்டாக. இது வேறுபாடின்மையின் வேறுபடவந்த உவமமாயிற்று. வேலினானும் என்றது, களிறுபோல வன்மையுடையோனுமென்றவாறு. உம்மை, சிறப்பு. செவ்வி குலையாதிருக்க நுகர்வதோர்வண்டென்று இல்பொருளுவமை. ௱௯௧.

உமிழ்நகைவேல், a lance glittering forth brightness.

192. பளிக்கறைப்பவளப்பாவைபரிசெனத்திகழுஞ்சாயற்
களிக்கயல்பொருவபோன்றுகடைசிவந்தகன்றகண்ணாள்
ஒளிக்கவின்கொண்டகாமத்தாழுறுகனியையொத்தாள்
அளித்தயில்கின்றவேந்தனஞ்சிறைப்பறவையொத்தான்.

She was crystal, and he was reflected in her, she was like delicious fruit, and he like the flying fox enjoyed her.

இ-ள். கண்ணாள் கனியை ஒத்தாள், அவளுக்கு மென்மேலும் விருப்பமுண்டாக்கி அயில்கின்ற வேந்தன் வாவலை ஒத்தானென்க.

பளிக்குப்பாறையையடுத்த பவளப்பாவை இவளது தன்மையெனத்திகழுஞ் சாயல், ஈண்டொளியது மேன்மை. இது செயற்கைநலம். இதற்கு அடுத்தது காட்டும் பளிங்கை பவளம் தன்தன்மையாக்கினாற்போல் அடுத்த மகளிர் தன்மையனும் அரசனை இவளும் தன்தன்மையே ஆக்கிக்கொண்டாளென்க. கதைகருதிய நயமுமுண்டு. பொருவபோ

ன்று, பொருதெனவிரிக்க. கொண்டகனி. அயிறல், உண்டல். உண்டற்குரிய அல்லாப்பொருளை உண்டனபோலக் கூறலுமரபே. "தோள்நலமுண்டு துறக்கப்பட்டோர்" என்றார் பிறரும். பழமும் வாவலும் வடுப்பட நகர்தற்கு உவமை. ௱௯௨.

### வேறு.

193. துறுமலர்ப்பிணையலுஞ்சூட்டுஞ்சுண்ணமும்
நறுமலர்க்கண்ணியுநாறுசாந்தமும்
அறுநிலத்தமிர்தமுமகிலுநாவியும்
பெறுநிலம்பிணித்திடப்பெரியர்வைகினார்.

Their enjoyment was such that they forgot their own individuality, [consciousness.]

இ—ள். பெரியவர் புணர்ச்சியற்றபின் பிணையன் முதலியன தம்மை நுகரும் இந்திரியங்களைப் பிணிப்ப வைகினரென்க.

பிணையல், மலர் நெருங்குமார்பின் மாலை. சூட்டு, நெற்றிக்கட்டு. கண்ணி, முடிக்குமாலை. அமிர்தம், அடிசிலும் பானமுமுதலியன. இனி அறுநிலத்தமிர்தம், அறுசுவையுமாம், ஆறுகாலத்திற்குரிய பானமுமாம். ௱௯௩.

துறு = செறிவு, close.

194. துடித்தலைக்கருங்குழற்சுரும்புண்கோதைதன்
அடித்தலைச்சிலம்பினோடரவமேகலை
வடித்தலைக்கண்மலர்வளர்த்தநோக்கமோ(டு)
அடுத்துலப்பரிதவளுறியின்பமே.

When lovingly together, the noise of her girdle, and when she sulked and would be apart, the noise of her ankle rings, were heard.

இ—ள். அவரின்பம் கோதைதன் கண்மலர் ஊடலையுங் கூடலையும் விளைவித்த நோக்கத்தாலே அவளூடின காலத்து அடி அவன் தலையிற் படுதலிற் பிறந்த சிலம்பின் அரவத்தோடும், கூடின காலத்துப் பிறந்தமேகலை அரவத்தோடும், அடுத்து முடிதல் அரிதாயிருந்ததென்க.

துடி, எலம். வடித்தலைக்கண், ஒப்பினால் வடுவகிரிடத்தே நிற்குங் கண். அவனும் பாடம். ௱௯௪.

195. இழைவளரிளமுலையெழுதுநுண்ணிடை
தழைவளர்மதுமலர்தயங்குபூஞ்சிகைக்
குழைமுகக்கொடியொடுகுருதிவேலினன்
மழைமுகின்மாரியின்வருமென்பவே.

Rejoicing in her love, he manifested his affection, like the pouring forth of the autumnal rain.

இ—ள். வேலினன் கொடியோடே மாரிக்காலத்து மழை முகில்போலே அருள்பொழிந்து தங்குமென்க.

பூண் விளங்குதற்குக் காரணமாய முலை. ஓவியம் எழுதுவார் இதன் தன்மை கருதி எழுதுதற்குக் காரணமான இடை. தழையிலே வளர்ந்த. சிகை, முடி. முலை முதலியவற்றை உடையகொடி, இல்பொருள் உவமை. ௱௯௫.

196\. பீடுதிரைப்பவள்வாயமிர்தமாந்தியுங்
கொடிவளர்குவிமுலைத்தடத்துள்வைகியும்
இடியினுங்கொடியினுமயங்கியாவதுங்
கடிமணக்கிழமையோர்கடலின்மிக்கதே.

With regard to their bodies they were like the disturbed sensitive creeper, and with regard to their minds like the snakes frightened by thunder.

இ—ள். மிக்க மணக்கிழமை அமுதத்தையுண்டும், வைகியும், அரவிடி போலவும் நூழிற்கொடிபோலவும் உணர்வும் உடம்புமெல்லாமயங்கி, கடலின்மிக்கதென்க. ௱௯௬.

கிழமை, subject. மிக்கது, predicate.

197\. கப்புரப்பசுந்திரைகதிர்செய்மாமணிச்
செப்பொடுசிலதியரேந்தத்தீவிய
துப்புமிழ்ந்தலமருங்காமர்வல்லியும்
ஒப்பரும்பாவைபோன்றுறையுமென்பவே.

While her maidens were attending upon her, her image [person] engrossed his whole attention.

இ—ள். கருப்பூரமுதலியவற்றையுடைய சுருளைச் சேடியர் செப்போடேந்த அதனைநுகர்ந்து, ஐம்பொறிக்கும் இனியநுகர்ச்சிகளைக் கணவனுக்குக் கொடுத்துப் புணர்தற்கு அலமரும் விசையையும் அவனுக்குக்கொல்லிப் பாவைபோல் தங்குமென்க.

கப்புரம், பிராகிருதம். உம்மை, சிறப்பு. வேறுகருத்துசெல்லாமல் தன்னையே கருதுவித்தலிற் பாவை என்றார். இதற்குமுன்பு உலகியல் மணங்கூறி, மேற்காமமிகுதியாற் கெடுகின்றமை கூறுகின்றார். ௱௯௭.

198\. மண்ணகங்காவலின்வழுக்கிமன்னவன்
பெண்ணருங்கலத்தொடுபிணைந்தபேரருள்
விண்ணகமிருள்கொளவிளங்குவெண்மதி
ஒண்ணிறவுரோணியோடொளித்ததொத்ததே.

His attachment to his wife was like the attachment of the moon to *Rohini*, with its attendant consequences.

இ—ள். மன்னவன் மண்ணகம் இருள்கொள்ளும்படி காவலில் தப்பி, பெண்களுக்கு அருங்கலமானவளுடனே சேர்ந்த கழிகண்ணோட்டம் மதி விண்ணகம் இருள்கொள உரோகணியோடொளித்த தன்மையை ஒத்ததென்க.

இன், நீக்கப்பொருட்டு. உரோகணி, விகாரம். அவ்வுரோகணி காரணத்தின் இருடி சபித்து மதிதேய்ந்ததோர் கதை. ௱௯௮.

பேரருள், excessive love.

The Moon is said to have twenty seven wives, i. e., the constellations, of which Rohini the fourth asterism is his only beloved. On which account his father in law Daksha cursed him, and caused him to decrease, and bring darkness upon the earth. But Siva modified the curse by causing the moon to increase. This is the legend for the waning and the waxing of the moon.

## வேறு.

199\. குங்குமத்தோளினானுங்கொழுங்கயற்கண்ணினாளும்
தங்கியகாதல்வெள்ளந்தணப்பறப்பருகுநாளுள்
திங்கள்வெண்குடையினாற்குத்திருவிழுக்குற்றவண்ணம்
பைங்கதிர்மதியிற்றெள்ளிப்பகர்ந்தெடுத்துரைத்துமன்றே.

The husband was so absorbed in the enjoyment of his wife, and so forgetful of his kingdom that, evil entered, and his prosperity waned like the moon.

இ—ள். தோளினானும் கண்ணினாளும் வேட்கைப்பெருக்கத்தின் நீக்கமறப் பருகுநாளிலே அவனுக்குச் செல்வம் மதிபோல் ஒழுக்கங் குறைந்த தன்மையைத் தெரிந்து கூறிப் பின்பு சிவகன் சரிதமெடுத்துரைக்கலுற்றூமென்றூரென்க.

இதன்கருத்து: இச்செய்யுட்கு அங்கமாகிய வருணனைகள் கூறி அதற்குரிய தலைவனை நாட்டுகின்றூர், இத்துணையும் அவன் தோற்றத்துக்காரணங்கூறி அதற்கு முற்பிறப்பில் அன்னப்பார்ப்பைப்பிரித்த தீவினைவந்துருவனைப் பிரித்தலுங் கூறவேண்டுதலின் திருவிழுக்குற்றமை முற்கூறுகின்றூரென்றுணர்க. திருவிழுக்குறுதலாவது, கட்டியங்காரற்கு அரசளித்தலும் அமைச்சர் சொற்கேளாமையும். ௱௯௯.

Take மதியில் with திருவிழுக்குற்ற, &c.

200\. களிறனைமைச்சர்தம்முட்கட்டியங்காரனென்பான்
ஒளிறுவாட்டடக்கையானுக்குயிரெனவொழுகுநாளுட்
பிளிறுவார்முரசிற்சாற்றிப்பெருஞ்சிறப்பியற்றிவேந்தன்
வெளிறிலாக்கேள்வியானைவேறுகொண்டிருந்துசொன்னான்.

Dismissing all his wise counsellors, and retaining only his crown and his umbrella, he consigned the whole kingdom to one Kattiankaran.

இ—ள். களிறனன் அமைச்சரில் வெளிறிலாக் கேள்வியையுடைய நிமித்திகனைத்தனக்கு வேருகக்கொண்டு, கட்டியங்காரனென்கின்றவனைத் தனக்கு உயிரெனக்கொண்டு ஒழுகுநாளிலே, வேந்தன் அத்தடக்கையானுக்கு முடியுங்கொடையும் ஒழிந்தசிறப்புகளையுண்டாக்கி, அதனை உலகறிய முரசாற் சாற்றி, இருந்து இக்காரியத்தைக் கூறினனென்க.

மதச்செருக்கால் பாகன் தோட்டியை நீவுமாறுபோலக் காமக்களிப்பால் தன்னமைச்சர் கூற்றைக் கடத்தலேக்கிக் களிறனென்றூர். நிமித்திகன் கருமமே கூறுதலும், கட்டியங்காரன் அரசன் கருத்திற்கேற்ப ஒழுகுதலும் இரண்டற்குங்காரணம். "கோதிலன்" என்றும், "கரியாலை நெஞ்சினன்" என்றும், "கல்லாமந்திரி" என்றும் மேற்கூறலிற் கட்டியங்காரனை வெளிறிலாக் கேள்வியானெனலாகாது. இனி இகழ்ச்சிக்குறிப்பு என்பாருமுளர். உ௱.

கட்டியக்காரன், a panegyrist, a herald, here a proper name.

Telling him to manage all his affairs, as his devotion to his wife will not permit him to attend to business.

201. அசைவிலாப்புரவிவெள்ளத்தருஞ்சயன்குலத்துட்டோன்றி
வசையிலாள்வரத்தின்வந்தாள்வான்சுவையமிர்தமன்னாள்
விசையையைப்பிரிதலாற்றேன்வேந்தனீயாகிவையம்
இசைபடக்காத்தல்வேண்டுமிலங்குபூண்மார்பவென்றான்.

இ—ள். பூண்மார்பனே அமுதன்னாள், அருஞ்சயனது அசைவிலாக் குலத்துட்டோன்றி வசையின்றி முற்பவத்தில் எனது வேண்டுகோளாலே வந்தாள், அவளைப் பிரிதலாற்றேன், நீ இனி வேந்தனாய் உலகை இசையுண்டாகக்காப்பாயாக என்றானென்க.

அருஞ்சயன், தேவி பாட்டன். வசையிலாள், வினையெச்சமுற்று. வேண்டும் என்பது, உம்மீற்றான் வந்ததோரேவல் கண்ணியவியங்கோள்: "வாழ்தல்வேண்டு மிவண்வரைந்த வைகல்" என்றார் பிறரும். உ௱க.

To which he replied: Am I equal to this work? Can a dog bear the howdah of an elephant? But the king would not listen to him.

202. அண்ணலானுரைப்பக்கேட்டேயடுகளிற்றெருத்தினிட்ட
வண்ணப்பூந்தவிசுதன்னைஞமலிமேலிட்டதொக்கும்
தண்ணகன்ஞாலங்காத்தலெனக்கெனக்கமழுங்கண்ணி
மண்ணகம்வளருந்தோளான்மறுத்துநீமொழியலென்றான்.

இ—ள். கட்டியங்காரன் தான் கருதியிருந்ததனை அரசன்தானே கூறக்கேட்டு உளமகிழ்ந்து, ஞாலங்காவல் எனக்குத் தவிசை ஞமலிமேலிட்டதொக்குமென்று மறுப்ப, தோளான் என் காரியமாக நீ மறுத்து மொழியலென்றானென்க.

தவிசு, கழுத்துமெத்தை. மண்வளர்தற்குக் காரணமாகிய தோளான், அரசன். மண்ணெழுவனையதோள் பாடமாயில், மண்ணிய எழுவாம். "ஆவுதி மண்ணி" என்றாற்போல. தோளாயும் பாடம்.

வேறோருர்தி கூறாது ஞமலியைக் கூறினான் அவன் அயிராது (i.e., சந்தேகியாமல்) தருதற்கு. உ௱உ.

Then Kattiankaran said: O king, enjoy yourself with your beloved; I shall manage the affairs of the kingdom.

203. எழுதருபருதிமார்பனிற்றெனவிசைத்தலோடுந் [லோய்
தொழுதடிபணிந்துசொல்லுந்துன்னலர்த்தொலைத்தவே
கழிபெருங்காதலாள்கட்கழிநலம்பெறுகவையம்
பழிபடாவகையிற்காக்கும்படுநுகம்பூண்பலென்றான்.

இ—ள். அரசன் என்னிலை இற்றென இசைத்த அளவிலே கட்டியங்காரன் தொழுது வணங்கி; பகையென்று கூறப்படும் பகைவரையெல்லாங் கொன்றவேலோய் நீ நலம்பெறுக, யான் பழிபிறவாதபடி வையத்தைக் காக்கும் பெரியபாரத்தைப் பூண்பேனென்றானென்க.

ஒடு, உடனிகழ்ச்சி. கழிபெரும், ஒருபொருளிருசொற்பிரிவில்லாத. (Nannul. S. 39.) தன்னிலைவை அவன்காரியம்போற்கூறினான். உ௱ங.

204. வலம்புரிபொறித்தவண்கைமதவலிவிடுப்பவேகிக்
கலந்தனன்சேனைகாவல்கட்டியங்காரனென்ன
உலந்தருதோளினாய்நீயொருவன்மேற்கொற்றம்வைப்பின்
நிலந்திருநீங்குமென்றோர்நிமித்திகனெறியிற்சொன்னான்.

When the man retired, Nimittigan, one of the old councellors, told the king, that his committing the management of his affairs to one man would be detrimental.

இ—ள். மதவலி உபசாரமாகக் கையாலே காட்டிவிடுப்பக் கட்டியங்காரன்போய்ச் சேனையைக்காத்தலைக் கலந்தானென்று கூறக்கேட்டு நிமித்திகனென்னும் அமைச்சன்: தோளினாய் ஒருவன்மேல் உனது கொற்றம் வைப்பின் நிலமுந்திருவும் நின்னை நீங்கும், இதனை நீயே ஓர் என்று நீதியாற் கூறினானென்க.

பொறித்த, எனப் பிறவினையாற் கூறினார் அயன் படைத்தனனாக்கி. மதவலி, விசேடித்த உரிச்சொல். உலம் வளர்க்குந்தோள். உ௱௪.

உலந்தரு, rocky, hard. ஓர்=நினை, consider.

205. எனக்குயிரென்னப்பட்டானென்னலாற்பிறரையில்லான்
முனைத்திறமுருக்கிமுன்னேமொய்யமர்பலவும்வென்றான்
தனக்கியான்செய்வசெய்தேன்றான்செய்வசெய்கவொன்றும்
மனக்கினுமொழியவேண்டாவாழியரொழிகவென்றான்.

The king said: He is my life, he trusts to me, he has made many conquests for me, therefore I have done what I should do for him. Be not envious; let him do as he pleases.

இ—ள். உயிரெனப்பட்டான், பிறரையில்லான், வென்றான், அவன் தனக்கு யான் செய்வன செய்தேன், அவன்தான் எனக்குச் செய்வன செய்க; நீ சிறிதும் பொறாமை கூறவேண்டா, நீ உன் நிலையிலே வாழ்வாயாக, இனி இக்கூற்றினைத் தவிர்வாயாக என்றானென்க.

என்னையொழியப் பிறரையில்லாதான், இன்மை உடைமைக்கு மறுதலை. முன்னே, சிறப்பிக்கு முன்னே. வென்றான், எனவே நடத்துதற்குரியன் என்றான். நன்மையும் தீமையுங்கருதிச் செய்வ எனப்பன்மையாற் கூறினான். உ௱௫.

மனக்கினு, i.e., மனஇறுக்கத்தினை, envy. வாழிய, poetic expletive.

206. காவலகுறிப்பன்றேனுங்கருமமீதருளிக்கேண்மோ
நாவலர்சொற்கொண்டார்க்குநன்கலாத்தீங்குவாரா
பூவலர்கொடியனார்கட்போகமேகழுமிபேணும்
பாவமும்பழியுமுற்றார்பற்பலர்கேளிதென்றான்.

But, O king, you may listen or not, let me tell you that sensual pleasures end in sin and ruin; of which there are many examples.

இ—ள். காவலா, நாவலர் சொற்கொண்டார்க்குத் தீங்குவாரா ஆதலால் திருவுள்ளம் அன்றேனும் அருளிக்கேண்மோ, ஒருவன்மேற் கொற்றம் வையாதிருக்கின்ற இது கருமமென்றான்; அதற்கு உடம்படாமையின் நின்னையொழிய, கழுமி முன்னும் இம்மையிற் பழியும், மறுமையிற் பாவமும் உற்றார் மிகப்பலர், இதனைக்கேளென்றானென்க.

நாவலர், அமைச்சர். இது உலகியலாற் கூறினான். கமுமீ, மேலும் மயங்கி. மேற்கூறுவனவெல்லாம் போகத்தையே நோக்குதலின் இது என ஒருமையாற் கூறினார். ௨௱௬.

ஏவல, vocative. கேண்மோ, See Nannul, எழுத்தியல், 96.

207. பெரும்பெயர்ப்பிரமனென்னும்பிடினாற்பெரியநீரான்
அரும்பியமூலையினளுக்கனிமுகநான்குதோன்றி
விரும்பியாங்கவளையெய்தான்விண்ணகமிழந்ததன்றித்
திருந்தினாற்கின்றுகாறுஞ்சிறுசொல்லாய்நின்றதன்றே.

Brahma having coveted the person of Tilottama, obtained four faces, but obtained her not. He lost heaven, and this is a stigma upon him.

இ—ள். பிரமனென்னும் தவத்தாற் பெரிய நீரான் திலோத்தமைபொருட்டு நாலுமுகந் தோன்றும்படி விரும்பி அவ்விடத்து அவளைப்பெறுனாய், விண்ணகம் இழந்ததேயன்றிப் பின் தவத்தாற் பாவந்தீர்ந்த அவற்கு இன்றளவும் புறஞ்சொல்லாய் நின்றதல்லவோ என்றுனென்க.

பெயர், புகழ். ஏகாரம், வினா. முறைசெய்யாமையில் தன்னிலை யிழந்தான். தோற்றியும் பாடம். ௨௱௭.

திருந்தினன், Brahma, though he reformed, is not exempt from this stigma.

208. நீனிறவண்ணனன்றுநெடுந்துகில்கவர்ந்துதம்முன்
பானிறவண்ணனேனுக்கிற்பழியுடைத்தென்றுகண்டாய்
வேனிறத்தானைவேந்தேவிரிபுனற்றொழுனையாற்றுட்
கோனிறவளையினார்க்குக்குருந்தவனொசித்ததென்றான்.

Is it not a stigma on Vishnu, who, having stolen the cloths of the bathing women, hid himself on a tree, for fear of being discovered.

இ—ள். வேந்தே, மாயோன் பலதுகிலைக்கவர்ந்து, தம்முன்னாகிய பால் நிறவண்ணன் நோக்கிற் பழியுடைத்தென்றுகாண் தொழுனையாற்றிலே கோவியர்க்குக் குருந்தொசித்தது, இது இங்ஙனம் தீதென்றுனென்க.

வேனிறம், வேலினது விளக்கம். கோல், திரட்சி. ௨௱௮.

209. கைமலர்க்காந்தள்வேலிக்கணமலையரையன்மங்கை
மைமலர்க்கோதைபாகங்கொண்டதேமறுவதாகக்
கொய்மலர்க்கொன்றைமாலைக்குனிர்மதிக்கண்ணியாற்குப்
பெய்மலரலங்கன்மார்பபெரும்பழியாயிற்றன்றே.

Is it not a great stigma on Siva, that he made Parvati his wife a part of himself, [half of his body.]

இ—ள். இடப்பட்ட மாலைமார்பனே, மலையரையன்மனைவி மேனை பெற்ற கோதையைப் பாகத்தே வைத்ததே மறுவையுடையதொன்றாகக் கொன்றையாற்செய்த மாலையினையும் மதியாகிய கண்ணியையுமுடைய அரனுக்குப் பழியாயிற்றல்லவோ என்றுனென்க.

கைபோலுமலர். மலைகளுக்கரசன். மைமலர்க்கோதை, நீலமலராற்செய்தகோதை, இறைவி; ஆகுபெயர். மாலை, அடையாளப்பூ.

கண்ணி, குடும்பு. "கண்ணியுந்தாருமெண்ணினராண்டே" என்றார் பிறரும். ௨௱௯.

வரைமார், விபரீத உவமை. See தண்டியலங்காரம், Sutram 31. சாரல்வரை, ஒருவகை மலை, a range of mountains. A better illustration would be Siva's amours with the wives of the Rishis in the Dáruka forest.

Is it not a stigma on Buddha, who to gratify the lust of a jackass, transformed himself into a female ass,

210. காமமேகன்றிநின்றகழுதைகண்டருளினாலே
வாமனார்சென்றுகூடிவருந்தினீரென்றுவையத்(து)
ஏமஞ்சேர்மாலைபோலவிழித்திடப்பட்டதன்றே
காமவேற்றடக்கைவேந்தேநாமிறதெரியினென்றான்.

இ-ள். வேந்தே, நாம் இக்காமத்தைத் தெரியின் காமமே அடிபட்டு நின்ற ஆண்கழுதையைக்கண்டு அருளாலே புத்தனார் பெண்கழுதையாய்ச் சென்றுகூடி, இக்காமத்தாலே வருந்தினீரே என்ன, அது வையத்திலே ஏமத்த மாலைபோல இழித்திடப்பட்டதல்லவோ என்றானென்க.

காமமே, தேற்றம். என்று, என்ன. ஏமம், சுடுகாடு. ௨௱௰.

Can iniquity be hid? who can clear the stigma or remove the sin that images on the Pandavas, for having taken Draupadi for their wife.

211. படுபழிமறைக்கலாமோபஞ்சவரன்றுபெற்ற [ம்மி
வடுவுணாயாவர்போக்கப்பார்வாய்ப்பறையறைந்துது
இடுவதேயன்றிப்பின்னுமிழுக்குடைத்தம்மகாமம்
நடுவுநின்றுலகமோம்பனல்லதேபோலுமென்றான்.

இ-ள். கேட்பாயாக, காமத்தாற் பிறந்த பழியை மறைக்கலாமோ, பஞ்சவர் ஒருத்தியை மனைவியாக்கலிற் பெற்ற வடுவுணாயைப் போக்குவார் யார், அது தூற்றியிடுதலேயன்றி மறுமையிலும் நரகமுதலியவற்றைத் தருமாதலால் நடுவுநிலையிலே நின்று உலகமோம்புதலே நல்லதுபோலும் என்றானென்க.

போலும், ஒப்பில்போலி. ௨௱௰௧.

மறைக்கலாமே, another reading. See Nannul, 67. அம்ம, here, exclamation of horror. Polyandria is here referred to. Draupadi is said to be, "ஐவர்க்குங்கேதேவி அழியாபத்தினி," by Orthodox Hindus.

Then Rudradattan says: even Indra, possessed of perfect knowledge, takes the advice of his wise ministers; thou who art like Indra in knowledge, art bereft of all thy senses but one, to entail misery on thy wife.

212. ஆரறிவிகழ்தல்செல்வாவாயிரஞ்செங்கணானும் [ம்
கூரறிவுடையர்தார்சொற்பொருள்கொண்டுசெல்லு
பேரறிவுடைமையீயும்பிணையனட்கவலஞ்செய்யும்
ஓரறிவுடைமையென்றானுருத்திரதத்தனென்பான்.

இ-ள். அரசன் பிரித்திகன் கூற்றைக்கொள்ளாமை கண்டு அருகிருந்த உருத்திரதத்தன், இந்திரனும் அமைச்சர் சொற்பொருளைக் குறிக்கொண்டு நடக்கும், அவனைப்போல நீயும் அறிவுடையையாயினும் இப்பொழுது இவன் சொல்லைக்கொள்ளாமையிற் பிணையனட்கு அவலஞ்செய்யுமோ ரறிவுடையையாயினும் என்றானென்க. ௨௱௰௨.

உடைமை after பேரறிவு and ஓரறிவு are good examples of குறிப்புவினை, the first meaning, thou who didst possess, and the second, thou who art possessed, of perfect knowledge. ஆரறிவு is complete knowledge.

The king said: as the enjoyments of life and the period of existence are measured out by fate, so I need no further counsel.

213. அளந்துதாங்கொண்டுபோந்தவருந்தவமுடையநீரார்க்(கு)
அளந்தனபோகமெல்லாமவரவர்க்கற்றைநாளே
அளந்தனவாழுநாளுமதுவெனக்குரையலென்றான்
விளங்கொளிமணிகள்வேய்ந்துவிடுசுடரிமைக்கும்பூணான்.

இ-ள். பூணான் வரைந்து காத்த தவமுடையார்க்குக் கருவாய்ப்பதிக்கின்றபொழுதே போகமுமெல்லாம் அளந்தன, அவரவர்க்கு அப்பொழுதே வாழுநாளும் அளந்தன, அது எனக்குரையலென்றானென்க.

போகமும் என்னும் உம்மை கூறிற்றிலர், செஞ்சொலாய் முற்படக்கிளத்தலின். நிலத்திரு நீங்குமென நிமித்திகன் கூறிய செல்வநிலையாமையையும், உருத்திரதத்தன் கூறிய யாக்கை நிலையாமையையும், நிலையாமையென ஒருமையாக்கி அதுவென்று ஒருமையாற் கூறினான். உரையலென்றான் நிமித்திகனை நோக்கி, அவனுரியனாதலின். ௨௱௰௩.

Simhigan said: you may be angry at what I have said, I felt it my duty to tell you the laws prescribed in the code of morals; you can do as you list; I go.

214. மூரித்தேந்தாரினாய்நீமுனியினுமுறுதிநோக்கிப்
பாரித்தேன்றருமநன்னூல்வழக்கதுவாதல்கண்டே
வேரித்தேங்கோதைமாதர்விருந்துனக்காகவின்பம் [ன்.
பூரித்தேந்திளையகொங்கைபுணர்கயான்போவலென்று

இ-ள். தாரினாய், நூல் வழக்கிடத்துக்கூறல் அமைச்சர்க்கு இயல்பென்றமை கண்டு உறுதிநோக்கி இத்துணையும் இயல்பாகக்கூறினேன், இனி மாதர் கொங்கையை நினக்கு எப்பொழுதும் விருந்தாகக்கொண்டு புணர்க நீ, என்னை நீ முனியினும் நின்தவறுகாணாமல் துறவிடத்தே போவேன் என்றானென்க.

மூரி, பண்புமாத்திரம் உணர்த்தாது பெயராதலின் வேற்றுமைத்தொகை. முனியினும் என்பது எதிர்காலம் உணர்த்துமெச்சம்: உம்மை, ஐயம்: இளையகொங்கையென்று இளமை நிலையாமை கூறினான். அரசன் போவென்னாமல் தானே போவேனென்றல் நீதியன்மையில் துறவு உட்கோளாயிற்று. இதனால் "வெளிறிலாக்கேள்வியான்" என்றார். இத்துணையும் ஒருதொடர். ௨௱௰௪.

போவல் i.e., போவேன். See Nannul, 331. "அல, &c.

## வேறு.

Though thus advised, the infatuated king was still in the enjoyment of his wife: this being the result of the sins of his former birth.

215. இனமாமென்றுரைப்பினுமேதமென்னான்
முன்மாகியபான்மைமுளைத்தெழலாற்
புனைமாமலர்வேய்நறும்பூங்குழலாள்
மனமாநெறியோடியமன்னவனே.

இ-ள். குழலாள்மனமாமன்னவன் முற்பிறப்பில் தீவினை முளைத்துத் தோன்றுதலாலே, இது முற்கூறிய இனத்தேயாமென்று பின்னுங்கூறினும் தனக்கு வரும் ஏதம் என்னானாயினானென்க.

தினது வேட்கையும் தேவரது முற்கூறிய வேட்கைத்திறனிலே வைத்தென்னுமதோர் வேட்கையாம். குறலாள் மனக்கருத்தாய் நகருமன்னவன். நெறியோடிய மன்னவன், அரசநீதிகெட்ட மன்னவன். ௨௱௰௫.

பான்மை i.e., nature, property, here விதி, ஊழ், fate. See Kural. 38, Ch. பரியினுமாகாவாம் பாலல்ல உய்த்துச் சொரியினும் போகாதம.

216. கலையார்துகிலேந்தல்குலுங்கதிர்சூழ்
முலையார்தடமும்முனியாதுபடிந்(து)
உலையாத்திருவின்னமிர்துண்டொளிசேர்
மலையார்மணிமார்பன்மகிழ்ந்தனனே.

The king then quite unconcerned, passed his time only in conjugal intercourse.

இ-ள். மார்பன் அவன் அல்குலாகிய இன்பக்கடலினும் முலைத்தடத்தினும் வெருதே படிந்து, உண்டு வேறு மனக்கவற்சியின்றி மகிழ்ந்தான் என்க.

விசையையது கெடாத இளமைச்செல்வியை நுகர்ந்து. ஆர்தல், ஒத்தல். ௨௱௰௬.

217. விரிமாமணிமாலைவிளங்குமுடித்
திருமாமணிசிந்துதிளைப்பினராய்
எரிமாமணிமார்பனுமேந்திழையும்
அருமாமணிநாகரினாயினரே.

The constant inseparable enjoyment of husband and wife was like that of the inhabitants of the world of the Nagas.

இ-ள். மார்பனும் ஏந்திழையும் மார்பிற்கிடந்த விரிந்தமாமணி மாலையும், மாமணிபோலும் மயிர்முடியிற்கிடந்த தெய்வவுத்தியும் சிந்தும் திளைப்பினராய் நாகரைப்போல் ஒன்றாயினரென்க. ௨௱௰௭.

218. நறவார்ந்ததோர்நாளின்றாமரைவாய்
உறவீழ்ந்ததோரொண்மணிபோன்றுரவோன்
அறவாக்கியவின்பமமர்ந்தவிருள்
கறைவேற்கண்ணினாள்கனவுற்றனளே.

While they were thus in the enjoyment of one another, she had a dream one night.

இ-ள். அங்ஙனம் நாகரைப்போலமர்ந்த இருட்கண்ணே, தாமரைவாய் வீழ்ந்ததோர் முத்துப்போன்று உரவோனுற, அப்பொழுதே இன்பம் மறுதலையாக்கிய கனவைக் கறைவேற்கண்ணினாள் கண்டாளென்க.

தேனிறைதலும் மிக்கஇளமையுமாறாத தாமரையெனவே பத்மயோனியாம். உரவோனுற, பிள்ளையார் அவதரிக்க. அறவு, தொழிற்பெயர். ௨௱௰௮.

[illegible] is a pleonasm, மிகைச்சொல். See Nannul, Sutram 398 "ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழா."

## வேறு.

219. பஞ்சியடிப்பவளத்துவர்வாயவள்
துஞ்சமிடைக்கனமூன்றவைதோன்றலின்
அஞ்சிநடுங்கினளாயிழையாயிடை
வெஞ்சுடர்தோன்றிவிடிந்ததையன்றே.

*She had three dreams; She remembered them and was alarmed, and the day dawned.*

இ-ள். துவர்வாயினையுடையாள் துயிலிடைக் கண்டகனா மூன்று, அவை பின்பு மனத்தே தோன்றலின் அவள் அஞ்சி நடுங்கினள், அக்காலத்தே விடிந்ததென்க.

எனவே கடிதிற் பயக்குமாயிற்று. இவை பிற்பயக்குங் கனவாதலிற் பின்னும் நெஞ்சில் தோன்றிற்று. ௨௱௰௯.

220. பண்கெழுமெல்விரலாற்பணைத்தோளிதன்
கண்கழூஉச்செய்துகலைநலத்தாங்கி
விண்பொழிபூமழைவேல்கதிர்நேமிய
வண்புகழ்மாலடிவந்தனைசெய்தாள்.

*Having washed, and dressed, she repaired to the temple of Aruga and worshipped.*

இ-ள். பணைத்தோளி கண்கழுவி, தாங்கி, அக்கோயிலின் மால் அடியை வணங்கினளென்க.

பண், ஆகுபெயர். யாழொடுபயின்ற விரலும் ஆகுபெயர். கழூஉச்செய்து, நல்ல மருஉச்செய்தென்பதுபோல நின்றது. விண், ஆகுபெயர். தீவினையைவெல்லும் அறவாழி. "தெய்வம் அஞ்சல்" என்னுமெய்ப்பாட்டியற் சூத்திரம் தன் குலதெய்வத்தை வணங்குதற்கு விதியாமாறுணர்க. ௨௨௰.

மால், here, for Arugan. It is also the name of Vishnu.

221. இம்பரிலாநறும்பூவொடுசாந்துகொண்(டு)
எம்பெருமானடிக்கெய்துகென்றேற்றி
வெம்பரிமாநெடுந்தேர்மிகுதானைய
தம்பெருமானடிச்சார்ந்தனளன்றே.

*And then with flowers and sandal wood, she made obeisance to her husband.*

இ-ள். அவள் இவ்வுலகில் நிகரில்லாத பூவையும் சாந்தையுங்கொண்டு எம்பெருமானே, நின்னடிக்கு இவை பொருந்துவனவாகவென்று ஏற்றித் தன்கணவன் அடியை வணங்கினளென்க.

உலகம், அறிபொருண்மேற்று. [To the extent of one's knowledge.] ௨௨௧.

இல் understood before இலா, meaning இவ்வுலகத்தில் இல்லாத பூ.

222. நானமர்காதலிதன்னொடுமாவலி
வானவர்போன்மகிழ்வுற்றபின்வார்நறுந்
தேனெனப்பாலெனச்சில்லமிர்தூற்றெனக்
கானமர்கோதைகனாமொழிகின்றாள்.

*And secretly related to him the dream she had.*

இ—ள். மாவலி தான் மேவினகாதலி தன்னோடே மகிழ்வுற்றபின்பு அவள் தேன்முதலியன என்னும்படி கனாமொழியாளின்றாளென்க.

தேவர்நோக்கத்தால் நுகர்ந்தாற்போல இவனும் நோக்கத்தால் மகிழ்ச்சியுற்றபின். கனவு மூன்றிற்கும் தேன்முதலிய மூன்றும் உவமம். பிண்டி வீழ்ந்ததென்னும் மொழி இவள் கூறுதலின் இனிதாய்ப் பின் தீங்குவிளைத்தலில் தேனுவமம். "ஆர்ந்தோர் வாயிற்றேனும் புளிக்கும்" என்றார் பிறரும். எண்முத்தணிமாலையென்ற சொல்லாற் குலந்தூய்மை கூறுதலிற் பால் உவமை. இவன் ஆக்கத்திற்கு ஊறும் அமுது உவமை. இவன் ஆக்கம் அமுதுபோல் உயிர்களைக் காத்தலின். உஉஉ.

மாவலி, the powerful, here for Sachanthan.

223. தொத்தணிபிண்டிதொலைந்தறவீழ்ந்ததெண்
முத்தணிமாலைமுடிக்கிடனாக
ஒத்ததன்றாள்வழியேமுளையோங்குபு
வைத்ததுபோலவளர்ந்ததையன்றே.

I saw an Asoga tree in full blossom, its fruit was suddenly destroyed; and from the roots sprung up a crowned branch with eight garlands upon it.

இ—ள். ஒரு பிண்டி தான் அணிந்ததொத்துக்கள் ஒழுக்கம் கெட்டு, பின்பு தானும் நேராகவீழ்ந்து, அதன் வழியிலே ஒருமுளை அதனையொத்து எட்டுமாலையையுடையது ஒரு முடிக்கிருப்பிடனாக நட்டுவைத்தாற்போலே ஓங்காநின்று வளர்ந்ததென மொழிந்தாளென்க.

முத்தணிமாலை, முத்தையொத்தமாலை. அணி, "மின்னணி நுண்ணிடை" போல் உவம உருபு. வெள்ளியமாலையை, இது குலந்தூய்மை கூறிற்று. "வெண்டாமரை மலர்த்தடங்கள்போலுநங்குடி" என்றார். மேலும் முத்தமாலையெனின், "மேல்நறுமாலை எண்கோதைத்தோகை" என்றல் பொருந்தாது. வளர்ந்ததை, வினைத்திரிசொல். உரைத்ததை போல். மேலே துளும்பு நலத்தாரோடென்றலின் முத்தமாலையைக் கனவினிற்கண்டான், அது காரணம். இதனாற் சுற்றங்கெட்டபடியும் அரசன் கெட்டபடியுங் கூறினார். அது கதையிற் காண்க. உஉ௩.

224. வார்குழைவில்லிடமாமுடிதூக்குபு
கார்கெழுகுன்றனையான்கனவின்னியல்
பார்கெழுநூல்விதியாற்பயன்றான்றெரிந்(து)
ஏர்குழையாமலெடுத்துரைக்கின்றான்.

The king knowing the purport of the dream, keeps back the evil, and tells her what is good.

இ—ள். சலியாதவன் கனவின் இயல்பைக் கனாநூலின் விதியாலே பயனைத்தெரிந்து தான்பார்த்து முடிதூக்கி, அதில் நல்லவற்றையெடுத்து இவள் அழகுகெடாமற் கூறுகின்றானென்க.

அது அசோகுமுறிந்தது கூறாமல் மாலையையும் முடியையும் இரண்டு கனவாகப்பிரித்தது. உஉ௪.

ஏர், அழகு; குழையாமல், சோராமல், i.e., that her mind may not be distressed.

225. நன்முடிநின்மகனாநறுமாலைகள்
அன்னவனாலமரப்படுந்தேவியர்
நன்முளைநின்மகனாக்கமிதாமெனப்
பின்னதனாற்பயன்பேசலன்விட்டான்.

The crowned branch you saw is the son that will be born to you, and the eight garlands are his eight wives: the other parts he suppressed.

இ-ள். அவன் அவட்கு முடிநின்மகனாம், நறியபூமாலைகள் அந்நல்வினையுடையோனால் அமரப்படும் தேவியார், முளை நின்மகன் ஆக்கம் என மூன்றாக்கிக்கூறி, பின்பு இற்றதனாலுள்ள பயனைப் பேசலனாய் விட்டானென்க.

குருதிக்கோட்டுக் குஞ்சரநகரம்போல் முத்தமாலையை மாலையென்னும் பெயர்கருதி நறுமாலையென்றலாகாமையுணர்க. மாலையென்னும்பெயர் பொதுவாகலின். குஞ்சரநாகமென்பதும் ஒருபிரதி. ௨௨௫.

226. இற்றதனாற்பயனென்னெனவேந்திழை
உற்றதின்னேயிடையூறெனக்கென்றலும்
மற்றுரையாடலளாய்மணிமாநிலத்(து)
உற்றதோர்கோதையிற்பொற்றொடிசோர்ந்தாள்.

But what means the destruction of the tree? she asked. That betokens evil to me, he said; at which she fell senseless on the ground.

இ-ள். இற்றதனாற் பயனென்னென்று தேவிகேட்ப, ஏந்திழாய், எனக்கு இன்னே ஓரிடையூறுவந்தது காண் என்ற அளவிலே பின்பு உரையாடலளாய் மணிநிலத்தே தங்கியதோர் கோதைபோலே வீழ்ந்தாளென்க.

உற்றது என, இறந்தகாலத்தாற் கூறினான் தெளிவுபற்றி. “இல்லைகனா முந்துறுவினை” என்றலின். இன்னே, உதாசினம்போனின்றது. ௨௨௬.

உற்றது is past tense for future, for certainty. See Nannul Sutram, 384, விரைவினு மிகவினும், &c.

227. காவிகடந்தகண்ணீரொடுகாரிகை
ஆவிகடந்ததுபோன்றணிமாழ்கப்
பாவியெனாவிவருத்துதியோவெனத்
தேவியையாண்டகைசென்றுமெய்சார்ந்தான்.

Seeing her fall, with tears flowing from her eyes, he said: wilt thou destroy my life also? and he fell on her, and embraced her.

இ-ள். காரிகை கண்ணீருடனே ஆவிபோனாற்போல அழகுகெடுதலாலே ஆண்டகைசென்று பாவி, என்னுடைய ஆவியை வருத்துகின்றாயோ வெனக்கூறி அவளை மெய்யைச்சார்ந்தானென்க.

தேவியை, மெய்யை என்ற இரண்டுருபும், “தெள்விதென்றதனோன்” முடியும். ௨௨௭.

பாவி here is used as a term of sympathy, like the English word *poor*. தேவியை, மெய்யை, two objective cases governed by சேர்ந்தான். Nannul Sutram, 296.

228. தண்மலர்மார்புறவேதழீஇனானவள்
கண்மலர்த்தாள்கனவின்னியல்மெய்யெனும்
பெண்மையமோபெரிதேமடவாட்கெனப்
பண்ணுரையாற்பரவித்துயர்தீர்த்தான்.

She opened her eyes when he embraced her. He tells her: How foolish of you, so like a woman, to believe in a dream.

இ-ள். குளிர்ந்த அகன்ற மார்பிலே உறத்தழீஇயினன், அதனால் அவள் விழித்தாள், அப்பொழுது நினைக்குக் கனவின் தன்மையை மெய் யெனக் கருதும் பெண்தன்மை யெளிதாயிருந்ததெனக்கூறிய புனைந்து ரையாற்பரவித் துயர்தீர்த்தானென்க.

ஏகாரம், ஈற்றசை. ஓ, வியப்பு. உஉஅ.

பனைந்துரை, flattery. கண்மலர்ந்தாள், she opened her eyes. Here மலர்ந்தாள் is a single word, called பெயர்மொழி, as a compound word it would mean flower-like-feet. See Nannul, S. 260.

229. காதலன்காதலினாற்களித்தாய்மலர்க்
கோதையங்கொம்பனையார்தங்குழாந்தொழத்
தாதுகுதாமமணிந்தகில்விம்மிய
போதுகுமெல்லணைபூமகள்சேர்ந்தாள்.

Comforted by his speech, she arose, and retired.

இ-ள். பூமகள் காதலன் கொண்டாட்டத்தாலே களித்துச் சேடியர் தொழ, தாமஞ்சூழ்ந்து அகில்விம்மிய அணையிலேசேர்ந்தாள் என்க. உஉகூ.

பூமகள் means Lakschmi, here, by metaphor Vijaya. ஆய்மலர், i.e., ஆராய்ந்தெடுக்கப் பட்டமலர், chosen flowers.

230. பண்கனியப்பருகிப்பயனாடகங்
கண்கனியக்கவர்ந்துண்டுசின்னாள்செல
விண்கனியக்கவின்வித்தியவேற்கணி
மண்கனிப்பான்வளரத்தளர்கின்றாள்.

She then conceived, and began to feel its effects.

இ-ள். பண்ணைப்பழுக்கக் கேட்டும், நாடகங்களைக் கண்ணுருகமு கந்தும், நுகர்ந்தும், இருவர்க்கும் இங்ஙனஞ் சிலநாட்சென்ற அளவிலே வேற்கண்ணிபிள்ளை வளர்தலாலே தளராநின்றாளென்க.

விண், ஆகுபெயர். வித்திய, பரப்பிய. குழவிப்பருவத்தாலும், அரச நீதியாலும், வீடுபேற்றாலும் மண்ணையுருக்குமவன். உ௩௰.

வேறு.

231. கரும்பார்தோண்முத்தங்கழன்றுசெவ்வாய்விளர்த்
துக்கண்பசலைபூத்தகாமம்
விரும்பார்முலைக்கண்கரிந்துதிங்கள்வெண்கதிர்கள்
பெய்திருந்தபொற்செப்பேபோல்
அரும்பால்பரந்துநசைப்புங்கண்ணின்புலனாயிற்
றுய்ந்தவணிச்சமாலை
பெரும்பாரமாய்ப்பெரிதுனைந்துநற்சூற்சலஞ்சலம்
போனங்கைநலந்தொலைந்ததே.

Having conceived, her shoulders stooped, her lips were pale, her eyes were sallow [sunk,] the nipples blackened, milk was forming in the breasts, and her waist was perceivable.

இ-ள். வயாவிற்கு நங்கையுடைய தோண்மெலிந்து வாய்வெளுத்துக் கண்பசலைபூத்தன, பின்பு முதிர்கின்ற அளவிற்குக் காமத்தை விரும்பு

தற்குக்காரணமான மூலக்கனல் ஒருகிப்பால் பரந்தன, நசுப்பும் கண்ணினது நுகர்ச்சிப் பொருளாயிற்று, பின்பு முதிர்ந்த அளவிற்கு அனிச்சமாலை பாரமாய்ச் சலஞ்சலம்போல் நைந்து நலந்தொலைந்ததென்க.

உம்மை, சிறப்பு. ௨௱௩௧.

வேறு.

232. தாம்புடைநெடுங்கைவேழந்துற்றியவெள்ளிலேபோல்
தேம்புடையலங்கன்மார்பிற்றிருமகன்றமியனாக
ஓம்படையொன்றுஞ்செப்பாதிருமகளொளித்துநீங்க [ன்.
ஆம்புடைதெரிந்துவேந்தற்கறிவெனுமமைச்சன்சொன்ன

The king being forsaken of Lakshmi, became like the diseased [empty] wood-apple. Then came a minister to counsel him.

இ-ள். திருமகன் வெள்ளில்போலத் தமியனாக, திருமகள் நீங்க, பின்பு அவனுக்குத் தன்னறிவென்னும் அமைச்சன் ஆம்புடைதெரிந்து கூறினனென்க.

வேழம், வெள்ளிலுக்கு வருவதோர்நோய். "குருதிக்கோட்டுகுஞ்சர நாகம்போல" வேழத்திற்கு, கை அடை. தேம்புதலுடைய திருமகன். தேம்புதல், கெடுதல் விகாரம். "புட்டேம்புயன்மாறி" என்றார் பிறரும். தமியனாக, அரசவுரிமையை நீங்க. தான் சிறிதும் பரிகாரங்கூறாளாய், அவனை வஞ்சித்து அரசு வௌவுதலின் ஒளித்து நீங்கவென்றார். ஆம்புடை, பிள்ளையார் பிழைப்பதோர் கூறுபாடு. நாகமென்பதும் ஒரு பிரதி. ௨௱௩௨.

வெள்ளில், wood apple. Some suppose that the wood apple eaten by an elephant becomes empty, and is cast out with the shell as an entire fruit; but here the Commentator, doubting the fact, makes it a diseased fruit.

233. காதிவேன்மன்னர்தங்கள்கண்ணெனவைக்கப்பட்ட
நீதிமேற்சேறதேற்றாய்நெறியலாநெறியைச்சேர்ந்து
கோதியல்காமமென்னுமதுவினுட்குளித்தனான்றே
ஓதியபொறியற்றாயோரும்பொறிபுனைவியென்றான்.

As thou hast brought evil upon thyself by following evil courses, make now a machine [that will save thy wife]

இ-ள். அவ்வறிவென்னும் அமைச்சன், வேல்மன்னர் ஊனாகிய கண்ணைக் கண்ணென்பாருடனே காதி, தம்முடைய கண்ணென்று துணிந்து வைத்த நீதியிற் செல்லாயாய்த் தீநெறியைச்சேர்ந்து காமமென்னுங் கள்ளிலே அழுந்தின அன்றே நல்வினையற்றாய், ஆதலால் இனியோரெந்திரத்தைப் புனைவியென்றானென்க. ௨௱௩௩.

சேறதேற்றாய் = சேறல் தேற்றாய், i.e., not knowing to go. There is a play upon the word பொறி, signifying knowledge, and machinery.

வேறு.

234. அந்தரத்தார்மயனேயெனவையுறுந்
தந்திரத்தாற்றமநூல்கரைகண்டவன்
வெந்திறலான்பெருந்தச்சனைக்கூவியோர்
எந்திரவூர்தியியற்றுமினென்றான்.

The king sent for a skilful carpenter, and ordered him to make a machine.

இ—ள். அரசன் தொழிலோடே நூலைக் கரைகண்டவனாகிய தச்சனைக்கூவி, எந்திரமானதோர் ஊர்தியை இயற்றென்றானென்க.

தொழிலால் மயனேயெனத்துணிந்து வடிவால் ஐயமுறுந்தச்சன். இயற்றுமின் ஒருமைப்பன்மை மயக்கம். ஊர்தி, ஏறப்படுவது. ௨௩௪.

மயன், the name of the celestial carpenter. கூவி for கூப்பிட்டு.

235. பல்கிழியும்பயினுந்துகினூலொடு
நல்லரக்குமெழுகுநலஞ்சான்றன
அல்லனவும்மமைத்தாங்கெழுநாளினுட்
செல்வதோர்மாமயில்செய்தனனன்றே.

He made a machine of shreds, sealing wax, &c., in seven days, in the form of a Peacock.

இ—ள். நலஞ்சான்றனவாகிய கிழிமுதலியனவற்றையும் ஒழிந்தனவற்றையுங்கூட்டி, அவன் கூறியபடியே செல்வதோர் மயிலை ஏழுநாளிலே செய்தானென்க.

கிழி, சீலை. பயின், பற்றுதற்குரியன. துகினூல், வெள்ளியநூல். ௨௩௫.

உம் understood after சான்றன. The machine was similar to the wooden horse introduced into Troy by the Greeks, and the travelling chair used by the daughter of the Rajah of Chittore, in Indian History. விமானம், is a self-moving car, vehicle.

236. பீலிநன்மாமயிலும்பிறிதாக்கிய
கோலநன்மாமயிலுங்கொடுசென்றவன்
ஞாலமெலாமுடையானடிகைதொழு(து)
ஆலுமிம்மஞ்ஞையறிந்தருளென்றான்.

And taking it to the king, together with a living, flying, peacock, asked him to distinguish the one from the other.

இ—ள். மயிலையும் பண்ணின மயிலையுங்கொண்டு சென்றவன் அரசனை வணங்கி, இம்மயில்களில் ஆலுமஞ்ஞையை அறிந்தருள் என்றானென்க.

பீலி, இரண்டற்கும் ஏற்றுக. ௨௩௬.

பீலி, மயிலின்றோகை. The Peacock's tail.

237. நன்னெறிநூனயந்தானன்றுநன்றிது
கொன்னெறியிற்பெரியாயிதுகொள்கென
மின்னெறிபல்கலமேதகப்பெய்ததோர்
பொன்னறைதான்கொடுத்தான்புகழ்வெய்யோன்.

The king admiring it said: This is very good; and gave him rich presents.

இ—ள். வெய்யோன் இம்மயில் நூலினுடைய நீதி தானாயிருந்தது மிகநன்றெனக்கூறி, தான் கொற்றொழிலிற் பெரியாய், இது கொள்க என்று பொன்னறையைக் கொடுத்தானென்க.

இன்னூலின் நீதியென்றுமாம், [according to the plan given, or as it should be done.] மின்னெறி, மின்னைக்கெடுக்கும். ௨௩௭.

238. ஆடியன்மாமயிலூர்தியையவ்வழி
மாடமுங்காவுமடுத்தொர்சின்னாள்செலப்
பாடலின்மென்மேற்பயப்பயத்தான்றுரந்(து)
ஓடமுறுக்கியுணர்த்தவுணர்ந்தாள்.

The king brought the machine to his spouse, and let her see its movements.

இ–ள். ஆடுதலையன்ற மயிலாகிய ஊர்தியைத் தேவி தான்பாட்டுப்போலே பையப்பைய மேன்மேல் துரந்து, மாடத்திலுங் காவிலுமடுத்துச் சின்னாட்சென்ற அளவிலே ஒருநாள் அங்ஙனங் கற்பித்தவன் விசையுடன் ஓடும்படி முறுக்கி உணர்த்த, அவள் அதுவும் உணர்ந்தாளென்க. ௨௱௮.

ஊர்தி, vehicle. பாடலின் = தன்பாட்டுப்போல, according to her own pleasure.

## வேறு.

239. பண்டவழ்விரலிற்பாவைபொறிவலந்திரிப்பப்பொங்கி
விண்டவழ்மேகம்போழ்ந்துவிசும்பிடைப்பறக்கும்வெய்ய
புண்டவழ்வேற்கட்பாவைபொறியிடந்திரிப்பத்தோகை
கண்டவர்மருளவீழ்ந்துகால்குவித்திருக்குமன்றே.

When the right spring was turned the machine ascended; and when the left was turned it descended, and rested.

இ–ள். கண்டவர் மருளும்படி பாவை விரலாலே பொறியை வலத்தே திரிப்ப, அது பொங்கி, போழ்ந்து, பறக்கும், அவள் அதனை இடத்தே திரிப்ப, அது வீழ்ந்து காலைக்குவித்திருக்குமென்க.

பகைவர்க்குப்புண் செல்லுதற்குக் காரணமான வேல். கால் பரப்பில் பொறிகெடும். ௨௱௯.

பண்டவழ் விரல் = பண் + தவழ் + விரல். i.e., tune-playing finger, or finger playing a tune.

## வேறு.

240. காதிவேல்வலகட்டியங்காரனும்
நீதியானிலங்கொண்டபினீதிநூல்
ஓதினார்தமைவேறுகொண்டோதினான்
கோதுசெய்குணக்கோதினுட்கோதரூன்.

The ungrateful minister, with a view of usurping the kingdom, said in an assembly of courtiers:

இ–ள். கோதருனாகிய கட்டியங்காரனும் அரசன் கொடுப்ப நிலத்தை அடிப்படுத்தியபின்பு, தருமநூலோதினார் எல்லாரையும் தனக்கு மாறாகக் கொண்டு ஒருமொழி கூறினானென்க.

பொருது, வேலை, வல்ல. உம்மை, இழிவுச்சிறப்பு. கோது செய்குணக்கோது, நூல்கள் பயனின்றாகக்கூறிய குணங்களிற் கோதாவது செய்நன்றிக்கேடு. உட்கோதருன், அதிலே நிற்கின்ற பயனிலாதோன். இனிப் பயனின்மை செய்கின்ற குணத்துக்கோதின தீக்குணங்கட்குள்ளாகிய செய்நன்றிக்கேடு தன்னை ஒப்பானென்றுமாம். ௨௱௰.

241. மன்னவன்பகையாயதோர்மாதெய்வம்
என்னைவந்திடங்கொண்டதிராப்பகல்
துன்னிநின்றுசெகுத்திடுநீயெனும்
என்னையான்செய்வகூறுமினென்னவே.

A demon opposed to the king constantly comes and tells me to destroy him. Tell me then what I am to do.

இ—ள். மன்னவன் பகையாயதோர் தெய்வம், என்னை இருப்பிடமாகக் கொண்டுவந்த தெய்வம், இரவும் பகலும் நெருங்கிநின்று, நீ செருத்திடென்று நிற்கும், இதற்கு யான் செய்யத்தகுவன யாவை? அவற்றை நீர் கூறுவீராகவென்று கூறினனென்க.

என்ன என்பதனை "உட்கினரா" என மேல்வருகின்றதனோடு முடிக்க. உசக.

242. அருமைமாமணிநாகமழுங்கவோர்
உருமுவீழ்ந்தெனவுட்கினராவவன்
கருமங்காழ்த்தமைகண்டவர்தம்முளான்
தருமதத்தனென்பானிதுசாற்றினன்.

The assembly were thunderstruck at this saying. Then Dharmadattan, knowing the Traitor's object, said:

இ—ள். மணி அழுங்கும்படி நாகத்தின்மேலே இடி வீழ்ந்தாற்போலே அம்மொழியைக்கேட்டு அமைச்சர் உட்கினராக, அவர்களிலுள்ளானாகிய தருமதத்தனென்கின்றவன் கண்டு இதனைப்பலர் அறியக்கூறினனென்க.

மணி அரசனுக்கும், நாகம் அமைச்சர்க்கும், செருத்திடு என்ற சொல் இடிக்கும் உவமை. காழ்த்தமை, தொல்லத்துணிந்தமை. ஆயவனென்ற பாடத்திற்கு அரசனலாயவனென்க. உசஉ.

243. தவளைக்கிண்கிணித்தாமரைச்சீறடிக்
குவளையேயளவுள்ளகொழுங்கணாள்
அவளையேயமிர்தாகவவ்வண்ணலும்
உவளகந்தனதாகவொடுங்கினன்.

The king, simply from the love of woman, lives in seclusion.

இ—ள். அவ்வண்ணலும் சீறடியையுடைய கண்ணளாகிய அவளையே அமுதாகக்கொண்டு, அந்தப்புரமொன்றுமே தனக்குரித்தாக, ஒழிந்தவற்றின் வேட்கையின்றிச் சுருங்கினன் என்றுனென்க.

ஏகாரமிரண்டும் தேற்றம். உம்மை, சிறப்பு. உவளகம், ஒருபக்கமுமாம். உசங.

244. விண்ணினோடமிர்தம்விலைச்செல்வது
பெண்ணினின்பம்பெரிதெனத்தாழ்ந்தவன்
எண்ணமின்றியிராங்கியிவ்வையகந்
தண்ணந்தாமரையாளொடுதாழ்ந்ததே.

And since the king is so, and his counsellor has retired, the kingdom is in your power, you can quietly govern it.

இ—ள். விண்ணும் அமிர்தும் விலைபெறுவதொன்றாயிருக்கும் பெண்மையிலும் நினது அரசினதின்பம் பெரிதுகாண், என்று காரியங்கூறுதலிற்றாழ்ந்த அக்கிமித்திகன் செல்வம் வேண்டுதலின்றித் துறவிலே வீழ்தலாலே, இவ்வையகம் திருமகளுடனேகூடி நின்னிடத்தே தங்கிற்று, இனி நினக்கு வேறோர் மனக்கவற்சி இன்றென்றுனென்க.

நின்னின்பம் என்றது அரசனைநோக்கி நிமித்திகன்கூறியது. பெண்ணினின்பமெனப் பெரிதாழ்ந்தலனென்பதும் பாடம். உசச.

If we act unfaithfully to him who confides in us, we shall be destroyed, &c. If we are faithful then are we and others safe.

245. தன்னையாக்கியதார்ப்பொலிவேந்தனைப்
பின்னைவெளவிற்பிறழ்ந்திடும்பூமகள்
அன்னவன்வழிச்செல்லினிம்மண்மிசைப்
பின்னைத்தங்குலம்பேர்க்குநரில்லையே.

இ-ள். தன்னையாக்கிய வேந்தனைப் பின்னைக் கொல்வானாயின் தன் குலமுந் திருவும் மண்மிசையினின்றும் பிறழும், அவன் வழியே ஒழுகின் தன் குலத்தையுஞ் செல்வத்தையும் மண்மிசையினின்றும் பெயர்ப்பாரில்லை என்றானென்க.

பூமகள், திரு. இது உலகியல்பாற் கூறினான். தார்கெழுவேந்தனும் பாடம். உ௪௫.

The populace say that kings and gods are equal; But I say that kings are superior.

246. திலகநீண்முடித்தேவரும்வேந்தரும்
உலகமாந்தர்களொப்பவென்றோதுப
குலவுதார்மன்னர்க்கியானிதுகூறுவன்
பலவுமிக்கனர்தேவரிற்பார்த்திபர்.

இ-ள். முடிகளுக்கு மேலாய் முடியையுடைய தேவரில் அரசர் பல குணங்களாலும் மிக்காராயினும் உலகிலுள்ளார் தேவரும் வேந்தரும் ஒப்பரென்று கூறுவர், அவர் அறியார், யான் மன்னர்க்குள்ளதோர் விசேடம் கூறுவேன், அதனைக்கேள் என்றானென்க.

கூறலனென்று பாடமாயின் ஒப்புக் கூறேன் என்றானென்க. இது முதல் "மன்னவன் பகையாயதோர் மாதெய்வம்" என்றதனைக் குறித்துக் கூறுகின்றான். உ௪௬.

திலக நீண்முடி. i.e., the crown of crowns, may qualify both தேவர் and வேந்தர்.

Kings immediately reward or punish, but the gods do not reward or punish immediately those who either praise or abuse them.

247. அருளுமேலரசாக்குமன்காயுமேல்
வெருளச்சுட்டிடும்வேந்தெனுமாதெய்வம்
மருளிமற்றவைவாழ்த்தினும்வையினும்
அருளியாக்கலழித்தலங்காபவோ.

இ-ள். வேந்தெனும் தெய்வம் அருளுமேல் அரசாக்கும்; காயுமேற் சுட்டிடும்; மற்றும் மயக்கத்தையுடைய அத்தெய்வங்கள் தம்மை ஒருவன் வாழ்த்துவனாயின் அவனை அருளியாக்கலும், தம்மை ஒருவன் வைவனாயின் அவனை அருளாது அழித்தலும் அவர்கட்கு அப்பொழுதே யாகாவே என்றானென்க.

மன், மிகுதி. மருளி, பகுதிப்பொருள் விகுதி. மற்று, வினைமாற்று. தாமினிநோயுமென்றாற்போல உம்மைமாறுக. ஆக்கல், அழித்தல், காலந் தோன்றாத வினைப்பெயர். ஆப, எதிர்காலத்திற்குரிய பகரத்தோடு அன் பெறாதுவந்த அகரவீற்றுப்பலவறிசொல். ஓகாரம், எதிர்மறை. உ௪௭.

248. உறங்குமாயினுமன்னவன்றன்னொளி
கறங்குதெண்டிரைவையகங்காக்குமால்
இறங்குகண்ணிமையார்விழித்தேயிருந்(து)
அறங்கள்வௌவவதன்புறங்காக்கலார்.

Though a king may sleep, his authority upholds the world; but though the gods are always awake, they allow their temples to be robbed.

இ—ள். மன்னவன் உறங்குமாயினும் அவனொளி உலகைக் காவாநிற்கும், தேவர் விழித்தேயிருந்தும் தம்மை நோக்கி உலகத்தார் செய்கின்ற அறங்களை அசுரர் வௌவ அதனைப் பரிகரிக்கமாட்டார் என்றுனென்க.

இறங்கு, தெய்வத்தன்மை குலையும். தேவர் என்றது மேலே எல்லை மூவைந்து நாள்களுளவென இமைக்குங் கண்ணும் என்பராதலின். கண்ணிமையார்; தேவர்க்கோர் பெயர். ௨௪௮.

249. யாவராயினுநால்வரைப்பின்னிடில்
தேவரென்பதுதேறுமிவ்வையகங்
காவன்மன்னவர்க்காய்வனசிந்தியார்
நாவினுமுரையார்நவையஞ்சுவார்.

Whoever he is, if but four [few] follow him, he is considered a god; If so, who will dare to think in their minds or to utter with their mouths, what the king dislikes.

இ—ள். இழிந்தோராயினும் அவர் பின்னே நால்வரைத் திரியச்செல்லுவராயின், அவரைப்போலவரைத் தெய்வமென்னும் தன்மையை வையகம் தேறுமாதலான், மன்னவர்களான் வரும் நவையை அஞ்சுவார் அவரைக் காய்வனவற்றை உவமை கூறுமிடத்துங்கூறார், நினைப்பதுஞ் செய்யார் என்றுனென்க. ௨௪௯.

250. தீண்டினார்தம்மைத்தீச்சுடுமன்னர்தீ
ஈண்டுதங்கிளையோடுமெரித்திடும்
வேண்டினின்னமிர்துநஞ்சுமாதலான்
மாண்டதன்றுநின்வாய்மொழித்தெய்வமே.

Fire will only hurt those that touch it, but kings hurt the whole root and branch of him who offends them. A king is ambrosia to his friends, poison to his foes.

இ—ள். தீ தீண்டினாரையே சுடும், அதுபோலன்றி மன்னருடைய கோபம் தீங்குசெய்தவர்களைத் திரண்ட சுற்றத்தோடுஞ் சுடும், அவரது அருள் அவரை விரும்புவாருண்டாயின் அமுதுபோல் உறுதிபயக்கும், அவரது செற்றம் அவரை விரும்பாதார்க்கு நஞ்சுபோற் கரந்துநின்று கொல்லும், அங்ஙனமாதலால் நின்தெய்வம் என் தெய்வம்போல் மாண்டதன்று என்றுனென்க.

இதனாற் பகைவரையும், நட்டாரையும், தீநட்பையும் கூறினர். ௨௫௰.

வேண்டாவிடில் is understood before நஞ்சு. மாண்டதன்று, மாட்சிமைப்பட்டதல்ல, not so excellent is your god, i.e., the demon you referred to.

251. வேலின்மன்னனைவிண்ணகமேற்றிநிஞ்
ஞாலமாள்வதுநன்றெனக்கென்றியேல்
வாலிதன்றெனக்கூறினன்வாண்மகற்(கு)
ஓலைவைத்தனவொண்டிறலாற்றலான்.

It is unbecoming in you to say that it is right for you to displace the king, and for yourself to rule the earth.

இ—ள். வான்வழியாலே ஏமனுக்கு "வல்லவனுயின் வந்து பார்க்க" வென்று ஓலை வைத்தாற்போன்ற திறலை நடத்துதலுடைய தருமத்தன், மன்னனை வேலினல் விண்ணேற்றி இவ்வுலகை ஆள்வது எனக்கு நன்றென்றியேல் அது நினக்கு நன்றன்று என்றுனென்க.

இவன் முன்னின்று கூறிய அருமைநோக்கி ஆற்றலானென்றார். ௨௫௧.

வாலிதன்று, not holy, not good.

## வேறு.

252. குழற்சிகைக்கோதைநூட் டிக்கொண்டவனிருப்பமற்றோர் (An adulterous woman, one that forsakes his virtuous wife, and one that is disobedient to the king, the teacher, mother, father, and elder brother, are all worthy of hell.)
நிழற்றிகழ்வேலினனைநேடியநெடுங்கணளும் [(து)
பிழைப்பிலாட்புறந்தந்தானுங்குரவரைப்பேணல்செய்யா
இழுக்கினரிவர்கள் கண்டாயிடும்பைநோய்க்கிளைகளா
வார்.

இ—ள். இடும்பை நோய்களுக்கு இளைகளாவார் தன் கணவனையொழிய வேறொருவனைத் தேடியவளும், தன்னைத்தப்பாத மனைவியை மனத்தாற்கொள்ளாது விட்டவனும், குரவரைப்பேணுதல் செய்யாதே தப்பினருமாகிய இவர்கள் காண் என்றுனென்க.

"செலவினும் வரவினும்" என்னும் பொதுச்சூத்திரத்தான் முடிக்க. குரவர், அரசன், உவாத்தியாயன், தாய், தந்தை, தம்முன் என ஐவர். ௨௫௨.

253. நட்பிடைக்குய்யம்வைத்தான் பிறர்மனைநலத்தைச்சேர்க் (He that deceives a friend, he that cohabits with another's wife, he that ruins and forsakes a virgin, he who kills life and eats the flesh, and he who is a traitorous minister, will in this life become a leper, and in the next sink deep into hell.)
கட்டழற்காமத்தீயாற்கன்னியைக்கலக்கினனும் [தான்
அட்டுயிருடலந்தின்றான் அமைச்சனுயரசுகொன்றான்
குட்டநோய்நரகந்தன்னுட்குளிப்பவரிவர்கள்கண்
டாய்.

இ—ள். நட்பிடத்து வஞ்சித்தவனும், பிறர் மனையாளைச் சேர்ந்தவனும், மிக்கஅழல்போலுங் காமத்தீயினற் கன்னியை அத்தன்மை குலைத்து வரையாதவனும், உயிரைஅட்டு உடலைத்தின்றவனும், கொன்றானும் ஆகிய இவர்கள் காண் இம்மையிற் குட்டநோயினும், மறுமையில் நரகத்தினும் அழுந்துவர் என்றுனென்க.

கலக்குதல், கைக்கிளைவகையாகிய இராக்கதமென்னும் மணத்தில் தப்பியதாம். ௨௫௩.

254. பிறையதுவளரத்தானும்வளர்ந்துடன்பெருகிப்பின்னன் (When the moon increases or decreases, its spots also increase or decrease; so it is with the king and his minis ters [subjects.])
குறைபடுமதியந்தேயக்குறுமுயறேய்வதேபோல்
இறைவனுத்தன்னையாக்கியவன்வழியொழுகினென்றும்
நிறைமதியிருளைப்போழுநெடும்புகழ்விளக்குமென்றான்.

இ—ள். பிறைவளர அது தானும் உடனேவளர்ந்து பெருத்துப் பின்பு குறைதலுண்டான மதி தேய முயலுந் தேயுமாறுபோல, தன்னை இறைவ

ளுசு ஆக்கினவன். வழியிலே அவனுநிம்பெருகி அவனுயிர் தேய்ந் தொழுகுவனுயின், அவ்வொழுக்கம் இருளையோட்டும் மதிபோலப் பழியையோட்டும், புகழை விளக்கும் என்றுனென்க. ௨௫௪.

முயல், a hare, the spots in the moon resembling the form of a hare, hence the moon is called शशिन्, சசி. The women say that an old woman is seated in the moon spinning cotton.

255. கோளனிலைதிரிந்துநாழிகுறைபடப்பகல்கண்மிஞ்சி
நீணிலமாரியின்றிவிளைவஃகிப்பசியினீடிப்
பூண்முலைமகளிர்பொற்பிற்கற்பழிந்தறங்கண்மாறி
ஆணையிவ்வுலகுகேடாமரசுகோல்கோடினென்று
ன்.

If the king be unjust the planets will be changed, days will be lengthened and nights shortened, rain will fail, cultivation will be destroyed, famine will ensue, wicked women will increase, virtue will degenerate, and the king's authority will cease.

இ-ள். அரசன் தான் நடத்துமுறைமையில் பிறழ்வனுயின் இவ்வுலகு கோள் நிற்குநிலைகுலைந்து, இராநாழிகைகுறைய, பகற்பொழுதுகள்மிக்கு, மாரியின்றுய், நிலம்விளைவு சுருங்கி, பசிமிக்கு, மகளிர் கற்பழிந்து, அறச்சாலைகளுமின்றிக் கெடும் அரசனுணையே என்றுனென்க.

கட்டியங்காரன் கொலைகுறித்ததுவும், அரசன் இவற்கு அரசளித்ததுவும் உட்கொண்டு இரண்டினையும் பொதுவாகக் கூறினன். எச்சங்கள், செய்யப்படுபொருளாம். ௨௫௫.

கோள், planets. கஎழ் for காழ்மை.

256. தார்ப்பொலிதருமதத்தன்றக்கவாறுரைப்பக்குன்றில்
கார்த்திகைவிளக்கிட்டன்னகடிகமழ்குவளைப்பைந்தார்
போர்த்தனனகலமெல்லாம்பொன்னெனவியர்த்துப்பொங்கி
நீர்க்கடன்மகரப்பேழ்வாய்மதனன்மற்றிதனைச்சொன்னுன்.

Hearing this, the Traitor, burning with anger, answered thus:

இ-ள். வாகைத்தாரால்பொலிந்த தருமதத்தன் அமைச்சர்க்கும் அரசர்க்குந்தக்க படியைக்கூறினுனுக; மதனன் தன்னகலமெல்லாங் கடுகவெயர்த்துப் பொங்கி இதனைக்கூறினுனென்க.

குன்றிலே கார்த்திகை விளக்கிட்டன்ன குவளைத்தார்போர்த்த அகலம். மகரவாய்போலும் பெரியவாய். ௨௫௬.

257. தோளினல்வலியராகித்தொக்கவர்தலைகள்பாற
வாளினற்பேசினல்லால்வாயினற்பேசநேற்றேன்
காளமேகங்கள்சொல்லிக்கருனையாற்குழைக்குங்கைகள்
வாளமர்நீந்தும்போழ்தவழுவழுத்தொழியுமென்றுன்.

I will show my power with my sword, not with my speech; your weak hands will not befriend you in the day of battle.

இ-ள். பகைவரது தலைசிதற வாளினல் வஞ்சினமுடித்தலல்லது வாயினற்பேசுதலை அறியேன், தாங்கள் காளமேகங்கள்போல் இங்ஙனமுழங்கக் கூறுதலாலே கருணையோடே சோற்றைத் திரட்டுங்கைகள் அமர்க்கடலை நீந்தும்போழ்து மிகவேர்த்து வழுவழுக்குமென்று கூறினுனென்க.

தேற்றேன், "தேற்ருய்பெருமநின் பொய்யே" என்ருற்போல நின்றது. இக்கவி முன்னிலைப்புறமொழி. உருஎ.

—— வழுவமைதி. Nannul S. 396.

258. நன்முத்தமேற்றியாங்குமெய்யெலாம்வியர்த்துகொய்தின
வண்முத்தநிரைகொணெற்றிவார்முரிபுருவமாக்கிக்
கண்ணெரிதவழவண்கைமணிகருகட்கமெற்று
வெண்ணகைவெகுண்டுநக்குக்கட்டியங்காரன்சொன்னன்.

*And, moreover, with great drops of perspiration, and with eyes flashing fire, he laughed with rage and said:*

இ—ள். கட்டியங்காரன் மெய்யெலா முத்தழுத்தினுற்போலக் கடிதின் வியர்த்த வியர்ப்பு நிரைத்த நெற்றியிலே புருவமாக்கிக் கண் எரி தவழாநிற்கக் கடகத்தையுடைத்து வெடிசிரிப்பாக வெகுண்டு சிரித்து ஒரு வார்த்தை கூறினனென்க.

நெடியபுருவம். உருஅ.

259. என்னலாற்பிறர்கள்யாரேயினையனபொறுக்குநீரார்
உன்னலாற்பிறர்கள்யாரேயுற்றவற்குறுதசூழ்வார்
மன்னன்போய்த்துறக்கமாண்டுவானவர்க்கிறைவனுகப்
பொன்னெலாம்விளைந்துபூமிபொலியயான்காப்பலென்ற[ன்.

*Who but myself could bear what you have said, and who like you would do evil to his friends; let the king die and go and reign in heaven, I will reign on earth.*

இ—ள். நீ கூறிய கடியசொற்களைப் பொறுப்பார் என்னையொழிய வேறியார்? அதற்கியானே; தன்னைச் செறிந்தவற்கு உறுதகாரியங்களைச் சூழ்வார் உன்னையொழிய வேறியார்? அதற்கு நீயே; இனியமைக, வேந்தன் தேவர்க்கிறைவனுக, யான் பூமியெல்லாம் விளைந்து பொன்பொலியக் காப்பேன் என்றனென்க.

உற்றவன், சச்சந்தன். உறுத, பொன்னுலகாளாமல் மண்ணுலகாளுதல். இனி உற்றவன், கட்டியங்காரனுமாம். விளைந்தபூமியும் பாடம். உருகூ.

துறக்கம், Paradise of the inferior gods. The Traitor wishes the king in heaven!

260. விளைகபொலிகவஃதேயுரைத்திலம்வெகுளவேண்டா
களைகமெழுகமின்னேகாவலற்கூற்றங்கொல்லும்
வளைகயமடந்தைகொல்லுந்தான்செய்தபிழைப்புக்கொல்லும்
அளவறுநிதியங்கொல்லுமருள்கொல்லுமமைகவென்றன்.

*To which the other replied: he prosperous, increase. We shall no more interfere; we depart. Death will inevitably come.*

இ—ள். நீ கூறியவாறே பூமியெல்லாம் விளைக, பொன்னுலகம் பொலிக; நினது நினைவே கூறிற்றிலம், அவற்றிற்கு நீ வெகுளவேண்டாம்; இப்பொழுதே களைவேமாக எழுவேம்; இதற்குக் காரணம் யாதெனில் காவலனைக் கொல்லுங் கூற்றம் நிலமடந்தையாய்க் கொல்லும், பிழைப்பாய்க் கொல்லும், நிதியாய்க் கொல்லும், அருளாய்க் கொல்லும் ஆதலால் அவனுக்கு அக்கொலை அமைவதாக என்றனென்க.

இனி அலைதேலுனக்கிலம் பாடமாயின் நின்கருத்து அதுவாயின் வேறு கூறுகின்றிலேமென்க: இனிக்காவலனாகிய கூற்றமுங் கயமடந்தைமுத வியனவுங் கட்டியங்காரனைக் கொல்லுமென்றுட்கொண்டு, இனி வார்த்தை அமைகவென்றான் என்பாருமுளர். விளைக பொலிக, ஒரு வழக்கு என்பாருமுளர். [synonymous.] உகூ௰.

கிளைகம், எழுகம், we shall go, we shall rise, i.e. we shall arise and go. கூற்று, death, Yama, the god of death.

261\. நிலத்தலைத்திருவனுடனீப்பருங்காதல்கூர

He then purposed to destroy the forsaken king, root and branch.

மூலத்தலைப்போகமூழ்கிமுகிழ்நிலாமுடிகொள்சென்னி
வெலற்கருந்தானைநீத்தவேந்தனைவெறுமைநோக்கிக்
குலத்தொடுங்கோறலெண்ணிக்கொடியவன்கடியசூழ்ந்தான்.

இ—ள். திருவனுளிடத்தே தனது காதல் கூருதலின் அவளது மூலைப் போகத்தே அமுழ்ந்தித் தானையைநீத்த சென்னியையுடைய வேந்தனை வெறுமையைப்பார்த்துப் பிள்ளையுடனே கொல்லக்கருதி அதற்கு வேண்டுங் கடிய தொழில்களைக் கொடியவன் சூழ்ந்தானென்க.

திரு, இல்பொருள் உவமை. உகூக.

வெறுமைநோக்கி, taking advantage of.

262\. கோன்றமர்களைமூழ்கிக்கோட்டத்துக்குரங்கத்தின்கிழ்

His friends and relatives he conciliated by ample presents; and got rid of the king's adherents.

ஏன்றநன்மாந்தர்க்கெல்லாமிருநிதிமுகந்துநல்கி
ஊன்றியநாட்டையெல்லாமொருகுடைநீழற்செய்து
தோன்றினன்குன்றத்துச்சிச்சுடர்ப்புழிவிளக்கிட்டன்றே.

இ—ள். அரசன்சுற்றம் விலங்கிலே மூழ்கிச் சிறையிலே தாழ, தன் கிழ்மையையேற்ற மாந்தர்க்கெல்லாம் நிதியை நல்கி, நாட்டையெல்லாம் குடையால் நீழற்செய்தான்றதற்குக் குன்றத்திலிட்ட விளக்குப்போலே பழியாகிய விளக்கையிட்டுத் தோன்றினனென்க.

கிழ், இடமுமாம். நன்மாந்தர், இகழ்ச்சி, [irony.] ஊன்றிய, பெயரெச்சமுமாம். உகூஉ.

கோன்றமர் = கோன் + தமர், the king's relatives. விலங்கு, fetters. The Traitor shone, but as a false light.

263\. பருமித்தகளிறுமாவும்பரந்தியதேரும்பண்ணித்

Providing himself with elephants, horses and chariots, and an army with bows and swords, he besieged the city.

திருமிக்கசேனைமூதூர்த்தெருவுதோறெங்குமீண்டி
எரிமொய்த்தவாளும்வில்லுமிலங்கிலைவேலுமேந்திச்
செருமிக்கவேலினன்றன்றிருநகர்வளைந்ததன்றே.

இ—ள். சேனையானது களிறுமுதலியவற்றைப்பண்ணி, வாள்முதலிய வற்றை ஏந்தி, தெருவுதோறும் ஈண்டி, வேலினனது நகரை எங்கும் வளைந்ததென்க.

உள்நிற்கும் ஊர்திகளும் உட்படவனைத்து அந்தப்புரத்தினுட் புகுதாதி ன்றமை கண்டு வாயிலோன் உணர்த்துகின்றமை மேற்கூறுகின்றார். உசுங.

பாரதியதேரு = பரந்த + இயல் + தேரு, extensive, or numerous chariots.

264. நீணிலமன்னபோற்றிநெடுமுடிக்குருசில்போற்றி
பூணணிமார்பபோற்றிபுண்ணியவேந்தேபோற்றி
கோணினைக்குறித்துவந்தான்கட்டியங்காரனென்று [லான்.
சேணிலத்திறைஞ்சிச்சொன்னான்செய்யகோல்வெய்யசொல்

It was reported to the king, by the guard, that Kattiankaran was come to kill the king.

இ—ள். வெய்யசொல்லைக் கூறுதலுடைய வாயிலோன் போற்றி என் றுகூறி இறைஞ்சி, கட்டியங்காரன் நின்னைக் கொலைக்குறித்துவந்தானெ ன்று கூறினனென்க.

போற்றி, பரிகாரம். பூணணிமார்ப, பகைவர் கவசமணிதற்குக் கா ரணமானமார்ப. அரும்பூணறவெறிந்தாங்கென்பர். மேலும் போற்றி நான்குகூறியது, நிலத்திற்குங் குலத்திற்கும் வீரத்திற்கும் தருமத்திற்கும் நின்னையொழிய இல்லையென்றிரங்கினன். கோள், மாறுபாடோம், [opposition, evil intention.] உசுச.

குருசில், or குரிசில், a person of dignity, a king, fr. குரு, and சில், as in அடிசில், boiled rice, fr. அடு, to boil; பரிசில், gift, donation, fr. பரிசு, a gift, Sanskrit, *sparas.*

265. திண்ணிலைக்கதவமெல்லாந்திருந்துதாளுறுக்கவல்லே
பண்ணுகபசும்பொற்றேரும்படுமதக்களிறுமாவுங்
கண்ணகன்புரிசைகாக்குங்காவலரடைகவென்றான்
விண்ணுருமேறுபோன்றுவெடிபடமுழங்குஞ்சொல்லான்.

The king was angry, and instantly ordered the gates to be secured, the chariots, &c., to be got ready, and his adherents to guard the fortress.

இ—ள். சொல்லான் கதவெல்லாந்தாளிடுக, தேர்முதலியவற்றைப் பண் ணுக, புரிசையிலே அது காக்குங்காவலர் அடைக என்றானென்க.

இராசதத்தாற் கூறினன். வல்லே என்றது, எவ்விடத்துங் கூட்டுக. வெடிபட, வெடித்தலுண்டாக. உசுரு.

பண்ணுக, let it get ready, வியங்கோள்.

266. புலிப்பொறிப்போர்வைநீக்கிப்பொன்னணிந்திலங்குகின்ற
ஒலிக்கழன்மன்னருட்கூமுருச்சுடர்வாளைநோக்கிக்
கலிக்கிறையாயநெஞ்சிற்கட்டியங்காரனம்மேல்
வலித்ததுகாண்டுமென்றுவாளெயிறிலங்கநக்கான்.

And with heroic feelings, laughed at the idea of the Traitor's treachery.

இ—ள். புலியினது வரியையுடைய கவசத்தைத் தவிர்த்து மன்னர் அஞ் சும் வாளை நோக்கி, வலித்தது காண்டுமென்று மிகச்சிரித்தானென்க.

இது வீரத்தின்கண் எள்ளுதலாற் பிறந்தநகை. ஊர்திகளின்மையிற் கவசம் நீக்கினனென்க. போர்வை, உறையுமென்ப. உசுசு.

கலி, deceit.

267. நங்கைநீநடக்கல்வேண்டுநின்பொருட்டிரங்கல்வேண்டா
கங்குலின்றுகண்டகனவெலாம்விளைந்ததென்னக்
கொங்கலர்கோதைமாழ்கிக்குழைமுகம்புடைத்துவீழ்ந்து
செங்கயற்கண்ணிவெய்யதிருமகற்கவலஞ்செய்தாள்.

The king beholding his wife said: you must immediately leave this place, your dream is being fulfilled. She wept, she fainted, and caused pain to the child she was bearing.

இ-ள். நங்காய், நீ இரங்குதல்வேண்டா, பிள்ளைகாரணத்தாற் போவா யாக, அது என்னெனின் நீ அன்று கங்குலிற்கண்ட கனவெல்லாம் பயன் பட்டதுகாண் என்றுகூற, கயற்கண்ணி கோதைபோல மாழ்கி வீழ்ந்து தன் பிள்ளைக்கு வருத்தஞ்செய்தாளென்க.

நன்பொருள், பிள்ளை. வேண்டும் என்பது, ஒரு வியங்கோள். "ஓஒதல் வேண்டும்" என்றாற்போல. எல்லாம் என்றான், பிள்ளையாகக் கருதி உயிர்நிற்றற்கு. தெளிவுபற்றி விளைந்தது என்று இறந்தகாலத் தாற் கூறினான். ௨௬௭.

268. மல்லலைத்தெழுந்துவீங்கியமலைதிரண்டனையதோளான்
அல்லலுற்றழுங்கிவீழ்ந்தவமிர்தமன்னாளையெய்திப்
புல்லிக்கொண்டவலநீக்கிப்பொம்மல்வெம்முலையினாட்குச்
சொல்லுவானிவைகள்சொன்னான்சூழ்கழற்காலினானே.

The king embraced his wife, and comforted her, saying:

இ-ள். மற்றொழிலைவருத்தி எழுந்து நீண்டு மலைதிரண்டனைய தோளாகிய கழற்காலினான், அல்லலுற்றுக்கெட்டு வீழ்ந்த அமிர்தமன்னாளைச் சேர்ந்து தழுவி அவலத்தை நீக்கி, அவளுக்குமுன்பு அன்பிற்றலைப்பிரியா தன கூறுகின்றவன் இப்பொழுது அவ்வன்பிற்றலைப்பிரிந்தன கூறினா னென்க.

அமுதயின்றார்க்கு நாளுலந்தால் அது வேறுபாடு தோற்றுவிக்குமாறு போல் இவற்கும் வேறுபாடு தோற்றுவித்தலின் அமுதென்றார். ௨௬௮.

269. சாதலும்பிறத்தறானுந்தம்வினைப்பயத்தினாகும்
ஆதலுமழிவுமெல்லாமவைபொருட்டியல்புகண்டாய்
நோதலும்பரிவுமெல்லாநுண்ணுணர்வின்மையன்றே
பேதைநீபெரிதும்பொல்லாய்பெய்வளைத்தோளியென்றான்.

Life and death, changes and chances are natural results of our former actions. Therefore it is ignorance to rejoice at good, and bewail at evil.

இ-ள். பேதாய், தோளி, சாதல்தானும் பிறத்தல்தானும் ஆதல்தானும் அழிதல்தானும் எல்லாம் தம் வினைகளின் பயத்தால் உண்டாம், ஆண்டுச் சாதற்கும் அழிதற்கும் நோதலும், பிறத்தற்கும் ஆதற்கும் இன்புறுத லெல்லாம் அறிவின்மையன்றே, நீ இங்ஙனமாதலிற் பெரிதும் அறிவிலியா யிருந்தாய், அவ்வினையுறுதல் பொருட்டு இயல்புகாண் என்றானென்க. ௨௬௯.

270. தொல்லைநம்பிறவியெண்ணிற்றொடுகடன்மணலுமாற்ரு
எல்லையவற்றுளெல்லாமேறிலம்பிறந்துநீங்கிச்
செல்லுமக்கதிகடம்முட்சேரலஞ்சேர்ந்துகின்ற
இல்லினுளிரண்டுநாளைச்சுற்றமேயிரங்கல்வேண்டா.

Our former births were numberless, and then we were not connected; and hereafter in our future births we shall not be connected. The present connection is only transitory. Therefore, grieve not.

இ—ள். நம்முடைய பழைய யானிடப்பிறப்பை எண்ணில் வெண்மணலும் உறையிடப்போதாத எல்லையுடைய அப்பிறவியுளெல்லாம் பிறந்தும் வேறுபட்டேம், இனி இவ்வுடம்பை நீங்கிச் செல்லும் கதியிலும் சேரேம், ஆதலின் இப்பொழுது சேர்ந்துநின்ற இரண்டுநாளை உறவை உறவாகக்கருதி அதற்கு இரங்கவேண்டாம் என்றுனெனக.

அவற்றுட் பிறந்துமெனமாறுக. இரண்டுநாள், சிறிதுநாளென்னும் பொருட்டு. உஎய.

தொடுகடல் = தோண்டின கடல், The sea that was dug or excavated by the sons of *Sagara*, whence the name *Sâgaram* for ocean. எதிலம், we were strangers.

271. வண்டுமொய்த்தரற்றும்பிண்டிவாமனூல்வடித்துண்ணூல்
உண்டுவைத்தனையநீயுமுணர்விலாநீரையாகி
விண்டுகண்ணருவிசோரவிம்முயிர்த்திரிணையாதல்
ஒண்டொடிதருவதன்றுவொழிகனின்கவலையென்றான்.

Remember that you have imbibed the doctrines of Arugn; it is unbecoming in you to weep and lament, cease from your cares.

இ—ள். ஒண்டொடி, வாமனாற் சொல்லப்பட்ட நூற்பொருளை உணர்ந்துவைத்து அவ்வாறு உணர்வுடைய நீயும் உணர்வில்லாத தன்மையையாய், எனது மொழியை வேறுபட்டு, கண்ணீர்விழ விம்மி உயிர்த்து இத்தன்மையையாதற்காகிய வருத்தத்தைத் தவிர்க என்றுனெனக.

இறைவன் அருளால் வண்டுமொய்த்தது, நூல் ஆகுபெயர். அனைய, செஞ்சுறிபொருண்மேற்று. உஎக.

நீர், தன்மை, state.

272. உரிமைமுன்போக்கியல்லாவொளிமுடிமன்னர்போகார்
கருமமீதெனக்குஞர்கியமைந்ததுகவலவேண்டா [முன்
புரிகரம்பிரங்குஞ்சொல்லாய்போவதேபொருண்மற்றென்
எரிமுயங்கிலங்குவாட்கையேற்றிளஞ்சிங்கமன்னான்.

It is not right for kings to save themselves without first saving their families: The chariot is ready; Be not concerned about me; Flight is the thing.

இ—ள். வாளைப்பிடித்த கையினையுடைய ஏறுகிய சிங்கத்தை ஒப்பான், நரம்பிரங்குதற்குக் காரணமான சொல்லாய், மன்னர் உரிமையை முன்னே போக்கி அல்லது தாம் போகார், ஆதலால் இப்பொழுது எனக்குங்கருமம், உனக்குங்கருமம், ஏறுதற்கு ஊர்தியுஞ்சமைந்தது இனிக்கவல வேண்டா, போவதே கருமம் என்றுனெனக.

பிள்ளையால் கதிபெறுதலும் பகைவேறலும் கருதி இருவர்க்கும் கருமமென்றான். கவற்சி, இருதலைக்கொள்ளியிடத்து எறும்புபோல் கணவனையும் புதல்வனையும் நோக்கிக் கவலுதல். உஎஉ.

273\. என்புநெக்குருகியுள்ளமொழுகுபுசோரயாத்த
அன்புமிக்கவலித்தாற்றாவாருயிர்க்கிழத்திதன்னை
இன்பமிக்குடையசித்தியிறைவனதாணைகூறித்
துன்பமில்பறவையூர்திசேர்த்தினன்றுணைவிசேர்ந்தாள்.

And then taking his loving and sorrowing wife, and with a salutation to Arugu, took leave of her, and put her in the machine that was made for her rescue.

இ—ள். என்புருகும்படி உள்ளமொழுகாநின்று சோர, பிணித்த அன்புமிகுதலால் ஆற்றாத உயிர்போலும் கிழத்தியைப் பறவையாகிய ஊர்தியைச் சேர்த்தினன், அத்துணைவியும் செயலற்று இறைவனது ஆணைகூறச் சேர்ந்தாளென்க.

உருகி, உருக. அனந்தசுகமிகுதலாலே சித்தியையுடைய அருகன். அவனாணை, நமோசுரிஹஞாநாமென்னுமொழி. தீதற்றபறவை. ௨௭௩.

नमो अरिहन्तानाम् *Namo Arihantánám.* Salutation to the Arhats.

வேறு.

274\. நீருடைக்குவளையினெடுங்கணின்றவெய்பனி
வாருடைம்முலைமுகந்நனைப்பமாதர்சென்றபின்
சீருடைக்குருசிலுஞ்சிவந்தழன்றோர்தீத்திரள்
பாருடைப்பனிக்கடல்சுடுவதொத்தலம்பினான்.

Immediately after she left, his heroism being roused, he rose up to wage war.

இ—ள். மாதர், நீர் அறாததோர் குவளைபோல வெய்யநீர் இடையறாது நின்றகண் வாருடைகின்ற முலைமுகத்தை நனைப்பப் போனபின்பு, குருசிலும் நெஞ்சழன்று கோபித்து மடங்கற்றீக் கடலைச் சுடுவதொத்து முழங்கினானென்க.

உடைம்முலைமுகம், மகரவொற்று வண்ணத்திற்கடுத்தது. பாரையகத்தடக்கின கடலென்றது, ஊழிக்காலத்து நீரை. தான் உண்டாக்கினபடையைத் தான் அழிக்கின்ற தன்மைபற்றி நெருப்பும் நீரும் உவமை கூறினார். ௨௭௪.

275\. முழைமுகத்திடியரிவளைத்தவன்கண்மள்ளரிற்
குழைமுகப்புரிசையுட்குருசிறானகப்பட
இழைமுகத்தெறிபடையிலங்குவாட்கடலிடை
மழைமுகத்தகுஞ்சரம்வாரியுள்வளைத்ததே.

He was besieged, as a lion in its den is surrounded by elephants.

இ—ள். முழையிடத்தே அரியைவளைத்த குஞ்சரத்திரள்போல அந்தப்புரத்தே குருசில் அகப்படும்படி, வேலையும் வாளையுமுடைய மள்ளராகிய கடலினிடையிற் குஞ்சரம் செண்டுவெளியிலே வளைத்ததென்க.

அரியை யானை வளைத்தலில் பொருளுவமம். குழைமுகமகளிர் காக்கும் புரிசையெனவே அந்தப்புரமாயிற்று. "ஆடவர் குறுகாவரும்கடிவரைப்பின" என்றார் பிறரும். இழைமுகத்தெறிதல், நூல்பிளக்கவெறிதல். மழை, மதம். ௨௭௫.

276. அரிவினிற்புனைந்தவாளழன்றுருத்தூரீஇயுடன்
பயில்கதிர்க்குருமணிப்பன்மயிர்ச்செய்கேடகம்
வெயிலெனத்திரித்துவின்வழுக்கிவந்துவீழ்ந்ததோர்
கயிலணிக்கதிர்நகைக்கடவுளொத்துலம்பினன்.

He drew his sword, and took up his shield, and as if divine, shouted for war.

இ—ள். கூர்மையாற் புனைந்த வாளை நெஞ்சழன்று கோபித்து உருவி, அதனுடனே கேடகத்தையும் ஞாயிற்றைத் திரிக்குமாறுபோலத் திரித்து, கடவுளை ஒத்து முழங்கினனென்க.

வினையுலர்ந்து வீழ்ந்ததோர் கடவுள் உவமையாயிற்று, இவனும் இங்ஙனம் நிற்றலின். கயில், மூட்டுவாய். நகை, முத்துவடம். உ௭௬.

உரீஇ for உருவி, drawing.

277. மாரியிற்கடுங்கணைசொரிந்துமள்ளரார்த்தனர்
வீரியக்குருசிலும்விலக்கிவெங்கணைமழை
வாரியுட்கடிந்துடன்கற்றமற்றவன்படைப்
பேரியற்பெருங்களிறுபின்னிவந்தடைந்தவே.

His foes then poured forth their arrows like rain; he met them in like manner, and overcame them.

இ—ள். மள்ளர் கணையை மாரியிற் சொரிந்து ஆர்த்தபின்பு, குரிசிலும் அக்கணையை விலக்கிச் சேண்டுவெளியினின்று நாற்படையையுஞ் சேரக் கெடுத்துப்போக, பின்பு பேரணியினின்ற பெருங்களிறுகள் செற்றிவந்து சேர்ந்தனவென்க.

பெரிய இயலுதலுடைய களிறு. உ௭௭.

278. சீற்றமிக்கமன்னவன்சேர்ந்தகுஞ்சரநுதற்
கூற்றருங்குருதிவாள்கோடுறவழுத்தலின்
ஊற்றுடைநெடுவரையுருமுடன்றிடித்தன
மாற்றருமதக்களிறுமத்தகம்பிளந்தவே.

Then came the elephants, which he overcame with his spear.

இ—ள். சச்சந்தன் கோடுறத்தன்னைச்சேர்ந்த குஞ்சரங்களின் நுதலிலே வரைக்கண் உருமிடித்ததென வாளை அழுத்தலின் அக்களிறுகள் மத்தகம் பிளந்தனவென்க.

கூற்றரும், சொல்லற்கரிய. ஊற்று, அசும்பு. உ௭௮.

279. வேன்மிடைந்தவேலியும்பிளந்துவெங்கண்வீரரை
வான்மயிர்ச்செய்கேடகத்திடித்துவாள்வலையரிந்(து)
ஊனுடைக்குருதியுள்ளுழக்குபுதிரிதரத்
தேன்மிடைந்ததாரினன்செங்களஞ்சிறந்ததே.

Thus the king was conquering, and treading on the blood of his foes.

இ—ள். பிளந்து, இடித்து, அரிந்து திரிதலால் தாரினன் களம் சிறந்ததென்க.

இத்துணையும் இவன் வெற்றியாதலில் இவன் களமென்றார். வேலி, ஆகுபெயராதலிற் பிரித்தென்றது பிளந்து என்றார். தன்னை யொறுத்தவரைப் பரிசையாலிடித்து. வலை என்றார், தப்பாமற் சூழ்தலின். உ௭௯.

## வேறு.

280\. உட்புகுபடையமூக்கீருடன்றுகளைகொல்வ(து)
ஒப்புடையதானையுளொருநம்பியனுகி
இப்படியிறைமகனிருங்களிறுநூற
அப்படையுளண்ணறுமழன்றுகளிறுந்தி.

He overcame the army that came to kill their king, which was like the briny ocean with its angry waves coming to destroy its strand [shores.]

281\. நீடகமிருந்தநிழுனேமிவலனேந்திக்
கேடகமறுப்பநடுவற்றரவுசேர்ந்தாங்(கு)
ஓடுகதிர்வட்டமெனவொய்யெனவுலம்பிக்
காடுகவர்தீயின்மிகைசீறுபுவெகுண்டான்.

At this juncture, the Traitor came, and cut the shield from his hand. It excited the fury of the king.

இ—ள். இவையிரண்டும் ஒருதொடர். இறைவனுகியமகன் தானையுட்டமியனுய் நின்று மூக்கூறியவாறே களிற்றை நூற, அதற்கு அழன்று கட்டியங்காரனுங் களிற்றை உந்திச் சக்கரத்தை ஏந்தி, அரவுசேர்தலால் நடுவற்று விசும்பிலே ஓடுகின்ற கதிர்வட்டமெனக் கேடகத்தை அறுத்தலிற் சச்சந்தன் உலம்பி அவன் மிகையைச் சீறுகின்று தீப்போல வெகுண்டான் என்க.

தனக்கு வேலியாகிய கரையைக் கடல்தானே கொல்கின்றுற்போலத் தமக்குக்காவலாகிய அரசனைப் படைதாமே கொல்கின்றதென்றார். ஒரு தனி, ஒப்பில்லாத தனி. நீடகமிருந்த, பகையின்மையின் நெடுநாள் உள்ளே இருந்த சக்கரம். நடுவற்று, பாதி இல்லையாய். சீறுதல், செற்றம். உவுக.

282\. நெய்முகமணிந்துநிழுறங்கியழல்பொங்கி
வைமுகமணிந்தநுதிவாளழலவீசி
மைமுகமணிந்தமதயானைதவநூறிக்
கைமுதறுணிந்துகளிறுழுவதுரோனுன்.

And he killed the elephants with his sword.

283\. மாலைநுதிகொண்டுமழைமின்னெனவிமைக்கும்
வேலைவலனேந்திவிரிதாமமழகழியச்
சோலைமயிலார்கடுனைவெம்முலைகடுஞ்சுங்
கோலவரைமார்பினுறுகூற்றெனவெறிந்தான்.

Then the Traitor, came and fell upon the king, and made a deadly dart on his breast, with his spear.

இ—ள். இவையிரண்டும் ஒருதொடர். அங்ஙனம் வெகுண்டு, வாளையோச்சி, யானையை வெட்டுதலாலே அது கைதுணிந்து வீழாநிற்க, அதனைக் கட்டியங்காரன் போருனுய், வேலையேந்தி அழகழிய அவன் மார்பிலே கூற்றென எறிந்தானென்க.

நுதி, நுனை. கருமையையுடைய முகத்தே பட்டமணிந்த யானை. தவ, மிக. முதல், அடி. விரிதாமமழகழிய, இவன் சூடும் வாகைமாலைமேல் அழகுகெட்டுப்போக. மயிலின் தன்மையார் என்ற பன்மை

யால் தேவியர் பலராயிற்று. முலேதுஞ்சுமார்பெனவே, முன் தன க்கு நிகராக எறிவாரின்மை தோன்றிற்று. "மகளிர் மலேத்தலல்லது மன் னர் மலேத்தல்போகிய சிலேத்தார்மார்ப" என்முர் பிறரும். வேல் வடிவு கொண்டு உறுவதோர் கூற்றென்க. யானே விழாகிற்க எறிந்தான். உ௮௩.

## வேறு.

*The king drawing the lance from his bleeding breast, and straightening it between the tusks of elephants, used it in destroying his foes.*

284. புண்ணிடங்கொண்டவெஃகம்பறித்தவிற்பொன்னனுர்தங்
கண்ணிடங்கொண்டமார்பிற்றடாயினகாதுவெள்வேன்
மண்ணிடங்கொண்டயானேமணிமருப்பிடைவிட்டம்ம
விண்ணிடைமன்னர்கொள்ளமிறைக்கொளிதிருத்திஞனே.

இ—ள். மார்பிலே தைத்துநின்ற வேல் பறித்தவின் அம்மார்பிலே பொருதுவளேந்த அதனேப் பட்டுவீழ்ந்த யானேயின் மருப்பிடையிலே யிட்டு, மன்னர் விண்ணிடங் கொள்ளும்படி அவ்வளேவுக்குண்டாகிய இளக்கத்தைப் போக்கிஞனென்க.

தடாயினவேல், பெயரெச்சம். அம்ம, அசை. உ௮௪.

*The enemy receded. The Traitor then advancing on an elephant, threw his javelin at the king.*

285. ஏந்தல்வேறிருத்தயானேயிரிந்தனவெரிபொற்கண்ணி
நாந்தகவுழவர்நண்ணுர்கூற்றெனநடுங்கிமன்னர்
சாய்ந்தபின்றறுகணுண்மைக்கட்டியங்காரன்வேழங்
காய்ந்தனன்கடுகவுந்திக்கப்பணஞ்சிதறிஞனே.

இ—ள். ஏந்தல் வேலேத்திருத்துதலாலே மன்னர் நடுங்கிச் சாய்ந்தபின் யானே இரிந்தன, உழவர் அணுகார், அதுகண்டு கட்டியங்காரன் அவர் களேக் காய்ந்தனஞய், வேழத்தைச்செலுத்திக் கப்பணத்தைச் சிதறிஞ னென்க.

நாந்தகம், வாள். நண்ணுர், வினேமுற்று. கப்பணம், இரும்பால் ஆணெருஞ்சி முள்ளாகப்பண்ணியது. இதனுல் இவன் வேருேர் யானே யை ஏறினமையுணர்க. உ௮௫.

வேறிருத்த i. e., வேல்திருத்த. கப்பணம் a caltrop, javelin.

*The king killed the traitor's elephant, while warriors were looking on, and admiring his power.*

286. குன்றமார்பரிக்தவெள்வேற்குமெியாமஞ்ஞையூர்ந்து
நின்றமாலுருவம்போலெரிமுரிபுருவமாக்கிக்
கொன்றவன்வேழம்வீழ்ப்பமற்றுமோர்களிற்றிற்பாய்ந்து
நின்றமாமன்னர்க்கெல்லாநீண்முடியிலக்கமாஞன்.

இ—ள். வேலாலே குன்றினது மார்பைப்பிளந்து மயில் போகட்டுநின்ற முருகனேப்போலப் புருவமாக்கி, கட்டியங்காரனது வேழத்தை முன்பு திருத்தின வேலாலே கொன்று வீழ்ப்ப, அவன் மற்றும் ஓர் களிற்றிற் பாய் தலாலே மன்னர்க்கெல்லாம் சச்சந்தன் இலக்காயிஞனென்க.

ஊர்தல், ஈண்டுப்போதன்மேற்று, வாஞர் மதியம்போல, மால் புரு வம் கெரித்தாற்போல. நீண்முடி, ஆகுபெயர். உ௮௬.

The king is compared to Subramaniyan, who conquered the *Surars.*

வேறு.

287\. நஞ்சுபதிகொண்டவளநாகணையினுன்றன்
நெஞ்சுபதிகொண்டபடைமூழ்கநிலம்வீசும்
மஞ்சுதவழ்குன்றனையதோளொசிந்துமாத்தாட்
குஞ்சரங்களூறிக்கொலைவாளொடித்துநின்றான்.

While he was receiving wounds from the arrows of his foes, he stood destroying as many as he could.

இ—ள். நாகணையினுன்றன் நெஞ்சைப் பதியாகக்கொண்ட மன்னர்படைகள் மூழ்காநிற்க, தானுங் குஞ்சரங்களைத் தோளொசிய நூறி வாளையொடித்து நின்றானென்க.

நிலத்தினுள் ஆர்க்கும். தோள், ஆகுபெயர். நாகணையினுன், சச்சந்தன். இனி மதிகொண்ட பாடமாயில், திருமாலுட்கொண்ட சக்கரமென்க. தோளசைத்தும் பாடம். உ௮எ.

288\. ஆமருளாண்டகையுமன்னவகைவிழும்
வீரரெறிவெம்படைகள்வீழவிமையானுய்ப்
போமருளன்றுபெருந்தாதையொடும்பேராப்
போரமருணின்றவினையோனிற்பொலிவுற்றான்.

And without withdrawing, he manifested his valour, as Abhimanya did in the field of battle.

இ—ள். ஆண்டகையும் அமரிலே முற்கூறியவாறே விரும்பும் வீரர் எறிகின்ற படைகள் வீழ இமையானாய், பாரதத்திற் புறங்கொடாமற் பொருகின்றபோரிலே கன்னனோடே மாறுபட்டுநின்ற அபிமன்னுவைப்போலே பொலிவுற்றானென்க.

வீழும், விரும்பும். இனி நீடும் பாடமாயின், நெடும்பொழுதாம். "நீடு நின்றனன்" என்றார் பிறரும். உ௮௮.

Abhimanya, the son of Arjuna, who even in extreme youth was renowned for his valour and his strength, and crushed the chariots of his foes in fight.

289\. போழ்ந்துகதிர்நேமியொடுவேல்பொருதழுந்தத்
தாழ்ந்துதறுகண்ணிணைகடையழலவிழியா
வீழ்ந்துநிலமாமகடன்வெம்முலைநெருமுங்க
ஆழ்ந்துபடுவெஞ்சுடரினாண்டகையவிந்தான்.

But as the weapons of his enemies kept pouring upon him, he succumbed and fell to the ground. The glory of his valour set like the setting sun.

இ—ள். சக்கரத்தோடே வேலும் போழ்ந்து தன்னிற் பொருது அழுந்துதலாலே மெய்வலி குறைந்து, தறுகண்மையையுடைய கண்கள் அழலவிழித்து, முலைநெருமுங்க வீழ்ந்து, சுடர்போல ஆண்டகைமை குறைந்தானென்க.

ஆழ்ந்து, மறைந்து. ஆண்டகைமை, குணப்பண்பு; ஆண்டகைத்குரவீர்போல. அவிதல், குறைதல்; "திரைபாடவிய" என்றாற்போலப் பண்பியாக்கி, பட்டானென்னில் பாலருவியென்னுங் கவிவேண்டாவாம். இவன் பகைவரை முகநோக்கி வீழ்ந்தமையிற் பிள்ளையார் பின்பு பகைவென்றார். உ௮௯.

## வேறு.

290\. தோய்ந்தவிசும்பென்னுந்தொன்னாட்டகத்
  தொழுதுபுலம்பெய்திமைந்தர்மாழ்க
எய்திழையாரினைந்திரங்கக்
  கொடுங்கோலிருள்பரப்பவேயென்பாவம்
ஆய்ந்தகுருகுலமாமாழ்கடலினுண்
  மூளைத்தவறச்செங்கோலாய்கதிரினை
வேந்தர்பெருமானைச்சச்சந்தனை
  மந்திரிமாநாகமுடன்விழுங்கிற்றன்றே.

As the snake-like asailiri had swallowed up [eclipsed] the illustrious king, the people lamented, virtuous women wept, and the sceptre of wickedness flourished.

இ—ள். மக்கள் செறிந்த விசும்பென்றுகூறும் எமாங்கதத்தே சான்றோர் மயங்க, கற்புடைய மகளிர் இரங்க, கொடுங்கோலாகிய இருள் பரப்ப, பெருமானைச் சச்சந்தனைக் கடல்போலுங் குருகுலத்தே மூளைத்த கதிர் போல்வானை நாகம்போல மந்திரி விழுங்கினான், பாவம், என்க.

கடலாங்குருகுலம், சிறப்புநிலைக்களமாக முதலொடுமுதலே வந்த மெய்யுவமம். மந்திரிமாநாகம், கிழக்கிடு பொருணிலைக்களமாக முதலொடுமுதலே வந்த வினையுவமம். தொல்காப்பியனார் சொல்லும்பொருளும் உடனாராய்தலின் உருவகம் உவமையென்றே கூறினார். செங்கோலையுடைய கதிரில், பொருளுவமம். உடன்விழுங்கிற்று, அரச உரிமையெல்லாங்கொண்டான். நாகத்திற்கேற்ப விழுங்கிற்றென்றார். ஏ, குறிப்புமொழி. இது அவன் ஆண்டகைமை குறைந்ததற்கு இரங்கினார். உகூ.

291\. பாலருவித்திங்கடோய்முத்தமாலைப்
  பழிப்பினெடுங்குடைக்கீழ்பாய்பரிமான்றேர்
கோலருவிவெஞ்சிலையான்கூர்வா
  ளொடுமணிக்கேடகமுமற்றுமாற்றி
வாலருவிவாமனடித்தாமரை
  மலர்சூடிமந்திரமென்சாந்துபூசி
வேலருவிக்கண்ணினார்மெய்காப்போம்ப
  வேந்தன்போய்விண்ணோர்க்குவிருந்தாயினானே.

Forsaking his weapons and earthly associations, and adoring and rejoicing at the holy feet of Arugn, the king changed worlds, leaving his body behind to the care of weeping women.

இ—ள். கண்ணினார் காவற்றொழிலை ஈண்டுப் பேண, போய்க் குடைநிழற்கண்ணே தேர்மீதுநின்று கோல் இடையறாமல் வழங்குஞ் சிலையானாகிய வேந்தன், அவை உதவாமையின் வாளும் கேடகமும் மறமும் துணையாகப்பொருது அவற்றைப்போக்கி, வாமனுடைய அருவியை ஆடிச் சாந்தைப்பூசி மலரையொத்த அடியைச் சூடிப்போய்த் தேவர்கள் வழிபடுதற்குப் புதியனாயினானென்க.

அருவி, பால்போலுங்கிரணம். தோய், உவமவுருபு, புறநடையாற்கொள்க. வாலருவி, சுக்கிலத்தியானம். வேலருவி, வேலொழுங்கு.

உயிர் நீங்குகின்றபொழுது தியானம்வந்து உதவுதலின் வீடுபெற்றனெ ன்க: சுவர்க்கமுமாம். ௨௯௧.

292. செந்திக்கருந்துளையதீங்குழல்யாழ்
தேந்தேயென்னுமணிமுழவமுந்
தந்தாங்கிளையார்மேல்விரல்கடைண்டத்
தாந்தாமென்றிரங்குந்தண்ணுமைகளும்
அந்தீங்கிளவியாரைஞ்ஞூற்றுவ
ரவைதுறைபோயாடலரம்பையன்னார்
எந்தாய்வேறுநிலத்துச்சேர்தியோ
வென்றினைந்திரங்கிப்பள்ளிப்படுத்தார்களே.

The women brought the corpse, with music, to the burning ground, crying: "Our father, art thou gone."

இ-ள். இளையோர் குழன் முதலியவற்றை ஈமத்தே கொண்டுவந்து விரல்களாலே வாசியாநிற்க, ஐஞ்ஞூற்றுவரும் அரம்பையன்னாரும் இரங்கிப் பள்ளிப்படுத்தாரென்க.

செந்தியாற் கருந்துளைய வான்குழல். தேந்தேந்தாந்தாம், அனுகரணம். இளையார், நிருத்த கீத வாச்சியத்திற்குரிய மகளிர். கிளவியார் ஐஞ்ஞூற்றுவரென்றார், அகப்பரிவாரம் ஐஞ்ஞூற்றுவரே என்றற்கு. மேலும் நால்வரையொழிந்த தோழர் ஐஞ்ஞூற்றுவரும் அகப்பரிவாரமென்றுணர்க. தமக்குரிய துறைகள் முற்றக்கற்று அவையிலே ஆடுதலுடைய அரம்பையன்னார். கோன்றமர் நிகளமூழ்கியெனவே ஆடவரின்மையுணர்க. ௨௯௨.

தேந்தேம் and தாந்தாம், are imitative musical sounds, Onomatopoeia, அநுகரணம்.

293. மடையவிழ்ந்தவெள்ளிலைவேலம்புபாய
மணிச்செப்பகங்கடைகின்றவேபோல்
தொடையவிழ்ந்தமாலையுமுத்துந்தோய்ந்த
துணைமுலையினுள்ளாங்கின்மூழ்க்காமன்
படையவிழ்ந்தகண்பனிகள்வாரவிம்மாப்
பருமுத்தநாமழலைக்கிண்கிணியினர்
புடையவிழ்ந்தகூந்தல்புலவுத்தோயப்
பொழிமழையுண்மின்னுப்போற்புலம்பினரே.

And rolling on the ground with grief, their bodies were lacerated with the broken weapons of warfare.

இ-ள். கிண்கிணியினர், மணிச்செப்பை உள்வாயைக் கடைகின்ற கருவிகள் அதனுள்ளே அழுந்துமாறுபோல, மூட்டெக்கழன்ற வேலும் அம்பும் ஆண்டுப் பரந்துகிடக்கின்றவை முலையினுள்ளே தைத்து அழுந்தும்படி புரண்டழுது பின்பு, பெய்கின்ற மேகத்தினுள்ளே மின் தோன்றுமாறுபோலக் கூந்தல் மெய்யை மறைத்து நிலத்தைத் தீண்ட அதனுள்ளே இருந்து அழுதாரென்க.

தொடை, முறுக்கு. தோய்ந்த, செறிந்த. காமனம்பு தோற்ற. முத்தமாகிய நா. புலவு, குருதி, ஆகுபெயர். விம்மிப்புலம்பினரென்க. ௨௯௩.

ஆழ்ந்த, must be taken with முலையினுள்.

294. அரிமானேனார்மெல்லணைமேன்மஞ்ஞைசூழக்
கிடந்தாங்குவேந்தன்கிடந்தானைத்தான்
கரிமாலைநெஞ்சினான்கண்டான்கண்டே
கைதொழுதான்கண்ணீர்கலுழ்ந்துகுத்தபின்
எரிமாலையீமத்திழுதார்குடமேனை
நூறுமேற்பச்சொரிந்தலறியெம்
பெருமானேயெம்மையொளித்தியோவென்னாப்
பெரியகண்ணீர்வாரச்சொரிந்தலறுவார்.

The black-hearted assasin saw the corpse surrounded by women, as a lion surrounded by peafowls, and making obeisance, wept. The women encouraged proceeded with the ceremonies weeping.

295. கையார்வளைகள்புடைத்திரங்குவார்
கதிர்முலைமேலாரம்பரிந்தலறுவார்
நெய்யார்கருங்குழன்மேன்மாலைசிந்தி
நிலத்திடுவார்நின்றுகிருவில்வீசும்
மையார்கடிப்பிணையும்வார்குழையுங்
களைந்திடுவார்கையால்வயிறதுக்குவார்
ஐயாவோவென்றழுவார்வேந்தன்செய்த
கொடுமைகொடிதென்பார்கோல்வளையினாரே.

Their bangles were broken, their necklaces, garlands, and jewels had fallen off; and laying hold of their yearning bowels; exclaimed, "Great was the sin that brought such a calamity."

296. பானாட்பிறைமருப்பிற்பைங்கண்வேழம்
பகுவாயோர்பையணன்மாநாகம்வீழ்ப்பத்
தேனார்மலர்ச்சோலைச்செவ்வரையின்மேற்
சிறுபிடிகள்போலத்துயருழந்துதாம்
ஆனாதடியேம்வந்தவ்வுலகினின்
னடியடைதுமென்றழுதுபோயினாரெங்
கோனார்பறிப்பநலம்பூத்தவிக்
கொடியினிப்பூவாபிறர்பறிப்பவென்றே.

Then looking at the funeral pile said, "We too shall soon follow."

இ—ள். இவைமூன்றும் ஒருதொடர். மயில்சூழ்ந்துகிடப்ப ஓர் அரிமான்அணைமேற்கிடந்தாற்போல, தேவியர் சூழ்ந்துகிடப்ப வேந்தன் கிடந்தவனைக் கரிந்த இயல்பினையுடைய நெஞ்சினன் தான் கண்டான், கண்டு கலுழ்ந்து தொழுதான், தொழுது கண்ணீர் உகுத்தபின்பு அவன் செற்றம் நீங்கினமை கண்டு, கோல்வளையினார் ஈமத்தே குடமும் ஏனையவும் அரசற்குப் பொருந்தச் சொரிந்து அலறிப் பின், ஒளித்தியோ என்று நீர்சொரிந்து அலறுவார், இரங்குவார், இடுவார், களைந்திடுவார், அதுக்குவார், அழுவார், கொடிது என்பாராய்ச் செவ்விய வரைமேல் ஓர் நாகம் வேழத்தை வீழ்ப்ப அது காத்தற்குரிய பிடிகள் துயருழக்குமாறுபோல, தாம் துயருழந்து, எங்கோனார் நுகர அவர்க்குக்கொடுத்த நலங்கள் பிறர்க்குக் கொடேம், இனி அவ்வுலகிலே சென்று அடியடைவேமென்று ஆனாதழுது போயினார் என்றுனெனக.

கலுழ்ந்து வழிபாட்டிற்படுதலின் மனம் தன்வழித்தன்றிக் கலங்கிற்று. அழுதது உவகைக்கலுழ்ச்சி, விளிவில் கொள்கையென்றதனால், இது

உயிர் நீங்குகின்றபொழுது தியானம்வந்து உதவுதலின் வீடுபெற்றானெ ன்க: சுவற்கமுமாம். உ௯௧.

292\. செந்தீக்கருந்துளைய தீங்குழல்யாழ்
தேந்தேமென்னுமணிமுழவமுந்
தந்தாங்கிளையார்மெல்விரல்கடண்டத்
தாந்தாமென்றிரங்குந்தண்ணுமைகளும்
அந்தீங்கிளவியாரைஞ்ஞூற்றுவ
ரவைதுறைபோயாடலரம்பையன்னார்
எந்தாய்வேறுநிலத்துச்சேர்தியோ
வென்றிணைந்திரங்கிப்பள்ளிப்படுத்தார்களே.

The women brought the corpse, with music, to the burning ground, crying: "Our father, art thou gone."

இ-ள். இளையோர் குழன்முதலியவற்றை ஈமத்தே கொண்டுவந்து விரல்களாலே வாசியாநிற்க, ஐஞ்ஞூற்றுவரும் அரம்பையன்னாரும் இரங்கிப் பள்ளிப்படுத்தாரென்க.

செந்தியாற் கருந்துளைய வான்குழல். தேந்தேந்தாந்தாம், அனுகரணம். இளையார், நிருத்த கீதவாச்சியத்திற்குரிய மகளிர். கிளவியார் ஐஞ்ஞூற்றுவரென்றார், அகப்பரிவாரம் ஐஞ்ஞூற்றுவரே என்றற்கு. மேலும் நால்வரையொழிந்த தோழர் அஞ்ஞூற்றுவரும் அகப்பரிவாரமென்றுணர்க. தமக்குரிய துறைகள் முற்றக்கற்று அவையிலே ஆடுதலுடைய அரம்பையன்னார். சோன்றயர் நிகளமூழ்கியெனவே ஆடவரின்மையுணர்க. உ௯உ.

தேந்தேம் and தாந்தாம், are imitative musical sounds, Onomatopœia, அநுகரணம்.

293\. மடையவிழ்ந்தவெள்ளிலைவேலம்புபாய
மணிச்செப்பகங்கடைகின்றவேபோல்
தொடையவிழ்ந்தமாலையுமுத்துந்தோய்ந்த
துணைமுலையினுள்ளாங்கின்மூழ்க்காமன்
படையவிழ்ந்தகண்பனிகள்வாரவிம்மாப்
பருமுத்தநாமழலைக்கிண்கிணியினார்
புடையவிழ்ந்தகூந்தல்புலவுத்தோயப்
பொழிமழையுண்மின்னுப்போற்புலம்பினாரே.

And rolling on the ground with grief, their bodies were lacerated with the broken weapons of warfare.

இ-ள். கிண்கிணியினார், மணிச்செப்பை உள்வாயைக் கடைகின்ற கருவிகள் அதனுள்ளே அழுந்துமாறுபோல, மூட்டுக்கழன்ற வேலும் அம்பும் ஆண்டுப் பரந்துகிடக்கின்றவை முலையினுள்ளே தைத்து அழுந்தும்படி புரண்டழுது பின்பு, பெய்கின்ற மேகத்தினுள்ளே மின் தோன்றுமாறுபோலக் கூந்தல் மெய்யை மறைத்து நிலத்தைத் தீண்ட அதனுள்ளே இருந்து அழுதாரென்க.

தொடை, முறுக்கு. தோய்ந்த, செறிந்த. காமனம்பு தோற்ற. முத்தமாகிய நா. புலவு, குருதி, ஆகுபெயர். விம்மிப்புலம்பினாரென்க. உ௯௩.

பாய, must be taken with முலையினுள்.

294. அரிமானேனர்மெல்லணைமேன்மஞ்ஞைசூழக்
கிடந்தாங்குவேந்தன்கிடந்தானைத்தான்
கரிமாலைநெஞ்சினன்கண்டான்கண்டே
கைதொழுதான்கண்ணீர்கலுழ்ந்துகுத்தபின்
எரிமாலையீமத்திழுதார்குடமேனை
நாறுமேற்பச்சொரிந்தலறியெம்
பெருமானேயெம்மையொளித்தியோவென்னப்
பெரியகண்ணீர்வாரச்சொரிந்தலறுவார்.

The black-hearted assassin saw the corpse surrounded by women, as a lion surrounded by peafowls, and making obeisance, wept. The women encouraged proceeded with the ceremonies weeping.

295. கையார்வளைகள்புடைத்திரங்குவார்
கதிர்முலைமேலாரம்பரிந்தலறுவார்
நெய்யார்கருங்குழன்மேன்மாலைசிந்தி
நிலத்திடுவார்நின்றுதிருவில்வீசும்
மையார்கடிப்பிணையும்வார்குழையுங்
களைந்திடுவார்கையால்வயிறதுக்குவார்
ஐயாவோவென்றழுவார்வேந்தன்செய்த
கொடுமைகொடிதென்பார்கோல்வளையினாரே.

Their bangles were broken, their necklaces, garlands, and jewels had fallen off; and laying hold of their yearning bowels; exclaimed, "Great was the sin that brought such a calamity."

296. பானுட்பிறைமருப்பிற்பைங்கண்வேழம்
பருவாயோர்பையணன்மாநாகம்வீழ்ப்பத்
தேனார்மலர்ச்சோலைச்செவ்வரையின்மேற்
சிறுபிடிகள்போலத்துயருழந்துதாம்
ஆனாதடியேம்வந்தவ்வுலகினின்
னடியடைதுமென்றழுதுபோயினாரெங்
கோனார்பறிப்பநலம்பூத்தவிக்
கொடியினிப்பூவாபிறர்பறிப்பவென்றே.

Then looking at the funeral pile said, "We too shall soon follow."

இ—ள். இவைமூன்றும் ஒருதொடர். மயில்சூழ்ந்துகிடப்ப ஓர் அரிமான்அணைமேற்கிடந்தாற்போல, தேவியர் சூழ்ந்துகிடப்ப வேந்தன் கிடந்தவனைக் கரிந்த இயல்பினையுடைய நெஞ்சினன் தான் கண்டான், கண்டு கலுழ்ந்து தொழுதான், தொழுது கண்ணீர் உகுத்தபின்பு அவன் செற்றம் நீங்கினமை கண்டு, கோல்வளையினார் ஈமத்தே குடமும் ஏனையவும் அரசற்குப் பொருந்தச் சொரிந்து அலறிப் பின், ஒளித்தியோ என்று நீர்சொரிந்து அலறுவார், இரங்குவார், இடுவார், களைந்திடுவார், அதுக்குவார், அழுவார், கொடிது என்பாராய்ச் செவ்விய வரைமேல் ஓர் நாகம் வேழத்தை வீழ்ப்ப அது காத்தற்குரிய பிடிகள் துயருழக்குமாறுபோல, தாம் துயருழந்து, எங்கோனார் நுகர அவர்க்குக்கொடுத்த நலங்கள் பிறர்க்குக் கொடேம், இனி அவ்வுகிலே சென்று அடியடைவேமென்று ஆனாதழுது போயினார் என்றுனென்க.

கலுழ்ந்து வழிபாட்டிற்படுதலின் மனம் தன்வழித்தன்றிக் கலங்கிற்று. அழுதது உவகைக்கலுழ்ச்சி, விளிவில் கொள்கையென்றதனால், இது

வும் அழுகைப்பாற்படும். மாலை, இயல்பு. ஈமம், விறகு. வினைநூறு, சந்தனமுதலியன. ஒளித்திியோ, நின்மெய்யும் எரிநுகர்கின்றதோ. கதிரையுடைய ஆரம், திருவில்லை நின்று வீசுங்குழை. நீலக்கடிப்பிணை, குதம்பைபோல்வதோர்பணி. ஓ, இரக்கக்குறிப்பு. கொடிதென்றது, அரசர்க்குச் செய்யும் நீர்க்கடன் மரபு செய்யாமையை நோக்கி. வாயையும் பையையும் அணலையுமுடையதோர் நாகம். சிறுபிடியெனவே அக்களிறு கூடுதற்குரிய குலத்திற் பிறந்த பிடிகள் அன்றென்பது பெற்றாம். இக்கொடியென்றார் தம்மைப்பிறர்போல. இவர்கள் அரசற்குக் காமமொழிந்த நுகர்ச்சி கொடுத்தற்குரிய மகளிர். உகூகூ.

295. கதிர், must be taken with ஆரம், i.e. brilliant necklace.

297. செங்கட்குறுநரியோர்சிங்கவேற்றைச்
செருத்தாங்கதனிடந்தைச்சேர்ந்தாலொப்ப
வெங்கட்களியானைவேல்வேந்தனை
விறலெரியின்வாய்ப்பெய்தவன்பெயர்ந்துபோய்ப்
பைங்கட்களிற்றின்மேற்றன்பெயரினாற்
பறையறைந்தான்வேன்மாரிபெய்தாலொப்ப
எங்கணவருமினைந்திரங்கினா
ரிருண்மனத்தான்பூமகளைபெய்தினானே.

The assasin usurping the throne, and proclaiming himself king, was like a fox killing a lion and occupying its place. To the people this was like the pouring-forth of a shower of arrows.

இ-ள். நரி நிகரில்லாத சிங்கவேற்றைச் செருத்து அப்பொழுதே அதற்குரிய இடத்தைச்சேர்ந்தால் அச்சிங்கத்தின் தொழிலை நடத்தாது தன்றொழிலை நடத்துமாறுபோல, இருண்மனத்தானாகிய விறலவன் வேந்தனை எரிவாய்ப்பெய்து போய்ப் பூமகளை எய்தினான், அதுவேயன்றித் தன் பெயராலே பறைசாற்றினான், அது கேட்டு வேல்மழைபெய்தால் அதற்கு இரங்குமாறுபோல எவ்விடத்தவரும் இரங்கினாரென்க.

அவன்கருத்தால் மகளிர்பெய்தலின் அவன் பெய்தானென்றார். விறலவனென்க; இது இகழ்ச்சி. இனைந்து, கெட்டு. உகூஎ.

Take அவன் after விறல், thus விறலவன்.

சச்சந்தன் சரித்திரமுற்றும்.

The birth of Jivagan.

# சிவகன் உற்பத்தி.

## வேறு.

298. களிமுகச்சுரும்புண்கோதைகயிலெருத்தசைந்துசோர
வளிமுகச்சுடரினில்லாமனத்தொடுமயங்கியிப்பாற்
சுளிமுகக்களிறனான்றன்சொன்னயநெறியிற்போய
கிளிமுகக்கிளவிக்குற்றதிற்றெனக்கிளக்கலுற்றேன்.

We shall now revert to the history of the beautiful and bewildered Vijaya.

இ-ள். காற்றின்முன்னின்ற சுடர்போல ஒருவழி நில்லா மனத்தோடே எருத்திலே கோதை சோர மயங்கி, களிறனானது வார்த்தையின் பயனையுட்கொண்டுபோன கிளிபோலுங் கிளவிக்கு இப்பால் உற்றது சங்கு இத்தன்மைத்தென்று கூறுதலுற்றேனென்க.

களிக்கின்றநெறி. கயில், ஆகுபெயர். அசைந்துசோர, குலைந்து வீழ. சுளித்தல், கோபித்தல். ௨௯௮.

களிமுகச்சுரும்பு, the merry-faced beetle. வளிமுகச்சுடர், light burning before the wind. கிளிமுகக்கிளவி, she who spoke like a parrot, i. e. she whose words were distinct and pleasant. சுளிமுகக்களிறனான் i. e. the angry looking elephant-like Sachanthan.

299. எஃகெனவிலங்குவாட்கணெறிகடலமிர்தமன்னான்
அஃகியமதுகைதன்னாலாய்மயிலூருமாங்கண்
வெஃகியபுகழினான்றன்வென்றிவெம்முரசமார்ப்ப
எஃகெறிபிணையின்மாழ்கியிறுகிமெய்மறந்துசோர்ந்தாள்.

Whilst she was being carried by the machine, she heard Kattiankaran's shout of victory, and fainted away.

இ-ள். அரசனுக்கு வாளின்தன்மையாகிய கண்ணையுடைய அமுதனான், அவனை நீங்குதலாற் குறைந்தவலியாலே மயிலைச்செலுத்துகின்ற அவ்விசும்பிடத்தே புகழினானது கொடிய முரசார்ப்ப, அதுகேட்டு மாழ்கி மெய்மறந்து இறுகிச் சோர்ந்தாளென்க.

கூர்மைதான் இதன் வடிவென. ஆய்மயில், விசைகுறைந்த மயில். எஃகாலெறிந்த. மாழ்கி, மனமயங்கி. இறுகி, மூர்ச்சித்து. இது கையாறுதலிற் பொறி இடர்திரித்தல் ஆற்றுமையுணர்க. வேந்தாந்தன்மையை விரும்பியபுகழினான். ௨௯௯.

எறிகடல், i. e. அலைபெறுகடல், the wavy-ocean. அஃகியமதுகை, diminished strength, i.e. of Vijaya, being unable to guide the machine. வெஃகியபுகழினான், he who possesed the coveted glory, meaning the Rebel.

300. மோடுடைநகரினீங்கிமுதுமரந்துவன்றியுள்ளம்
பீடுடையவருமுட்கப்பிணம்பலபிறங்கியெங்குங்
காடுடையளவையெல்லாங்கழுகிருந்துறங்குநீழற்
பாடுடைமயிலந்தோகைபையப்பையவீழ்ந்ததன்றே.

The machine leaving the city, alighted in a place where corpses are burnt, in the midst of a dense jungle of ancient trees, where eagles dwell, and where even the stout-hearted would fear to approach.

இ-ள். அங்ஙனம் மூர்ச்சிப்பதன்முன்பு வலத்திலே முறுக்கின விசை

தானே கைவிட்டபின் இடத்தே புரிகின்ற தோகைமயில் அந்தரிளின்று நீங்கிச் சுடுகாட்டினேரே வீழ்ந்ததென்க.

பீடுடையவரும் உள்ளமுட்க எங்கும் பிணம் பெருத்துத் துவன்றிப் பிறங்கித் தானுடைய எல்லையெல்லாங் கழுகு உறங்கும் நீழலையுடைய காடென்க. பாடு, ஈண்டு இடப்பக்கம். உடைமயில், உடைகின்ற மயிலென வினைத்தொகை. பொறிக்கு, ஓடமுறுக்கியென்னும் வாசகம் முன்னருளதாகலின் அதற்கேற்ப உடைகின்றதென்றார். கையால் இடந்திரித்தாற் கடிதின் வீழ்கின்றது ஈண்டுத் தானே இடந்திரிதலிற் பையப்பைய நிலத்திற்கு அண்ணிதாக வீழ்ந்ததென்றார். வீழ்ந்தது, நிகழ்காலத்தில் தோன்றிய இறப்பு. ௩௱.

Another reading for கழுகு is கழுது, demon.

301. மஞ்சுசூழ்வதனையொத்துப்பிணப்புகைமலிந்துபேயும்
அஞ்சுமமயானந்தன்னுளகில்வயினூர்ந்தகோதை
பஞ்சிமேல்வீழ்வதேபோற்பல்பொறிக்குமிசெற்றிக்
குஞ்சிமாமஞ்ஞைவீழ்ந்துகால்குவித்திருந்ததன்றே.

The machine descended slowly and softly in the midst of the dense smoke of cremation, on the place which is even the dread of demons.

இ—ள். அங்ஙனம் வீழ்ந்த அந்த மயில், புகைமலிந்து பேயும் அஞ்சும் மயானத்தே வீழ்கின்ற பொழுது, மாலை பஞ்சின்மேல் வீழ்வதுபோல் மெல்லென வீழ்ந்து காலைக் குவித்திருந்ததென்க.

இருக்குமென்றும் பாடம். இம்மயிற் பொறியைக் கூளியதுருவாகிய தெய்வம் மறைத்துக் கட்டியங்காரனும் கோவிந்தனும் தேவியைத் தேடாமற் காத்ததென்றுகொள்க. அது பின்பு "கனியார்மொழியாட்கும் மயிற்கும் காமர்பதி நல்கி" எனச் சேரக்கூறிய வாற்றானும் உணர்க. பேயும், உம்மை சிறப்பு. அகில், ஆகுபெயர். மேகம், புகை, நிறத்திற்கு உவமம். குஞ்சி, மயிர். ௩௱௧.

302. வார்தருதடங்கணீர்தன்வனமுலைநனைப்பவேல்பெற்(று)
ஊர்கடலனையகாட்டுளச்சமொன்றானுமுள்ளாள்
ஏர்தருமயிலஞ்சாயலிறைவனுக்கிரங்கியேங்கிச்
சோர்துகிறிருத்தறேற்றுடுணைபிரிமகன்றிலொத்தாள்.

Vijaya came to her senses, and conscious of her condition, and fearless with regard to the place, she began to cry and lament concerning the fate of her husband.

இ—ள். மயிலஞ்சாயல், திருத்தல் தேற்றுதவள், காட்டிலே உணர்வு பெற்று இறைவனுக்கு இரங்கிக் கண்ணீர் முலையை நனைப்ப ஏங்கி அச்சமுள்ளாளாய் மகன்றிலை ஒத்தாளென்க.

வார்தலைத்தருகின்ற. ஏல், மணவெழுச்சி. தான் நிற்கின்றநிலையிற் கலக்கத்தாலே பேய்முதலியவற்றிற்குச் சிறிதும் அஞ்சாளாய் யாது செய்வல் என்று இரங்கி ஏங்கி அழுது. தேற்றுள், தொழிற்பெயர். அன்பு மிகுதியாற் கையாறுமுற்பதெலின் இறுகி எனக் கையாறுகூறி, இரங்கி எனக் கவலைகூறி, ஏங்கி என அரற்றுக்கூறி, அச்சமுள்ளாள் என அவலங்கூறி

ளூர். வருத்தந் தோன்றிநிற்றல் அவலம். வாய்விட்டழுதல் அரற்று. யாது செய்வலென்றல் கவலை. மூர்ச்சித்தல் கையாறு. ௩௱௨.

துகிற்றிருத்த = துகில் cloth, dress, திருத்த, to dress, to adjust. தேற்றுவோ, தேற்றுள் unconscious, துணை, pair, partner. மகன்றில், the அன்றில், the nightingale of India, [from அன்று, without, and இல், not], much celebrated by Poets for attachment to its mate, which, it is said never to leave, nor long to survive, to which Vijaya is compared.

303. உண்டெனவுரையிற்கேட்பாருயிருறுபாவமெல்லாம்
கண்டினித்தெளிகவென்றுகாட்டுவாள்போலவாகி
விண்டொடநிவந்தகோயில்விண்ணவர்மகளிற்சென்றாள்
வெண்டலைபயின்றகாட்டுள்விளங்கிழைதமியளானாள்.

She who lived in a lofty palace, was now doomed to be alone in the midst of skulls; as an example of the truth that every one must suffer the consequences of sin.

இ—ள். விளங்கிழை, கோயிலிலே விண்ணவர் மகள்போல நல்வினையின் வண்ணமாய் நடந்தவள், இப்பொழுது பல்லுயிர்களும் நுகரும் பாவமுண்டென்று நூலிலே கேட்பாரெல்லாம் இனி என்னைக் கண்டு தெளிவீராக, என்று உலகிற்குக் காட்டுவாள்போலத் தான் தீவினையின் வண்ணமாய்க் காட்டிலே தமியளானாளென்க.

மகப்பேறுகாலத்நிற்குத் துணையின்றி வருந்துதலிற் காட்டுவாள்போலவாகியென்றார். ௩௱௩.

வெண்டலை, bleached head, i. e., skull.

304. இருள்கெடவிகலியெங்குமணிவிளக்கெரியவேந்தி
அருளுடைமனத்தவாகியணங்கெலாம்வணங்கிநிற்பப்
பொருகடற்பருதிபோலப்பொன்னனூன்பிறந்தபோழ்தே
மருளுடைமாதருற்றமம்மர்நோய்மறைந்ததன்றே.

While the sepulchral light was shining, and the nymphs of the wood stood adoring, Vijaya gave birth to her illustrious child. It was as if the sun had risen on the ocean; and the mother's griefs were removed.

இ—ள். பெறுதற்கரியோன், மணிவிளக்கு ஏந்தி எரிய, அணங்கு வணங்கிநிற்ப, கடலிடத்துப் பருதிபோலப் பிறந்தபொழுதே மயக்கமுடைய மாதர் உற்ற வருத்தநோய் மறைந்ததென்க.

"கவாஅன்மகற்கண்டு தாய் மறந்தாங்கு" என்றார் பிறரும். முன் வெஞ்சுடரின் அவிந்தானெனக்கூறி, அச்சுடர் குழவியாய்த் தோன்றினமை கூறினார். ஞாயிறு தோற்றத்தில் இருளைப் போக்கியபின் மதியத்தைக் கெடுக்குமாறுபோல, இவனும் பிறந்தபொழுதே தேவியிருளைப் போக்கிப் பின்பு பகை வெல்லுமென்பது கருத்து. இக்கருத்தாற் செய்யோன் செழும் பொற்சரமென்றும், மதிவீழ்வதுபோல வீழ்ந்தானென்றுங் கூறினார். இகலி, விளக்கோடிகலி. ஏந்தி, மிக்கு. இவன் வீடுபெறுவனென்பது கருதித் தெய்வம் வணங்கிற்று. ௩௱௪.

The Commentator quotes the [illegible]. See Ch. on [illegible]. 1.

305. பூங்கழற்குரிசிறந்தபுதல்வனைப்புகன்றுநோக்கித்
தேங்கமழோதிதிங்கள்வெண்கதிர்பொழிவதேபோல்
வீங்கிளமுலைகள்விம்மித்திறந்துபால்பிலிற்றவாற்றாள்
வாங்குபுதிலதஞ்சேர்த்தித்திலதனைத்திருந்தவைத்தாள்.

Beholding with joy the son of her husband, she took him up, and placing a beauty-spot on his forehead, put him to her breasts, that her milk may flow.

இ—ள். ஓதி புதல்வனைநோக்கி, பிலிற்றுந்தனையும் ஆற்றாளாய் வாங்கி, திருந்தத் திலதமிட்டுத் திலதனை வைத்தாளென்க.

புதல்வன்பொருட்டு இவளைப் போக்குதலிற் குரிசில்தந்தபுதல்வனென்றார். முலைகள் திங்களின்கதிரைத் தாம் பொழிவதுபோலப் பால் சொரியும் பருவத்தளவும்பொறாளாய்ப் பாலை வலிய வாங்கியென்க: என்றது மகப்பயந்தோர்க்குப் பயந்தபொழுதே பால் சுரவாதாதலால். ௩௱௫.

புகன்று, lovingly. வாங்குபு for வாங்கி. See Nannul, Sutram, 343.

வேறு.

306. கறைபன்னீராண்டுடன்விடுமின்
காமர்சாலைதளிநிறுமின்
சிறைசெய்சிங்கம்போன்மடங்கிச்
சேராமன்னர்சினமழுங்க
உறையுங்கோட்டமுடன்சிமி
னொண்பொற்குன்றந்தலைதிறந்திட்(டு)
இறைவன்சிறுவன்பிறந்தானென்
றேற்பார்க்கூர்தோறுய்த்திமின்.

The mother seeing the child said: "When princes are born, taxes are exempt for 12 years, temples and chattrams are built and repaired, debtors are released, and gifts are dispensed.

307. மாடமோங்கும்வளநகருள்
வாம்பில்பண்டந்தலைதிறந்திட்(டு)
ஆடைசெம்பொனணிகலங்கள்
யாவும்யாருங்கலந்தெழுநாள்
வீடின்றிக்கொளப்பெறுவார்
விலக்கல்வேண்டாவீழ்ந்தீர்க்கும்
கோடிமூன்றேடனைச்செம்பொன்
கோமானல்குமெனவறைமின்.

"Treasuries are opened for seven days, and proclamations are made that all may take liberally what they please.

308. அரும்பொற்பூணுமாரமு
மிமைப்பக்கணிகளகன்கோயில்
ஒருங்குதொக்குச்சாதகஞ்செய்
தோகையாசற்குடன்போக்கிக்
கருங்கைக்களிறுங்கம்பலமுங்
காசுங்கவிகள்கொளவீசி
விரும்பப்பிறப்பாய்வினைசெய்தேன்
காணவிஃதோபிறக்குமா.

"Poets and Minstrels sing, and maidens dance, while gifts are liberally dispensed to them. But I have sinned, and thy fate is different, [O prince.]

"Alas! the howling of old jackals is thy music, the fire of cremation thy light, the burning-place thy palace, the hooting of owls, while the devils dance, is thy cradle hymn! Shouldst thou be thus born; does this become the condition of kings?

309. வெவ்வாயோரிமுழவாக
விளிந்தாரீமம்விளக்காக
ஒவ்வாச்சுடுகாட்டுயராங்கி
னிழல்போனுடங்கிப்பேயாட
எவ்வாய்மருங்குமிருந்திரங்கிக்
கூகைகுழறிப்பாராட்ட
இவ்வாறாகிப்பிறப்பதோ
விதுவோமன்னர்க்கியல்வேந்தே.

இ-ள். இவைநான்கும் ஒருதொடர். தேவி புதல்வனைநோக்கி, கோமானவன், கணிகள் சாதகஞ்செய்ய, ஓகைபோக்கி, வீசி, கறைவிடுமின், நிறுமின், சீறின், விலக்கல் வேண்டாவென்றறைமின், வீழ்ந்தீர்க்கு நல்குமென அறைமின், என்று விரும்பப் பிறக்கு நீ, ஓஒ தீவினைசெய்தேன் காண்டற்காகப் பிறக்கும்படி இத்தன்மைத்தாயிருந்தது, வேந்தே, இவ்விரண்டினும் இவ்வாறாகப் பிறப்பது மன்னர்க்கியல்போ, பேயாடக் கூகை பாராட்ட இதுவாகிப் பிறப்பது மன்னர்க்கியல்போ கூறாய், என்றாளென்க.

(1.) கறை, கடமை. बालग्रहारिष्टं பன்னீராண்டளவும் உண்டாகையினாலே இதற்குச் சாந்தியாகப் பன்னீராண்டுகடமை கொள்ளாதொழிதல் அரசியல்பென்று பன்னீராண்டென்றாள். இனி அரசர்க்குப் பதினோராண்டிலே உபநயனம்பண்ணிப் பன்னீராண்டிலே இல்லறக்கிழமைபூண்டு அரசவுரிமையெய்துதல் இயல்பாகலின், பன்னீராண்டும் உலகத்தார்க்குத் தானமாக விடுதல் இயல்பென்றலுமொன்று. உடன், சேர. சாலை, அறச்சாலை. தளி, கோயில். நிறுமின், இவற்றைப்படைமின். மன்னர் சிறைசெய் சிங்கம்போன் மடங்கிச் சினமழுங்கும்படி உறையும். சீமின், இடித்துத் தூய்மைசெய்மின். புதல்வற்பயந்தாற் சிறைவீடுசெய்தல், பிதிர்க்களுடைய தனிசு (கடன்) நீங்குதலாம். திறந்திட்டு, திறந்துபோகட்டு. சிறுவன் பிறந்தானென்று மகிழ்ந்தேற்பார்க்கு. உய்த்து, கொண்டுசென்று. இது தானம்.

(2.) மாநகர், கோயில். பண்டம், நெல்லுமுதலியன. யாவும், பிறவும். எழுபிறப்பிலுமுள்ள தீவினை நீங்குதற்கு எழுநாள் வீடலின்றிக் கொளப்பெறுவரென்றார். எழுபிறப்பாவன: மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீருட்டிரிவன, பருப்பதம், பாதவமென இவை எழுபிறப்பாகுமென்க. வீடல், விகாரம். வீழ்ந்தீர்க்கு, உயர்ந்த தானத்தைப்பெற விரும்பினீர்க்கு. உடம்பிற்கு மூன்றரைக்கோடி மயிருளவாகலின் ஒரு மயிர்க்கொருபொன்னாக மூன்றரைக்கோடி பொன் நல்குமென்றார். தலைசிறந்த பண்டங்களையும் ஆடைமுதலியவற்றையும் பிறவற்றையும் யாருங் கொள்ளைகொள்ளப் பெறுவாரை விலக்குதல் வேண்டாவென்க.

(3.) ஒருங்கு, சேர. ஓதை, உவகை. கவிகள், பெருமங்கலம் பா

டுவார். பிறப்பாய், பிறக்குநீ. இஃது, இத்தன்மைத்து. ஓ, இரக்கக் குறிப்பு. பிறக்குமா, பிறக்கும்படியென்னும்பொருட்டு; மாறு, மாவென விகாரமுமாம்.

(4.) வெவ்வாய், கொடியவாய். பிறப்பார்க்கொவ்வாச் சுடுகாடு. மருங்கு, பக்கம். ஓரி முழவாக, ஈமம் விளக்காக, அரங்கிலே பேயாடவென்க. இவ்வாறென்றது, தந்தை விரும்பும்படி நல்வினையுடைய தன்மையை. இதுவென்றது, செயலின்றித் தாய் வருந்தும்படி தீவினையுடைய தன்மையை.

ஓகாரம், இரண்டும் வினா. என்றெனவும், கூறாய் என்றாளெனவும் வருவிக்க. ஆகி, இரண்டிடத்திற்குங் கூட்டுக. ௩௱௯—௩௱௰.

In 308, கணிகர், actresses. ஒகை = உவகை, joyful news. கவிகள், poets. *Bâlagrahârishtam* = சௌனதோஷம், evil portent to the child, limited to twelve years, until which time alms are to be liberally dispensed, and then the ceremony called *Upânayana*, the investiture of the sacred cord, takes place, and is considered a second or spiritual birth.

310. பற்றுமன்னனகர்ப்புறமாற்
பாயல்பிணஞ்சூழ்சுடுகாடால்
உற்றுரில்லாத்தமியேனு
லொதுங்கலாகாத்தூங்கிருளான்
மற்றிஞ்ஞாலமுடையாய்நீ
வளருமாறுமறியேனல்
எற்றேயிதுகண்டேகாதே
யிருத்தியாலெனின்னுயிரே.

"Thou, the possessor of all, art in the enemies ground; the burning place is thy bed. I am alone without a soul to consult; the place is dark; Thou canst not be removed; how is it possible to grow up in such a place." Then looking to herself she exclaimed, "Is it possible that I can still live."

இ—ள். இஞ்ஞாலமுடையாய், நீ கிடக்கின்ற இடம் பகைவனிடமாய் இராநின்றது, நினது பாயல் சுடுகாடாய் இராநின்றது, யானும் உசாவுதற்கு ஓர் துணையுமில்லாத தமியேனாய் இராநின்றேன், நின்னைக் கொண்டுபோகக் கருதில் போகவொண்ணாத இருளாய் இராநின்றது, மேல் நீ வளருமாறும் அறியேனாய் இராநின்றேன் என்று பிள்ளையை நோக்கிக்கூறி, இனி இதுவும் இறந்ததே, இச்செய்தி கண்டும் போகாதே, கொடிய உயிரே, இராநின்றாய், இதற்குக் காரணம் என்னென்று கூறினாளென்க.

மற்று, வினைமாற்று. ௩௱௰.

311. பிறந்தநீயும்பூம்பிண்டிப்
பெருமானடிகள்பேராறும்
புறந்தந்தென்பாற்றுயர்க்கடலை
நீந்தும்புணைமற்றாகாக்காற்
சிறந்தாருளரேலுரையாயாற்
சிந்தாமணியேகிடத்தியான்
மறங்கூர்துங்கோன்சொற்செய்தேன்
மம்மர்நோயின்வருந்துகோ.

"Tell me O Chintamani! If thou, who art born to assuage my grief, and the virtuous saints, do not save me, who will? I obeyed thy cruel father, and this is my fate."

இ—ள். சிந்தாமணியே, நீ ஒன்றும் உணராயாமற் கிடவாநின்றாய், இனி எனது வருத்த நீக்கப்பிறந்த நீயும், பேரறத்தையுடைய அடிகளும் புறந்தந்து, என்னிடத்துப் பிறந்த துயர்க்கடலை யான் நீந்தும் புணையாகாதபொழுது, மற்று நின்னிலும் அவனினுஞ் சிறந்தார் உளரேல் உணர்க்கின்றிலை, நங்கோன் கூறிய காரியத்தைச் செய்த யான் வருந்தக்கடவேனோ என்று கூறினாளென்க.

சொல், ஆகுபெயர். வருந்துகு, வருந்துவேனெனத் தனித்தன்மை. ௩௱௰௧.

Chintamani, here, a name of endearment for the child, meaning a jewel, a string of precious gems, a darling. வருந்துகு. 1st. per. singular. See Nannul. S. 333.

312. அந்தோவிசையைபட்டனகொண்
டகங்கைபுறங்கையானாற்போற்
கந்தார்களிற்றுத்தங்கோமான்
கழியமயிலோர்மயிலூர்ந்து
வந்தாற்போலப்புறங்காட்டுள்
வந்தாடமியேயெனமரங்கள்
சிந்தித்திரங்கியழுவனபோற்
பனிசேர்கண்ணீர்சொரிந்தனவே.

"Alas! as the inner part of the hand may in an instant be turned uppermost, so were the circumstances of the king changed; seeing which the very trees shed drops of dewy tears."

இ—ள். அகங்கை போய்ப் புறங்கையான கடுமைபோல விசையை, கோமான் படாநிற்கப் புறங்காட்டின் வந்தவள், தனியே பட்ட தீங்குகளை உட்கொண்டு, அந்தோ! என்ன இரங்கி அழுவனபோல மரங்கள் தமக்கடுத்த பனியாகிய கண்ணீரைச் சொரிந்தனவென்க. ௩௱௰௨.

313. அடர்பொற்பைம்பூணரசழிய
வரும்பொற்புதல்வற்பெற்றிருந்த
இடர்கொணெஞ்சத்திறைவியு
மிருங்கண்ஞாலத்திருள்பருகிச்
சுடர்போய்மறையத்துளங்கொளிய
குழவிமதிபெற்றகங்குளிர்ந்த
படர்தீரந்தியதுவொத்தாள்
பணைசெய்கோட்டுப்படாமுலையாள்.

Vijaya having obtained a son after the king's death, her sorrows were alleviated, and she was like the evening twilight, which after the setting sun, is the harbinger of the fair moon.

இ—ள். உலகில் தீங்கினை நீக்கின அரசுபட, புதல்வனைப் பெற்றிருந்த படாமுலையாளாகிய இறைவியும் சிறிது இடர்தீர்ந்தமையால், இருளைப் பருகிச் சுடர் மறைய, குழவியாகிய மதியைப்பெற்றுச் சிறிது மனங்குளிர்ந்த அந்தி இடர்தீர்ந்த அத்தன்மையை ஒத்தாளென்க.

அடர், தகடு. உம்மை, சிறப்பு. படர்தீரந்தியது, அந்திசந்தியா தேவி. பணைசெய், பிழைத்தலைச்செய்த. ௩௱௰௩.

படாமுலையாள். noun in apposition with இறைவி, lady.

## வேறு.

While the mother was anxiously musing about the future of her child, a goddess, assuming the form of an old hunch-backed lady, came to her assistance.

314. தேன்மர்கோதைமாதர்திருமகன்றிறத்தையோராள்
யானெவன்செய்வலென்றேயவலியாவிருந்தபோழ்திற்
றானமர்ந்துறைழயினீங்காச்சண்பகமாலையென்னுங்
கூனியதுருவங்கொண்டோர்தெய்வதன்குறுகிற்றன்றே.

இ-ள். மாதர் திருமகன் நல்வினையை ஓராளாய், யான் யாதுசெய்வலென்று வருந்தியிருந்தவளிலே, ஒருதெய்வம் தான் இவளிடத்துநின்று நீங்காத சண்பகமாலையென்னுங் கூனியது வடிவைக்கொண்டு அமர்ந்து குறுகிற்றென்க.

இவன் அரசன் மகனாதலின் ஆண்டுறையுந் தெய்வம்வந்தது. தெய்வதம், வடமொழி. ருராயச.

எவன் for என்ன. See Nannul. S. 350.

She sympathised, and Vijaya was consoled. The old lady said, "This is my misfortune, that I should see you thus suffering."

315. விம்முறுவிழுமவெந்நோயவணுறைதெய்வஞ்சேரக்
கொம்மெனவுயிர்த்துநெஞ்சிற்கொட்புறுகவலைநீங்க
எம்மனைத்தமியையாகியிவ்விடருற்றதெல்லாஞ்
செம்மலர்த்திருவின்பாவாயான்செய்தபாவமென்றாள்.

இ-ள். அவ்விடத்துறையுந் தெய்வமாகிய கூனி சேர, பொருக்கென உயிர்த்து நெஞ்சிற் கவலைநீங்குதலாலே அக்கூனி அன்னாய், பாவாய், நீ இவ்விடருற்றதெல்லாம் யான் செய்த தீவினையாலே, இனி வருத்தம் நீங்கென்றாளென்க.

தேவியது விழுமத்தாலே நோயையுடையதாகிய தெய்வம். இன், அசை. தெய்வம் கூனியாய் நிற்றலின் உயர்திணையாற் கூறினார். ருராரு.

அவணுறை, அவண் there. உறை residing. Another reading வனத்துறை residing in the woods. The saying of the old lady "this is my sin," is the strong language of sympathy.

"This son, like Subramaniyan who was born in a flower, will govern the world by his word; a certain person is coming to take him away to protect him from the assasin. Let us be concealed."

316 பூவினுட்பிறந்ததோன்றற்
புண்ணியனனையநம்பி
நாவினுலகமெல்லா
நடக்குமொன்றாதுநின்ற
கோவினையடர்க்கவந்து
கொண்டுபோமொருவனின்னே
காவியங்கண்ணினாயா
மறைவதுகருமமென்றாள்.

இ-ள். அவள்: கண்ணினாய், நம்பி வார்த்தையிலே உலகமெல்லாம் நடக்கும்; அங்ஙனம் நடத்தற்குப் பொருந்தாதுநின்ற கட்டியங்காரனைக் கொல்லும்படி இவனை ஒருவன் இப்பொழுதே வந்து கொண்டுபோம், ஆதலால் யாம் மறைந்து நிற்பது கருமமென்றாளென்க.

தோன்றல், தலைமை. புண்ணியன், முருகன். ஈர, ஆகுபெயர். ௲௱௰௪.

Take ஒருவன் with வந்து. கொண்டுபோம் for கொண்டுபோவாள்.

317. இன்மணிமழலைநாவிற்கிண்கிணிசிலம்போடேங்கப்
பன்மணிவிளக்கினீழனம்பியைப்பள்ளிசேர்த்தி
மின்மணிமிளிரத்தேவிமெல்லவேயொதுங்குகின்றாள்
நன்மணியீன்றுமுந்நீர்ச்சலஞ்சலம்புகுவதொத்தாள்.

The child was laid on a bed [prepared by the old lady], and the mother before hiding herself [as the oyster that after casting its pearl on the shore retires into the ocean,]

318. ஏதிலாரிடர்பன்னூறுசெய்யினுஞ்செய்தவெல்லாந்
தீதிலவாகவென்றுதிருமுலைப்பான்மடுத்துக்
காதலன்பெயர்சுமந்தகதிர்மணியாழிசேர்த்திக் [றாள்.
கோதைதாழ்குழலினளைக்கொண்டுபோய்மறையநின்

Gave milk to her child, and blessing him said: "Let not thine enemies triumph over thee;" and then putting a ring on his finger, on which her husband's name was engraved, she retired a little way from the scene.

இ–ள். இவையிரண்டுமொருதொடர். கூனி நம்பியைப் பள்ளியிலே சேர்த்தி, தீதல்வாக என்று முலைப்பாலை மடுத்து ஆழி சேர்த்தினளாக, தேவி, கிண்கிணி சிலம்போடேங்க மணி மிளிர ஒதுங்குகின்ற அவள் சலஞ்சலம் மணியை யீன்று முந்நீரிலே புகுவதொத்தாள், அங்ஙனம் போகின்ற அக்குழலினளைக் கூனி கொண்டுபோய் மறைய நின்றாளென்க.

மணியாகியநா. பன்மணி, உயிர் நீத்தவர் பூண்ட மணி. நிழல், நீழல், விகாரம். ஏதிலர், அயலார். தீதிலவாக, நன்றாக, காப்பாக. அவள் முலையைப் பிடித்துக் கூனி கொடுத்தாள். ஆழி சேர்த்திற்று, அறிந்து வளர்த்தற்கு. சேர்த்தவென்க.

தெய்வம் ஒரு பள்ளியைத் தேவி அறியாதபடி நிருமித்ததென்றுணர்க. அது பின்பு ஆசிரியர் "பூந்தவிசினுச்சி" என்பதனானும் பெற்றாம். ௲௱௰௫.

சேர்த்தி for சேர்த்த. other Poets say that the oyster yeilds its pearls only by its death, so Auvai: நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங்காலத்திற், கொண்டகருவளிக்குங் கொள்கைபோ—லொண்டொடீஇ, போதந்தனங்கல்வி பொன்றவருங்காலமயன், மாதர்மேல் வைப்பார் மனம். But the Turtle comes and lays its eggs on the shore, and retires into the sea.

319. நல்வினைசெய்திலாதேனம்பிநீதமியையாகிக்
கொல்வினைமாக்கள்சூழக்கிடத்தியோவென்றுவிம்மாப்
புல்லியகொம்புதானேர்கருவிளைபூத்ததேபோல்
ஒல்கியோர்கொம்புபற்றியொருகணேனேக்கினின்றாள்.

And stood watching from behind a tree with eyes that appeared like blossoms, and weeping, said: "Beloved, Thou art lying in the midst of wild animals. I was fortunate enough to give thee birth, but not to bring thee up."

இ–ள். அப்பொழுது அத்தேவி நின்னைப் பெறுதற்கு நல்வினை செய்து, வளர்த்தற்கு நல்வினை செய்யாதேனுடைய நம்பி, நீ தனியையாய்க் கொடிய விலங்குகள் சூழக் கிடத்தியோ என்று அழுது, கொம்பைப் புல்

விய கருவிளை தான் ஒரு பூவைப் பூத்ததுபோல ஓர் கொம்பைப்பற்றி ஒது ங்கி ஒரு கண்ணாலே நோக்கி நின்றாளென்க. ௩௱௰௯.

இலாதேன் is வினையாலணையும்பெயர், 1st p. sing. மாக்கள் here for beasts. விம்ம for விம்மி. See Nannul, S. 243.

**320.** நாளொடுநடப்பதுவழுக்கிமின்னோடேர்
கோளொடுகுளிர்மதிவந்துவீழ்ந்தெனக்
காளகவுடையினன்கந்துகாமனும்
வாளொடுகனையிருள்வந்துதோன்றினான்.

Then appeared at night, in deep darkness a personage named *Kandugan*, clad in black, with sword in hand, as if the moon that moves with the stars had come down to earth, surrounded by clouds;

இ-ள். அவன் அங்ஙனம் நிற்க, மதி நடக்கின்ற இருபத்தேழ் நாளினைத் தப்பி மின்னொடு செல்கின்ற மேகத்துடனே வந்து வீழ்ந்ததெனக் கந்துக் கடனுங் கருமையை இடத்தேயுடைய உடையினனாய்க் கனை இருளிலே வாளொடு வந்து தோன்றினானென்க.

நடப்பது, தொழிற்பெயர். ஊர்கோள், வினைத்தொகை, ஆகுபெயர். கோள், பாம்புமாம். இதற்கு உம்மை விரிக்க. நாமனும், உம்மை சிறப்பு. ௩௱௨௰.

**321.** வாள்கடைந்தழுத்தியகண்ணினார்கடந்
தோள்கடைந்தழுத்தியமார்பன்றாங்கிருள்
நீள்சுடர்நிழன்மணிகிழிப்பநோக்கினான்
ஆள்கடிந்தணங்கியவணங்குகாட்டுளே.

And by the light which flashed from his sword, he observed a child in this wild place.

இ-ள். கண்ணினார் தோள் அழுத்திய மார்பன், காட்டிலே செறிந்த இருளைச் சுடரையுடைய மணி கிழித்தலாலே பிள்ளையை நோக்கினானென்க.

அழுத்தினாற்போலுங் கண். தோள்கடைதல், புல்லுதல் விசேடம். அணங்குகள் ஆளைக்கடிந்து வருத்திய, காடென்றதற்கு அடை. ௩௱௨௰௧.

**322.** அருப்பிளமுலையவர்க்கனங்கனாகிய
மருப்பிளம்பிறைநுதன்மதர்வைவெங்கதிர்
பரப்புபுகிடந்தெனக்கிடந்தநம்பியை
விருப்புளமிகுதியின்விரைவினெய்தினான்.

And seeing the illustrious child, he ran to him with great delight.

இ-ள். பிறைபோலும் நுதலையுடைய முலையவர்க்கு அனங்கனாதற்கு இப்பொழுது உதையத்திளஞாயிறு கிடந்ததெனக்கிடந்த நம்பியை, அவன் விருப்பத்தையுடைய மனச்செருக்காலே விரைவொடு சேர்ந்தானென்க.

அரும்புபோலுமுலை, விகாரம். மருப்பு, கோடு. மதர்வை, மயக்கம். பரப்புபு, கதிர் தனது கிரணங்களைப் பரப்பாநின்று. கிடந்ததென, விகாரம். ௩௱௨௰௨.

323\. பூணைகதிர்த்திருமணிப்பொன்செய்மோதிரம்
வணைமலர்த்தாரினுனமறைத்துவண்கையால்
துணைகதிர்முகந்தெனமுகப்பத்தும்மினன்
கிணைமறைந்தொருகுரல்சிவவென்றதே.

And securing the precious ring that was on the child's finger, he took him up with both his hands, with fond affection. The child then sneezed, and a voice was heard from a tree, and the sound "*Jiva*" proceeded from it.

இ—ள். தாரினுன் மோதிரத்தைப் பிறரும் அறிவரென மறைத்து, கையாலே ஞாயிற்றை எடுத்தாற்போல நம்பியை எடுப்ப, அவன் தும்மினன், அப்பொழுது அத்தெய்வம் கிணையிலே மறைந்து நின்று சீவிப்பாயாக என்று ஒருகுரல் வாழ்த்திற்றென்க.

வணைதல், கைசெய்தல். துணைகதிர், இருளைநீக்குதற்கு விரைகின்ற கதிர். எல்லாப் புலன்களுக்கும் விருப்பஞ்சேரலின் முகப்பவென்றார். "மன்னெயின்முகவை" என்றார் பிறரும். தும்முதல், நன்னிமித்தம். சிவ, வேண்டுகோளாகிய வியங்கோட்கண் வந்த வடசொல். தேவி அச்சத்தாற்றானுள்ளே வாழ்த்துதலின் ஒருகுரலென்றார். ௩௨௩.

*Jiva*, is a word of blessing, meaning, "may you live." This was the old lady's word, but was taken for a divine utterance, and it became the name of the child.

324\. என்பெழுந்துருகுபுசோரவீண்டிய
அன்பெழுந்தரசனுக்கவலித்தையனை
துன்பழுப்பகைதவறுறுவாயென
இன்பழக்கிளவியினிறைஞ்சியேத்தினள்.

The mother then thought of her husband, and filled with love for him and the child, she looked up to God, and adoring, blessed the child, saying, "May you live and conquer your foes."

இ—ள். அப்பொழுது தேவி, கந்துகன் பிள்ளையை எடுத்தது கண்டு பழைய அன்பு தோற்றி அவலித்து, பின்பு தெய்வத்தை வணங்கி ஐயனைப் பகைதவ றுறுவாயென வாழ்த்தினளென்க.

என்புக்குள்ளே எழுந்து உடலுருகிய வளர்ந்த அன்பு. அரசனுக்குப் புத்திரமுகங் காணும் நல்வினையின்மை கண்டு வருந்தி. தவ, மிக. கிளையற றுறுவாயென்பது கருத்து. துன், திசைச்சொல். ௩௨௪.

325\. ஒழுக்கியலருந்தவத்துடம்புநீங்கினார்
அழிப்பரும்பொன்னுடம்படைந்ததொப்பவே
வழுக்கியபுதல்வனங்கொழியமாமணி
விழுத்தகுமகனொடும்விரைவினேகினன்.

This man who had just then lost his own child, finding another far more precious, is like one who for the reward of penance, loses his own terrestrial, but obtains a celestial body.

இ—ள். கந்துகன், அருந்தவத்தே நின்ற உடம்பை விட்டவர் மேலான உடம்பைப் பெற்ற நிலைமையை ஒப்ப, தன்புதல்வன் காட்டிலே கிடப்ப, மணிபோல விழுத்தக்க மகனைக்கொண்டு விரைவோடே ஏகினனென்க.

ஒழுக்கத்திலே இயன்ற தவம். அழிப்பரும் அருந்தவமென்க. தவ உடம்பை இவன் புதல்வனுக்கு உவமை கூறினார், அவனாலே சீவகனைப் பெறுதலின். ௩௨௫.

வழுக்கிய புதல்வன், a son missed, slipped, i.e., dead.

326. மின்னடுகனையிருணிந்திமேதகு
பொன்னுடைவளநகர்பொலியப்புக்கபின்
தன்னுடைமதிசுடத்தளருந்தையலுக்(கு)
இன்னுடையருண்மொழியினியசெப்பினான்.

He took the child home to the city in the dark night, and comforted his wife saying,

இ-ள். அவன் இருளை நீந்தித் தன் மனையிலே புக்கபின் தையலுக்கு முனிவன் கூறிய இரண்டு மொழியினும் இனிய மொழியைக் கூறினானென்க.

பொலிய, துன்பம் நீங்கி இன்பம்நிகழ. தன்னுடைமதி, பெண்மதி. இன்மொழி, புண்ணியற்பெறுதிரென்றது. அருளுடைமொழி, பின்னையு நிகழ்வதுண்டென்றது. எல்லார்க்கும் அருள் பிறத்தலிற் சிறைகோடலை அருளென்றார். ௩௨௬.

327. பொருந்தியவுலகினுட்புகழ்கண்கூடிய
அருந்ததியகற்றியவாசில்கற்பினாய்
திருந்தியநின்மகன்றீதினீங்கினான்
வருந்தனீயெம்மனைவருகவென்னவே.

"My dear wife, thou art indeed virtuous as Arundhati,* sorrow not for the son that is dead; he is restored to us again."

328. கள்ளலைத்திழிதருங்கனிகொள்கோதைதன்
உள்ளலைத்தெழுதருமுவகையூர்தர
வள்ளலைவல்விரைந்தெய்தநம்பியை
வெள்ளிலைவேலினான்விரகினீட்டினான்.

Hearing this, her heart leaped for joy; and she came forward; and her husband carefully put the child into her hands.

இ-ள். இவை இரண்டும் ஒருதொடர். கந்துகன்: கற்பினாய், நின்மகன் சாதலினின்றுந் தப்பினானெனச் செப்பினான், செப்பி இனி வருந்தல்

---

**Arundhati* is the wife of Vasishta, one of the seven great *Rishis*. She is celebrated for her conjugal fidelity, and is a pattern of female chastity. The legend about her marriage is interesting. Vasishta was resolved to marry no other woman but the one that was *proved* to be virtuous. In order to effect this, he got some grains of artificial rice made of steel, and went about looking for the woman that in the process of cooking could convert the artificial into real rice. He found none amongst the Brahmans and other castes; but at last a beautiful maiden of the Paria Caste presented herself, and proved her virtue, according to the desired test. The marriage was proclaimed, and the gods were invited. But they were offended at the inferiority of the Bride, and the meanness of the place. Vasishta felt the insult, and was determined to make the gods feel the power of his wife's virtue. He took Arundhati to a forest, and commanded her to stand on a particular spot until he returned. The husband disappeared, and the wife stood still for years alone on the very spot, with her mind intent on obeying her husband's commands. So powerful was the penance she was performing, that the flame of it reached heaven and distressed the gods. Unable to bear it any longer, the gods repaired to Vasishta, and begged of him to forgive their folly, and to rejoin and propitiate his virtuous wife. He did so. And he is now supposed to be the Pole star (*Dhruva*), and she the attendant star. In the marriage ceremony, this star is invoked by the bridegroom, and the bride is enjoined to follow the virtuous example of Arundhati. Another name for her is *Akshmálá*. *Manu* refers to her when he says (ix. 23.) that "a woman acquires the qualities of the husband with whom she is duly united, as a river, from its union with the sea, acquires its qualities, as in the case of Arundhati, who though of the lowest origin, became highly honourable from her union with Vasishta."

எம்மில்லாளே, வருகவென, சோதை உவகை பாத்தலால் வெள்ளலை மிக விளைக்கெய்த, வேலினுன் நம்பியை விரகால் கீட்டினுனென்க.

உலகிற் பொருந்திய புகழெல்லாங் கூடிய அருந்ததிக்கற்பை அசற்றிய சற்பினய். ஆசு, குற்றம். திருந்திய, நல்வினை திருந்திய. வருந்தல், அல் ஈற்று வியங்கோள். எம்படீன, எம்மில்லாளே. தேன் இதழை அலைத்து இழிதற்குக் காரணமான களிப்பு. உள்ளலைத்து, தன்னெஞ்சிலே தாங்கிற்று. இது மகஅழியின் வாழேனென்றவன் உயிரையும் மேற்பொருள்களையுங் கொடுத்தலின் வள்ளலென்ருர். விரகு, தேவி சேர்த்தினதிலகத்தை மாற்றினது. ௩௨௮.

விரகினீட்டினுன், he carefully gave. The Commentator says that the husband took care to remove the spot put by the mother on the child's forehead, lest he should be discovered.

329\. சரிமுகவலம்புரிஞுவைத்ததூரியம்
விரிமுகவிசும்புறவாய்விட்டார்த்தன
எரிமுகநித்திலமேந்திச்செந்தபோற்
கரிமுகமுலையினர்காய்பொன்சிந்தினர்.

There was great rejoicing in the house that day, music resounded, and alms were liberally distributed.

இ—ள். அப்பொழுது வலம்புரி இசைத்தன, நால்வகை வாச்சியங்களும் ஆர்த்தன, நித்திலம் ஏந்துதலால் சோபித்தனபோற் கரிந்தமுகத்தையுடைய முலையினர் எரிமுகத்தே காய்ந்தபொன்னைக் கொள்ளையூட்டினுரென்க. ௩௨௯.

330\. அழுகுரல்மயங்கியவல்லலாவணத்(து)
எழுகிளைமகிழ்ந்தெமதாசுவேண்டினுன்
கழிபெருங்காதலான்கந்துகாமனென்(று)
உழிதருபெருநிதியுவப்பநல்கினுன்.

Kattiyakaran, hearing the sound of rejoicing in the Royal street, which was overwhelmed with grief, thought that Kandugan was manifesting joy at his assumption of the throne, sent him rich presents.

இ—ள். அதுகேட்டுக் கட்டியங்காரன், அரசிருப்பிற்குத் தொடர்ந்த பீடிகைத் தெருவிலே இருந்தும் கந்துகன் எமது அரசாட்சியை விரும்பினுன், ஆதலான் மிக்க காதலையுடையனென்றுகொண்டு அவன் உவப்ப நிதியை நல்கினுனென்க.

அரசன் படுதலால் அழுகுரல். எழுகிளை; எழுபிறப்புங் கிளையை விரும்பி; வளர்கின்ற கிளையுமாம். உழிதரு, ஓரிடத்து நில்லாது திரியும். ௩௩௰.

331\. திருமகற்பெற்றெனச்செம்பொற்குன்றெனப்
பெருநிலநிதிதலைதிறந்துவீடுடை
இருநிலத்திரவலர்க்கார்த்தியின்னணஞ்
செருநிலம்பயப்புறச்செல்வன்செல்லுமே.

Because a son was born in the house, alms were liberally bestowed on the worthy, that blessings may be obtained for him.

இ—ள். செல்வன் திருமகனைப் பெறுதலாலே கட்டியங்காரன் நல்வினைபின்பு, நிதியைப் பீடுடைய இரவலர்க்கு ஆர்த்தி, அம்மகன் போரிலே

தன்பகையை வெல்லவேண்டி மேலும் இங்ஙனங் கொடைக்கடன் பூண்டு ஒழுகுமென்க.

"அருளிலர் கொடாமை வல்லராக" என்றார் பிறரும். ஆழியாற் குல னுணர்தலின் அதற்குரிய தொழிலே கருதினான் கந்துகனும். பெற்றென வார்த்தி, எனவெனெச்சம் காரண காரியப்பொருட்டு: மருந்து தின்றெனப் பிணி நீங்கிற்று என்றாற்போல. குன்றெனப் பெரிய. செருநிலம் பயப்புற, அரசன் போர்செய்த இந்நகர்தன்னிலே சிவகனும் போர்செய்து பிறந்த பயன் உறவேண்டி. ௩௩௧.

வேறு.

When Jivagan was taken away, the mother, who stood behind the tree, fell as a body bereft of life, and felt as if she was a shipwrecked mariner on the wavy ocean.

௩௩௨. நல்லுயிர்நீங்கலுநண்மாண்புடையதோர்
புல்லுயிர்தன்னொடுநின்றழிப்புல்லுயிர்
கல்லுயிர்காட்டுட்காப்பக்கலங்கவிழ்த்(து)
அல்லலுற்றானுற்றதாற்றவுளாப்பாம்.

இ-ள். தேவி தனது நல்லுயிர் நீங்குதலாலே புல்லுயிருடனே நின்ற விடத்து, அதனைக் காட்டிலே விதி மறைத்தலாலே ஒருவன் மரக்கலங் கவிழ்தலால் அவன் உற்ற வருத்தத்தைத் தான் காட்டிடத்தே உற்று அவன் மேல் உற்றதனை முடிவுபோக உளாப்பாமெனத் தேவர் கூறினரென்க.

நல்லுயிர், சச்சந்தன். புல்லுயிர், பிள்ளை. காப்ப, செய்விப்பதன் தொழில். கவிழ்த்தவல்லல், இது காரணகாரியம் கருவிக்கண் அடங்கும்; உண்ட எச்சில்போல. உற்றது என்று இறந்தகாலத்தாற் கூறினர், கதையை உட்கொண்டு. ௩௩௨.

She wept bitterly. The old lady comforted her, relating to her the future history of the child; and she was consoled.

௩௩௩. பொறியறுபாவையிற்பொம்மெனவிம்மி
வெறியுறுகோதைவெறுநிலமெய்த
இறுமுறைசெழுச்சியினெய்துவதெல்லாம்
நெறிமையிற்கூறநினைவினகன்றாள்.

இ-ள். கோதை விம்மிப் பாவைபோலே நிலனெய்துதலாலே, கூனி அந்தத்திலும் ஆதியிலும் எய்துங் காரியத்தை எல்லாம் நெறியாலே கூற, அவள் வருத்தத்தினின்று நீங்கினளென்க.

பொறி, எந்திரம். பொம்மென, கடுக. எய்துவதெல்லாம் என்றார், "ஒருமை சுட்டிய பெயர்நிலைக்கிளவி பன்மைக்காகுமிடனுமாருண்டே" என்றதனால். நெறிமை, பகுதிப்பொருள் விகுதி. கணவால் ஆக்கமும் உளதென்று கருதிய தேவி மனங்கொள்ளும்படி கூனி தன் தெய்வத்தன்மையான் மேல்வருவன கூறலின் அதனையுட்கொண்டு நினைவினகன்றாளென்க. ௩௩௩.

Vijaya then asked the old lady what she was to do in behalf of her illustrious son. The sympathising old lady said.

334. பெருமகற்காக்கம்பிறழ்வின்றிக்கேட்டே
திருமகடானினிச்செய்வதையெல்லாம்
ஒருமனத்தன்னாயுணையெனலோடுந்
தெருமருதெய்வதஞ்செப்பியதன்றே.

இ—ள். மகனுக்கு ஆக்கம் பிறழ்வின்றாகக் கேட்டுத் தேவி தான் இனி யான் செய்யுங் காரியங்களெல்லாம் அன்னாய், உணாயாய் என்றதலோ டும் தெய்வம் தணிந்து செப்பிற்றென்க.

அது மேற்கூறுகின்றார். ஏகாரம், ஈற்றசை. செய்வதை, வினைத் திரிசொல். இருவர்க்கும் ஒருமனம். ஓடு, உடனிகழ்ச்சி. தெருமரு தெய்வதம், புதல்வன், அன்னப்பார்ப்பைப் பிரித்த தீவினையை உறுகி ன்ற தன்மையைத் தானுணர்ந்து அதற்கு அவனை வேறொரிடத்து நீக்கித் தேவி யைத் தனியே கொண்டுபோகின்றதற்கு வருந்துகின்ற தெய்வம். செப் பியது, கணவனை இழந்தார்க்கு நோன்பு கடனாதலின் அதற்கு இயைவ தோர் கருமம் தேவிக்குக் கூறிற்று. ௩௩௪.

"Let us leave this benighted place immediately, and go to the river Amarikai."

335. மணியறைந்தன்னவரியறலைம்பாற்
பணிவருங்கற்பிற்படைமலர்க்கண்ணாய்
துணியிருட்போர்வையிற்றுன்னுபுபோகி
யணிமணற்பேர்யாற்றமரிகைசேர்வாம்.

இ—ள். நீலமணியிலே அறலை அழுத்தியன்ன ஐம்பாலினையும், உலகெ ல்லாம் நினைது ஏவலிலே வருதற்குக் காரணமான கற்பினையும் உடைய படைபோலுங் கண்ணாய், இருளாகிய போர்வையிலே மறைந்து போய், அமரிகையென்னும் பேர்யாற்றில் அணிமணலிலே அயர்வுயிர்ப்பாம், அத னைத் துணி என்றாளென்க.

பகைநிலத்தை இருளிலே கழிவாமென்றாள். ௩௩௫.

[illegible], here refers to the five ways of putting up the hair. [illegible], ripple—marks of black sand, i., e. curly hair. The river is called *Amarikai*, probably from, *amari*, ambrosia, nectar.

"500 Yojanas from thence is a city called Tharanithilakam which belongs to us; we need not go there.

336. அமரிகைக்கோசனையைம்பதுசென்றாற்
குமரிக்கொடிமதிற்கோபுரமூதூர்
தமரியலோம்புந்தரணிதிலகை
நமராமற்றதுநண்ணலமாகி.

"But let us retire to Dandakaranium, where ascetics live and perform their devotions, and let us live there."

337. வண்டார்குவளைய்வாவியும்பொய்கையுங்
கண்டார்மனங்கவர்காவுங்களுளிய
தண்டாரணியத்துத்தாபதப்பள்ளியொன்(று)
உண்டாங்கதனுண்ணுறைகுவமென்றாள்.

இ-ள். இவை இரண்டும் ஒருதொடர். அந்த அமரிகைக்கு ஐம்பது யோசனைபோஞல் தாணிதிலகமென்று மூதூர் நகரது, அதனைச் சேரே மாய், மற்றுவாவியும் பொய்கையும் காவும் நெருங்கிய தெண்டகாரணியம் என்கின்ற வனத்தே ஒரு தாபதப்பள்ளி உண்டு, அதனிடத்தே அவர் உறைகின்றாற்போல உறைகுவம் என்றுகொள்க.

ஓசனை, வடசொற்சிதைவு. குமரி, மதில். உலகிற்கெல்லாந் தமராம் இயல்பை நடத்தும். தேவி கோற்றத்துத் தாபதப்பள்ளி வேண்டுதலாலும், அரசனை அமரில் நீத்து, புதல்வனைப் புறங்காட்டில் நீத்து, தமரிடத்துச் சேறலாகாமையாலும் கூனி கண்ணலேமாகியென்றாள். வாவி, ஆற்றிலோடை. பொய்கை, மானிடர் அரக்கர்தம் நீர்நிலை. ஆங்கு, உவம உருபு. ௩௩௭.

337. கண்டார்குவளையகனி, குவளை is குறிப்புப்பெயரெச்சம், meaning a tank of *Kuvalai* flowers (water lilies,) The city is called *Taranitilakam*, i.e. the beauty spot of the world, an oasis. தாபதப்பள்ளி, residence of devotees.

338. பொருளுடைவாய்மொழிபோற்றினள்கூற
மருளுடைமாதர்மதித்தனளாகி
அருளுடைமாதவத்திசைமுன்னி
இருளிடைமின்னினிலங்கிழைசென்றாள்.

Vijaya approving of this excellent advice, left the place, as if she were a flash of lightning darting through darkness.

இ-ள். பொருளுடை முதல், நடங்கொடாமலை என்பது ஈருக ஐந்தும் ஒருதொடர். புதல்வற்பயந்த புனிறு தீராது இராத்திரியிற் சேறல் அரிதென்று கருதி, தெய்வம் தன் தெய்வத்தன்மையாற் கொண்டுபோகின்ற விரைவுதோன்ற மின்னினென்றார். மருளுடைமாதர், மயக்கந்தீர்ந்த மாதர். இது கேளிரைக் கண்டால் பிறந்த துன்பமாதலில் தமரிடைச் சேறலாகாதென்று நோற்பலென்று யான் கருதியதனையே கூறினுளென்று அவளே கூறினளாகக் கொண்டமை தோன்ற மதித்தனளாய் என்றார். ௩௩௮.

வேறு.

339. உருவமாமதிவாண்முகத்தோடிய
இருளிலும்மெறிமாமகரக்குழைத்
திருவிலும்பிவைதேமொழிமாதரைப்
பொருவினீள்சுரம்போக்குவபோன்றவே.

The brilliant ornaments she wore in her ears, served to lighten her path in her long journey.

இ-ள். முன்பு நிறைமதிபோலும் முகத்திலொளி, இப்பொழுது வருத்தத்தாற் கெட்ட கரிய ஒளி: இருங்கண்யாமனைபோல். பொருவில், வெம்மையால் ஒப்பில்லாத. அதர் போக்குவ என்பதும் ஒருபாடம். விளக்கு, ஆகுபெயர். ௩௩௯.

## வேறு.

The tingling and rustling of her jewels and clothing were as if they expressed their grief. She wrapped herself from head to foot, as a coral branch covered with a spider's web.

340. சிலம்பிரங்கிப்போற்றிசைப்பத்
திருவிற்கைபோய்மெய்காப்ப
இலங்குபொற்கிண்கிணியுங்
கலையுமேங்கவெறிவேற்கண்
மலங்கமணிமலர்ந்த
பவளக்கொம்புமுழுமெய்யுஞ்
சிலம்பிவலந்ததுபோற்
போர்வைபோர்த்துச்செல்லலுற்றாள்.

இ–ள். வில்லென்னும் பெயர்பற்றி விற்படை பக்கத்தே காப்ப என்றார். கண்மலங்க, தனியே போதற்கு அஞ்சி, சுழல: வலம்புரி சலஞ்சலம் வளை இயது ஒத்தவளாதலின். மணியைப் பூத்ததோர் பவளக்கொம்பைச் சிலம்பி சூழ்ந்ததுபோல் மெய்முழுதும் போர்வையாலே மறைத்து. ௩௱௪௰.

She walked on the rugged path, and her exceedingly delicate feet were blistered.

341. பஞ்சியடானிச்சநெருஞ்சியீன்றபழமாலென்(று)
அஞ்சுமலாடிகளரங்கண்டன்னவருங்காட்டிட்
குஞ்சித்தசைந்தசைந்துகுருதிகான்றுவெய்துயிரா
வஞ்சியிடைநுடங்கமயில்கைவீசிநடந்ததே.

இ–ள். பஞ்சி அடலையும் அனிச்சத்தையும் நெருஞ்சிப்பழமென்று கருதிக் குஞ்சித்து அசைந்தசைந்து குருதி கான்று அஞ்சுமலரடி என்க. கைவீசி என்று வருந்தாமை கூறினர். ஈன்ற என்றார், பழத்தின் செருக்கால், அரம், வாளாம், குஞ்சித்து, குருதி, வெய்துயிரா, மயில் நடந்ததே, நடந்த தன்மையே. ஏகாரம், தேற்றம். ௩௱௪௰௧.

பஞ்சியடானிச்சம், i. e., the soles of Vijaya's feet were more delicate than even the flower of the sensitive plant which is softer than cotton.

## வேறு.

Vijaya and the old lady, walking through the rugged road came to an island, surrounded by a river.

342. தடங்கொடாமரைத்தாதுறைதேவியுங்
குடங்கைபோலுண்கட்கூனியுங்கூர்பாற்
கடங்களும்மலையுங்கடந்தார்புனல்
இடங்கொள்யாற்றகமெய்தினரென்பவே.

இ–ள். கூனி மொழிச்சொல் விரும்பினளாய்க் கூற, அதனை மாதர் மதித்தனளாய் மாதவர் இருக்கின்ற அத்திசையைக் கருதிப் போர்வைபோர்த்து அருங்காட்டிலே இடை நுடங்கக் கையை வீசி நடைக்கு வருந்தாத ஓர் மயிலின் நடந்ததன்மையே மலரடிகளாலே செல்லலுற்றாள்; அப்பொழுது இருவிலும் திருவிலும் மாதனா இரவிடை வழிபோக்கும் விளக்குப் போன்றன, அவ்விளக்கிலே கூனி ஒழிய வேறொருவர் இன்மையிற் கண்

அலமருதலாற் சிலம்பிசைப்பத் திருவிற் காப்பக் கிண்கிணியுங் கலேயும் எங்க, கடங்களும் மலையுங் கடந்து அந்த இலங்கிழை மின்போலச் சென்றாள்; இங்ஙனஞ் சென்ற தாதுறை தேவியும் அவளுடனேகேற்பச்சென்ற கடனியும் பின்னர் ஆற்றிடைக் குறையைச் சேர்ந்தாரென்க.

புனலிடங்கொண்ட. ரீருந்த. என்ப, அசை. ௩௪௨.

343. எல்லேயெய்தியவாயிரச்செங்கதிர்
மல்லன்மாக்கடற்றோன்றலுமவ்விருள்
தொல்லேநல்வினைமுற்படத்தோன்றிய
அல்லல்வெவ்வினைபோலவகன்றதே.

It then dawned, and the darkness was dispersed, even as evil is dispersed when good comes in.

இ—ள். எய்தின அளவிலே ஒருவர்க்கு நல்வினை வந்துதோன்ற, அதற்குமுன்னே தோன்றிநின்ற தீவினை அகலுமாறுபோல, உலகம் பகற்பொழுதைப் பெறவேண்டிக் கதிர் கடலில் தோன்றின அளவிலே இருள் அகன்றதென்க.

மல்லல், மணிமுதலியவளன். ௩௪௩.

344. நுணங்குநுண்கொடிமின்னேர்மழைமிசை
மணங்கொள்வார்பொழில்வந்தகிடந்ததொத்(து)
அணங்குநுண்டுகின்மேலசைந்தாளரோ
நிணங்கொள்வைநுதிவேனெடுங்கண்ணினாள்.

She went, and as lightening in a cloud, laid down in a grove with her clothes, and slept.

இ—ள். கண்ணினாள் அவ்வாற்றிடைக்குறையிற் பொழிலிலே வந்து மஞ்சிலே ஒரு மின் கிடந்த தன்மையை ஒத்துத் துகிலின்மேலே கிடந்தாளென்க.

மிகவும் நுண்ணிய ஒழுங்குபட்ட மின். அணங்கும், இழை தெரியாது வருந்தும். ௩௪௪.

345. வைகிற்றெம்மனைவாழ்கியபோழ்தெனக்
கையினடிதைவரக்கண்மலர்ந்(து)
ஐயவோவென்றெழுந்தனளாய்மதி
மொய்கொள்பூமிமுளேப்பதுபோலவே.

When it was time the old lady woke Vijaya; she opened her eyes and cried, "alas!"

இ—ள். அப்பொழுது கடனி, எம்மன்னாய், வாழ்வாயாக, பொழுது வைகிற்றென்று அடியைத் தடவ, கண்ணை விழித்து ஐயவோ என்று மதி பூமியிலே முளைத்ததுபோல எழுந்தாளென்க.

தெய்வம் கடனி வடிவாய் நிற்றலின் தொழிற்கேற்ப அடிதைவந்தது. ஈண்டு அரசனைக் கனவிற்கண்டது நனவாகாமையின் ஐயவென்றாள். ஓ, இரக்கக்குறிப்பு. ஆய்மதி, ஒளியற்றமதி. அதுவும் உதையத்தே தோன்றும். மொய்கொள், அறுச்செறிக்க. முகமெடுத்தற்கு உவமை. அன்னை

சண்டு முறைப்பெயரன்மையின் "அன்னை என்னை" என்னும் பொருளின் ருத்திரத்தாற் கொள்க. ௩௪௫.

She cried, ஐயோ! alas! for she had been dreaming of her husband, and on awaking found he was not there.

346. ஆவியஞ்சிறையன்னமுந்தோகையும்
மேவிமென்புனமானினமாதியா
நாவிநாறெழின்மேனியைக்கண்டுகண்(டு)
ஆவித்தாற்றகில்லாதழுதிட்டவே.

The wild animals in the place, seeing the agonies of the beautiful Vilaya, sympathised with her.

இ-ள். அதனைக் கண்டு மானின முதலாக அன்னமுந் தோகையும் மேவி, எழின்மேனியைக் கண்டு கொட்டாவிக்கொண்டு ஆற்றாது அழுதிட்டனவே, தமக்கு இவை இயல்பாகக் காலையிற் செய்தன அல்ல என்க.

ஏகாரம், தேற்றம். ௩௪௬.

நாவிநாறெழின்மேனி, her body which emitted perfume.

347. கொம்மைவெம்முலைப்போதிற்கொடியனாள்
உம்மைநின்றதோரூழ்வினைபுண்மையால்
இம்மையிவ்விடருற்றனளெய்தினாள்
செம்மைமாதவர்செய்தவப்பள்ளியே.

She who was suffering the consequences of the actions of her previous birth, now at length reached the residence of the virtuous.

இ-ள். அவை வருந்தினபின், பால் சுரத்தற்கு வெவ்விதாக முலையினையுடைய திருவனாள் முற்பிறப்பிற் செய்த தீவினையுள்ளதாதலால் இப்பிறப்பில் இவ்வருத்தமுற்றாள், அது நீங்குதலாலே மாதவர் தவஞ்செய்கின்ற பள்ளியைச் சேர்ந்தாளென்க.

கொம்மை, பெருமை. செம்மை, செவ்வை. ௩௪௭.

உம்மை former birth, a good example of the demonstrative உ. Nannul, S. 66.

## வேறு.

348. வாளுறைநெடுங்கணாளைமாதவமகளிரெல்லாந்
தோளுறப்புல்லுவார்போற்றொக்கெதிர்கொண்டுபுக்குத்
தாளுறுவருத்தமோம்பித்தவநெறிப்படுக்கலுற்று
நாளுறத்திங்களூரநல்லணிநீக்குகின்றார்.

The matrons of the devotees received her kindly, and treated her with affection; and she was induced from day to day gradually to denude herself of her jewels.

இ-ள். நல்லநாள் வந்து பொருந்த நாடோறுந் திங்களொரு கலை ஏறுகிற்க, மகளிரெல்லாம் தொக்கு, கண்ணாளைப் புல்லுவாரைப்போல் எதிர்கொண்டு புக்கு, ஓம்பி, அவள் கருத்தறிந்து படுக்கலுற்று, உற, ஊர, நீக்குகின்றாரென்க.

வாளின் தன்மை முன்தங்கிய கண்ணாளை மாதவஞ் செய்வார்க்குப் புல்லலாகாமையிற் புல்லுவார்போலென்றார். வருத்தந் தேவிக்கு இன்றென்

பது உணராது இக்காட்டில் வருவார்க்கு வருத்தமுளதென்று தாம் கருதி ஓம்பினார். மேல் தவத்திற்சேறற்கு நெறியாகிய நோன்பை உண்டாக்கலுற்று. கணவனை இழந்ததற்கும் புதல்வன் வாழ்தற்கும் பொருந்திய நோன்பு. தேவி நீக்குகின்றவற்றை அவர் மேலேற்றினார், ஏவினானைக் கருத்தாவாக: அரசரெடுத்த தேவகுலம்போல. ௩௪௮.

349. திருந்துதகரச்செந்நெருப்பிற்
றேன்றோய்த்தமிர்தங்கொளவுயிர்க்குங்
கருங்காரகிலினறும்புகையிற்
கழுமிக்கோதைகண்படுக்குந்
திருந்துநானக்குழல்புலம்பத்
தேனும்வண்டுமிசைபுலம்ப
அரும்பொன்மாலையலங்கலோ
டாரம்புலம்பவகற்றினாள்.

Of the various jewels that adorned her person, she at first began to get rid of her head ornaments.

இ-ள். கோதை புலம்ப, தேனினமும் வண்டினமும் துதைந்தூதாமை இசைக்குப் புலம்ப, பொன்னரிமாலையும் நெற்றிமாலையும் தலைக்கோலமாகிய முத்தும் புலம்ப, இவற்றைக் குழலினின்று அகற்றினாளென்க.

தகரவிறகாலாக்கின நெருப்பிலே தேன் தோய்த்திட்ட அகிலினது இனிமைகொள்ள நாறும் புகையிலே மயங்கிக் கண்படுக்கும் கோதை. ௩௪௯.

350. திங்களுகிரிற்சொலிப்பதுபோற்றிலகம்விரலிற்றானீக்கிப்
பைம்பொன்மகரகுண்டலமும்பாவைகழுத்தினணிகலமும்
வெங்கண்வேந்தற்கமிர்தாகிவேற்கட்பாவைபகையாய
அங்கண்முலையினணிமுத்துமரும்பொற்பூணுமகற்றினாள்.

She then removed the spot from her forehead, and cast off the jewels that adorned her neck and breast.

இ-ள். பாவைதான் திலதத்தை விரலாலே நீக்கிக் குழையுங் குண்டலத்தையுங் கழுத்தின் அணிகலங்களையும் முலையின் அணிந்த முத்தையும் பூணையும் நீக்கினாளென்க.

சொலிப்பது, இடப்பது, சிதைப்பதும், பாடம். இன்பத்தால் அவனைக் கெடுத்தலில் தனக்குப் பகையாய முலை. ௩௫௰.

351. பஞ்சியணையவேய்மென்றோட்
பகுவாய்மகரங்கான்றிட்ட
துஞ்சாக்கதிர்கடோண்முத்தந்
தொழுதேனும்மையெனத்துறந்து
வஞ்சிவருத்து நுசுப்பினாள்
வளைக்கையுடைத்துமணிக்காந்தள்
அஞ்சச்சிவந்தமெல்விரல்க
ளரும்பொனாழியகற்றினாள்.

She broke her bangles, and got rid of her bracelets and rings.

இ-ள். நீசுப்பினுள் நம்மைத் தொழுதேனென்று தோளின் முத்தத்தைத் துறந்து வளையை உடைத்துப் பின்பு விரலைச் சூழ்ந்த ஆழியை அகற்றினளென்க.

அங்காந்த வாயினையுடைய மகரங்கான்ற மாறாத சுதினையுடைய பலவடம் சேர்ந்த முத்தம். அரசன் நீங்காமல் முயங்குதற்குக் காரணமாய்த் தன்னைக் கெடுத்தலில் தொழுதேனென்றான். வளைகழற்றுதல் அரிதாதலிற் கையால் உடைத்தென்றார். மணி, அழகு. ௩௫௧.

352. பூப்பெய்செம்பொற்கோடிகமும்
பொன்னாலவட்டமும்
ஆக்குமணிசெய்தேர்த்தட்டு
மாவின்னையுமடிமல்குல்
வீக்கிமின்னுங்கலையெல்லாம்
வேந்தன்போகியரம்பையனா
நோக்கிநம்மைநோக்கானீர்
நோவாதொழிமினெனத்துறந்தாள்.

And bid farewell to her waist band and other ornaments that were her joy and delight.

இ-ள். தேவி, வேந்தன் போய் அரம்பையனா நுகர்தலாலே நம்மை நோக்கான், ஆதலால் நீர் என்னை வெறுதே நீங்குவீராக என்று சொல்லி, பூந்தட்டையும் ஆலவட்டத்தையும் தேர்த்தட்டையும் பையையும் அடுகின்ற அல்குலிலே வீக்கி இன்பத்தை யாக்குங் கலைகளெல்லாவற்றையுந் துறந்தாளென்க.

மணியாலே செய்தமைக்குந் தேருமாம். நோக்கியென்றார், மெய்யுறு புணர்ச்சி இன்றி நோக்கால் நுகர்தலின். நம்மைநோக்கான், நம்மாலுள்ள பயனை நோக்கான். இது இரண்டன் மருங்கினுெக்கல் நோக்கமாதலின் ஏதுவாயிற்று. ௩௫௨.

353. பிடிக்கைபோலுந்திரள்குறங்கி
னணியுநீக்கிப்பிணையன்னாள்
அடிக்கிண்கிணியுமஞ்சிலம்பும்
விரன்மோதிரத்தோடகற்றியபின்
கொடிப்பூத்துதிர்ந்ததோற்றம்போற்
றொல்லைத்தோன்றியணங்கலற
உடுத்தாள்கற்றோய்நுண்கலிங்க
முரவோன்சிறுவனுயர்கெனவே.

Thus denuded of her ornaments, as a tree bereft of its flowers, she put on the ascetic garment, in order that her self-denial may benefit her son.

இ-ள். பிணையன்னாள் குறங்கிற்செறிந்த அணியையும் நீக்கிக் கிண்கிணியையும் சிலம்பையும் காலாழியுடன் அகற்றியபின்பு, பூத்துதிர்ந்த தோற்றம்போல் தோன்றி, கூவி வருந்த, சிறுவன் உயர்கவென்று காவிக் கற்றோய்ந்த கலிங்கத்தை உடுத்தாளென்க.

கொடிப்பூத்துதிர்ந்த, ஒற்றுமையாற் சினைவினை முதன்மேலேற்றினர். அலற, வருந்த. கல், நற்செங்கல். உரவோன், அறிவுடையோன். உயர்கவென்றார், நோன்பின்பயன் அதுவாகலின். உரவோன் சிறுவனென்றான், பகையை வெல்லப் பிறந்தமை கருதி. ௩௫௩.

She, who lived in luxury, and was attended upon by maidens, now lived, like a forest goddess, upon vegetables that her own delicate hands procured.

354. பாலுடையமிர்தம்பைம்பொற்கலத்திடைப்பாவையன்ன
நூலடுநுசுப்பினல்லாரேந்தவுநோக்காச்
சேலடுகண்ணிகாந்தட்டிருமணித்துடுப்புமுன்கை
வாலடகருளிச்செய்யவனத்துறைதெய்வமானாள்.

இ—ள். உடுத்தபின், நுசுப்பினையுடைய பாவையன்ன நல்லார் நேர்ந்து கலத்தே அமிர்தத்தை ஏந்தவும் நோக்காத கண்ணி, காந்தள் துடுப்புப்போலுந் தன்கைதானே அடகை அருள அதனை நுகர்ந்து இல்லுறை தெய்வமன்றி வனத்தே உறைவதோர் செய்ய தெய்வமானாளென்க.

அமிர்தம், அடிசில். நேர்ந்தேந்தவும், இவள் உணவொழிந்தாளென்று வலிய எடுக்கவும். உணவொழிந்த நுகர்ச்சியே நிகழ்ந்தமையின் நோக்காதவென்றார். முன்பு திருமணியையுடையகை. அருளி, அருள. செய்ய, சிவந்த. ௩௫௪.

When she saw the wild cows feeding their calves, yielding abundant milk, she thought of her son.

355. மெல்விரன்மெலியக்கொய்தகுளநெல்லும்விளைந்தவாம்பல்
அல்லியுமுணங்குமுன்றிலணில்விளித்திரியவாமான்
புல்லியகுழவித்திங்கட்பொழிகதிர்க்குப்பைபோலும்
நல்லெழிற்கவரியூட்டநம்பியைநினைக்குமன்றே.

இ—ள். நெல்லும் அல்லியும் உணங்கும் முன்றிலிலே அணில் இரியும்படி ஆமான் குழவியைப் புல்லியகவரிமா வர அதற்கு முலையை ஊட்டத் தேவி நம்பி பிறர் முலையை உண்டு வளர்கின்றபடியை நினைக்குமென்க.

மெலிய என்றார், தவமகளிர் கொய்தலின். விளித்து இரிய. கதிர்த்திங்கட்குப்பைபோலும். எழிலென்றார், சாயலால். "குஞ்சரம் பெறுமேகுழவிப்பெயர்க்கொடை" என்றதனுட் கொடை என்றதனான் ஆமான் குழவியுங் கொண்டவாறுணர்க. ௩௫௫.

The old lady having committed Vijaya to the care of those residing in the forest, set out on her journey, disguising her name and place.

356. பெண்மைநாண்வனப்புச்சாயல்பெருமடமாதுபேசின்
எண்மையிலொருங்குகூடியுருவுகொண்டனையநங்கை
நண்ணியநங்கட்கெல்லாமடைக்கலமென்றுநாடுங்
கண்ணியகுலனுந்தெய்வங்கரந்துபோத்தெழுந்ததன்றே.

இ—ள். அவ்வளவிலே தெய்வம், நங்கை நுங்கட்கடைக்கலம், இவளைக் காத்தல் வேண்டும் என்று கூறிப் பின்பு, நாட்டையுங் குலத்தையும் வேறு பெயர்படக் கூறிப் போதற்கு ஒருப்பட்டதென்க.

பெண்மை, மடம்: கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை. மாது, காதல்: உரிச்சொல் ஈறுதிரிந்தது. இவட்குள்ள அமைதித் தன்மை முதலியவற்றைக் கூற நினைத்தேமாயின் அவை தமக்கு விளக்கங் காரணமாகச் சேரக் கூடி ஒருவடிவு கொண்டாற்போலும் நங்கை. எல்லாநன்னிய நங்கட்கு, நற்குணமெல்லாம் பொருந்திய நமக்கு. ௩௫௬.

வேறு.

Vijaya desires the old lady to go to the city, and to see how the child is doing, and to return again.

357. உறுதிசூழ்ந்திவணோடலினாயிடை
மறுவில்வெண்குடைமன்னவன்காதலஞ்
சிறுவன்றன்மையைச்சேர்ந்தறிந்திவ்வழிக்
குறுகவம்மெனக்கூனியைப்போக்கினாள்.

இ-ள். அன்னம் போதற்கு ஒருப்பட்ட தெய்வத்தின் நெஞ்சம் இவ்விடத்து இவட்கு ஆம் உறுதிகளைச் சூழ்ந்து தான் உறைகின்ற இடத்தே சேரலால், அதற்கேற்பத் தெய்வம் தன் தெய்வத்தன்மையால் தேவிக்கும் அக்கருத்தே பிறப்பிக்க, தேவியும் ஆயிடைச்சேர்ந்து சிறுவன் செய்தியை அறிந்து இவ்விடத்தே அணித்தாக வம் என்று அத்தெய்வத்தைப் போகவிட்டாளென்க.

ஆயிடை, இராசமாபுரத்திடை. சேடியை வம் என்று உயர்த்துக் கூறினாள், தான் நிற்கின்ற தவநிலைக்கேற்ப. ௩௫௭.

வம் contraction of வாரும். See, Nannul, S. 155, on poetical and anomalous changes.

The old lady departs, regretting that she was leaving Vijaya behind, but with no intention of returning.

358. நெஞ்சினுக்கினியானையென்னீர்மையால்
வஞ்சித்தேனெனவஞ்சியங்கொம்பனாள்
பஞ்சிமெல்லடிபல்கலனார்ப்பச்சென்(று)
இஞ்சிமாநகர்த்தன்னிடமெய்தினாள்.

இ-ள். அப்பொழுது கொம்பனாள், இனியானை எனது தெய்வத்தன்மையாலே வஞ்சித்தேனென்று வருந்தி, கலனார்ப்பச் சென்று இராசமாபுரத்திற் புறங்காட்டைச் சேர்ந்தாளென்க.

யான் கருதியதே தானுங்கருதி. வஞ்சித்தல், அறிந்து வருகின்றேனென்றது. ௩௫௮.

இஞ்சிமாநகர், the great fortified city, i. e. Rajahmápuram.

Vijaya for many days longingly looked for, and expected her return.

359. தானுந்தன்னுணர்விற்றளர்ந்தாற்றவும்
மானனோக்கிவரும்வழிநோக்கிநின்(று)
ஆனியப்பலவாசையிற்செல்லுமே
தேனியம்புமோர்தேம்பொழிற்பள்ளியே.

இ-ள். மானனோக்கிதானும் தெய்வமென்றறியாத பெண்ணுணர்வாலே மிகவும் தளர்ந்து, பள்ளியிடத்தே அவன் வரும் வழியை நோக்கிநின்று

பல இரவும் பகலும் இன்று வரும் இன்று வருமென்னும் ஆசையிலே நடவாநிற்குமென்க.

மாலின், இன், சாரியை. [illegible]

ஆனெ, a day of 24 hours.

360. மட்டவிழ்கோதைவாளவுண்கண்மயிலன்னாள்
கட்டழலெவ்வங்கைமிகநீக்கிக்களிகூர
விட்டகல்வாற்றுவேட்கையினோடும்பொழுதிப்பாற்
பட்டதையெல்லாம்பல்லவர்கேட்கப்பகர்குற்றேன்.

We are now going to say how Sunandai, the wife of Kandugan, having assuaged her grief by obtaining the child, lived rejoicing with it.

இ-ள். சுனந்தை பிள்ளையை இழந்த துன்பத்தைச் சிறிதும் இல்லாதபடி போக்கி, களிப்பு மிகுதலாலே ஒழிந்தோர்க்கும் பிள்ளையை விட்டு நீங்கமாட்டாத வேட்கை நடக்கின்ற இப்பொழுதிற்குப்பின்பு, பிள்ளை உற்றகாரியங்களை எல்லாம் பலருங் கேட்கும்படி கூறவேனுகத் தொடங்கினேன் என்றாரென்க.

என்றது தம்மாற் சரிதங்கூறுதல் அரிதாகலின். இனி வேட்கையாற் கடுகெக்கழியும் பொழுதென்றுமாம். அழல்போலெவ்வம். அகல்வு, அகற்சி. இன், சாரியை. பகர்கு, தன்மைச்சொல். [illegible]

எவ்வம், sorrow, affliction.

361. கூற்றமஞ்சுங்கொன்னுனையெஃகினிளையானும்
மாற்றமஞ்சுமன்னியகற்பின்மடவாளும்
போற்றித்தந்தபுண்ணியர்கூடிப்புகழோனைச்
சீற்றத்துப்பிற்சீவகனென்றேபெயரிட்டார்.

The foster parents, together with their relatives and devotee's, named the child Jivagan.

இ-ள். இளையானும் மடவாளும் விரும்பிக் கொண்டுவந்த பார்ப்பார் சான்றோர், உள்ளிட்டோருங்கூடி, சீற்றத் துப்பிற் புகழோனைச் சீவகனென்றே பெயரிட்டாரென்க.

கொன்னுனை, வினைத்தொகை. சொல்லப்புகிற் சொல்லும் அஞ்சுங் கற்பு. சீவகன், சீவித்தலையுடையனென்று தெய்வம் வாழ்த்தினமையின் அப்பெயரே ஆயிற்று. [illegible]

புண்ணியர், here, are the devotees of Arugan, whose name is புண்ணியன். சீற்றத்துப்பு, fierce valour. *Jivagan*, this was the name uttered by the old lady when Kandugan took up the child, and which he considered a divine utterance.

362. மேகம்மீன்றமின்னனையாடன்மினிர்பைம்பூண்.
ஆகம்மீன்றவம்முலையின்பாலமிர்தேந்தப்
போகம்மீன்றபுண்ணியனெய்தகணையேபோன்
மாகம்மீன்றமாமதியன்னான்வளர்கின்றான்.

The child was nursed by the milk of Sunandai, and grew up as Krishna did, who was once the arrow of the pleasure-giving Siva.

இ-ள். மதியன்னான், மின்னனையாளது ஆகமீன்ற முலையின் இனிய பாலமுதத்தை ஏந்த, புண்ணியன் எய்த கணை நந்தகோன் மகனாய் வளருமாறுபோல, கந்துகன் மகனாய் வளர்கின்றானென்க.

முலை, எழுவாய். போகம்பீன்ற, தான் சத்தியுஞ் சிவனுமாய் உலகத்திற்கெல்லாம் போகத்தையுண்டாக்கின. புல்லணியனென்றார், திரிபுரத்தை அழித்ததும், நஞ்சுண்டும் பல்லுயிர்களையும் காத்தலின். ஏய்ந்தகனை, திருமால். கணைவன்குமாற்போல வளருமெனவே, அவன் ஆயப்பாடியிலே நந்தகோன் மனையிலே மறைய வளர்ந்தது உவமையாம். பா, சண்டழகு. மதி, பிறை. ௩௬௨.

Krishna was born of Vásudeva and Devaki, who were Kshatriyas, and brought up by Nanda and Yasoda, who were shepherds. When Siva went to burn Tripura, he used Vishnu as his arrow.

363. அம்பொற்கொம்பினுயிழையைவர்நலனேம்பப்
பைம்பொற்பூமிபல்கதிர்முத்தார்சகடமுஞ்
செம்பொற்றேரும்வேழமுமூர்ந்துசிறிசிறந்தி
நம்பன்செல்லுநாளினுநாளுநலமிக்கே.

He had five maidens to attend upon him, and a variety of toys to amuse him.

இ—ள். நம்பன், ஐவர் எல்லாநலத்தையும் பேணுகிற்க, அவ்விடத்தே சகடத்தையும் தேரையும் வேழத்தையும் தன் கையாற் செலுத்தி, சிந்தி நாடோறு நாடோறும் நலமிக்குச் செல்லுமென்க.

ஐவர்: ஆட்டுவாள், ஊட்டுவாள், ஒலுறுத்துவாள், நொடிபயிற்றுவாள், கைத்தாய். நிதிசிந்தி, குழவிப்பருவத்துங் கொடையியல்பு. நாளின், இன், சாரியை. ௩௬௩.

364. பல்பூம்பொய்கைத்தாமரைபோன்றும்பனிவானத்(து)
எல்லார்கண்ணுமின்புறவூரும்மதிபோன்றுங்
கொல்லுஞ்சிங்கக்குட்டியும்போன்றிவ்வுலகேத்தச்
செல்லுமன்னேசீவகன்றெய்வப்பகைவென்றே.

Jivagan grew up like the waxing moon, and with the courage of a lion.

இ—ள். சீவகன் பகையை மிகவும் வென்று உலகேத்தும்படி தாமரை முதலியனபோன்று செல்லுமென்க.

ஒழிந்தோரிற் சிறந்தமையில் தாமரை உவமம். வானிடத்துத் தேவர் முதலாயினோரிடத்தும் இன்பமுறப் பார்க்கின்ற மதியாவது அறிவு. அது தானொருவடிவுகொண்டாற்போன்றும். "குட்டியும் பறழுங் கூற்றவண் வரையார்" என்றதனுட் கூற்றென்றதனாற் புலிமுதலியவற்றிற்குக் கூறிய இளமைப்பெயர் சிங்கத்திற்குங் கொண்டார். வாலசிகிற்சையிற் கூறுகின்ற தெய்வப்பகை. ஓ, அசை. ௩௬௪.

The Commentator says that Jivagan grew up as knowledge embodied, or incarnated. தெய்வப்பகை, தேரகம், evils, physical and moral, coming from the gods.

Munificent were the charities made on account of the child; Kándagan in this respect was like the Kalpaka tree, and his wife like the Kámavalli that creeps round the Kalpaka tree.

365. மணியுமுத்தும்மாசறுபொன்னும்பவளமும்
அணியும்பெய்யுமாரியினேற்பார்க்கவைநல்கிக்
கணிதமில்லாக்கற்பகங்கன்றாக்கடனொத்தான்
இணைவேலுண்கணந்தையுமின்யக்கொடியொத்தாள்.

இ-ள். தமக்கு வேண்டும் பொருள்களை வேண்டாமல் ஏற்பார்க்கு அப்பொருள்களைப் பெய்கின்ற மாரிபோலே நல்கி, ஊரளவிற் படாத கந்துகன், பின்பு வேண்டி ஏற்பார்க்கு நல்கிக் கற்பகமொத்தான், சுனந்தையும் அதன்மேற் படர்ந்த காமவல்லியை ஒத்தாளென்க.

கார் வேண்டாமைக் கொடுத்தலுங் கற்பகம் வேண்டக் கொடுத்தலும் இயல்பு. கணிதமில்லாவென்க: நந்தை, தலைக்குறைத்தல். இது சவுளத்திற்கு முன்புள்ள கன்மங்களிலும் நாடோறு நடத்தும் கருமங்களிலும் கொடைக்கடன் அமர்ந்தமை கூறினார். ௩௬௫.

Take கணி after மாரியின். கற்பகம் 2nd case, governed by ஒத்தான்.

All religious rites and ceremonies having been duly performed in behalf of the child, he grew up like Swayambhu Manu, the son of Brahma.*

366. சாதிப்பைம்பொன்றன்னொளிவெள்விற்றகைகுன்
நீதிச்செல்வம்மேன்மேனிந்திநிறைவெய்திப் [று
போதிச்செல்வம்பூண்டவரேத்தும்பொலிவின்னா
ஆதிக்காலத்தந்தணன்காதன்மகனொத்தான். [ல்

இ-ள். ஒளியை வௌவிச் செல்வநீதி நிறைவெய்துதலின் அறிவாகிய செல்வத்தைப் பூண்டவர் ஏத்தும் பொலிவாலே அந்தணன் மகன் ஒத்தானென்க.

இது நிறம் பிறந்தமை கூறினார். நீதிச்செல்வம், சவுளம். மேன்மேல் நிறைவெய்தி, முறையே காமங்களைப் புணரும் பருவம் நிறைந்து. அந்தணன் மகன், ஸ்வாயம்புமனு: இயல்பான அறிவிற்கு உவமை. இனி தீர்த்தகரில், இருஷபசுவாமி மகன் பாதராச்சக்கரவர்த்தி என்றும் உரைப்ப. க்ஷத்திரியனுக்கு வைதிகம் வேண்டுதலிற் சவுளத்திற்கு முன்புள்ள கன்மமுஞ் சவுளமுங் கூறினமையான், மேலும் உபநயனம் முதலியனவும் விரியக்கூறாராயினும் அவ்விடங்களிலே குறிப்பானுணர்க. ௩௬௬.

---

*So in the Vedas: एव आत्मा वै पुत्रो नामासीत्. "So himself was, indeed his son." Brahma converted himself into two persons, the first male, or the *Manu Swáyambhuva*, and the first woman, *Satarúpa*, This corresponds with the Scriptural account of the first human beings, Adam and Eve. *Adam* in the Hebrew signifies *red earth*, from which he was originally formed, and Eve [*Havah*] life, or *the mother of all living*. See Genesis I. 26-28: II. 7, 18-25. III. 28. Sir William Jones thinks that *Adam* may be derived from आदिम् *Adim*, which in Sanskrit means the *first*, *preeminent;* and *Satarúpa*, a *hundred forms*, or type of many forms. She is said to have had two sons and three daughters.

367. நனந்தலையுலகின்மிக்கவன்னுதன்மகளீர்தங்கண்
மனத்தளைபரியநின்றமதலைமையாடுகென்றே
பொனங்கொடியிறைஞ்சிநின்றுபூமகள்புலம்பிவைக
அனங்கனுக்கவலஞ்செய்யுமண்ணனற்குயுரைத்தாள்.

The foster mother desired her husband to commence the education of the child.

இ—ள். அண்ணலாற்குப் கொடிபோல இறைஞ்சிநின்று, மகளீர் தளைபரியத் திருமகள் சிறிதுகாள் தனித்து வைக மதலை மையாடுக என்று உரைத்தாளென்க.

மிக்கமகளிராவார், விறன்மடந்தையும் புகழ்மடந்தையும். தளை, குவிதல். மனத்தினின்ற தளைபரிய, இவனைப் பெறுமாறு நினைந்து வருந்துகின்ற மனத்தினின்ற வருத்தநீங்க. நின்ற மையாடுக, முறையே நின்றமை ஓலை பிடிக்க. இது தன் தொழிலாதலிற் கூறினாள். தளை பரியமை யாடுக என்றது, பலநூல்களைக் கற்கவே வெற்றியும் புகழும் உண்டாமென்று. செல்வச்செருக்கின்றி வழிபாட்டோடு கற்றலிற் றிருமகள் புலம்ப என்றார். ஈகு௭.

368. முழவெனத்திரண்டதிண்டோண்மூரிவெஞ்சிலையினானும்
அழலெனக்கனலும்வாட்கணவ்வளைத்தோளினாளும்
மழலையாம்மருட்டுந்தீஞ்சொன்மதலையைமயிலஞ்சாயற்
குழைமுகஞானமென்னுங்குமரியைப்புணர்க்கலுற்றார்.

The foster parents unite their adopted son to the virgin, named Knowledge.

இ—ள். கந்துகனும் சுனந்தையும் மதலையை ஞானமென்னுங் குமரியைப் புணர்க்கக் கருதினரென்க.

சாத்தனை நூலைக் கற்பிக்கலுற்றார் என்றாற்போல. யாழை மருட்டு மழலைத் தீஞ்சொல். சாயற்குமரி. குழைமுகம், பூணையும் தோற்றுவித்தது; குழையப்பண்ணுகின்ற முகமுடைய ஞானமென்னுங் குமரி. வேறு தன் கருத்தறிவாரின்றி இவனே தன் கருத்தறியத் தான் அழியாதிருத்தலிற் குமரியென்றார். ஈகு௮.

369. அரும்பொனுமணியுமுத்துங்காணமுங்குறுணியாகப்
பரந்தெலாப்பிரப்புமவைத்துப்பைம்பொன்செய்தவிசினுச்சி
இருந்துபொன்னோலைசெம்பொன்னூசியாலெழுதியேற்பத்
திருந்துபொற்கண்ணியாற்குச்செல்வியைச்சேர்த்தினரே.

On the day of his education-nuptials, Jivagan became the consort of Knowledge, by a written deed.

இ—ள். அவர்கள் பொன்முதலியன குறுணி என்கிற அளவாகப் பரந்த எல்லாப் பிரப்பரிசியையும் வைக்க, உவாத்திமுதலியோர் தவிசின்மேலேயிருந்து, கண்ணியாற்குச் செல்வியை மகளிலாச்சேர்த்து மாறன்றியே பொன்னோலையிலே அவன் பொருந்தும்படி எழுத்தாணியாலே எழுதிச் சேர்த்தினரென்க.

பரந்த, விகாரம். ஈகுகூ.

பிரப்பு, now பரப்பரிசி, i. e., rice used with sugar, &c., in ceremonies connected with children.

370. நாமகணலத்தையெல்லா
நயந்துடன்பருகினன்னூல்
*He entered upon his educational course with vigour, and fully embracing Sarasvati, became expert in science, military tactics, and gymnastics.*
ஏமுதலாயவெல்லாப்
படைக்கலத்தொழிலுமுற்றிச்
காமனுங்கனியவைத்த
புலங்களைகண்டுகண்ணூர்
பூமகள்பொலிந்தமார்பன்
புவிமிசைத்திலகமொத்தான்.

இ-ள். மார்பன் நாமகள் நலத்தை எல்லாம் தான் விரும்பிச் சேரக்கற்று, தான் ஓதிய தனுவேதத்திற் கூறிய அம்புமுதலிய படைக்கலங்களின் தொழில்களையும் எல்லாத்தொழில்களையுமுடித்து, காமனும் மனம் உருகும்படி அந்நூலிற் கூறிவைத்த பாட்டினையும் களைகண்டு, மண்மகளுக்கு நெற்றியில் இட்ட திலகத்தை ஒத்தானென்க.

சொல்லாற் கூறுவனவெல்லாம் அடங்குதற்கு எல்லாமென்றார். பருகி எனவே, தன் குலத்திற்குரிய வேதமும் அதிகரிக்கவேண்டுதலின் ஈண்டே உபநயனமுங் கூறினார். இது "சாமவேதமற்றுமொன்று சாமிநன்குபாடினான்" என்பதனானும் பிறவாற்றானுமுணர்க. ஏமுதலாய படைக்கலத்தொழிலுமுற்றி, எல்லாத்தொழிலுமுற்றியென்க. புலம், ஆகுபெயர். இசைகூறவே கூத்தும் அடங்கும். முன்னூல்களைக் கற்றதற்கேற்பத் தொழில்களைக் கற்றானென்றார். ௩௭௰.

It is from this verse that the First Book is named. Every book contains the history of each of Jivagan's various marriages. This chapter contains the history of his marriage to the maiden Education, or Knowledge. See Note on page 15.

371. மின்றெளித்தெழுதியன்னவிளங்குநண்ணுசுப்பினல்லார்
*His manly appearance won the admiration of all beautiful women.*
பொன்றெளித்தெழுதியன்னபூம்புறப்பசலைமூழ்கக்
குன்றெளித்தொழியநின்றகுங்குமத்தோளினற்குக்
கன்றெளித்தகலவைத்தகறவையிற்கனிந்துநின்றார்.

இ-ள். தோளினற்கு, தமது பூம்புறத்தில் தோன்றிய பொன்னைக் களைத்தெழுதியன்ன பசலையிலே நல்லார் மூழ்கிக் கறவைபோல வேட்கைசெறிந்து நின்றாரென்க.

இது குலக்கன்னியரைக் கூறினார். மின்னை நிலைபெற நிற்கத்தெளித்து அதனிடத்தே மகளிர் அவையவங்களை எழுதியன்ன நல்லாரென்க: தெளித்த சொற்றேறியாற்கென்றாற்போல. இனி மின்னைக் களைத்தெழுதியன்ன நல்லாருமாம். புறம், தம்மெய்யிடம். ஒளித்தொழிய, ஒளித்துப்போக. கன்றை மறைத்து முலை உண்ணுதபடி வைக்கப்பட்ட கறவை. ௩௭௧.

Their love to the pure minded but handsome youth was so great, that they forgot themselves.

372. விலைபகர்ந்தல்குல்விற்கும்வேசினும்வெய்யகண்ணார்
முலைமுகந்திளையாமார்பமுனிவிலவொழுகிவாழுங்
கலையிகந்தினியசொல்லார்கங்குலும்பகலுமெல்லாஞ்
சிலையிகந்துயர்ந்ததின்டோட்சீவகற்காற்றியாற்றார்.

இ-ள். சீவகற்குக் கண்ணார் சொல்லாரெல்லாரும் இரவும்பகலும் ஆற்றி ஆற்றாராயினரென்க.

இற்பரத்தையரும் சேரிப்பரத்தையருமாம். அல்குல்விற்குங் கண், அல்குலை விற்றற்குக் காரணமான கண்: களவுகுடிகொள்ளுங் கண். இவர் பரத்தையரிற் கன்னியர். மார்பை முலையாலே முகந்து நீங்காது எழுதிவாழும். இனியசொல்லார், போகம் நுகரும் பரத்தையர். சிலையிகந்து, சிலைக்குக் கூறுகின்ற நிலையைக் கடந்து. ௩௭௨.

His Teacher, who communicated to him all that he knew, at last gave him the following Instruction:

373. வான்சுவையமிர்தவெள்ளம்வந்திவட்டொக்கதென்னத்
தான்சுவைகொண்டதெல்லாந்தணப்பறக்கொடுத்தபின்றைத்
தேன்சுவைத்தாற்றும்லைபர்தார்ச்சீவகருமரனென்ற
ஊன்சுவைத்தொளிரும்வேலாற்குறுதியொன்றுரைக்கலுற்றான்.

இ-ள். சீவகருமரனென்ற வேலாற்கு ஆசிரியன் தான் நுகர்ந்த கலைகளை எல்லாம் தட்டறக்கொடுத்தபின்பு, வானிடத்து அமிர்தக்கடல் வந்து நிறைந்ததென்னும்படி ஓர் உறுதி கூறலுற்றானென்க.

கொண்டதெல்லாம், ஒருமைப்பன்மை மயக்கம். தொக்கதென்னக் கொடுத்த பின்றை என்றுமாம். ௩௭௩.

"Learning all sciences, and knowing their essentials, forsake all that is evil, and follow the good ways of Arugan; and you will be an ambrosia to all."

374. நூனெறிவகையினோக்கிநுண்ணிதினுழைந்துதீமைப்
பானெறிபலவுநீக்கிப்பருதியங்கடவுளன்ன
கோனெறிதழுவிநின்றகுணத்தொடுபுணரின்மாதோ
நானெறிவகையினின்றநல்லுயிர்க்கமிர்தமென்றான்.

இ-ள். அவன் நோக்கி நுழைந்து நீக்கிப் புணரின் நல்லுயிர்க்காக்கம் என்றானென்க.

ஆகமங்கூறிய வழியினது கூறுபாட்டாலே நன்மை தீமையை ஆராய்ந்து கூறிய பொருளிடத்தே நெஞ்சு சென்று. தீமைப்பானெறி, துன்மார்க்கம். நிறத்தாலும் இருள்நீக்கத்தாலும் ஞாயிறுவமை. கோன், அருகன். குணம், रत्नत्रयं ஆவன: நன்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம். நானெறி, சதுர்கதி ஆவன: நாற்கதிகள்; நரககதி, விலங்குகதி, மக்கள்கதி, தேவகதி. நல்லுயிர், பவ்விய சீவன், भव्य जीवः happy life. ௩௭௪.

தீமைப்பானெறி = தீமை + பால் + நெறி. The way of evil. நானெறி = i. e. சதுர்நெறி, four stages of life or births.

375\. அறிவினாற்பெரியரோ
ரருவினைகழியநின்ற
நெறியினைக்குறுகியின்ப
நிறைகடலகத்துநின்றார்
பொறியெனும்பெயரைவவாய்ப்
பொங்கழலரவின்கண்ணே
வெறிபுலங்கன்றிநின்றார்
வேதனைக்கடலுணின்றார்.

"The wise who know their state and condition, and walk in the path of virtue, are in the path of pleasantness and peace. But those who are poisoned by the senses, are sunk in the ocean of misery.

இ—ள். பெரியரோர் குறுகி இன்பக்கடலகத்தே நின்றார். கன்றிநின்றார் துன்பக்கடலிலே நின்றாரென்க.

தீவினைகழிய நின்றநெறி, சன்மார்க்கம். இன்பநிறைகடல், அனந்தசுகம். நிறைக்கடல் பாடமாயின், இன்பப் பெருக்கினையுடைய கடலென்க. வேட்கையாகிய நஞ்சையுடைய உடம்பென்னும் பாம்பிடத்திற பொறியென்னும் பெயரையுடையவாகிய ஐந்து வாயிடத்தே களிப்பைச் செய்கின்ற விடையங்களிலே அகப்பட்டு நின்றார். ௩௭௫.

376\. கூற்றுவன்கொடியனுகிக்கொலைத்தொழிற்கருவிசூழ்ந்து
மாற்றரும்வலையைவைத்தான்வைத்ததையறிந்துநாமும்
நோற்றவன்வலையைநீங்கிநுகர்ச்சியிலுலகநோக்கி
ஆற்றுறப்போகறேற்றுமளியமோபெரியமேகாண்.

"Alas! how poor are our understandings, that we do not discern the snares laid for us by fearful death; nor do we perform such penance as will preserve us from them.

இ—ள். கூற்றுவன் கொடியனுய்ச் சூழ்ந்து வலையைவீசி வைத்தான், அதனை அறியத்தக்க நாமும் அறிந்து தவஞ்செய்து தப்பி உலகநோக்கி வழிப்படப் போதலைத் தெளிகிலேம், பெரியேங்காணென்க.

கருவி, ஐயம் பித்தும் வளியுமாகிய வார்கள். வலை, ஆயுக்கன்மம். இதற்கு முன்பு அநுபவியாத உலகம், வீடு. ஓறு பெரியம், இகழ்ச்சி. ௩௭௬.

பெரியமேகாண், is a குறிப்புமொழி, irony. See Nannul. S. 269.

377\. பேரஞரிடும்பையெல்லாம்பிளந்திடும்பிறப்புக்கும்
ஆரமிர்தரிதிற்பெற்றும்அதன்பயன்கோடறேற்றும்
ஒருமைம்பொறியுமோம்பியுளபகல்கழித்தபின்றைக்
கூரெரிகவரும்போழ்திற்கூடுமோகுறித்ததெல்லாம்.

"We have been worthy of attaining this superior human existence: If we do not improve the opportunity, but pass our time in sensual pleasures, we shall be sadly disappointed at the end.

இ—ள். இடும்பையெல்லாம் நீங்குதற்குக் காரணமான பிறப்பதுக்கும் மக்கள் யாக்கையைத் தவப்பயனுற் பெற்றும், பெற்றுவைத்தும் அதன் பயனைக்கொள்ள அறிகின்றிலேம், ஐம்பொறிகளையும் ஐம்புலன்களாலே பேணி உள்ளநாள் சென்றால், எரி கவரும்பொழுது நினைத்த அறமெல்லாம் செய்யக்கூடுமோ ஓர்ந்துபாருமென்க. ௩௭௭.

இடும்பை, great affliction, அமிர்த, ambrosia, by metaphor, for human existence; for this state is not to be easily attained: ஓர்ம், consider, to be taken at the end.

378. தழங்குரன் முரசிற்சாற்றித்தத்துவந்தழுவல்வேண்டிச்
செழுங்களியாளர்முன்னரிருவறச்செப்பினும்
முழங்கழனரகின்மூழ்குருய்யச்சியரகின்ற
கொழுங்களியுணர்விலுரைக்குணவதங்கொளுத்தலாமோ.

"Though the truth is loudly and clearly proclaimed to those who are bewildered by sin, they will not forsake the paths that lead to the roaring hell."

இ—ள். எல்லாரும் தத்துவம் தழுவல்வேண்டிக் களியாளர்முன்னே முரசிற் சாற்றிச் செப்பினும் அது கொள்ளாதபடி நாகின் மூழ்கும் பாவத்தினை முன்னே உடையாரகின்ற உணர்விலுரைக் குணங்கொளுத்தலாமோ என்றுனென்க.

விகாரம். செழுங்களி, தெரிசனமோகனீயப் பிரகிருதி வழும். குணவதம், விரதம். இது பகுதிப்பொருள் விகுதி. ௬௭௮.

379. பவளவாய்ச்செறுவுதன்னு
ளித்திலம்பயில்வித்திக்
குழவிநாறெழுந்துகாளைக்
கொழுங்கதிரீன்றுபின்னுற்
கிழவுதான்விளைக்கும்பைங்கூழ்
கேட்டிரேற்பிணிசெய்பன்மா
உழவிர்காண்மேயுஞ்சில
வேலியுய்த்திடுமினென்றான்.

"Human existence is like a field; the seed of it is sown in the womb, and springs up to youth and old age. But this field is overrun by the wild animals, of sin, sickness and sorrow: It must be therefore preserved by the fence of righteousness."

இ—ள். உழவிர்காள், கேட்பீராயிற் பவளவாயாகிய செய்யிலே நித்திலத்தை வித்துதலாலே முளைதோன்றிக் கதிரையீன்று, பின்னே தான் மூப்பை விளைக்கும் பயிரை நோயைச்செய்யுந் தீவினைகளாகிய விலங்குகள் மேயும், அவை மேயாதபடி சீலமாகிய வேலியைக்கொண்டு சென்றிடுவீராக என்றுனென்க.

கருத்தங்கும் பை. நித்திலம்போலும் சுக்கிலம். ௬௭௯.

செறு = வயல், a field. சீலம் = நல்லொழுக்கம், morals, good conduct, rectitude, &c.

380. சூழ்கதிர்மதியமன்னசுடர்மணிப்பூணினுனும்
வீழ்தருகதியினீங்கிவிளங்குபொன்னுலகத்துய்க்கும்
ஊழ்வினைதுரத்தலானுமுணர்வுசென்றெறித்தலானும்
ஆழ்கடற்புணையினன்னவறிவனைச்சரணடைந்தான்.

Jivagan hearing these instructions, was impelled on to virtue by the qualities inherent in him, and his understanding being clear and comprehensive, he sought and obtained the feet (grace) of Arugan, which like a float was to carry him over the sea of births.

இ—ள். அது கேட்டுப் பூணினுனும், ஊழ்வினை செலுத்துதலானும் உணர்வெறித்தலானும் கதியினீங்கிப் பிறவிக்கடலை நீந்துதற்குத் தெப்பமன்ன அறிவனைச் சரணுக அடைந்தானென்க.

பிள்ளையார்க்கு மதியுவமை, கலைகள் நிறைதலால். உம்மை, சிறப்பும்மை. நரகத்தே விழுதற்குக் காரணமான தீவழி. பொன்னெயில் வட்டத்திற் செலுத்தும் ஊழ்வினை, சாது சரணுவதற்கு முன்செய்த ஊழ்வினை.

நல்வினை, அத்தவத்தே பயின்றமையாலும் உணர்வு மீண்டும் அதன்மேற் சென்று பரத்தலானும். ௩௮௰.

உணர்வுசென்றேறித்தல், knowledge shining forth. "பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார், இறைவனடி சேராதார்." Kural.

381. காட்சிநன்னிலையின் ஞானக்
கதிர்மணிக்கதவுசேர்த்திப்
பூட்சிசாலொழுக்கமென்னும்
வயிரத்தாழ்கொளுவிப்பொல்லா
மாட்சியில்கதிகளெல்லா
மடைத்தபின்வரம்பிலின்பத்(து)
ஆட்சியிலுலகமேறத்
திறந்தனனலர்ந்ததாரான்.

Jivagan having fixed the door-post of knowledge, and having put to it the pannel of wisdom, bolted it with the lock of rectitude, and thus barring up the way of births, opened up the way to endless bliss.

இ—ள். அலர்ந்த புகழாற் பரந்த தாரான், காட்சியாகிய நிலையிலே ஞானமாகிய கதவை சேர்த்தி ஒழுக்கமாகிய தாளைக்கொளுவிக் கதிகளெல்லாம் அடைத்தபின் வீட்டுலகத்தே செல்ல வழிதிறந்தானென்க.

நிலைபேறுடைமையின் நிலை. பொருள்களைக் காத்தற்கு உலாவுதலிற் கதவு. காட்சியையும் ஞானத்தையும் விட்டுநீங்காமல் தகைத்தலிற் றாள். மாட்சியில்லாத, பொல்லாத. கதி, பிறவி கெடுதலில்லாத நீக்கதி. மாட்சிமையுமாம். ஆட்சியிலுலகம், இதற்குமுன்பு ஆளாத உலகம், வீடு. ௩௮௧.

ஆட்சியிலுலகம், the heavenly world, not the property of any, but the virtuous obtain it.

382. நல்லறத்திறைவனுநால்வகைச்சரணுமெய்தித்
தொல்லறக்கிழமைபூண்டதொடுகழற்காளைக்குப்
புல்லறநெறிக்கணின்றுபொருள்வயிற்பிழைத்தவாறும்
இல்லறத்தியல்புமெல்லாமிருளறக்கூறியிட்டான்.

The Teacher then made known to Jivagan the nature of the domestic and ascetic states, and the way of obtaining virtue.

இ—ள். சரணமெய்தி, பூண்ட காளைக்கு உலகம் பிழைத்தபடியையும், நல்லோர் நடத்தும் அறத்தியல்பையும், ஒழிந்தவற்றையும் மயக்கமறக் கூறினனென்க.

நால்வகைச்சரண்: அருகசரணம், சித்தசரணம், சாதுசரணம், தன்மசரணம். தொல்லறம், தன் குலத்திற்கெல்லாம் உரிய அறம். புல்லறநெறிக்கணின்று பொருள்வயிற் பிழைத்தவாறும், நீக்கதியினின்றோர் தாம் நடாத்துகின்ற புல்லிய இல்லறத்தின் நெறியிலே நிற்றலால் வீடு பேற்றில் தப்பியவாறும். இல்லறத்தியல்பும், வீடுபேறு தப்பாதபடி இல்லறம் நடாத்தும் இயல்பும். எல்லாம், ஒழிந்தனவும். ௩௮௨.

There are four *saranas,* (சரணம்) homage, worship. 1. The worship of Arugan, 2. The worship of pure existences. 3. The worship of devotees. 4. The worship of virtue.

383\. எரிமுயங்கிலங்குவைவேலிளையவர்குழாத்தினீங்கித்
திருமுயங்கலங்கன்மார்பிற்சிவகற்கொண்டுவேறு
விரிமலர்க்கண்ணிகட்டிவிழைதகவேய்ந்தபோலுந்
தெரிமலர்க்காவுசேர்ந்துபிறப்பினைத்தெருட்டலுற்றான்.

The Teacher then took Jivagan apart from the other scholars into a secluded grove, there to make known to him the secret of his birth.

இ—ள். ஆசிரியன் குழாத்தினின்றும் தான் நீங்கி, சிவகனைத் தனியே கொண்டுபோய், கண்ணிகட்டி விதானித்தபோலுங் காவைச் சேர்ந்து அவனுக்குப் பிறப்பினைத் தெளிவிக்கலுற்றான் என்க.

இளையவர், தம்பிமாரும் தோழன்மாரும். வேறுகக்கொண்டு. ௩௮௩.

384\. பூவையுங்கிளியுமன்னரொற்றெனப்புணர்க்குஞ்சாதி
யாவையுமின்மையாராய்ந்தந்தவிர்ப்பிண்டிநீழற்
பூவியற்றவிசினுச்சிப்பொலிவிருந்தபோழ்தின்
ஏவியல்சிலையினானையிப்பொருள்கேண்மோவென்றான்.

And very privately, under an Ashoka tree, the Teacher further related the following story:

இ—ள். ஆசிரியன் பிண்டிநீழலிடத்து இட்ட தவிசின்மேல் இருந்த அளவிலே, பூவையும் கிளியுமுதலாகக்கொண்டு வேறும் அரசர் ஒற்றாக விடும் சாதிகளெல்லாம் இல்லாதபடியை ஆராய்ந்து, சிலையினானை இக் கதையைக் கேட்பாயாக என்றானென்க. ௩௮௪.

385\. வையகமுடையமன்னன்
சச்சந்தனவற்குத்தேவி
பைவிரிபசும்பொனல்குற்
பைந்தொடிவிசையையென்பாள்
செய்கழன்மன்னன்றேர்ந்து
தேவியைப்பொறியிற்போக்கி
மையல்கொணெஞ்சிற்கல்லா*
மந்திரிவிழுங்கப்பட்டான்.

"There was a king named Sachanthan, he had a wife named Vijaya: The king apprehensive of a rebellion, sent his wife away in an aerial machine, and was killed by his treacherous minister.

இ—ள். இவ்வையகமுடைய அரசன் சச்சந்தன், அவனுக்குத் தேவி விசையை, அவன் தேர்ந்து அவளைப் போக்கி மந்திரியாலே கொல்லப் பட்டான் என்க,

பொன், மேகலை. தனவிற்குப்பின்பு இவளைப் போகவிடுமாறு தேர்ந் து. மையல், தன்னை ஆக்கினவனைக் கொல்லுதல். ௩௮௫.

மந்திரி விழுங்கப்பட்டான், i. e., மந்திரியால் விழுங்கப்பட்டான், as மீன்விழுங்கின மனுஷன், would mean he who swallowed the fish, or he who was swallowed by the fish.

386\. புலம்பொடுதேவிபோகிப்புகற்கருங்காடுநண்ணி
வலம்புரியுலகம்விற்குமாமணியீன்றவண்ணம்
இலங்கிழைசிறுவன்றன்னைப்பயந்துபூந்தவிசினுச்சி
நலம்புரிகங்கைவைத்துநல்லறங்காக்கவென்றாள்.

"The sorrowing wife was then conveyed to a burning place, where she gave birth to a son, who for some time was cared for by an old lady. Then the mother blessed her child, and retired to lead a life of penance.

இ—ள். தேவி போய் நண்ணி, வலம்புரி மணியை ஈன்றாற்போலச்

சிறுவனைப் பயக்கையினாலே, அவனைத் தெய்வம் தவிசின்மேலே வைக்க, தேவி யான் மேற்செய்கின்ற அமைச்சன்னைக் காக்க என்று உட்கொண்டாளென்க.

இத்தெய்வம் நம்பியைப் பள்ளி சேர்த்தினபொழுதே தேவி கருதிய தனை ஆசிரியர் உணர்ந்து ஈண்டுக் கூறினார். எனவே தேவி நோன்பிலே இருந்தமை பிள்ளையார் உணர்ந்தது கருமமென்று உட்கொண்டார். பின்பு "அடிகளும் உளரோ" என்றது, இதற்குப் பின்பு தீங்கின்றி இருந்தமை கருதி. வலம்புரியுவமைகூறவே, தேவி மறைந்தமையும் உணர்த்தினார். இலங்கிழை, தேவி: இது சுட்டு. நலம்புரி நங்கை, அறத்தை விரும்பிய கூனியாகிய தெய்வம். வைத்து, வைக்க. அறம், நோன்பு. ௩௮௬.

387. வானத்தின்வழுக்கித்திங்கட்கொழுந்துமீன்குழாங்கள்சூழக்
கானத்திற்கிடந்ததேபோற்கடலகழுடையநம்பி
தானத்துமணியுந்தானுமிரட்டுறத்தோன்றினானே
ஊனத்திற்றீர்ந்தசீர்த்தியுத்திரட்டாதியானே.

"The child that was born at the period of the 26th lunar asterism, was like the moon which descended from the heavens to bless the earth.

இ-ள். நம்பி, உத்திரட்டாதி நாட்பிறந்தவன், பிறை மீன் சூழக்கிடந்ததுபோலே, மணியும் தானும் மாறுபடத் தோன்றினானென்க.

கொழுந்தென்றார், நாடோறும் வளர்தலின். தானத்துமணி, சுடுகாட்டுமணி. ஊனம், நாளுக்குள்ள தீங்கு. ௩௮௭.

388. அருந்தவன்மொழிந்தகூற
வலங்கல்வேனுய்கன்சென்று
பொருந்துபுகிறுவற்கொண்டு
பொலிவொடுபுகன்றுபோகித்
திருந்தியநம்பியாகத்
தும்மினன்றெய்வம்வாழ்த்திற்(று)
அரும்பொனுய்கொண்மோவென்று
னிலைகடல்விருப்பிற்கொண்டாள்.

"A certain man, instructed by some wise person, went to the burning place, and found the child. When he took him up, the child sneezed, a mysterious voice was heard expressing his name; and the man brought the child home to his wife."

389. கரியவன்கருணற்கன்று
பிறப்பினைத்தேற்றியாங்கப்
பெரியவன்யாவனென்ன
நீயெனப்பேசலோடுஞ்
சொரிமலர்த்தாரும்பூணு
மாரமுங்குழையுஞ்சோரத்
திருமலர்க்கண்ணிசிந்தத்
தெருமந்துமயங்கிவீழ்ந்தான்.

When this story was related, which is similar to the revealing of the secret of Karna's birth to him by Krishna, the curious Jivagan anxiously enquired who that child could be. To which the Teacher replied, "It is thou thyself." The youth fell senseless to the ground.

இ-ள். இவை இரண்டும் ஒருதொடர். நாயகன் அவ்வொலியோடிய வழியே சென்று பொருந்தாநின்று சிறுவனை எடுக்க, அந்த நம்பி, நன்னி

மித்தம் பெற்றேமென்று நாய்கன் மகிழ்ந்துபோம்படி நிறையத் தம்ப ருன், அப்பொழுது தெய்வம் வாழ்த்திற்று, அம்மகிழ்ச்சியுடனே போய் அரும்பொன்னாய், கொள்ளென்றான், அவனும் கொண்டானென்று ஓர் கதை முகத்தாலே, கரியவன் கருணனுக்குப் பிறப்புணர்த்தியாங்கு உணர்த்தினானாக; அது கேட்ட சீவகன் கூறியவன் யாரென்று கேட்ப, நீ எனக் கூறினானாக, தார்முதலியன சோரச் சிந்த மூர்ச்சித்து வீழ்ந்தானென்க.

என்று எனவும், உணர்த்த எனவும் வருவிக்க. அன்பு மிகுதியான் மூர்ச்சை முந்திற்று. முனிவன் நிகழும்பொருளெல்லாம் கந்துகற்குக் கூறலின் அது தப்பாதென்று கருதி. கொண்டு, கொள்ள. திருந்திய, தவந் திருந்திய. பொன்னாய், திருவையுடையாய். கரியவன், கண்ணன். பெரியவன், அறிவுபெரியவன். பேசலொடும், உடனிகழ்ச்சி. தேன்சொரிமலர். ௩௮௯.

390. கற்பகங்கலங்கிவீழ்ந்தவண்ணம்போற்காளைவீழச்
சொற்பகர்புலவன்வல்லேதோன்றலைச்சார்ந்துபுல்லி
நற்பலகுழீஇயதம்மாணவையறத்தேற்றத்தேறிக்
கற்புனைதிணிதிண்டோளான்கவலைநீர்க்கடலுட்பட்டான்.

He fell as if the Kalpaka tree had fallen. The Teacher quickly resuscitated him with certain perfumes, and then consoled him. The young man was cast into an ocean of perplexities.

இ-ள். காளை, கற்பகம் நிலைகுலைந்து விழுந்த தன்மைபோல விழுதலாலே, சொல்லை விரகாற்கூறிய ஆசிரியன் அத்தோன்றலை விரையச் சேர்ந்து தழுவிச் சந்தனாதிக்கூட்டாற் செய்த குழம்பால் தேற்ற, அத்தோளான் தெளிந்து கையாற்றை விட்டுச் சோகக்கடலிலே விழுந்தானென்க. ௩௯௰.

சொற்பகர் புலவன், i. e., the Teacher who discovered to him his birth.

391. இனையைநீயாயதெல்லா
மெம்மனோர்செய்தபாவம்
நினையனீநம்பியென்று
நெடுங்கணீர்துடைத்துநீவிப்
புனையிழைமகளிர்போலப்
புலம்பனின்பகைவனின்றான்
நினைவெலாநீங்குகென்ன
நெடுந்தகைதேறினானே.

The Teacher said: "What has befallen you is the result of our sins. Do not weep as women do. Remember there is an enemy at hand." Saying this, he wiped the youth's tears; and Jivagan was composed.

இ-ள். நம்பி, நீ இனையையாயதெல்லாம் எம்போல்வார் செய்தபாவம், இனி நின்பகைவன் நின்றானாதலின் மகளிர்போலப் புலம்பலை நீ நினையலென்று, கண்ணீர் துடைத்துப் பின்பு உடம்பினைத் துடைத்து நினைவு நீங்குகவென்ன, அவன் தெளிந்தானென்க.

புலம்பல், அழுதல்; தொழிற்பெயர். நினைவெலாம் என்றது அவலம். அவலமுதலிய நான்கும் கூறினார். எம்மனோர் செய்தபாவம் நீங்குகை காரணமாக என்றுமாம். ௩௯௧.

392\. மலைபகவிடிக்குஞ்சிங்கமடங்கலின்முழங்கிமாநீர்
அலைகடற்றிரையிற்சீறியவனுயிர்பருகலுற்றுச்
சிலையொடுபகழியேந்திக்கூற்றெனச்சிவந்துதோன்றும்
இலையுடைக்கண்ணியானையின்னணம்விலக்கினானே.

But like a roaring lion, and the raging ocean, Jivagan took up his bow and arrow, and swore eternal vengeance on his enemy. But the Teacher appeased his wrath, and said:

இ—ள். அவனுயிரைப் பருகலுற்றுத் திரையின் முழங்கிச் சிங்கக்குட்டிபோலச் சீறி, வில்லொடும் பகழி ஏந்திக் கூற்றெனத் தோன்றுங் கண்ணியானை விலக்கினானென்க.

தந்தையைக் கொன்றவனைக் கொல்லாமை விலக்குதல் அருமையின் மேற்கூறுகின்ற கூற்றுன் விலக்கினமை தோன்ற இன்னணமென்றார். ௩௯௨.

393\. வேண்டுவனம்பியானோர்விழுப்பொருளென்றுசொல்ல
ஆண்டகைக்குரவிர்கொண்மின்யாதுநீர்கருதிற்றென்ன
யாண்டுநேரெல்லையாகவவன்றிறத்தழற்சியின்மை [ன்.
வேண்டுவலென்றுசொன்னான்வில்வலானதனைநேர்ந்தா

"Young man, allow me to make one request." "What is it, and you shall be gratified," said Jivagan. "For one year have nothing to do with the enemy." Jivagan acquiesced.

இ—ள். நம்பி, யான் ஒரிடும்பையையுடையதோர் காரியத்தை வேண்டுவலென்று கூற, குரவிர், நீர் கருதிற்று யாது அதனைக் கொண்மினென, அவன் குலத்தளவில் ஓராண்டு இறுதி அளவாக அழற்சியின்மை வேண்டுவலென்று விலக்கிச் சொன்னான், வில்வல்லானும் நேர்வரியதனை நேர்ந்தானென்க.

வேண்டுவல், அல் ஈற்றுத்தன்மைச்சொல். சந்தியால் நகரம்வந்தது. இர், ஈறு; "கேளிர் வாழியோ" என நின்றாற்போல இயல்பாய் நின்றது. ஆண்டகைமை கூறிற்று. கொலையை விலக்குவரோ என்றஞ்சிக் கற்பித்த முகத்தால் அரசனென்று உணர்ந்தான். திறம், குலம். வலான், செய்யுளாய் மறையாகாது வழக்காய் உடன்பாடு உணர்த்திற்று. இது மேலுங்கொள்க. கூறவும் பாடம். ௩௯௩.

394\. வெவ்வினைவெகுண்டுசொராவிழுந்தியமிர்தமின்னீர்
கௌவியவெஃகினின்றகயக்கமின்னிலைமைநோக்கி
அவ்வியமகன்றுபொங்குமழல்படுவெகுளிநீக்கி
இவ்வியலொருவற்குற்றதிற்றெனக்கிளக்கலுற்றான்.

Then the Teacher, observing the furious anger of Jivagan, which like burning iron made all the water that came in contact with it evaporate, said:

